# ஞானதீபமும் ஞானஒளியும்

அருள்நிதி **மன்னார்குடி பானுகுமார்**


**விஜயா பதிப்பகம்**
20, ராஜ வீதி,
கோயம்புத்தூர் - 641 001.
vijayapathippagam2007@gmail.com

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **ஞானதீபமும் ஞானஒளியும்** |
| ஆசிரியர் | : | அ.நி.பானுகுமார் |
| முதல் பதிப்பு | : | ஏப்ரல் 2015 |
| வெளியீடு | : | **விஜயா பதிப்பகம்**<br>20, ராஜ வீதி,<br>கோயம்புத்தூர் - 641 001.<br>✆ 0422 - 2382614 / 2385614 |
| ஒளியச்சு / புத்தக வடிவமைப்பு | : | ஐரிஸ் கிராபிக்ஸ், கோவை. |
| அட்டை வடிவமைப்பு | : | M.V. மணிகண்டன், சென்னை. |
| அச்சாக்கம் | : | ஜோதி எண்டர்பிரைசஸ், சென்னை - 5. |
| பக்கம் | : | 216 |
| விலை | : | ரூ. 140 |

**ISBN - 81-8446-664-1**

**GNANA DEEPAMUM GNANA OLIYUM**

| | | |
|---|---|---|
| Author | : | A.N.Banukumar |
| First Edition | : | April 2015 |
| Published By | : | **VIJAYA PATHIPPAGAM,**<br>20, Raja Street, Coimbatore - 641 001.<br>✆ 0422 - 2382614 / 2385614 |
| Layout & Laser Type set | : | IRIS Graphics, Coimbatore. |
| Cover Design | : | M.V. Manikandan, Chennai. |
| Printed At | : | Jothy Enterprises, Chennai - 5. |
| Pages | : | 216 |
| Price | : | Rs. 140 |



புலவருடன் பிரம்மஞானி. கு. நரேந்திரன்

# வாழ்த்துரை

ஒரு பொருளின் தனித்தன்மைகளை அல்லது சிறப்புகளை அறிவதற்கு, அதனை அதனோடு ஓரளவு ஒத்த இன்னொரு பொருளோடு ஒப்பிட்டுப் பார்ப்பது என்பது மனித இயல்பே. அதனடிப்படையில் அமைவதுதான் ஒப்பியல் அணுகுமுறை.

ஒப்பிட்டுத் திறனாய்வதற்குத் தளமாக இருப்பன, ஒன்றிற்கு மேற்பட்ட கலை, இலக்கியங்கள் மற்றும் அவற்றின் கருத்தமைவுகள் ஆகும்.

இவற்றுள் பொதுத் தன்மையும் (commonness) இருக்க வேண்டும்; வேறுபட்ட தன்மையும் (difference) இருக்க வேண்டும். இத்தகைய இலக்கியங்கள் மேல் ஒப்பீடு செய்வது, ஒன்றினைவிட இன்னொன்று சிறப்பானது, உயர்வானது என்று கண்டறியும் நோக்கத்தைக் கொண்டதல்ல.

எதனை எடுபொருளாகக் கொண்டிருக்கிறோமோ, அதன் தனித்தன்மைகளை ஆராய்வதுதான் ஒப்பியலின் முக்கிய நோக்கமாகும்.

வேதாத்திரி மகரிசியை வள்ளலாரோடு ஒப்பிடுகிறோம் என்றால், வள்ளலாரின் உயர்வுகளோடு- வேதாத்திரியின் உயர்வுகளை மிகை படச் சொல்வதோ அல்ல;

மாறாகக் வேதாத்திரியின் திறனையும், தனித்தன்மைகளையும், வேதாத்திரியின் சூழ்நிலைகளையும் சொல்வதே நோக்கமாகும்.

மேலும், ஒத்த சமுதாய வரலாற்றுச் சூழல்களில் தோன்றுகிற இலக்கியங்கள் ஒத்த தன்மைகளைப் பெற்றிருக்கக் கூடும் என்பதும், அதே சமயத்தில் படைப்பாளியின் திறத்தினாலும், குறிப்பிட்ட சிறப்பியலான சில பண்பாட்டுச் சூழலினாலும் வித்தியாசப்பட்ட தன்மைகளைப் பெற்றிருக்கக் கூடும் என்பதும், ஒப்பியல் அணுகு முறையின் அடிப்படைக் கருதுகோள்கள் ஆகும்.

இந்த நோக்கில் வள்ளலாரும் வேதாத்திரியும், தாயுமானவரும் வேதாத்திரியும் வெளிவந்த பிறகு மூன்றாவதாக விவேகானந்தரும் வேதாத்திரியும் என்ற ஆய்வு நூலை சிறப்பாகச் செய்திருக்கிறார் ஆசிரியர்.

விவேகானந்தர் எண்ணினார்...திட்டமிட்டார்...

- ஓம்கார வடிவில் அறிவுத்திருக்கோயில்
- மனவளக்கல்வி பயிற்சி
- மனவளக்கல்வியைப் பரப்ப பேராசிரியர்கள்
- ஆன்மீகக் கல்வியைக் கொண்டு செல்ல ஒரு இயக்கம்
- பொது இயக்கத்தை செயல்படுத்த குருத்தெலும்புள்ள மனிதர்
- உலக பொது சமயம்

மேற்கண்ட திட்டங்களை செயல்படுத்த தனக்குப் பின்னால் ஒருவர் வருவார் என்றார் விவேகானந்தர்.

விவேகானந்தருக்குப் பின்னர் வந்தார் வேதாத்திரி மகரிசி. மகரிசி அவர்கள் விவேகானந்தரின் திட்டங்களைச் செயல்படுத்திய பாங்கினை அழகாகவும் சான்றுகளுடனும் ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

ஐம்பது தலைப்புகளில் விவேகானந்தரையும் வேதாத்திரியையும் தனக்கே உரிய பாணியில் ஆய்வு செய்திருக்கும் ஆசிரியரைப் பாராட்டி மகிழ்கிறேன்.

அருட்தந்தையின் பெருமையைப் புகழை உலகறியச் செய்து வரும் அருள்நிதி பானுகுமார் மற்றும் அவரது குடும்பத்தின் தொண்டு தொடர வாழ்த்துக்கள்.

வேதாத்திரியத்தொண்டில்

**பேரா. பிரம்மகுட்டி அம்மாள்**

துணைத்தலைவர்,

உலக சமுதாய சேவா சங்கம்.

# அணிந்துரை

**வி**வேகானந்தர் அமெரிக்காவின் சிகாகோவில் சொற்பொழிவு நிகழ்த்துவதற்கு முன் இருந்த இந்தியா என்பது வேறு; அவர் சிகாகோ சொற்பொழிவுக்குப் பிறகு தோன்றிய இந்தியா என்பது வேறு.

விவேகானந்தரின் சொற்பொழிவுக்குப் பிறகுதான் இந்தியாவில் அரசியல், பொருளாதாரம், கல்வியில் மறுமலர்ச்சி தோன்றியது.

வேதாத்திரி மகரியின் எழுச்சிக்குப் பிறகுதான் ஆன்மீகத்தில் மறு மலர்ச்சி தோன்றியது. உலக அமைதிக்கு உறுதியான வடிவம் கிடைத்தது.

விவேகானந்தர் தொடங்கிய ஆன்மீக இலட்சியத்தை வேதாத்திரி முடித்து வைத்தார்.

உலக மக்களுக்கு தங்களின் பலத்தை நினைவுப்படுத்தியவர்கள் சுவாமி விவேகானந்தரும் வேதாத்திரி மகரிசியுமே ஆவார்கள்.

பண்டைய மெய்ஞ்ஞானத்திற்கும், இன்றைய விஞ்ஞானத்திற்கும் இணைப்புப் பாலமாக விளங்குகிறார்கள்.

மேற்கு நாடுகளின் சிந்தனைகளுக்கும், கிழக்கு நாடுகளின் சிந்தனைகளுக்கும் இணைப்புப் பாலமாக விளங்குகிறார்கள்.

விவேகானந்தரும் வேதாத்திரி மகரிசியும் ஓர் ‘ஆன்மீக சூப்பர் மார்க்கெட்’

அவர்களிடம் பக்தியோகம், கர்மயோகம், ஞானயோகம், ராஜயோகம் ஆகியவை உண்டு. சாக்தம் கூறும் சக்தி வழிபாடு பற்றிய கருத்துக்களும், சைவம் சார்ந்த கருத்துக்களும் வைணவக் கருத்துக்களும் உண்டு.

சமய சமரசம் பற்றிய கருத்துக்களும், சமுதாய சீர்த்திருத்தக் கருத்துக்களும் உண்டு. தொண்டு, கலைகள், பெண்கள் முன்னேற்றம்,

கல்வி, ஏழை எளியவர்களை உயர்த்ததல், பொருளாதாரம், தீண்டைாமை, மக்களிடையில் சமுதாயம் போன்ற சமுதாய நலனுக்கு உகந்த கருத்துகளும் அவர்களிடம் உண்டு.

இவ்விதம் விவேகானந்தரும் வேதாத்திரியும் ஓர் ஆன்மிக சூப்பர் மார்க்கெட் போன்று இருந்தாலும், அடிப்படையில் அவர்கள் பூரண ஞானிகள்.

பிரம்மஞானி

**நரேந்திர குமார், பி.இ.,**

சென்னை

# என்னைச் செதுக்கிய மகான்கள்

***''நீதிநெறி உணர் மாந்தராகி வாழும்***
***நிலையுணர்ந்து தொண்டாற்றி இன்பம் காண்போம்.''***

என்னைப் பொறுத்தவரை - என்னை உணர்ந்து - எடுத்த இந்த பிறவியை முடித்துக் கரையேற - தாயுமானவரையோ- வள்ளலாரையோ - புத்தரையோ - இயேசுவையோ - நபிகளையோ- இராமகிருஷ்ண பரமஹம்சரையோ- விவேகானந்தரையோ என்னால் சந்திக்க இயலாது.

விவேகானந்தரைப் படித்து, ராமகிருஷ்ண மடத்திற்குச் சென்று வந்தேன். உய்யும் வகை தேடி ஊர்ஊராக அலைந்தேன்.

விவகானந்தரின் தாக்கத்தால் என் குழந்தைகளுக்கு நிவேதிதா-நரேந்திரன் என்று பெயரிட்டு மகிழ்ந்தேன்.

பூர்வ ஜென்ம புண்ணியம் என்பார்களே... எதோ சந்தர்ப்பமோ அல்லது தாய் தந்தையரின் புண்ணியமோ அருள்தந்தையை சந்திக்கும் பாக்கியம் கிடைத்தது... உயர் ஞான தீட்சையை அவரிடமே பெற்றேன்.

என் ஆன்மாவின் வாசலை அகலமாக திறந்து வைத்தவர்கள் இந்த இரண்டு பெரும் ஞானிகளே!. என் இதயக் கோயிலில் கொலு வீற்றிருக்கின்றனர்.

நான் விவேகானந்தரையும் வேதாத்திரியையும் தொடர்ந்து வாசிக்கத் தொடங்கினேன். குருவாக போற்றி பின்தொடர்ந்தேன்.

மானுடத்தை மேன்மைப்படுத்துவதற்காகவே இந்த மண்ணில் பாதம் பதித்து நடந்த இரண்டு மகா புருஷர்களின் சிந்தனையும் ஒரே மையப் புள்ளியில் ஒன்றிணைந்து ஒளிவீசுவதை என் விரிந்த வாசிப்பில் உணர்ந்தேன். தெளிந்தேன்.

என்னைச் செதுக்கிய இந்த மகான்களின் பெருமைகளை வித்தியாசமாக எழுத்தில் பதிய முற்பட்டேன். அதற்கு ஒப்பீட்டு இலக்கியம் சிறப்பாக அமையும் என்று கருதினேன்.

எப்போதெல்லாம், என் மனம் சோர்வுறுகிறதோ, என் உடல் தளர்வுறுகிறதோ. என் நம்பிக்கை பலமிழக்கிறதோ, என் கனவுகளின் அஸ்திவாரம் அசைந்து கொடுக்கிறதோ., அப்போதெல்லாம் இந்த மகான்களை அசைபோடுவேன்.

என் சாதனைகளுக்கு பின்புலமாக இருந்து என்னை இயக்குவது இந்த துறவிகளின் கம்பீரமான தோற்றமும், கருணைமிகு விழிகளும், ஞானம் பொழியும் மொழிகளும்தான்!

என் வீட்டில் இரண்டு ஆண் சிங்கங்கள் நிற்கின்றன. அனைவரையும் வரவேற்கின்றன. அது அந்த ''ஞான புருஷர்கள்'' தான்.

இந்நூல் உருவாவதற்கு காரணமானவர்கள் அனைவரையும் 'வாழ்க வளமுடன்'' என வாழ்த்தி மகிழ்கிறேன்.

இந்நூலைப் படிக்கும் வாசகர்கள் சுவாமி விவேகானந்தர் வேதாத்திரி மகரிசி வாழ்கை நெறியைப் பின்பற்றி மானுடத்திற்குத் தன்னலங் கருதாமல் தொண்டு செய்ய முன் வருவார்களேயானால் அதுதான் இந்த நூலுக்குக் கிடைக்கும் பெருமையாகும்.

*சிகாகோ* **பானுகுமார்.**
*25-9-2014* Mail Id.banukumar.v@gmail.com

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| *1.* | சுவாமி விவேகானந்தர் வாழ்க்கை வரலாறு | *13* |
| *2.* | வேதாத்திரி மகரிசி வாழ்க்கை வரலாறு | *20* |
| *3.* | விவேகானந்தர் வேதாத்திரி படைப்புகள் | *24* |
| *4.* | அவதாரப்புருஷர்கள் | *29* |
| *5.* | ஞானத்தேடல்கள் | *32* |
| *6.* | ஞானப்பட்டறை | *35* |
| *7.* | அருள்பாலித்த அண்ணல்கள் | *38* |
| *8.* | கடவுளைக் கண்டவர்கள் | *41* |
| *9.* | எனக்குப் பிறகு ஒருவர் வருவார்! | *43* |
| *10.* | இலக்கை எட்டும்வரை இடைவிடாது இயங்கு | *46* |
| *11.* | இந்த உலகம் ஓர் மிகப்பெரிய ஓர் உடற்பயிற்சிகூடம். | *50* |
| *12.* | அறிவுலகச் சிற்பிகளின் பார்வையில் ஆன்மா | *53* |
| *13.* | மனவளக்கலை கல்வி பற்றி விவேகானந்தர் | *57* |
| *14.* | எண்ணப்பதிவுகள் | *61* |
| *15.* | சீர்திருத்தவாதிகளின் சமுதாயச் சிந்தனைகள் | *66* |
| *16.* | வென்றிடுவாய் புலன் ஐந்தையும் | *71* |
| *17.* | அமெரிக்க மண்ணில ஆன்மீகத்தை விதைத்தவர்கள் | *74* |
| *18.* | அற்புதங்கள் வேண்டாம் | *80* |
| *19.* | ஞானிகளின் பார்வையில் ஓஜஸ் | *83* |

20. உலகம் தழுவிய மதம் 87
21. உண்மையான முயற்சி 90
22. ஒரு சரியான வேதாந்தி 93
23. முழு ஆளுமையை வளர்த்துக் கொள்வது எப்படி? 97
24. தடைகளை தாண்டிய தத்துவஞானிகள் 102
25. வாழ்க்கை நெறிகளை வகுத்துக் கொடுத்த வள்ளல்கள் 105
26. நடமாடும் மனித தெயவ்ங்களை கண்ட நாயகர்கள் 110
27. ஆசான்களிடம் காணும் ஆன்மீக மரபுகளின் சுவடுகள் 114
28. தீர்க்கதரிசிகளின் தொலைதூர உணர்வுகள் 122
29. மனஒருமைப்பாடு 125
30. வேதநாயகர்களின் பார்வையில் வேதாந்தம் 129
31. மனிதனும் தெய்வமாகலாம் 133
32. இருள் போக்கும் விவேகானந்த வேதாத்திரியச் சிந்தனைகள் 137
33. அகங்காரம் ஆன்மீகத்திற்குத் தடை 141
34. கனவில் வந்த புத்தரும் போகரும் 145
35. மக்கள் சேவையே மகேசன் சேவை 147
36. பொறாமைப் பிடித்த மனிதர்கள் 151
37. ஞான சூரியன்களின் முற்போக்குச் சிந்தனைகள் 156
38. பால்வேற்றுமையை வேரறுக்க முடியுமா? 161
39. கர்மயோகிகள் தந்த கர்மயோகம் 166
40. யாரிடமும் எதிர்பார்க்காதே? 170
41. பாவிகளுக்கும் அருளிய பண்பாளர்கள் 174
42. மகிழ்வுடன் வாழ மகான்கள் கூறும் வழிகள் 178
43. நீயே அது 182

44. சான்றோர்கள் வாழ்வில் சகிப்புத் தன்மைகள் 185

45. மனிதநேயம் போற்றும் மகான்கள் 188

46. பிரார்த்ததனை எப்படி இருக்க வேண்டும்? 192

47. இறையுணர்வாளர்களின் இறைசிந்தனைகள் 196

48. தவப்புதல்வர்களும் தமிழகமும் 201

49. விவேகானந்தரின் எண்ணமே
அறிவுத்திருக்கோயில்கள் 204

50. மக்கள் மனதில் வாழும் மகான்கள் 208

துணை நின்ற நூல்கள் 211

ஆசிரியரின் பிற நூல்கள் 215



# 1

# விவேகானந்தர் வாழ்க்கை வரலாறு

*மக்களுக்குத் தேவை என்று வரும்பொழுது இறையாற்றல் யார் மூலமாவது விடுவிக்கிறது. யார் அந்த நிலைக்கு அறிவில் உயர்ந்திருக்கிறார்களோ அவர்கள் மனதில் அது தோன்றுகிறது.*

*அப்புதிர்களை விடுவிக்கத் தோன்றியவர்தான் சுவாமி விவேகானந்தர்.*

## பிறப்பு

*சுவாமி விவேகானந்தர் அவர்கள், கல்கத்தாவில் ஜனவரி 12, 1863-ல் விஸ்வநாத் தத்தா என்பவருக்கும், புவனேஸ்வரி தேவிக்கும் மகனாகப் பிறந்தார்.*

*அவரது இயற்பெயர் நரேந்திரநாத் தத்தா. அவர் ஒரு துறவியாக மாறிய போது, தனது இயற்பெயரை 'சுவாமி விவேகானந்தர்' என்று மாற்றிக் கொண்டார்.*

## குழந்தைப் பருவமும், ஆரம்பகாலக் கல்வியும்

*ஒரு குழந்தையாக சுவாமி விவேகானந்தர் அவர்கள், மிகவும் கலகலப்பாகவும், குறும்புத்தனமாகவும் இருந்தார். இவர் படிப்பு மற்றும் விளையாட்டுகளில் மிகச் சிறந்து விளங்கினார்.*

*இவர் மிகச்சிறிய வயதிலேயே, வாய்மொழி, இசைக் கருவிகள் வாசிப்பது, மற்றும் தியானம் ஆகியவற்றைப் பயிற்சி மேற்கொண்டு பயின்றார்.*

இவர் இளம் வயதில் இருக்கும் பொழுதே, சாதி மத பாகுபாட்டால் சமூகத்தில் நிலவிய மூடபழக்க வழக்கங்கள் பற்றிப் பல கேள்விகளும், சந்தேகங்களும் எழுப்பினார்.

ஒரு குழந்தையாக இருந்த போதே, சுவாமி விவேகானந்தருக்கு துறவிகள் மீது பெரும் மரியாதை இருந்தது. யார், எதை அவரிடம் கேட்டால், கேட்டவுடனேயே விட்டுக் கொடுக்க வேண்டுமென்ற மனப்பக்குவம் கொண்டிருந்தார்.

அவரிடம் பிச்சைக்காரன் பிச்சைக் கேட்கும் போதெல்லாம், அவரிடத்தில் இருக்கும் அனைத்தையும் கொடுத்து விடுவார். இதனால் குழந்தைப் பருவத்திலிருந்தே சுவாமி விவேகானந்தர் அவர்களுக்கு, தியாகம் மற்றும் முடிதுறக்கும் உணர்வு இருந்தது எனலாம்.

## உயர்கல்வியும், ஆன்மீக ஈடுபாடும்

சுவாமி விவேகானந்தர் அவர்கள், 1879-ல் மெட்ரிக் பள்ளிப் படிப்பை முடித்து, கல்கத்தாவிலுள்ள பிரசிடென்சி கல்லூரியில் சேர்ந்தார். ஒரு வருடம் கழித்து, அவர் கல்கத்தாவிலுள்ள ஸ்காட்டிஷ் சர்ச் கல்லூரியில் சேர்ந்து தத்துவப் பாடத்தைப் படித்தார்.

அவர் மேற்கிய தத்துவங்களையும், தருக்கவியலையும், மற்றும் ஐரோப்பிய நாடுகளின் வரலாற்றையும் படித்தார். அவர் தனது ஆய்வுகளில் முன்னேறியதும், அவரது சிந்தனைகளின் பீடம் அபிவிருத்தி அடைந்தது. கடவுள் இருப்பது பற்றித் தொடர்பான சந்தேகங்கள், அவரது மனதில் எழத் தொடங்கியது.

இதுவே, அவரை 'கேஷப் சந்திர சென்' தலைமையிலான முக்கிய மத இயக்கமான 'பிரம்ம சமாஜில்' இணையச் செய்தது. ஆனால், பிரம்ம சமாஜின் பிரார்த்தனைகளும், பக்தி பாடல்களும் கடவுளை உணர்த்தா ததன் காரணமாக அவருடைய ஆர்வம் பூர்த்தி அடையவில்லை.

இந்த நேரத்தில், தட்ஷினேஸ்வர் 'ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்' பற்றி சுவாமி விவேகானந்தருக்குத் தெரிய வந்தது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவர்கள், காளி அம்மன் கோவிலில் ஒரு பூசாரியாக இருந்தார்.

அவர் ஒரு கல்வியாளராக இல்லையென்றாலும், ஒரு சிறந்த பக்தனாக இருந்தார். அவர் பல முறைக் கடவுளை உணர்ந்தார் என்றும் கூறினார்.

ஒருமுறை, சுவாமி விவேகானந்தர் அவர்கள், அவரது நண்பர் களுடன் அவரைப் பார்க்க தட்ஷினேஸ்வருக்குச் சென்றார். அவர் ராமகிருஷ்ணரிடம், ''கடவுளைப் பார்த்திருக்கிறீர்களா?'' என்று கேட்டார்.

அதற்கு உடனடி பதிலாக, ராமகிருஷ்ணர் அவர்கள், ''ஆம், நான் உன்னை இங்கே பார்ப்பது போல், இன்னும் தெளிவாக கடவுளைப் பார்த்திருக்கிறேன்'' என்றார்.

இது சுவாமி விவேகானந்தர் அவர்களுக்கு, அதிர்ச்சியாகவும், புதிராகவும் இருந்தது. அவர் ராமகிருஷ்ணரின் வார்த்தைகள் நேர்மையானதாகவும், அவருக்குக் கிடைத்த ஆழ்ந்த அனுபவமே அவரை இவ்வாறு உச்சரிக்க செய்தது என்பதையும் உணர்ந்தார்.

இதுவே, அவர் அடிக்கடி ராமகிருஷ்ணர் அவர்களைச் சென்று சந்திக்கக் காரணமாக அமைந்தது.

## ராமகிருஷ்ணர் மீது அவர் கொண்ட பற்று

எதையும் முற்றிலும் ஏற்குமுன், அதனை சோதித்துப் பார்க்கும் குணம், சுவாமி விவேகானந்தர் அவர்களுக்கு இருந்தது. ஆகவே, எந்த ஒரு சோதனையும் இல்லாமல் ராமகிருஷ்ணர் அவர்களை தனது குருவாக ஏற்றுக் கொள்ள அவரால் இயலவில்லை.

அப்போது அவருக்கு ராமகிருஷ்ணர் உரைத்தது ஞாபகத்திற்கு வந்தது. 'ஒருவர் கடவுளை உணர வேண்டும் என்றால், பணம் மற்றும் பெண்களின் மீதுள்ள ஆசையை விட்டுக் கொடுக்க வேண்டும்' என்று கூறினார்.

இதனை நினைவில் கொண்ட விவேகானந்தர் அவர்கள், ராமகிருஷ்ணர் அவர்களின் தலையணைக்கடியில் ஒரு ரூபாய் நோட்டை மறைத்து வைத்தார்.

வெளியில் சென்ற ராமகிருஷ்ணர் அவர்கள், தனது அறைக்கு வந்து கட்டிலில் படுத்தார். மறுகணமே, அவருக்குத் தேள் கடித்தது போல் இருந்ததால், கட்டிலிலிருந்து குதித்தார்.

பின்னர், அவரது மெத்தையை உதறியபோது, அவர் ரூபாய் நாணயம் கீழே விழுந்ததைக் கண்டார். பின்னர், இச்செயல் சுவாமி விவேகானந்தருடையது என்பதையும் அறிந்தார்.

சுவாமி விவேகானந்தர், ராமகிருஷ்ணரை தனது குருவாக ஏற்றுக் கொண்டு, இரட்டைத் தன்மையல்லாத அத்வைத வேதாந்தத்தில் ஐந்து ஆண்டுகள் அவரின் கீழ் பயிற்சி மேற்கொண்டார்.

1886-ல், ஸ்ரீ ராமகிருஷ்ணர் காலமானார். அதன் பின்னர், சுவாமி விவேகானந்தர், அவரது வாரிசாக பரிந்துரைக்கப்பட்டார்.

ராமகிருஷ்ணர் மரணத்திற்குப் பின், சுவாமி விவேகானந்தரும், ராமகிருஷ்ணரின் ஒரு சில முக்கிய சீடர்களும் துறவறம் பூணுவது என்று சபதம் எடுத்து, பரனகோர் என்ற இடத்தில் பேய்கள் நடமாடுவதாகக் கருதப்படும் ஒரு வீட்டில் வாழத் தொடங்கினர்.

## இந்தியாவில் பயணம்

1890 ஆம் ஆண்டில், சுவாமி விவேகானந்தர், ஒரு நீண்ட சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அவருடைய இந்த பயணத்தில் நாட்டின் அனைத்து இடங்களுக்கும் சென்றார்.

அவரது இந்த பயணத்தின் போது அவர், வாரணாசி, அயோத்தி, ஆக்ரா, பிருந்தாவன், ஆழ்வார் போன்ற பல இடங்களுக்கும் சென்று வந்தார். இந்த சுற்றுப்பயணத்தின் போது, அவரது இயற்பெயரான 'நரேந்திரா' மறைந்து 'சுவாமி விவேகானந்தர்' என்று பெயர் பெற்றார்.

நல்லது மற்றும் கெட்டது என்று பகுத்தறியும் அவரது திறனுக்காக, மகாராஜா கேத்ரி என்பவர், இவருக்கு 'விவேகானந்தர்' என்று பெயரிட்டார் என்று பலரும் கூறுகின்றனர்.

அவரது இந்தப் பயணத்தின் போது, விவேகானந்தர், மன்னரின் அரண்மனைகளிலும், ஏழைகளின் குடிசைகளிலும் தங்கினார். இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் வாழும் இந்திய மக்களின் கலாச்சாரங்கள் மற்றும் பல வகையான மக்களிடம் அவருக்கு நெருக்கமான தொடர்பு ஏற்பட்டது.

விவேகானந்தர், சமுதாயத்தின் ஏற்றத்தாழ்வு மற்றும் சாதி கொடுங்கோன்மையை கவனித்தார். இந்தியா ஒரு உயிருள்ள தேசமாக ஆக்கப்படவேண்டும் என்றால், ஒரு தேசிய புத்துயிர்ப்புத் தேவை என்று உணர்ந்தார்.

சுவாமி விவேகானந்தர், இந்திய துணை கண்டத்தில் தென் கோடி முனையில் இருக்கும் கன்னியாகுமாரிக்கு டிசம்பர் 24, 1892-ல் சென்றார். அவர் கடலில் சிறிது தூரம் நீந்தி, ஒரு தனி பாறையின் மீது அமர்ந்து, தனது தியானத்தைத் தொடங்கினார்.

மூன்று நாட்கள் அங்கு தியானம் மேற்கொண்ட அவர், இந்தியாவின் கடந்த, தற்போதைய மற்றும் எதிர்காலம் பற்றி தன் தியானத்தில் கண்டதாகக் கூறினார்.

அவர் அமர்ந்து தியானம் செய்த அந்தப் பாறையே, விவேகானந்தர் அவர்களின் நினைவாக பிரபலமாகவும், ஒரு முக்கிய சுற்றுலா தலமாகத் திகழும் 'விவேகானந்தர் பாறை' என்ற பெயரில் கன்னியாகுமரியில் இன்றும் உள்ளது.

## மேலைநாடுகளில் விவேகானந்தரின் சொற்பொழிவுகள்

கன்னியாகுமரியில் இருந்து **சென்னை** வந்த விவேகானந்தரிடம், அமெரிக்காவின் 1893 ஆம் ஆண்டு உலக சமய மாநாட்டில் இந்து மதம் சார்பாக கலந்து கொள்ளுமாறு சென்னை நகர இளைஞர்கள் வேண்டுகோள் விடுத்தனர். அதை ஏற்றுக்கொண்ட விவேகானந்தர் **அமெரிக்கா** பயணமானார்.

1893-ல், சுவாமி விவேகானந்தர், சிகாகோ உலக மதங்களின் மாநாட்டில் கலந்து கொள்ள அமெரிக்கா சென்றார்.

மேடையில் அவரது உரையினைத் தொடங்குவதற்கு முன், ''அமெரிக்காவின் சகோதர, சகோதரிகளே!'' என்று அவர் உபயோகித்த புகழ்பெற்ற வார்த்தைகளுக்காக பலத்த கரவொலி பெற்றார்.

விவேகானந்தரது பிரமாதமான பேச்சுத்திறன் மூலமாக அமெரிக்காவிலுள்ள அனைவரையும் மெய்மறக்கச் செய்தார். அவர் எங்கு சென்றாலும், இந்திய கலாச்சாரத்தின் பெருந்தன்மையைக் கருத்தூன்றிப் பேசினார்.

அவர் வரலாறு, சமூகவியல், தத்துவம் அல்லது இலக்கியம் போன்ற எந்த ஒரு தலைப்பாக இருந்தாலும், தன்னிச்சையாக எளிதாகப் பேசினார். அவர், இந்தியாவில் கிறிஸ்துவ மதபிரச்சாரகர்கள் ஏவிவிடும் தீங்கிழைக்கும் பிரச்சாரங்களை வெறுத்தார்.

சிகாகோவின் உலகச் சமய மாநாட்டில் அவர் ஆற்றிய சொற்பொழிவுகளுக்கு அந்நாட்டில் பெரும் வரவேற்பு கிடைத்தது.

மேலைநாடுகளிலும் **அத்வைத** வேதாந்த தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட பல சொற்பொழிவுகளை ஆற்றியுள்ளார்.

1893 ஆம் ஆண்டு அவர் **சிகாகோவில் உலகச் சமயங்களின் பாராளுமன்றத்தில்** நிகழ்த்திய **சொற்பொழிவுகள்** உலகப்புகழ் பெற்றது.

மேலும் சில ஆண்டுகள் மேலைநாடுகளில் தங்கி பல சொற்பொழிவுகள் ஆற்றி **வேதாந்த** கருத்துக்களை அவர்களிடம் அறிமுகப்படுத்தினார். **நியூயார்க்** மற்றும் **லண்டன்** நகரங்களில் வேதாந்த மையங்களை நிறுவினார்.

சுவாமி விவேகானந்தர், இங்கிலாந்துக்கும் சென்றார். பல மக்கள் அவரது சீடர்களாக மாறினர். அவர்களில் மிகவும் பிரபலமானவர், 'மார்கரெட் நிவேதிதா'. பின்னர், அவர் இந்தியா வந்து குடியேறினார்.



**சுவாமி விவேகானந்தரின் சீடர் 'மார்கரெட் நிவேதிதா'**

## ராமகிருஷ்ணா மிஷன் மற்றும் ராமகிருஷ்ணா மடம்

*மேற்கு நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட சுவாமி விவேகானந்தர் அவர்கள், நான்கு ஆண்டுகளுக்கு பின்னர், 1897-ல் இந்தியா திரும்பினார்.*

*இந்தியர்கள் மத்தியில் ஆன்மீக வளர்ச்சிக்கான தகவல்களைப் பரப்பத் தொடங்கினார். 'சமூக சேவை என்பது ஒரு கூட்டு முயற்சியால் மட்டுமே சாத்தியமாகும்' என்று அவர் உணர்ந்தார். இந்த குறிக்கோளை அடைய, சுவாமி விவேகானந்தர், 1897ல் ''ஸ்ரீ ராமகிருஷ்ணா மிஷன்'' என்ற அமைப்பைத் தொடங்கி, அதன் சிந்தனைகளையும், இலக்குகளையும் முறைப்படுத்தினார்.*

*அடுத்த இரண்டு ஆண்டுகளில், கங்கை நதிக்கரையில் பேலூரில் ஒரு தளம் வாங்கினார். அங்கு, அவர் கட்டிடங்களைக் கட்டமைத்து, 'ஸ்ரீ ராமகிருஷ்ணார் மடத்தை' நிறுவினார்.*

*மீண்டும், அவர் ஜனவரி 1899 முதல் டிசம்பர்1900 வரை மேற்கு நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.*

## உருமற்ற ஒளியானார்

*மேலை நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு இந்தியா திரும்பிய சுவாமி விவேகானந்தர், கல்கத்தா அருகில் பேலூரில் அவரால் நிறுவப்பட்ட 'ஸ்ரீ ராமகிருஷ்ணா மடத்தில்' ஜூலை 4, 1902 அன்று மறைந்தார்.*

## காலவரிசை

*1863:* *கல்கத்தாவில் ஜனவரி 12, 1863-ல் பிறந்தார்.*

*1879:* *கல்கத்தாவிலுள்ள பிரசிடென்சி கல்லூரியில் சேர்ந்தார்.*

*1880:* *கல்கத்தாவிலுள்ள ஸ்காட்டிஷ் சர்ச் கல்லூரியில் சேர்ந்து தத்துவப் பாடத்தைப் படித்தார்.*

*1886:* *ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவர்களின் மறைவுக்குப் பின், சுவாமி விவேகானந்தர், அவரது வாரிசாக பரிந்துரைக்கப்பட்டார்.*

*1890:* *இந்தியாவில் நீண்ட சுற்றுப்பயணம்.*

*1892:* *கன்னியாகுமாரிக்கு டிசம்பர் 24, 1892-ல் சென்றார்.*

*1893:* *சிகாகோ உலக மதங்களின் மாநாட்டில் கலந்து கொள்ள அமெரிக்கா சென்றார்.*

*1897:* *இந்தியா திரும்பினார்.*

*1897:* *''ஸ்ரீ ராமகிருஷ்ணா மிஷன்'' என்ற அமைப்பைத் தொடங்கினார்.*

*1899:* *'ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தை' நிறுவுவதற்காக கங்கை நதிக்கரையில் பேலூரில் ஒரு தளம் வாங்கினார்.*

*1899 - 1900:* *ஜனவரி 1899 முதல் டிசம்பர் 1900 வரை மேற்கு நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.*

*1902:* *கல்கத்தா அருகில் பேலூரில் அவரால் நிறுவப்பட்ட 'ஸ்ரீராம கிருஷ்ணா மடத்தில்' ஜூலை 4, 1902 அன்று மறைந்தார்.*[1]

---

1. தமிழ் விக்கிப்பிடியா



# 2

# வேதாத்திரி மகரிசி வாழ்க்கைக் குறிப்பு

## மகான் என்பவர் யார்?

விடையாக வருகிறார் விவேகானந்தர்.

‘‘மகான்கள் என்பவர்கள் தைரியசாலிகள். மனோதிடம் படைத்தவர்கள். தாம் வாழ்கின்ற நாட்களுக்கும் அப்பால் சென்று சிந்திப்பவர்கள். தாம் கண்ட அதிநுட்ப உண்மைகளை இந்த மனித குலத்திற்கு எவ்விதத் தயக்கமுமின்றி அச்சமுமின்றி எடுத்துரைப்பார்கள்.’’

இந்த அளவுகோல்தான் அருட்பேராற்றல் தந்த வேதாத்திரியைக் கும்பிட்டுத் தொழத்தக்க மகானாக்குகிறது.

## பிறப்பும் இளமையும்

வேதாத்திரி மகரிஷி கூடுவாஞ்சேரி என்னும் கிராமத்தில் நெசவுத் தொழில் செய்யும் வரதப்பன், முருகம்மாள் (சின்னம்மாள்) தம்பதியர் களுக்கு எட்டாவது குழந்தையாகப் 14.8.1911 ஆம் நாள் பிறந்தார்.

சிறுவயது முதலே வேதாத்திரி மகரிஷி அவரது தாயார் சின்னம்மாளிடம் நிறைய பக்தி கதைகளையும், புராணக்கதைகளையும் அறிந்து கொண்டார்.

இவரது குடும்பச்சூழல் இவருக்கு அதிகம் படிக்க வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது.

தன்னுடைய சொந்த ஊரில் மூன்றாவது வகுப்பு வரை படித்த இவர், பின்னர் தங்கள் குடும்பத் தொழிலான தறி நெய்தலை செய்யத் தொடங்கினார்.

18வது வயதில் சென்னையில் தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் வாய்ப்பு இவருக்கு ஏற்பட்டது. சென்னையில் இவருக்கு ஆயுர்வேத மருத்துவர் எஸ். கிருஷ்ணராவின் நட்பு கிடைக்க, அவர் மூலமாக தியானம், யோகா போன்றவைகளைக் கற்றார்.

தனது வாழ்க்கையின் குறிக்கோளாகிய முழுமையை உணரும் நோக்கத்தால் உந்தப்பட்டு, சித்த, ஆயுர்வேத மற்றும் ஹோமியோபதி போன்ற மருத்துவ துறைகளைக் கற்று தேர்ச்சிப் பெற்றார்.

மேலும் இரண்டாவது உலகப் போரின் போது முதலுதவிப் பயிற்சியாளராகவும் பணிபுரிந்தார். பின்பு பொருளாதாரத் தன்னிறைவு பெற வேண்டும் என்று, தனது சுய முயற்சியினால் பல்லாயிரம் நபர்களுக்கு வேலை அளிக்கக்கூடிய அளவிற்கு ஒரு பெரிய நெசவுத் தொழிற்சாலையை உருவாக்கினார்.

இவரின் சொத்து இவர் சந்தித்த சாதுக்களே! பாதை காட்டிய பாலகிருஷ்ண நாயக்கர், வைரமாக்கிய வைத்திய பூபதி எஸ். கிருஷ்ணராவ், பட்டை தீட்டிய பரஞ்சோதி மகான், இராமலிங்க வள்ளலார் என்று பல குருமார்கள் இவருக்குக் கிடைத்தார்கள்.

## ஆன்மீகத் தேடல்

தனது சகோதரியின் மகளை (லோகாம்பாள்) மணந்து இல்லற வாழ்க்கையைத் தொடங்கினார். இல்லறத்திலும், நெசவுத் தொழிலிலும் ஈடுபாடு அதிகமிருந்த போதிலும் தனது ஆன்மீகத்தேடலில் மிகுந்த ஆர்வத்துடன் நாட்டம் கொண்டிருந்தார்.

சித்தர்களின் நூல்களைக் கற்று, தியானத்தில் வெகுவாக ஈடுபட்டு தன்னை அறிதல் என்ற அகத்தாய்வு முறையில் விடாமுயற்சியுடன் ஈடுபட்டார்.

இவரது ஆழ்ந்த ஆன்மீகத் தேடலின் விளைவாக தனது 35வது வயதில் ஞானம் பெற்றார். அதிலிருந்து அடுத்த 15 ஆண்டுகளில் பல உன்னதமான ஆன்மீகக் கருத்துக்களை தனது எழுத்துக்களின் மூலமாகவும், உரைகளின் மூலமாகவும் மக்களுக்கு எடுத்துரைத்தார்.

பின்னர் தனது நெசவுத் தொழிலை முற்றிலும் விட்டு விட்டு தன்னை முழுமையாக ஆன்மீகத் துறையில் ஈடுபடுத்திக் கொண்டார்.[1]

மகரிசி 22 முறை உலக நாடுகளை சுற்றி வந்தார். மேற்கத்திய கலாச்சாரத்திற்கும் நமது கலாச்சாரத்திற்கும் ஒத்ததாக மனவளக்கலையை வகுத்தார்.

மனவளக்கலையில் ஜாதி,மத, மன, மொழியில்லை. உடலும் உயிரும் உள்ள மனிதன் அனைவருக்கும் பொருத்தமானதாக வடிவமைத்தார்.

அதற்கு உலக சமுதாய சேவா சங்கம் என்று பெயரிட்டார். அவருடைய வாழ்க்கை அனுபவங்களே அகத்தாய்வாக மாறின.

**மனவளக்கலை மன்றங்கள்**

தான் கண்டுணர்ந்ததை மனவளக் கல்வியை பாடத்திட்டமாக வடிவமைத்தார்கள்.

''மனவளக்கலை'' என்னும் வாழ்க்கை வளக் கல்வியானது ஐந்து படித்தளங்களைக் கொண்டதாகும். அவை:

1. உடல்நலம் காத்தல்,
2. மன இயக்கத்தை, எண்ணங்களைச் சீர் அமைத்து மனவளம் காத்தல்,
3. கூடி வாழும் மக்களிடையே ஒத்தும் உதவியும் இனிமைகாத்து வாழும் நட்புநலம் காத்தல்,
4. பழைய வினைப் பதிவுகளால் தரம் குறைந்துள்ள கருமையத்தை நலம் பயக்கும் செயல் முறைகளைத் திட்டமிட்டுச் செய்து, தூய்மை செய்தல்,
5. பேரியக்க மண்டலத்தின் உற்பத்தி, இயக்கம், விளைவுகள் அனைத்துக்கும் மூல ஆற்றலான இறைநிலையையும் அறிவையும் உணர்தல், என்பனவாகும்.

இதனை பருவமடைந்த 14 வயதுக்கு மேற்பட்ட ஆண் பெண் இருபாலரும் கற்கலாம். இந்தக் கல்வியானது உரை விளக்கங்களோடு செயல் முறை திட்டங்களும் அடங்கியதாகும்.

இந்த ஐந்திணைப்பு வாழ்க்கை வளக் கல்வியானது குடும்ப வாழ்வை ஏற்றுள்ள கணவன் மனைவி இருவருக்கும் மிக்க நலமளிக்கும். குடும்ப வாழ்வைத் தவிர்த்து சமுதாயத் தொண்டிற்கே தங்களை அர்ப்பணித்துக் கொண்டு வாழும் இருபால் பிரம்மச்சாரிகளுக்கும் நலமளிக்கும்.

கல்வி கற்கும் இளைஞர்களுக்கும், நிர்வாகத்துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் மனஅமைதியையும், திறனையும் அளிக்கும். இந்த ஆன்மீகக் கல்வி மனித குலத்திற்கு வாழ்க்கை விளக்கமாகும்.

இன்று பட்டிதொட்டியெல்லாம் மனவளக்கலை மன்றங்கள் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

## அறிவுத்திருக்கோயில்கள்

மக்கள் நல்ல அறிவாட்சித் தரம் பெற்றால்தான் உலகில் அரசியல், பொருளாதாரம், மதம் இவை மூன்றும் ஒழுங்குபடும். இந்த மூன்றும் ஒழுங்கு பெற்றால், மனித குலம் அமைதி அடையும்.

அத்தகைய முறையில் உலகை முழுமையாக மாற்றியமைக்கும் பணி இறைநிலை உணர்வில் இருந்து தான் வரவேண்டுமே தவிர, இடையில் இருந்து இல்லை.

வேறு எங்கு இருந்தும் இல்லை, அப்பணியைத் தொடங்கவும், நடத்தவும் உதவுவதற்குரிய இடம் தான் வேதாத்திரி தொடங்கிய ''அறிவுத்திருக்கோயில்''. அறிவுக்குத் திருக்கோயில் அமைத்த முதல் மகான்.

இன்று நூற்றுக்கு மேற்பட்ட அறிவுத்திருக்கோயில்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

## இறைநிலைப்பயணம்

வேதத்தை விளக்கிய வேதாத்திரியை இறையாற்றல் 28.03-2006 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 12.20க்கு தன்னிடம் இணைத்துக் கொண்டது. 95 வயதில் முக்தியடைந்தார்.

---

1. எனது வாழ்க்கை விளக்கம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.



# 3

# விவேகானந்தர் – வேதாத்திரி படைப்புகள்

**வி**வேகானந்தர் ஆற்றிய சொற்பொழிவுகள், அவர் எழுத்துக்கள், கடிதங்கள், பேச்சுக்கள், பேட்டிகள் முதலியன The complete works of Swami Vivekananda என்ற பெயரில் தொகுக்கப்பட்டுள்ளன.

இத்தொகுப்பு தமிழ் மொழியிலும் விவேகானந்தரின் ஞான தீபம் என்ற பெயரில் மொழிபெயர்க்கப்பட்டு 16 பாகங்களாக வெளி வந்துள்ளது. சென்னை ராமகிருஷ்ண மடம் இதனை வெளியிட்டுள்ளது.[1]


அமெரிக்க மக்கள் விவேகானந்தரின் சொற்பொழிவுகள் எல்லாம் நூல் வடிவாக வரவேண்டும் என்று விரும்பினார்கள். சுவாமிஜி பேசும்போது அதை அப்படியே பதிவு செய்வதற்காக ஜே.ஜே. குட்வின் என்பவரை நியமித்தார்கள்.

அவரும் ஒரு இயந்திரம்  போல எழுதிக் கொண்டிருந்தார். பின்பு நாள் செல்லச் செல்ல சுவாமிஜியின் அற்புத உரையானது அவருடைய மனதுள் ரசவாதம் புரியலாயிற்று சுவாமிஜியிடம் பக்தி கொண்டார்.  அவருடைய நிழல் போலத் தொடர்ந்து சென்றார்.

அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் பின்பு இந்தியாவிலும் சுவாமிஜியைத் தொடர்ந்து சென்று சொற்பொழிவுகளை சுருக்கெழுத்தில் எழுதிக் கொண்டு பின்பு விவரித்து எழுதுவார்.

சுவாமிஜி எதுவும் எழுதவில்லை.  குட்வின் இல்லையென்றால் சுவாமிஜியின் புத்தகங்கள் வெளிவந்திருக்க வாய்ப்பில்லை. குட்வினைப் பற்றி சுவாமிஜியே…

''எனது கருத்துகளினால் உலகின் ஏதேனும் ஒரு கோடியில் யாரோ ஒருவர் பயன்பெற்றார் என்றால் அதற்குக் காரணம் குட்வின்தான். எனது சிந்தனையை எழுத்தாக வடித்துத் தந்தார். அவருடைய தூய்மையான தொண்டு- பக்தி இனி அவரைப் போல் வேறு எவர் உண்டு.''[2]




**ஊட்டி சர்ச்சில் இருக்கும் குட்வின் சமாதியில் ஆசிரியர்**

## வேதாத்திரி மகரிசி எழுதிய நூல்கள்

1. மனவளக்கலை பாகம் ஒன்று
2. மனவளக்கலை பாகம் இரண்டு
3. மனவளக்கலை பாகம் மூன்று
4. எளியமுறை உடற்பயிற்சி
5. எனது வாழ்க்கை விளக்கம்
6. ஞானமும் வாழ்வும்
7. பாடு பாப்பா
8. மகரிஷி மணிமொழிகள்

9. உலக சமுதாய சேவா சங்கம்

10. காந்த தத்துவம்

11. என் குருநாதர்

12. உலக சமாதானம்

13. அருட்பேராற்றலின் அன்புக்குரல்

14. வான் காந்தத்தத்துவம்

15. திருக்குறள் உட்பொருள் விளக்கம்

16. இறையுணர்வும் அறநெறியும்

17. ஜீவகாந்தம்

18. அருள்தந்தையின் பதில்கள் பாகம் - 1

19. அருள்தந்தையின் பதில்கள் பாகம் - 2

20. பிரம்மஞானம்

21. இன்பமாக வாழ

22. குடும்ப அமைதி

23. வாழ்க்கை வள உயர்வுப்படிகள் ஐந்து

24. செயல் விளைவுத் தத்துவம்

25. மாக்கோலமாய் விளைந்தமதி விருந்து

26. சமூகச் சிக்கல்களுக்கான ஆய்வுத் தீர்வுகள்

27. மனம்

28. ஞானக் களஞ்சியம் 1,2

29. வாழ்க்கை மலர்கள் (நாள் ஒரு நற்சிந்தனை)

30. வேதாத்திரியம்

31. ஆன்மீக விளக்கு

32. அணுவிஷம்

33. பிரம்மஞான சாரம்

34. இறைநிலை அறிவு

35. மதமும் மனிதனும்

36. அறிஞர்களின் கடமை

37. அருளருவி பாகம் 1

38. வாழ்வியல் விழுமியங்கள்

39. அருள்தந்தை வேதாத்திரி மகரிசி பன்முக ஆய்வு

40. வேதாத்திரியத்தின் இறைநிலை விளக்கம்

41. நான் யார்?

42. கடவுளும் கருமையமும்

43. உலகச் சமுதாய வாழ்க்கை நெறி

44. அருளருவி பாகம்.2

**ஆங்கிலம்**

1. Yoga for Modern Age
2. karma yoga
3. Prosperity of India
4. The Story of My life
5. Altruism
6. Physiocal
7. Physical Transformation of soul
8. Science and Religion
9. State of Life Before and After Death
10. Does God Exist?
11. Sex and Spiritual Development
12. Sings and thieir Imprints
13. Seven Lectures on Unified Force.
14. The World Order Of holisitic Unity
15. Blueprint for Wordl Peace

16. Bliss Beyond Words (verse)
17. Philosophy of Magnetism
18. Philosophy of Universal Magnetism
19. Bio&Magnetism
20. journey of Consciousness
21. Unifed Force
22. Logical solutions for the problems of Huimanity
23. mind
24. Genetic Centre, the Secrets of the soul

எனப் பல்துறை நூல்களைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதியுள்ளார்கள்.[3]

சுவாமி விவேகானந்தரின் நூல்களையும் வேதாத்திரி மகரிசி நூல்களையும் இளைஞர்கள் ஆழ்ந்து படிக்க வேண்டும்.

கற்பக மரம், காமதேனு, சிந்தாமணி ஆகியவை போன்று ஸ்பர்சவேதி என்று ஒன்றைப் பற்றிச் சொல்கிறார்கள்.

ஸ்பர்சவேதியைக் கொண்டு இரும்பைத் தொட்டால் இரும்பு, தங்கமாக மாறிவிடும் என்பது ஐதிகம்.

சுவாமி விவேகானந்தரின் நூல்களும் வேதாத்திரி மகரிசி நூல்களும் ஸ்பர்சவேதியைப் போன்றவை என்று திட்டவட்டமாக நான் சொல்வேன்.

ஸ்பர்சவேதி இரும்பை தங்கமாக மாற்றிவிடுவதைப் போல, உயர்த்திவிடுவதைப் போல, இந்த மகான்களின் நூல்களை இளைஞர்கள் ஆழ்ந்து படித்தால் அவர்கள் வாழ்க்கையில் நிச்சயமாக அது ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் என்று நான் மனப்பூர்வமாக நம்புகிறேன்.

---

1. தமிழ் விக்கிப்பிடியா
2. சுவாமி விவேகானந்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள் பக்14 கங்கா ராமமுர்த்தி. கங்கை புத்தக நிலையம்.
3. தத்துவஞானி வேதாத்திரி மகரிசியின் கருத்துக்களில் திருக்குறளின் தாக்கம். பக்4-முனைவர் கஸ்தூரி ராஜா-உலகத் தமிழாராயச்சி நிறுவனம். சென்னை.



# 4

## அவதாரப் புருஷர்கள்

சிறு வயதிலேயே ஏன்? எப்படி? என்ற வினாக்களை எழுப்பிக் கொண்டதால் கடவுள் யார்? என்ற வினாவும் அதைக் கண்டு பிடித்து விட வேண்டும் என்ற வேகமும் இரு ஞானிகள் உள்ளத்திலும் எழுந்தது.

இருவருமே உலகியலில் நடக்கின்ற பல சடங்குகளை கண்ட போதெல்லாம் அதைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபடுவார்கள். தத்துவக் கருத்துக்களை ஆராய்ச்சி செய்தனர்.

அதில் மறைந்திருக்கும் உண்மை நிலையைப் பற்றி எதார்த்தமாக விடை காண்பார்கள்.

இச்சிந்தனை ஆற்றலே அவர்களை உலகியல் வாழ்வியலில் எந்த கருத்துப் பற்றியும் சடங்குகள், சம்பிரதாயங்கள் பற்றியும் தெளிவான விளக்கத்தைத் தன்னுள்ளே வைத்திருக்கும் ஆற்றலைத் தந்தது.

இச்சிந்தனைகளே அவர்கள் மனம், உயிர், மெய் என்ற மறைபொருள் விளக்கத்தை அறிந்து கொள்ளவும் வைத்தது.

நரேந்திரருக்கு எட்டு வயதாக இருக்கும் போது அவருடைய உறவினர் ஒருவர் புத்தசாலியாகத் திகழ்ந்த நரேந்திரருக்குப் பல விஷயங்களைக் கற்பித்தார்.

காம்ப்பே (COMPTE) என்ற மேலை நாட்டுத் தத்துவ ஞானியின் தத்துவ போதனையை நரேந்திரருக்குப் போதித்துள்ளார்.

இளம் நரேந்திரர் தத்துவ சாரத்தில் மிகுந்த ஆர்வம் காட்டி வந்தார். ஓரிரு ஆண்டுகளுக்குப் பின்பு நரேந்திரர் மேலை நாட்டு ஞானிகளில் சிறந்தவராக விளங்கிய கெர்பர்ட் ஸ்பென்சர் என்பவரது நூல்களைப் படித்து அறியும் திறமை பெற்றிருந்தார்.

மேலும் கெர்பர்ட் ஸ்பென்சரின் சில கருத்துக்களை நரேந்திரர் ஏற்கவில்லை. அக்கருத்துக்கள் சரியல்ல என்று நரேந்திரர் ஸ்பென்சருக்குக் கடிதம் ஒன்று எழுதினார்.

கெர்பர்ட் ஸ்பென்சர் நரேந்திரர் எழுதியிருந்த கடிதத்தைக் கண்டார். பனிரெண்டு வயதில் இத்தனை தெளிவும் முதிர்ச்சியும் சாத்தியம் தானா? என்ற வியப்பு அவருக்குத் தோன்றியது.

தமது சித்தாந்தத்தைப் புரிந்து கொள்பவர்களே அரிதாக இருக்கின்றபோது அதைப் புரிந்துகொண்டு தவறும் கண்டுபிடிப்பதற்கு ஞானம் வேண்டும் என்றுணர்ந்தார்.

ஆயிரமாயிரம் மைல்களுக்கு அப்பால் கெர்பர்ட் ஸ்பென்சர் வாழ்ந்து வந்தார். எனினும் நரேந்திரரின் ஞானச் செழுமையை அவர் துல்லியமாக அறிந்து கொண்டார். சிறுவன் என்று அலட்சியம் கொள்ளாமல் பதில் கடிதம் வரைந்தார்.

''தத்துவஞானப் பயிற்சி எளிதாகக் கைவரப் பெறுவாய். மேன்மேலும் படித்து மேன்மையடைவாய்'' என்று மகிழ்ச்சி பெருக்குடன் நரேந்திரருக்கு ஆசி கூறியிருந்தார் அக்கடிதத்தில்.

இளம் வயதிலேயே மேலைநாட்டு ஞானி ஒருவரிடமிருந்து வாழ்த்துக் கடிதம் பெற்ற நிகழ்வு மறக்க முடியாததாக அமைந்தது.[1]

வேதாத்திரி மகரிசியின் கூடுவாஞ்சேரியில்-அக்காலங்களில் சனிக்கிழமைகளில் பலர் கூட்டாக பஜனை பாடிக் கொண்டு தெருக்களைச் சுற்றி வருவது வழக்கம்.

அப்போது பஜனை பாடல்களில் தாயுமானவருடைய ''அங்கிங் கெனாதபடி'' எனத் தொடங்கும் பாடல் அடிக்கடி இடம் பெறும். அந்தப் பாடலின் கருத்தில் மூழ்கிய இவர் உள்ளம் கடவுள் ''அரூபம்'' என்ற தெளிவைப் பெற்றிருந்தது. அப்பாடலின் கருத்து இவர் உள்ளுணர்வைத் தூண்டி இறைநிலையை உணர்த்தியது.

அன்று ஆயுத பூஜைநாள். சாமிக்குப் படையல் - தீபாராதனை - பிறகு சாப்பாடு. அப்பாவுக்கு மிகவும் பிடித்தவையெல்லாம் சாமிக்கும் படைக்கப்பட்டிருந்தன. சாராயம் - மாமிசம் என்று சகலமும் அதில் இருந்தன.

குழந்தை வேதத்திரியைப் பெற்றோர்கள் தீபாராதனைக்கு அழைக்கிறார்கள். படையல் பொருளைப் பார்த்தவுடன் பதை பதைக்கிறது குழந்தையின் மனசு.

''இதெல்லாம் வேணும்னா நீங்க சாப்பிட வேண்டியது தானேப்பா - நடு வீட்ல சாமிக்கு முன்னாடி இதையெல்லாம் வைக்கணுமா?

''இன்னைக்குச் சக்தி பூஜை. சாமிக்குப் படையல் வைச்சுத் தானே சாப்பிடணும்?''

''இதெல்லாம் சாமி கேட்டுதப்பா. சாமி இந்த அளவுதான் சாப்பிடுமாப்பா?'' வேதாத்திரி விடவில்லை.

இந்தக் கேள்வியில் தந்தையின் மனம் புண்படுமோ என்று தாயின் மனம் பதறுகிறது.

தந்தை மௌனமாகிறார். மௌனம் கோபத்தின் உச்சியா அல்லது ஞானத்தின் தொடக்கமா என்று அறியாத தாய்- தந்தையைச் சற்று உள்ளே அழைத்துப் போய்ச் சமாதானப்படுத்துகிறார்.

''என்னங்க இரணியனுக்குப் பிரகலாதன் வந்து பிறந்தது போல உங்களை எதிர்த்துப் பேசுற அளவுக்கு நமக்கு வந்து ஒரு பிள்ளை பிறந்திருக்கே. இதுக்காகவா மகன் வேண்டுமென்று தவமிருந்தோம்?'' தாய் சமாதானப்படுத்தினார்.

தந்தை நிதானமாகச் சொன்னார். ''அவன் சொல்றதுலே என்ன தப்பு இருக்கு? நல்லதைத்தானே சொல்றான். நாம் தான் புரிஞ்சுக்கணும். அவன் நமக்கு வந்து பிறக்கிற பிள்ளையில்லை-நீ வேணும்னா பாரேன்-பிற்காலத்திலே ஒரு பெரிய மகானா வருவான்''[2]

ஞானத்திற்கான வித்து அவர்களுடைய இளமைப் பருவத்திலேயே அவர்களது மனதில் ஊன்றப்பட்டது.

---

1. சுவாமி விவேகானந்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள். பக்.19 கங்கா ராமமூர்த்தி, கங்கை புத்தக நிலையம்.

2. இந்த நூற்றாண்டு தந்த மகான். பக்.13 அழகர் ராமானுஜம்.



# 5

# ஞானத்தேடல்கள்

நரேந்திரன் பி.ஏ. தேர்வுக்கு விழுந்து விழுந்து படித்துக் கொண்டிருக்கும்போதுதான் தேர்வுக்கு முதல் நாள் காலை ஒரு விசித்திரமான எண்ணம் எழுந்தது அவனுக்கு.

''இந்தக் கல்வியினால் என்ன பயன்? மெய்ப்பொருள் எனப்படும் சத்திய தரிசனத்துக்கு இந்தப் படிப்புச் சிறிதேனும் உதவுமா?'' என்ற வினா அவனுடைய உள்ளத்தில் பிறந்தது.

''நீங்கள் கடவுளைக் கண்டதுண்டா?'' என்ற கேள்வியை பலரிடமும் கேட்டுக் கொண்டேயிருந்தான்.

பிரம்ம சமாஜத்தில் உள்ளவர்களிடமும் இந்த கேள்வியைக் கேட்டான். விடை கிடைக்கவில்லை.

கடவுளைக் காண உதவாத மதம் தனக்குத் தேவையில்லை என்ற எண்ணத்துடன் மகரிசி தேவேந்திரநாத் தாகூரைக் கண்டான்.

''மகாஜன! தாங்கள் கடவுளைக் கண்டதுண்டா?'' என்று கேட்ட நரேந்திரனின் நாவில் நின்ற நெருப்பு இப்போது அவனது கண்களில் ஜொலித்தது. அறிவுக் கனலாக ஒளிர்ந்த அந்த அழகிய பெருங் கண்களையே நோக்கினார் தேவேந்திரர்.

''என் குழந்தாய்! உனக்கு ஒரு யோகியின் கண்கள் இருக்கின்றன'' என்று மட்டும் கூறி மௌனமானார்.

நரேந்திரனுடைய நம்பிக்கை அடிமட்டமாகச் சரிந்தது. தேவேந்திரரிடம் அவனுடைய கேள்விக்கான விடை இல்லை.

வேறு பல மதத்தலைவர்களிடமும் ஓடினான். ஒவ்வொருவரிடமும் அதே அதிசயமான மாபெரும் கேள்வியைக் கேட்டான்.

''நீங்கள் கடவுளைக் கண்டதுண்டா?''

யாரும் கடவுளைக் கண்டதாக அவனிடம் கூற முடியவில்லை.

வெடிமருந்து ஏதோ உள்ளத்தில் வெடிப்பது போல் இனம் தெரியாத ஐயங்கள் நரேந்திரனைத் தகர்த்தன. அந்த ஐயங்களைத் தீர்க்க கூடியவர் யார்?

திடீரென்று நரேந்திரனுக்கு நினைவு வந்தது. பேராசிரியர் கேஸ்டி பரவசத்தைப்பற்றி விளக்கும் போது குறிப்பிட்ட ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் தன் கேள்விக்கு விடை கூறுவார்?

வழி தெரியாது தவித்த நவீன பாரதத்துக்குப் புராதன பாரதத்தின் அழைப்புக் கேட்டு விட்டது.

அறிவுக்கனலுக்கு அருட்புனலின் அழைப்புக் கேட்டு விட்டது.

''கடவுளைக் கண்டதுண்டா?'' என்ற மகத்தான வினாவைச் சுமந்து கொண்டு நரேந்திரன் தட்சினேசுவரத்துக்குப் புறப்பட்டான்.[1]

குழந்தை வேதாத்திரியின் பிஞ்சு மனதிலும் ஆழமாக சில கேள்விகள் விடைகளின்றி அப்படியே கேள்விகளாகவே இருந்தன.

ஆசான் பாலகிருஷ்ண நாயக்கர் பக்தி பஜனை சதகம் என்று அந்தப் பிஞ்சு உள்ளத்திற்குள் வேண்டுமளவு ஆன்மீகத்தை ஊட்டினார். இந்த ஆன்மீகப் பாடம் குழந்தை வேதாத்திரியை வெகுவாகத் தடுத்தாட் கொண்டது.

''எனது வயதுக்கு ஏற்ப, பக்தி மார்க்கத்தையே எனது நினைவில் ஆழ்த்தி வைத்தார். சில சமயம் சுத்த அத்வைத தத்துவம் பேசுவார். எனக்கு அது புரியவில்லை.

அவருக்கு அப்போது வயது எழுபத்தைந்து. அவருடைய நற்போதனைகள் என் சிந்தனையைத் தூண்டி விட்டன. அவர் சொற்படி ஒழுக்கத்தோடும் அடக்கத்தோடும் நடந்து வந்தேன்.

பஜனை செய்வதில் மிகவும் ஆர்வம் பெற்றேன். எனினும் அவர் விளக்கும் கருத்துக்களின் அடிப்படை உண்மைகளை அறிய எப்போதும் சிந்தித்துக் கொண்டிருப்பேன்.

எனக்குப் பன்னிரண்டு வயதிருக்கும்போதே எனது உள்ளம் சில குறிப்பிடத்தக்க வினாக்களை எப்போதும் எழுப்பிக் கொண்டே யிருக்கத் தொடங்கின. அந்த நான்கு கேள்விகளில் முக்கியமானது...

கடவுள் யார்? பிரபஞ்சத்தை ஏன் படைத்தார்?

கடவுளைத் தேடிக் கொண்டு இந்த வேதாத்திரியும் தனது பயணத்தைத் தொடர்ந்தார்.[2]



1. சுவாமி விவேகானந்தர். ரா. கணபதி. ஸ்ரீராமகிருஷ்ண மடம் சென்னை.

2. தத்துவஞானி வேதாத்திரி மகரிசி. அழகர் ராமானுஜம்.



# 6

# ஞானப்பட்டறை

“தன்னம்பிக்கை கொண்டிருந்த ஒரு சிலருடைய வரலாறே உலக சரித்திரமாகும். அத்தகைய நம்பிக்கை, உள்ளே இருக்கும் தெய்வீகத்தை வெளியே வரவழைக்கிறது. நீ எதையும் சாதிக்க முடியும். அளவு கடந்த ஆற்றலை வெளிப்படுத்தப் போதுமான அளவிற்கு உண்மையாக நீ முயற்சி செய்யாத போது தான் தோல்வி அடைகிறாய். ஒரு மனிதனோ, ஒரு நாடோ தன்னம்பிக்கை இழந்த உடனே அழிவு வருகிறது.”- என்பது விவேகானந்தரது கூற்று.

மாயத் தோற்றத்தில் மயங்கிக் கிடக்கும் மனிதர்களுக்குக் கடவுள் என்பது அறிய குரு அவசியம்.

பண்டித மேன்மைகளில் திரை விலகாது. இன்னும் இருள்தான் வந்து சேரும்.

உன்னை உனக்கு உணர்த்த குரு வேண்டும்.

கடவுள் இருக்கிறாரா இல்லையா? கடவுளைக் காண முடியுமா? கடவுளைக் கண்டவர் உண்டா என்றெல்லாம் எண்ணி எண்ணிச் சளைத்துக் களைத்துப் போன நரேந்திரன் தனக்குச் சாவடியான சாதுவிடம் வந்து விட்டான்.

அவருக்கெதிரிலேயே தான் சத்திய சிகரத்துக்குச் செல்லும் சாலையிலுள்ள சாவடியைப் பற்றி பாடினான். அவரே அந்தச் சாவடியாக இருக்கப் போகிறார் என்பது தெரிந்தும் தெரியாத விசித்திரமான நிலைமை.

தன்னிடம் உற்பத்தியாகும் அனுபவ மின்சாரத்தை உலகெங்கும் எடுத்துப் பாய்ச்ச வேண்டிய உபகரணம் தம்மை வந்தடைந்து விட்டது என்று ராமகிருஷ்ணர் தெரிந்து கொண்டு விட்டார்.

நித்திய சத்தியமான சர்வேசுவரி தனக்குக் கூறியதெல்லாம் சத்தியமேதான். தன் மூலம் வேதாந்தத்தை மீண்டும் நிலை நாட்டத் திருவுளம் கொண்ட அவள் தன்னுடைய தூதர்களில் சிறந்த தூதரை அனுப்பி வைத்து விட்டார் என்பதைத் தெரிந்து கொண்டு விட்டார் குருநாதர்.

''இவனுக்காகத் தான் எவ்வளவு காலம் காத்திருந்தோம்? இவனைக் காணாமல்-சேயைப் பிரிந்த தாயை விட- நண்பனை பிரிந்த நண்பனை விட- காதலியைப் பிரிந்த காதலனை விட எவ்வளவு துடித்திருந்தோம்?'' என்று எண்ணினார்.

அந்த எண்ணம் உடலின் ஒவ்வொரு அணுவிலும் எதிரொலிக்கத் தமது இருக்கையிலிருந்து எழுந்தார் ராமகிருஷ்ணர்.

நரேந்திரனை இறுகப் பற்றினார். அறைக்கு வடப்புறத்தேயுள்ள முகமண்டபத்துக்கு அவனை இட்டுச் சென்றார். அவரது கண் மலரிலிருந்து கசிந்த நீர் முகமலரில் பரவியது. மிகவும் கோமளமான குரலில் அவனை விளித்துக் கூறுவார்.

''ஆகா-நீ எவ்வளவு காலம் தாழ்த்தி வந்திருக்கிறாய்? என்னை இவ்வளவு காலம் காக்க வைப்பதற்கு உனக்கு எவ்வளவு கொடுமை இருக்க வேண்டும்? இக உலகமே நினைவான மாந்தரின் தூய்மையற்ற வார்த்தைகளைக் கேட்டு என் காது கொப்பளித்து விட்டது. என்னுடைய அந்தரங்கத்தின் அந்தரங்கம் நுகர்ந்த அனுபவங்களைப் புரிந்து கொள்ளக் கூடிய ஒருவரிடம் அவிழ்த்துக் கொட்டி என் சுமையைக் கழித்துக் கொள்வதற்கு எவ்வளவு துடிக்கிறேன் தெரியுமா?''[1]

சீடரைக் கண்டு குருநாதர் அகமகிழ்ந்தார்.

குழந்தை வேதாத்திரிக்கு ஏழு வயதிருக்கும். சக தோழர்களிடம் கோலி விளையாட்டு ஆடிக் கொண்டிருந்தான்.

அந்த ஊர் சார்ந்த திரு. பாலகிருஷ்ணன் என்ற பெரியவர் அந்தப் பக்கம் வந்தார். வந்தவர் வேதாத்திரி கோலி விளையாடுவதைப் பார்த்தார்.

நல்ல சிகப்பு நிறம். பால் வடியும் முகம். கூர்மையான அறிவு நுட்பம் நிறைந்த அந்த ஏழு வயதான வேதாத்திரி பொழுதை வீணாகப் போக்குகிற ஒரு விளையாட்டில் ஈடுபட்டிருந்ததைப் பார்க்க அந்தப் பெரியவருக்கு மனம் பதை பதைத்தது.

முதல் குரு தனது சீடரைக் கண்டு அகமகிழ்ந்தார்.

''எனக்கு ஏழு வயதிருக்கும் போது கோலி விளையாடிக் கொண்டிருந்தேன். என்னை ஒரு பெரியவர் கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டே இருந்தார். அவர் பெயர் பாலகிருஷ்ண நாயக்கர்.

என்னைப் பார்த்து ''அடேய்! இங்கே வாடா, உனக்கு என்ன பெயர்? என்று கேட்டார்.

''வேதாத்திரி'' என்றேன்.

''சரி. இப்போது கோலி விளையாடுகிறாயே! விளையாட்டில் உனக்கு என்ன கிடைக்கும்?'' என்றார்.

அதெல்லாம் ஒன்றுமில்லை. ஒரு வேடிக்கைக்காக விளையாடிக் கொண்டிருக்கிறறேன்!'' என்றேன்.

''நான் தினமும் காலணா கொடுக்கிறேன் உனக்கு. கோலி விளையாடும் பழக்கத்தை விட்டு விட்டு அந்த நேரம் என்னிடம் வந்து விடு. நான் உனக்குப் பஜனைப் பாடல்கள் எல்லாம் சொல்லிக் கொடுக்கிறேன்'' என்றார்.

அது எனக்கு ஒரு வரப்பிரசாதம் போல் இருந்தது. அன்றிலிருந்து கோலியைப் போட்டுவிட்டு அவர் கையைப் பிடித்துக் கொண்டு போய்விட்டேன். அவர் ஒழுக்க பழக்கங்கள் எல்லாம் சொல்வார்.[2]

மகான்களின் முதிர்ந்த ஞானத்திற்கான வலுவான விதை- அந்த மகான்களின் இளமைப் பருவத்திலேயே விதைக்கப்பட்டிருப்பது ஒரு பொதுவான விதிதானே?

1. சுவாமி விவேகானந்தர். ரா. கணபதி. ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை.

2. தத்துவஞானி வேதாத்திரி மகரிசி. அழகர் ராமானுஜம்.



# 7

# அருள் பாலித்த அண்ணல்கள்

கடவுளைக் காண இயலாமல் தன்னை மாய்த்துக்கொள்ள முடிவெடுத்த போது ஸ்ரீராமகிருஷ்ணருக்கு, காளி காட்சி கொடுத்தாள்.

ஆனால் அவரின் அருள்தாகம் அடங்கவில்லை. காளியிடம் கேட்டுக்கொண்டே இருந்தார் ஸ்ரீராமகிருஷ்ணர். காளி செவிசாய்த்தாள். ஒன்றுக்கு இரண்டு குருமார்களை அனுப்பி வைத்தாள்.

பிரம்மணி தபஸ்வினி ஒருவர் ராமகிருஷ்ணரை தேடி வந்தார். வந்த அவர் ''அன்னையின் ஆணைப்படி உனக்கு தாந்தீரிக வழிமுறைகளைக் கற்றுக் கொடுக்கவே உன்னைத் தேடி வந்தேன்'' என்று கூறினார்.

எல்லாவித தாந்தீரிய வழிமுறைகளையும் அவருக்கு உபதேசித்தார். இறைவனே மக்களை நல்வழிப்படுத்த ராமகிருஷ்ணர் வடிவில் பூமியில் அவதரித்திருக்கிறார் என்பதையும் உணர்த்திச் சென்றார்.[1]

ஸ்ரீராமகிருஷ்ணர் தனது அசாத்திய சாதனைகளின் மூலம் அவர் அஷ்டமாசித்திகளும் பெற்றார். கடவுளின் உருவங்கள் தம் முன்னே காட்சி அளிப்பதாக அடிக்கடி கூறிவந்தார்.

ஆனால் அவருக்கு கடவுளின் தாக்கத்தால் வெப்பம் அதிகரித்தது. எவ்வித மருத்துவமும் பலனை அளிக்கவில்லை.

இறுதியில் பைரவி பிரம்மணி கூறியபடி உடம்பெல்லாம் சந்தனத்தை பூசி, மலர்மாலையை அணிவித்தனர். அதன்பின் வெப்பம் தணிந்தது.

அன்பின் அவருக்கு அகோரப்பசி ஏற்பட்டது. எவ்வளவு சாப்பிட்டும் பசியென்ற ஒன்று மட்டும் அடங்கியபாடில்லை.

1865 ஆம் ஆண்டு தோத்தாபுரி என்ற துறவி ஒருவர் காளிக் கோயிலுக்கு வந்தார். காளியின் ஆணைப்படி, வேதாந்தம் அனைத்தையும் தனது பார்வையாலேயே ராமகிருஷ்ணருக்கு கற்றுக் கொடுத்தார். தான் படித்த அனைத்து வேதாந்தத்தையும் தனது வலிமையால் அவருக்கு வழங்கினார்.

ஆனால், தோத்தாபுரியின் வேதாந்தத்தாலும் ராமகிருஷ்ணரால் தியானம் செய்ய இயலவில்லை.

தோத்தாபுரி ஒரு கண்ணாடித் துண்டை எடுத்து அவரது புருவ மத்தியில் அழுத்தி, உன் மனதை இங்கு செலுத்தி தியானம் செய்? என்றார்.

அவ்வாறே ராமகிருஷ்ணரும் செய்தார். சமாதியில் ஆழ்ந்தார். அவ்வாறே மூன்று தினங்கள் கழிந்தன. தோத்தாபுரி அவர் இருந்த அறைக் கதவைத் திறந்து பார்த்தார். அங்கு இராமகிருஷ்ணர் தியானத்தின் உச்சியில் நிலைபெற்றிருந்தார்.[2]

ஸ்ரீராமகிருஷ்ணர் தனது தலையாய சீடராகிய சுவாமி விவேகானந்தர், தன் குருநாதரிடம் இருந்து மனிதன் இறைவனை நேரில் காணமுடியும் என்று கற்றறிந்தார்.

இவ்வுண்மையை விவேகானந்தரே காணவும்- குருநாதர் அவருக்கு உதவி செய்தார்.

''நரேன் மற்ற சீடர்களுக்கு உபதேசம் செய்வான்'' என்று ஸ்ரீராமகிருஷ்ணரும் எழுதிக் காட்டினார்.

''நான் சேமித்து வைத்திருந்த ஆன்மீகச் சக்திகளை எல்லாம் உனக்குத் தந்து விட்டேன். இந்த என் சக்திகளைக் கொண்டு மகத்தான காரியங்களை நீ இந்த உலகிலே சாதிக்கப் போகிறாய்'' [3] என்று ஸ்ரீராமகிருஷ்ணர் நரேந்திரனிடம் கூறினார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் மகா சமாதி அடைவதற்கு நான்கு அல்லது ஐந்து நாட்களுக்கு முன்னர் விவேகானந்தரைத் தனியாகத் தம்மிடம் அழைத்தார்.

குருவும் குருவுக்கு உகந்த சீடர் மட்டுமே அங்கு இருந்தார்கள். இருவரும் ஆழ்ந்த சமாதியில் மூழ்கிவிட்டனர்.

சிறிது நேரத்திற்குள் தம் உடம்பினுள் மிகப்பெரிய சக்தி பாய்வது போன்ற உணர்வினைப் பெற்றார்.

நீண்ட நேரம் சமாதியில் மூழ்கியிருந்தார். புறஉலக உணர்வு வந்தபொழுது தம் கண்களைத் திறந்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் கண்ணீர் சொரிந்து கொண்டு பிள்ளாய், இத்தரணியில் தர்மத்தை நிலை நாட்டுவதற்கென என் தபோபலன்களை எல்லாம் இன்று உன்பால் ஒப்படைத்துவிட்டேன். முழு மனத்துடன் அரும்பெருஞ் செயலைச் செய்து முடிப்பாயாக என்று பகர்ந்தருளினார்.

இவ்வாறு குருவும் சீடரும் ஒன்று பட்டனர். இந்த இணைப்பின் விளைவாக உலகம் அடைந்துவரும் தன்மையைத் தற்கால உலகம் விளக்கிக் கொண்டிருக்கிறது. இன்னும் என்ன நன்மை அடையப் போகிறது என்பதை எதிர்காலம் விளக்கும்.[4]

தமக்கு இராமலிங்க வள்ளலார் அருள்பாலித்ததை வேதாத்திரியாரே கூறுகிறார்.

''எனக்கு சுமார் 42 வயதில் பௌர்ணமி தினம். இரவு சுமார் 12.30 மணி அளவில், வலப்பக்கத்தில் இரண்டு அடி தொலைவில் இராமலிங்க வள்ளலார் சுத்த வெள்ளாடையோடு தலையை அதே வெள்ளைத் துணியால் மூடிய நிலையில் அமர்ந்திருந்த காட்சி கண்டார்.

''நான் உன்னோடு பத்தாண்டு காலம் இருக்கப் போகிறேனப்பா. இதை இப்போதே யாரிடமும் சொல்லாதே'' என்று கூறி மறைந்தார்.

அன்று முதல் பத்தாண்டு காலத்திற்குள் அவர் எழுதிய கட்டுரைகள், கவிதைகள் அனைத்தும் தத்துவமயம்.[5]

வள்ளலார் சொந்த உடல் மூலம் முடிக்காமல் விட்டு வைத்த செயல்களெல்லாம் இவரைக் கருவியாகக் கொண்டு முடித்தார்.

---

1. ஆன்மீகச் சான்றோர்கள்-பக்.58-நாஞ்சில் ஸ்ரீவிஷ்ணு, சோதி புத்தக நிலையம், சென்னை
2. மேலது பக். 59.
3. குமரி முனையில் விவேகானந்தர் - பக். 1 - விவேகானந்த கேந்திரம் கிராம முன்னேற்றத் திட்டம். தூத்துக்குடி
4. தர்ம சக்கரம் மாத இதழ்- சக்கரம் 40-ஆரம்.5-பக்.148, இராமகிருஷ்ண தபோவனம். திருப்பாராய்த்துறை.
5. வேதாத்திரிய இலக்கிய கருத்தரங்கு சிறப்பு மலர்-பக்.45- வேலூர்.



# 8

## கடவுளைக் கண்டவர்கள்

**க**ல்கத்தா காளிக் கோயிலில் பூசாரியாக இருந்த கதாதரர் (ஸ்ரீராமகிருஷ்ணர்) கடவுளைக் காண துடித்துக் கொண்டிருந்தார்.

ஒருநாள் கதாதரரால் தாங்கமுடியாத துயரம் அவரை வாட்டியது.

''கடவுளைக் காணாமல் இதென்ன வாழ்க்கை? தெய்வத்தைப் பாராமலே எதற்காக உயிர் வாழவேண்டும்?'' என்ற எண்ணம் கொழுந்துவிட்டெரிந்தது.

உடலில் உயிர் தரிக்க முடியாமல் நிலை தடுமாறிய கதாதரர் பவதாரிணியின் சந்நிதிக்கு வந்தார்.

அங்கு தொங்கிக் கொண்டிருந்த வாளைக் கையில் எடுத்துக் கொண்டார். இன்னும் ஒரு விநாடிதான் இந்தப் பாடு! அப்புறம் அந்த வாள் அவருக்கு அமைதி அளித்துவிடும்.

அந்த ஒரு விநாடிக்குள் மகத்தான சம்பவம் நடந்துவிட்டது. என்ன சம்பவத்துக்காகக் கதாதரர் வேக்காட்டில் வெந்து கொண்டிருந்தாரோ அந்த சம்பவம் நிகழ்ந்தே விட்டது!

சந்நிதி முழுவதும் பரமபாவமானதோர் ஒளி பாய்ந்தது. அந்த ஒளி எங்கிருந்து வந்தது? இதோ இந்தப் பவதாரிணியிடமிருந்தேதான் வந்தது.

ஆம். அங்கு பவதாரணியின் விக்கிரகம் நிற்கவில்லை. பவதாரிணியே நின்றாள்.[1]

''நீங்கள் கடவுளைக் கண்டதுண்டா? என்ற கேள்வியை பல நாட்களாக மாதங்களாக தம்முள் முகிழ்த்துக் கொண்டிருந்த கேள்வியை நரேந்திரர் குருதேவர் ராமகிருஷ்ணரைத் தரிசித்ததும் கேட்டார்.

''குழந்தாய் இறைவனை நான் கண்டிருக்கிறேன். என் எதிரே உன்னைக் காண்பதை விடவும் அகக்கண்ணால் அவரை தெளிவாகவே கண்டிருக்கிறேன் அவரோடு பேசலாம். கேட்கலாம். நீ விரும்பினால் உன்னாலும் கடவுளைக் காண முடியும்?'' என்றார் குருதேவர்.[2]

விவேகாந்தரும் காளியைக் கண்டார். தரிசித்தார். பரவச மடைந்தார்.

வேதாத்திரியும் கடவுளைக் காண வேண்டும் என்ற தாகத்தோடு குருமார்களைத் சந்தித்தார். வள்ளலாரே வந்தார். போகரும் வந்தார். கடவுளும் வந்தார். கடவுளை உணர்ந்தார்.

ஆழியாறில் ஒளி வடிவில் வந்த கடவுள் ''பிரம்மஞானத்தை எழுது'' என்று அருளாசி வழங்கினார்.

கடவுளைக் கண்டு உணர்ந்ததை மற்றவர்களுக்கும் காட்டினார். வேதாத்திரியம் மானுடத்திற்கு கடவுளைக் காட்டிக் கொண்டே யிருக்கிறது.

---

1. சுவாமி விவேகானந்தர். ரா.கணபதி. ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை.

2. சுவாமி விவேகானந்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள், கங்கா ராமமுர்த்தி. கங்கை புத்தக நிலையம். சென்னை.



# 9

# எனக்குப் பிறகு ஒருவர் வருவார்

நமது வாழ்வெனும் ஆகாயத்தில் தோன்றிய பிரகாசமான நட்சத்திரம் போன்றவர் சுவாமி விவேகானந்தர்.

சுவாமி விவேகானந்தரின் வாழ்வும் உபதேசங்களும் இன்று போலவே எந்தக் காலத்திலும் முக்கியமானவை. அவரது சொற்கள் மனிதனின் ஆன்மீக ஆற்றலைக் கண்டு எழ வைத்து அதற்கு ஒரு மகத்தான சக்தியைத் தரவல்லவை.

அத்தகைய மாபெரும் மகான் தனது தொலைதூரப் பார்வையில் பேசினார்கள்...

''நாட்டின் ஆத்மீகக் கல்வியும் லௌகீகக் கல்வியும் நமது பிடிப்புக்குள் இருக்க வேண்டும். இதைப் பற்றியே கனவு கண்டு, அதைப் பேசி வந்து, அதைப் பற்றியே சிந்தித்து அதை நிறைவேற்ற வேண்டும். அதுவரையில் நமது மக்கள் சமுதாயத்திற்கு விடிவு காலமில்லை.

இதனை செய்து முடிக்க ஒரு இயக்கம் தேவைப்படுகிறது.

இப்பணியை ஆற்றக் கூடிய மனிதர்கள் எங்கே? அதுதான் கேள்வி.

மனிதர்கள், மனிதர்கள்தான் வேண்டும். மற்ற எல்லாம் தயாராகி விடும். வலிமைமிக்க ஆண்மையுள்ள, நம்பிக்கை வாய்ந்த, குருத்தெலும்பு வரை மனப்பூர்வமான பணிபுரியத்தக்க இளைஞர்கள் வேண்டும்.

இளம் சந்ததியரிடம் எனக்கு நம்பிக்கை உள்ளது. இந்த புதிய சந்ததியிலிருந்து எனது ஊழியர்கள் தோன்றுவார்கள். சிங்கங்களைப் போல அவர்கள் இந்தப் பிரச்சனை முழுவதையும் தீர்த்து வைப்பார்கள்.

நான் எனது கருத்துக்களுக்கு ஒரு வடிவம் கொடுத்தேன். அதற்கென எனது வாழ்க்கையைக் கொடுத்தேன். நான் வெற்றி பெறவில்லையென்றால் என்னைவிடச் சிறந்த ஒருவர், எனக்குப் பிறகு வந்து அதனை செய்து முடிப்பார்''.....[1]

இதில் வருகின்ற ஒவ்வொரு வார்த்தையும் வேதாத்திரி மகரிசியைக் கருவியாக வைத்து இறையாற்றல் பதிவு செய்துள்ளது.

விவேகானந்தரின் கருத்துக்களுக்கு வடிவம் கொடுக்க இயக்கம் கண்டவர் யார்?

வலிமைமிக்க ஆண்மையுள்ள, நம்பிக்கை வாய்ந்த, குருத்தெலும்பு வரை மனப்பூர்வமான பணிபுரியத்தக்க அந்த ஞானசூரியன் யார்?

விவேகானந்தரை விடச் சிறந்த அந்த ஒருவர் யார்?

ஆன்மீகக் கல்வியையும் லௌகீகக் கல்வியையும் பல்கலைக் கழகங்களில் பாடத்திட்டமாக கொண்டு வந்த அந்த கல்வியாளர் யார்?

ஆதிசங்கரரையும் ஆல்பர்ட் ஐன்ஸ்டினையும் ஒன்றாக்கிய அந்த மெய்ஞ்ஞான விஞ்ஞானி யார்?

தத்துவத்தை பாமரனிடமும் கொண்டு சென்ற அந்த தத்துவஞானி யார்?

மனவளக்கலை என்ற கல்வியை வீடுதோறும் கொண்டு சென்ற மகான் யார்?

இருபதாம் நூற்றாண்டில் நம்முடன் வாழ்ந்த சித்தர் அருள்தந்தை வேதாத்திரி மகரிசிதான்.

ஞானதீபம் தேடிய அந்த ஞானஒளி கண்ட இயக்கம் உலக சமுதாய சேவா சங்கம் தானே?

உலக மக்களுக்கு மனவளக்கலை என்ற ஒரு வாழ்க்கை கல்வியை அற்புதமாக வடிவமைத்து தந்த மகான்.

உடலுக்கு பயிற்சி. மனதிற்கு தவம். உயிருக்கு காயகல்பம். என்ற உச்சக்கட்ட பயிற்சியை மானுடத்திற்குத் தந்த மகான்.

வாழையடி வாழையென வந்த சித்தர் மரபில் வந்தவர்களே விவேகானந்தரும் வேதாத்திரி மகரிசியும்.

விவேகானந்தர் பிரானை முழுதும் உள்வாங்கி, அதோடு விஞ்ஞானத்தையும் சேர்த்து வேதாத்திரி உலகெங்கும் உள்ள மக்களின் இதயத்தைத் தமது புத்தம்புது கருத்துக்களால் தொட்டார்.

விவேகானந்தருக்குப் பிறகு வந்த குருத்தெலும்புள்ள அந்த மகான் வேதாத்திரி மகரிசியே. அவர் கண்ட இயக்கம் உலக சமுதாய சேவா சங்கம்... அவர் வகுத்த ஆன்மீகக் கல்வி... மனவளக்கலை.



1. எழுமின் விழுமின் பக்.116- விவேகானந்த கேந்திரா பதிப்பகம், கன்னியாகுமரி.



# 10

# இலக்கை எட்டும்வரை இடைவிடாது இயங்கு

**ம**னிதனாகப் பிறந்துவிட்டோம். வாழ்கிறோம். ஒருநாள் மறைந்து விடுவோம்.

இந்த வாழ்க்கையில் இன்பம்-துன்பம் என்ற இரண்டைத்தான் அனுபவிக்கிறோம். நாம் வாழ நிலம் - நீர்- காற்று - சூரியன் - பொருட்கள் - அறிவு - அனைத்தும் இருக்கின்றன.

நாம் செய்ய வேண்டியது என்ன?

1. இயற்கையில் விளையும் துன்பங்களைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.
2. இன்பங்களைப் பெருக்கிக் கொள்ள வேண்டும்.
3. செயற்கையாக துன்பங்களை ஏற்படுத்திக் கொள்ளாமல் இருக்க வேண்டும்.

இதுவே தனிமனிதன் வாழ்விலும் சமுதாய வாழ்விலும் தேவையான இலட்சியமாகும்.

''வாழும் முறையானது வாழ்வின் நோக்கத்திற்கு முரண்பாடாக அமையும்போது துன்பந்தான் வரும். இயற்கையாக கிடைக்க வேண்டிய இன்பம் தடுக்கப்படுகிறது.

வாழ்க்கையையும் வாழ்க்கையின் நோக்கத்தையும் அந்நோக்கத்திற்கேற்ற வாழும் முறை என்ன என்பதையும் அறிந்து கொள்வதுதான் ஞானம்.

அன்றாட நடைமுறைகளையும் அந்த நோக்கத்திற்கு ஏற்பவே அமைத்துக் கொண்டாக வேண்டும் இந்தப் பொறுப்புணர்ச்சி இயல்பாகவே மலரவேண்டும்''.[1]

ஓர் எண்ணம் நிறைவேறுவதே உன் வாழ்வின் இலக்கு என்று கொள்ளவேண்டும்.

உன்னதமான ஒரு குறிக்கோளை எடுத்துக் கொண்டு, மற்ற அனைத்தையும் ஒதுக்கிவிட்டு அந்தக் குறிக்கோளையே உயிர் நாடியாகக் கொண்டு செயல்படும்போது மட்டுமே வெற்றி கிட்டும்.

உலகில் பல மெய்ஞானிகளும் விஞ்ஞானிகளும் உருவாக இந்தக் கொள்கையே காரணம்.

இதை நம் வாழ்விலும் கடைப்பிடித்தால் பல தொடர்ந்த நிகழ்வுகள் இயல்பாகவே அதன் படிகளாக அமைந்து வெற்றிப் பாதையில் நம்மை இட்டுச் செல்லும்.

மனித வாழ்வு ஒரு குறிப்பிட்ட காலம் மட்டுமே. ''வாழ்வில் ஒரே குறிக்கோள் - அதுவே வாழ்க்கை'' என்ற எண்ணத்தை மனதில் நிறுத்தி இடைவிடாது செயலாற்றினால் தான் குறுகிய காலத்தில் ஒரு சிறப்பான செயலைச் சாதிக்க முடியும். இல்லாவிடில் மனிதப் பிறவியின் பயன்தான் என்ன?

விவேகானந்தரின் இந்த முதல் உபதேசமாகக் கொண்டு வெற்றிக் கண்ட மகா சின்னத்தம்பியின் கதைதான்'' Stop Not Till; the Goal is Reached.; [2]

வாழும் மனிதன் வாழ்வின் நோக்கத்தைத் தெரிந்து அதை மறவாது வாழ்ந்தால் வாழ்வில் வெற்றியடையலாம்.

ஆறாவது அறிவிலே உணர்ந்து இயற்கை இன்பங்களைத் துய்த்தது-அறிவு தன் மூல நிலையாகிய தெய்வ நிலையுடன் இரண்டறக் கலந்து விடுவது பிறவியின் நோக்கமாகும்- இலட்சியமாகும். இந்த நோக்கத்திற்கேற்ப இலட்சியத்திற்கேற்ப வாழ்வதே வாழ்வாங்கு வாழ்வதாகும்.

இதனை விவேகானந்தர்.

***''எழுந்திரு! விழித்திரு!! இலட்சியத்தை அடையும் வரை ஓயாது உழைத்திரு!!!''[3]***

நமது குறிக்கோளை அடைவதற்கு நாம் நீண்ட காலம் கடுமையாக உழைக்க வேண்டுமென்பதை ஒரு தாரக மந்திரமாகவே கொள்ள வேண்டும்.

அயராத உழைப்பு இல்லாத மேன்மையான குறிக்கோள் மட்டும் பயன் தராது. நமது இலக்கை எட்டுவதற்கான வழியை ஆராய்ந்து உறுதியுடனும், விடா முயற்சியுடனும் செயலில் இறங்க வேண்டும்.

செயலாற்றும் போது இடையூறுகள் ஏற்படும். அவற்றைக் கடந்து கவனத்துடன் தொடர்ந்து உழைப்பது மட்டுமே வெற்றிக்கான வழி. பெரும் செயல்கள் எதையும் எளிதாகச் செய்து விட முடியுமா?

''லட்சியமில்லாதவன் இருட்டான பாதையில் தடுமாறி சென்று கொண்டிருப்பான். எனவே, குறிக்கோளை ஏற்று வாழ்வு நடத்துங்கள்''[4] என்று அறிவுறுத்துகிறார்.

மனிதனுக்குத் தேவையான இலட்சியம் எது? குறிக்கோள் என்னவாக இருக்க வேண்டும். வேதாத்திரி மகரிசி விடை தருகிறார்.

''இறைநிலையடையும் நோக்கத்திற்காக நாம் மேற்கொண்டுள்ள பயணமே வாழ்க்கை''[5] என்று கூறுகிறார்.

ஆக, இறைநிலையை உணர்ந்து- அடைவதை இலட்சியமாகக் கொள்ள வேண்டும்.

இதைதான் விவேகானந்தரும் ''தெய்வீகத்தன்மை இல்லாமல் பெறும் மிதமிஞ்சிய அறிவும், ஆற்றலும் மனிதர்களை மிருகங்களாக்கி கீழ்நிலைக்குத் தள்ளிவிடும்''[6]- என்று எச்சரிக்கை செய்கிறார்.

மேலும் எத்தகைய லட்சியத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று வரையறுக்கிறார்.

''பூரணத்துவம் வேறு. இன்பங்களை அனுபவிப்பது வேறு. இவை இரண்டும் வெவ்வேறு லட்சியங்கள் உடையவை. ஆகவே மனிதர்களை வெவ்வேறு பாதைகளில் இவை செலுத்துகின்றன.

பூரணத்துவத்தைத் தேர்ந்தெடுப்பவன் தூய்மை அடைகிறான். இன்பங்களைத் தேர்ந்தெடுப்பவன் உண்மையான லட்சியத்தை இழக்கிறான்.

மனிதனின் முன் பூரணத்துவம்-இன்பம் ஆகிய இரண்டு லட்சியங்கள் இருக்கின்றன.

ஞானி இரண்டையும் ஆராய்ந்து-ஒன்றிலிருந்து மற்றொன்றை வேறுபடுத்தி அறிகின்றான்.

இன்பத்தை விடப் பூரணத்துவமே உயர்ந்தது என்று அறிந்து-பூரணத்துவத்தையே அவன் தேர்ந்தடுக்கிறான். ஆனால் அஞ்ஞானியோ உடல் சுகத்தை விரும்பி-இன்பத்தையே தேர்ந்தெடுக்கிறான்.''[7]

''வாழ்வது ஒருமுறைதான். சரியான நோக்கத்தை தேர்வு செய்து அந்த இலட்சியத்துடன் வாழ்வோம்'' வரலாற்றில் இடம் பிடிப்போம்.

1. மனவளக்கலை பாகம் 1-பக்.1.வேதாத்திரி பதிப்பகம். ஈரோடு
2. ஸ்ரீராமகிருஷ்ண விஜயம், சனவரி 2014, பக். 32, ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை.
3. விவேகானந்தரின் பொன்மொழிகள்-இண்டர்நெட்.
4. விவேகானந்தரின் பொன்மொழிகள் -இண்டர்நெட்.
5. அறிவுத்திருக்கோயில் திறப்பு விழா மலர்-நாமக்கல்.
6. மேட்டூர் அறிவுத்திருக்கோயில்-திறப்புவிழா மலர் பக்.34
7. ஞானதீபம் பாகம் 4. பக்.193-ராமகிருஷ்ணமடம்-சென்னை.



# 11

# இந்த உலகம் மிகப்பெரிய ஓர் உடற்பயிற்சிக் கூடம்

நமது உடலையும் அதன் இயக்கத்தையும் தொந்தரவு செய்யாமல் இருக்க அனுமதித்தோமானால்-300 ஆண்டுகளுக்கு அது தன்னைத்தானே புதுப்பித்துக் கொள்ளும் சக்தி உடையது.

நமது உடல் விலை மதிக்க முடியாத பொக்கிஷம். இறைவன் பல கோடிக்கு மதிப்புள்ள உடலை நமக்குத் தந்துள்ளான்.

உடலை பாதுகாக்காமல் விட்டுவிட்டால்-படைத்த இறைவனையே அவமதிப்பது போலாகி விடும். உடலை நன்கு பாதுகாக்க வேண்டுமல்லவா?

நமக்கு உதவத்தான் உடல்கூட இயங்கிக் கொண்டிருக்கிறது.

உடம்பு என்ன சாதாரணமானதா? வெறும் சதைப்பிண்டமா? அலட்சியப்படுத்தக் கூடிய அளவிற்கு அற்பமானதா? இல்லை. இல்லவே இல்லை.

உடல் என்பது ஆயிரம் கோடி அற்புதங்களை உள்ளடக்கிய அழகிய கலைமாடம்-நாம் வாழ்ந்திருப்பதும்- நினைத்ததை யெல்லாம் சாதிப்பதும் இதனைக் கொண்டுதானே!

''இந்த உலகம் மிகப்பெரிய ஓர் உடற்பயிற்சிக் கூடம். இங்கு நாம் நம்மை வலிமையுடைவர்களாக்கிக் கொள்வதற்காக வந்திருக்கிறோம்''[1] என்கிறார் விவேகானந்தர்.

இந்த மனித உடல்தான் பிரபஞ்சத்திலேயே மிகச்சிறந்த உடலாகும்.[2] இந்த உடலை பாதுகாக்கப் பயிற்சி மற்றும் ஆசனம் பயில வேண்டியது அவசியமென்கிறார்.

மேலும்-உடம்பை நல்ல வலிமையுள்ளதாக வைக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். அதை மற்றவர்களுக்கும் கற்றுத் தர வேண்டும்... உடலுக்கும் மனத்திற்கும் சரிசமமாகப் பயிற்சி தர வேண்டும்... உடம்பை வலிமையாக வைத்திருக்க வேண்டுவதன் அவசியத்தை மக்கள் அறிந்து கொள்ளும்படிச் செய்தால்-பிறகு அவர்களே அதைச் செய்து கொள்வார்கள்[3] என்று வலியுறுத்துகிறார்.

யோகப் பயிற்சியில் சில உயர் நிலைகளை சுலபமாக அடையும் வரை தினமும்-உடலையும் உள்ளத்தையும் பற்றிய பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். உடல் வலியின்றி ஒரே நிலையில் நெடுநேரம் இருப்பதற்கு ஓர் ஆசனத்தைப் பயில வேண்டும். எந்த ஆசனம் எவருக்குப் பயிற்சி செய்ய இலகுவாக இருக்குமோ அதை அவர் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.[4] என்றும் ஆலோசனை கூறுகிறார்.

''நாம் சமுதாயத்தில் ஓர் அங்கம். இந்த உடல் சமுதாயத்தின் சொத்து. அதனைக் கெடுப்பதற்கு நமக்கு அதிகாரம் இல்லை.''[5] என்று வேதாத்திரியார் உடலைப் போற்றுகிறார்.

மேலும்-''தந்தை தாய் ஈருயிரும் ஒன்று சேர்ந்து தழைத்தொரு உடலாகி உலகில் வந்தேன்''[6] என்று உடல் வந்த கதை கூறியவர்.

தெரிந்தோ தெரியாமலே நாம் உடம்பை இதுவரைக்கும் கெடுத்துக் கொண்டிருக்கிறோமே அதையெல்லாம் சரி செய்ய வேண்டும் என்று சொல்லி எளிய உடற்பயிற்சி முறையையும் மானுடத்திற்குத் தந்துள்ளார்.[7]

''உயிர் தன் மூலத்தை அறிந்து கொள்ள எடுக்கின்ற முயற்சிக்கு இந்த உடல் தேவைப்படுகிறது'' என்று உடலின் அவசியத்தையும் வேதாத்திரியார் குறிப்பிடுகின்றார்.

உடலை வலுவாக வைத்திருப்பதே முதல் வேலை என்பார் விவேகானந்தர்.

''எனது இளம் நண்பர்களே- வலிமை உடையவர்களாக இருங்கள். இதுவே நான் உங்களுக்கு வழங்கும் அறிவுரை. கீதை படிப்பதைவிடக் கால்பந்தின் மூலம் நீங்கள் சொர்க்கத்திற்கு அருகில் இருப்பீர்கள். இவை தைரியமான வார்த்தைகள். ஆனால்

உங்களை நேசிக்கின்ற காரணத்தால் இவற்றை நான் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்... செருப்பு எங்கே கடிக்கிறது என்பதை நான் அறிவேன். ஒரு சிறிது அனுபவமும் பெற்றிருக்கிறேன். உங்கள் தோள்கள்-தசைகளின் சற்றுக் கூடுதலான வலிமையால், கீதையை இன்னமும் சற்றுத் தெளிவாகப் புரிந்து கொள்வீர்கள்''.[8]

''அறிவின் உயர்வு பெற்று உயிரின் மதிப்பும் சிறப்பும் உணர்ந்து நிறைவு பெறுவதே மனிதப் பிறவியின் நோக்கமெனினும் அது வெற்றிபெற உடலை நலமோடும் வளமோடும் வைத்துக் கொள்ள வேண்டியது'' அவசியமென்கிறார் வேதாத்திரி மகரிசி.[9]

உடலை உயர்வாகக் கருதி சீர்கேடு அடையாமல் போற்றிப் பாதுகாக்க வேண்டும். அப்போது தான் ஆன்மீகப் பயணம் தடையில்லாமல் இருக்கும்.

---

1. ''உன் எதிர்காலம் உன் கையில்'' சுவாமி விவேகானந்தர் - ஸ்ரீராமகிருஷ்ண மடம் -சென்னை.
2. விவேகானந்தரின் அறிவுரைகள்-பக்.17-ஸ்ரீராமகிருஷ்ண மடம்-சென்னை.
3. சுவாமி விவேகானந்தரின் வரலாறும் அறிவுரைகளும்-பக்.107-ராமகிருஷ்ண மிஷன்-பேலூர்.
4. சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம் பாகம்.3 பக்17-18
5. வாழ்க்கை மலர்கள் பக்.70 வேதாத்திரி மகரிசி.
6. வேதாத்திரி மகரிசியின் பொன்மொழிகள் 5000'' பாகம் 3 பக்.117. பானுகுமார்-விஜயா பதிப்பகம்-கோயம்புத்தூர்
7. வேதாத்திரி மகரிசியின் பொன்மொழிகள் 5000'' பாகம் 3 பக்.119 பானுகுமார்-விஜயா பதிப்பகம்-கோயம்புத்தூர்.
8. விவேகானந்தரின் அறிவுரைகள்-பக்.4-ஸ்ரீராமகிருஷ்ண மடம்-சென்னை.
9. வாழ்க்கை மலர்கள்-பக்.187. வேதாத்திரி மகரிசி-மனவளக்கலை மன்ற அறக்கட்டளை-சேந்தமங்கலம்.



# 12

# அறிவுலகச் சிற்பிகளின் பார்வையில் ஆன்மா

நுண்ணுடலின் ஒரு பகுதி மனம், ஒரு பகுதி புத்தி, ஒரு பகுதி நான் - உணர்வு. ஆனாலும் இவற்றில் எந்த ஒன்றும் 'அறிபவன்' ஆக முடியாது.

இவற்றுள் எதுவும் பார்ப்பவனாக, சாட்சியாக, யாருக்காக அறிவுச் செயல் நடக்கிறதோ அவனாக, நடக்கும் செயலைப் பார்ப்பவனாக ஆக முடியாது. மனத்திலும் புத்தியிலும் நான் - உணர்விலும் ஏற்படும் இயக்கங்கள் எல்லாம் இவை அல்லாத வேறு யாருக்காகவோதான் இருக்க வேண்டும்.

இவை நுட்பமான ஜடப்பொருள் அணுக்களால் ஆனவை. ஆதலால் தன்னொளி உடையவையாக இருக்க முடியாது. இவற்றின் ஒளி இவற்றிற்குச் சொந்தமானதாக இருக்க முடியாது.

எடுத்துக்காட்டாக இந்த மேஜையை எந்த ஜடப் பொருளும் உருவாக்கியிருக்க முடியாது. எனவே இவற்றிற்கெல்லாம் பின்னால் யாரோ ஒருவர் இருக்க வேண்டும், இவரே எல்லா தோற்றங்களுக்கும் உண்மைக் காரணமானவர். உண்மையாகவே எல்லாவற்றையும் அனுபவிப்பவர். இவரையே வடமொழியில் ஆத்மன் என்கிறார்கள். இவரே மனிதனின் உண்மை ஆன்மா.[1]

ஆன்மா குறித்து விவேகானந்தர் சொல்கிறார். ''உடல் ஒவ்வொரு நிமிடமும் அழிந்து கொண்டே இருக்கிறது. மனமோ தொடர்ந்து

மாறியபடி இருக்கிறது. உடல் பலவற்றின் சேர்க்கை, மனமும் அத்தகையதே, எனவே இவை எல்லா மாறுதல்களுக்கும் அப்பாற் பட்ட நிலையை அடைய முடியாது.

ஆனால் தூலப் பொருளான இந்த மெல்லிய உறையையும், இதற்கு அப்பாலுள்ள மனம் என்ற நுட்பமான உறையையும் தாண்டி இருக்கிறது ஆன்மா. இதுவே மனிதனது உண்மைத் தத்துவம். இது நிலையானது. என்றுமே பந்தப்படாதது.

இதன் அழியாமை, சுதந்திரம் ஆகிய தன்மைகளே எண்ணம், ஜடப் பொருள் போன்ற போர்வைகளை ஊடுருவி, பெயர், உருவம் என்ற நிறங்களைக் கடந்து, சுதந்திரம், அழியாமை என்ற தன்மைகளை வற்புறுத்தி நிற்கிறது''[2]

ஆன்மா என்றால் என்ன? வேதாத்திரி மிகவும் எளிமையாக விளக்கம் தருகிறார்.

1. தூல உடலுக்கு மையமான விந்து நாதம்
2. சூக்கும உடலுக்கு மூலமான உயிர்த்துகள்கள்
3. காரண உடலுக்கு மூலமான சீவகாந்தம்.

இவை மூன்றும் இணைந்தது தான் கருமையம் ஆகும். உயிரினத்தின் பெருமையும் சிறப்பும் இந்தக் கருமையத்தில் தான் அமைந்துள்ளது என்று உணர்த்துகிறார்.

மேலும், உயிர் மையத்துள் அமைந்துள்ள அறிவானது உயிரின் சுழற்சியால் எழும் விரிவலையான காந்த அலை மூலம் புலன்கள் வழியாகப் பொருளோடு தொடர்பு கொள்ளும்போது அந்த அறிவையே மனம் என்கிறோம் என்றும்,

அகம் என்பதும்-நெஞ்சம் என்பதும்- உள்ளம் என்பதும் ஆன்மா என்பதும் கருமையத்தை குறிக்கும் என்று மனிதன் உடலாலும்-மனத்தாலும் செய்யும் செயல்கள் அனைத்தும் பதிவாகி- வித்தில் மரம்போல் இருப்பு வைக்கப்படும் இடம் கருமையம்''[3] என்று தெளிவாக மகரிசி அவர்கள் விளக்கியுள்ளார்கள்.

A

ஆன்மா என்பது பிரபஞ்சத்தின் ஒளியல்லவா?'' என்று வியக்கிறார் சுவாமி விவோகானந்தர்.[4]

வாழ்க்கை என்பது பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப் பட்டது. நமக்கு பிறந்த நாள் தெரியும். இறந்த நாள் தெரியாது. ஒரு நாள் இறக்கப்போவது திண்ணமே.

ஆயினும் அது எந்த நாள் என்பது யாருக்கும் தெரியாத ஒன்று. மனிதப் பிறவிக்கான உடலமைப்பு நூற்றி இருபது ஆண்டுகள் வாழும் வகையில் தான் அமைக்கப்பட்டு இருக்கிறது. எனவே எவ்வளவு காலம் வாழ்கிறோம் என்பது நாம் உடலை பராமரிக்கும் விதத்தில் தான் அமைந்து இருக்கிறது.

உடலானது பஞ்ச பூதங்களின் (ஐந்து பௌதிகங்களின்) கூட்டு. நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் இவற்றின் கூட்டே மனித உடல்.

மனிதனின் உடல் நலம் என்பது அவன் உடலில் ஓடிக் கொண்டு இருக்கும் இரத்தம், வெப்பம், மற்றும் சுவாசம் ஆகிய ஓட்டங்களின் சீரமைப்பில் தான் உள்ளது.

நீரானது நம் உடலில் இரத்தமாகவும், நெருப்பு என்பது உடலின் சூட்டையும், காற்று என்பது நமது சுவாசமாகவும் அமைகிறது. நிலமானது நமது உடலாகவும் விண் என்ற ஆகாயம் உயிராகவும் உள்ளது.

உடலுக்கும் உயிருக்கும் உள்ள உறவினை பலப்படுத்த இந்த மூன்று ஓட்டங்களும் நன்றாகச் செயல்பட வேண்டும்.

உயிரானது எங்கு இருக்கிறது என்று கேட்டால் பொதுவாக நாம் நமது இதயத்தையே காட்டுவோம். ஆனால் உயிரானது நம் உடல் முழுவதும் ஓடிக் கொண்டே இருக்கிறது.

அவ்வாறு ஓடும் உயிரிலிருந்து வரும் அலைகள் காந்த அலைகளாக மாறி நம் உடலை நடத்துவதற்கு போதிய சக்தி அளிக்கிறது

இதே அலை மூளை வழியே செல்லும்போது மனமாக இருக்கிறது. மனதினால் எண்ணுவதை, வாயினால் சொல்லி உடலால் செய்கிறோம். இவை முறையே எண்ணம், சொல், செயல் எனப்படுகிறது.

நாம் அடையும் இன்ப துன்பங்களுக்கு காரணமே நம்மில் ஏற்படும் எண்ணங்கள் சொல்லப்படுவதும் செயல்படுத்தப்படுவதும். நம்முடைய எண்ணம், சொல், செயல் என்பது நம் உடலிலே
A காந்தத்தில் பதிவாகிறது. இவ்வாறு திணிவு பெற்ற காந்தமே ஆன்மா எனப்படும்.[5]

ஆன்மா எனப்படும் கருமையம் தூய்மை பெற வேதாத்திரி மகரிசி பத்து வழிகளை மனவளக்கலை பாடத்திட்டத்தில் பாடமாக பதிவு செய்துள்ளார்கள்.[6]

1. மாதா, பிதா, குரு, தெய்வம் மதித்து வாழ்தல்.

2. ஒழுக்கம், கடமை, ஈகை, அறநெறி பின்பற்றி வாழ்தல்.

3. உடற்பயிற்சி அளவோடு நாள்தோறும் செய்தல்.

4. அகத்தவம் பயிற்சி செய்தல்.

5. பெற்றோர், வாழ்க்கைத் துணைவர், குழந்தைகள் ஆகியோரை பொறுப்போடும் அக்கறையோடும் உதவி செய்தல்.

6. இறைநிலை உணர்ந்து அறநிலையொடு அடிக்கடி ஒன்றி பழகுதல்.

7. மனித முயற்சியால் உற்பத்தி செய்த பொருட்களையும். இயற்கை வளத்தையும் பிறர் உபயோகிக்கும் பொருட்களையும் சேதப்படுத்தாமல் மதித்து வாழ்தல்.

8. ஒவ்வொரு உயிரும் பேராற்றலே... மதித்து ஒத்தும் உதவியும் வாழ்தல்.

9. உள்ளத்தில் பகை வஞ்சம் வைக்காமல் மன்னிப்பும் கருணையும் கொண்டு எல்லோரும் இன்முகத்தோடு அன்போடு பழகுதல்.

10. தேசம், மொழி, சாதி, மதம், இனம், இவற்றால் மனிதரை வேறுபடுத்தாமல் எல்லோரும் இயற்கையின் மக்கள் என்ற நினைவில் வாழ்தல்.

---

1. தமிழ்.வெப்துனியா

2. ''உன் எதிர்காலம் உன் கையில்'' சுவாமி விவேகானந்தர் - ஸ்ரீராமகிருஷ்ண மடம் -சென்னை.

3. தத்துவஞானி வேதாத்திரி மகரிசியின் கருத்துக்களில் திருக்குறளின் தாக்கம்-பக்.112-முனைவர் கஸ்தூரி ராஜா-உலகத் தமிழராய்ச்சி நிறுவனம். சென்னை.

4. சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம்-பாகம்15-பக்.280-ஸ்ரீராமகிருஷ்ணமடம்- சென்னை.

5. வேதாத்திரி மகரிசி சொற்பொழிவில் நேரிடையாகக் கேட்டது.

6. வேதாத்திரி மகரிசி சொற்பொழிவில் நேரிடையாகக் கேட்டது.



# 13

# மனவளக்கலை கல்வி பற்றி விவேகானந்தர்

**ஏ**து மேலான அறம் என்பதை அது பலனளிக்கும் காலத்தையும்-அதன் விளைவையும் கொண்டு கணிக்கலாம். பசிக்கும் ஒருவனுக்கு உணவளிப்பது நல்ல அறமே. ஆனால் பயன் நான்கு மணி நேரத்திற்குத்தான் நீடிக்கும்.

ஒருவனின் அறிவை உயர்த்த கல்வி கற்க உதவுவது மிகச் சிறப்பான அறமாகும். அதனால் ஒருவன் வாழ்நாள் முழுவதும் பயன்பெற்று வாழ உதவும்.

''கல்வி-கல்வி-கல்வி ஒன்றே இப்போது நமக்குத் தேவை! ஐரோப்பாவின் பல நகரங்களுக்கு நான் பிரயாணம் செய்திருக்கிறேன். அங்கே சாதாரண ஏழை எளிய மக்களுக்குக்கூட கிடைத்திருக்கும் வாழ்க்கை வசதிகளையும் கல்வியையும் நான் கவனித்திருக்கிறேன். அப்போதெல்லாம் நமது நாட்டு ஏழை எளிய மக்கள் பரிதாப நிலையை நினைத்து நான் கண்ணீர் விட்டு அழுதிருக்கிறேன். இந்த வேறுபாட்டிற்கு என்ன காரணம்? கல்வி என்பதுதான் எனக்குக் கிடைத்த விடை''[1] என்று அன்று ஆதங்கப்பட்டார் சுவாமி விவேகானந்தர்.

''இன்றைய கல்வித்திட்டம் மனிதனை இயந்திரமாக மாற்றிக் கொண்டிருக்கிறது. ஒழுக்கம், மனவலிமை, பரந்த அறிவு இவற்றை புகட்டுவதாக கல்வித்திட்டம் மாற வேண்டும்[2] என்று விருப்பப் பட்டார் விவேகானந்தர்.

நாம் அமைக்கும் கல்வி நாடு முழுவதற்கும் பொதுவாக விளங்கும் கல்வியாக- ஆன்மீகத்தைக் கொண்டதாகவும் உலக நடைமுறைக்கு ஏற்றதாகவும் இருக்க வேண்டும். மேலும் தேசியப் பண்பாட்டிற்கு ஏற்றதாகவும் வாழ்க்கையில் கடைப்பிடிக்கக்கூடிய பண்பாட்டுக் கல்வியாகவும் இருப்பது அவசியம்''[3] என வலியுறுத்துகிறார்.

''வாழ்நாள் முழுவதும் உங்களால் ஜீரணிக்க முடியாமல் உள்ளிருந்து தொந்தரவு தரக்கூடிய செய்திகளை மூளைக்குள் திணிப்பது அல்ல கல்வி.

வாழ்க்கையை வளப்படுத்துகின்ற மனிதனை உருவாக்குகின்ற குணத்தை மேம்படுகின்ற கருத்துக்களை ஜீரணம் செய்யத்தக்க கல்வியே நாம் வேண்டுவது.

நீங்கள் ஐந்தே ஐந்து கருத்துக்களை நன்கு கிரகித்து அவை உங்கள் வாழ்க்கையாக நடத்தையாகப் பரிணமித்து நிற்கச் செய்ய முடியுமானால்-ஒரு புத்தகசாலை முழுவதையும் மனப்பாடம் செய்தவனைவிட நீங்கள் அதிகமான கல்வி பெற்றவர்'' என்பது விவேகானந்தரின் நம்பிக்கை.[4]

**''மனிதனுக்குள் புதைந்து கிடக்கும் பூரணத்தை வெளிபடுத்துவதே கல்வி''** என்றார் விவேகானந்தர். அதாவது கல்வி என்பது ஏராளமான உண்மைகளை மனத்தில் நிறைப்பதல்ல. மனத்தைப் பூரணமாக்கி முழுவதுமாக அதை அடக்குவதே கல்வியின் நோக்கம் என்று வரையறுத்தவர் விவேகானந்தர்.[5]

''என்னைப் பொறுத்த வரையில் கல்வியின் சாரம் மனஒருமைப் பாடே தவிர, தகவல்களைச் சேகரிப்பதல்ல. நான் மீண்டும் படிக்க நேர்ந்தால், ஒருபோதும் தகவல்களைச் சேகரிக்கமாட்டேன். முதலில் மன ஒருமைப்பாட்டையும் பற்றின்மையையும் வளர்த்துக் கொண்டு, பின்னர் அந்தப் பரிபூரணமான கருவியால் நான் விரும்பும் போது தகவல்களைச் சேகரித்துக்கொள்வேன். குழந்தையை வளர்க்கும்போது இந்த இரு ஆற்றல்களையும் அவர்களிடம் வளர்க்க வேண்டும்.''[6] என்று விருப்பப்பட்டவர் சுவாமி விவேகானந்தர்.

''நம் நாட்டுப் பொன்னை பித்தளையாகவும், அயல்நாட்டுப் பித்தளையைத் தங்கமாகவும் கருதக்கூடிய வகையில் நம் நாட்டு மக்கள் தங்கள் கல்வி அறிவைப் பெற்றிருக்கிறார்கள். நவீன கால மேற்றிசைக் கல்வி, நம் நாட்டு மக்களை இவ்வாறு செய்திருப்பது மந்திர மாயம் போல் இருக்கிறது.'' என்று வேதனைப்பட்டவர் சுவாமி விவேகானந்தர்.

‘‘கல்வி என்பது ஒருவனுடைய மூளையில் பல விஷயங்களைத் திணிப்பதன்று, அப்படித் திணிக்கப்படும் அந்த விஷயங்கள் நன்றாக ஜீரணமாகிப் பயன்படவேண்டும்.[7]

ஒழுக்கம், மனவலிமை, விரிந்த அறிவு, தன்னம்பிக்கை இவற்றையெல்லாம் குழந்தைகளுக்கு வழங்குவதாக கல்வி அமைய வேண்டும்’’[8] என்று ஆசைப்பட்டவர் விவேகானந்தர்.

‘‘நாட்டின் ஆத்மீகக் கல்வியும் லௌகீகக் கல்வியும் நமது பிடிப்புக்குள் இருக்க வேண்டும். இதைப் பற்றியே கனவு கண்டு, அதைப் பேசி வந்து, அதைப் பற்றியே சிந்தித்து அதை நிறைவேற்ற வேண்டும். அதுவரையில் நமது மக்கள் சமுதாயத்திற்கு விடிவு காலமில்லை. இதனை செய்து முடிக்க ஒரு இயக்கம் தேவைப்படுகிறது.

இது மிகப் பெரிய திட்டம். எப்போதாவது இது நிறைவேறுமோ என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால் நாம் வேலையைத் துவங்க வேண்டும். எப்படி?’’[9] இது விவேகானந்தரின் கனவு.

விவேகானந்தர் விரும்பிய அந்தக் கல்விதான் வேதாத்திரி மகரிசியின் அகத்தவமும் அகத்தாய்வும். அகத்தாய்வின் மூலம் பெறும் ஆறுகுணச் சீரமைப்பே அமைதிக்கு திறவுகோல்.

‘‘என்னிடம் கல்வி அமைச்சர் பொறுப்பை ஓராண்டு தாருங்கள். ஒழுக்கமான ஆன்மீகக் கல்வியை அமைத்துத் தருகிறேன்.’’ என்று கேட்டவர் சுவாமி சித்பவானந்தர்.

‘‘யாரிடம் அன்பும்-கருணையும் இல்லை? எல்லோரிடமும் உண்டு. அடைத்திருக்கும் அழுக்குகளை அப்புறப்படுத்தினால் மனிதன் அன்பு மயமானவனே. அடைப்புகளை அகற்றி அவனிடம் ஏற்கனவே உள்ள அன்பும் கருணையையும் வெளிக்கொணர்வதே கல்வி. "Education is the manifestation of perfection already in man" என்ற விவேகானந்தரின் கூற்று இதைத்தானே வலியுறுத்துகிறது.

இந்த மகான்களின் லட்சியத்தை நிறைவேற்ற வருகிறார் வேதாத்திரி மகரிசி.

கல்வி எப்படி இருக்க வேண்டும்?

***‘‘கல்வியெனில், எழுத்து, தொழில், ஒழுக்கம், ஞானம்***
***கற்பதும் பின்வழுவாது நிற்பதுமாம்’’***[10]

சொன்னதைச் செய்து காட்டினார். ஆம்!. இன்று வரை சுமார் 15 பல்கலைக்கழகங்களில் - விவேகானந்தர் கேட்ட கல்வித் திட்டத்தைப் பாடமாக்கியுள்ளார்.

பட்டயப் படிப்பாக்கியுள்ளார். பட்டப்படிப்பாக தந்துள்ளார். பட்ட மேற்படிப்பாக தந்துள்ளார். வீடு தோறும் வீதி தோறும் மனவளக்கல்வியைக் கொண்டு சென்றுள்ளார்.

ஒருவனுக்கு தன் உயிரை உணர்த்தி தன்னை அறியச் செய்து அவன் வாழ்வின் நோக்கத்தை உணர்த்தினால் அவன் காலத்தில் சமுதாயத்தில் ஒழுக்கம் - கடமை - ஈகை என்ற அறநெறி காத்து வாழ்வும்-வாழ்வின் முடிவில் இறைநிலையை அடையவும் முடியும். இது இம்மைக்கும் மறுமைக்கும் உதவும் ஞானக் கல்வியாகும். இதையே வேதாத்திரியாரின் மனவளக்கலை செய்து வருகிறது.

1. விவேகானந்தரின் அறிவுரைகள்-பக்.36 ஸ்ரீராமகிருஷ்ணமடம்-சென்னை.
2. விவேகானந்தரின் அறிவுரைகள்- ஸ்ரீராமகிருஷ்ணமடம்-சென்னை.
3. சுவாமி விவேகானந்தரின் வரலாறும் அறிவுரைகளும்-பக் 115 ராமகிருஷ்ண மடம்-பேலூர்.
4. சுவாமி விவேகானந்தரின் வரலாறும் அறிவுரைகளும்-பக் 114 ராமகிருஷ்ண மடம்-பேலூர்.
5. சுவாமி விவேகானந்தரின் வரலாறும் அறிவுரைகளும்-பக் 116 ராமகிருஷ்ண மடம்-பேலூர்.
6. விவேகானந்தர் பொன்மொழிகள் - இண்டர்நெட்.
7. விவேகானந்தர் பொன்மொழிகள் - இண்டர்நெட்.
8. விவேகானந்தர் பொன்மொழிகள் - இண்டர்நெட்.
9. எழுமின் விழுமின் பக்.116- விவேகானந்த கேந்திரா பதிப்பகம். கன்னியாகுமரி.
10. ஞானக்களஞ்சியம்-பாடல் 365-பக்128-வேதாத்திரி மகரிசி-வேதாத்திரி பதிப்பகம்.



# 14

# எண்ணப்பதிவுகள்

எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய். நீ உன்னைப் பலவீனன் என்று நினைத்தால் பலவீனனாகவே நீ ஆகிவிடுகிறாய். நீ உன்னை வலிமையுடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவனாகவே ஆகிவிடுகிறாய்.[1] நினைப்பே நடப்பு என்ற விவிலியத்தின் சாரத்தை சுவாமி விவேகானந்தர் அப்படியே சொல்கிறார். மேலும்....

''நாம் நினைக்கும் ஒவ்வோர் எண்ணமும், நாம் செய்யும் ஒவ்வொரு காரியமும், குறிப்பிட்ட ஒரு காலத்திற்குப் பிறகு சூட்சுமத் தன்மையை அடைகிறது.

பின்பு அது வித்து வடிவத்தைப் பெற்று மறைந்திருக்கும் நிலையில் நமது சூட்சும சரீரத்தில் வாழ்கிறது. மீண்டும் சிறிது காலத்திற்குப் பிறகு அது வெளிப்பட்டு வந்து தனக்கு உரிய பலன்களைத் தருகிறது.

இந்தப் பலன்களே நம்முடைய வாழ்க்கையை நிர்ணயிக்கின்றன. இவ்விதம் மனிதன் தனது வாழ்க்கையைத் தானே உருவாக்கிக் கொள்கிறான். தனக்குத் தானே அமைத்துக் கொள்ளும் விதிகளைத் தவிர, வேறு எதற்கும் மனிதன் கட்டுப்பட்டவன் அல்ல[2] என்று கூறுகிறார்.

எண்ணப்பதிவுகளை எப்படி சமாளிப்பது என்பது பற்றி சுவாமி விவேகானந்தர் விளக்கமாக கூறுகிறார்.

''தியானத்தில் மனம் ஒருமுகப்படத் தடையாயிருப்பவை எண்ணப் பதிவுகளே. மனத்தைக் குவிக்க முயற்சிக்கும் போது மனத்தின் எண்ண அலைகள் அலைவதைக் கவனித்திருப்பீர்கள்.

கடவுளைத் தியானிக்கும் போது- இந்த சம்ஸ்காரங்கள் வெளிப்படுகின்றன. மற்ற நேரங்களில் அவை அவ்வளவு சுறுசுறுப்பாய் இல்லை. நீங்கள் வேண்டாமென்று தள்ளும்போதுதான் அவை இன்னும் அதிகமாக உங்களை நெருங்குகின்றன.

ஏன் அவ்வாறு அவை நெருங்குகின்றன? தியானிக்கும் போது ஏன் மிகுந்த ஆற்றலுடன் வெளிப்படுகின்றன? ஏனென்றால் நீங்கள் அவற்றை வெளிவராமலிருக்கும்படி அமுக்குகிறீர்கள்.

அவை தங்களது முழு ஆற்றலுடன் எதிர்க்கின்றன. மற்ற வேளைகளில் அவை எதிர்ப்பதில்லை. சித்தத்தில் எங்கேயோ இந்தப் பழைய சம்ஸ்காரங்கள் பாய வருகின்ற புலிபோல் காத்துக் கொண்டிருக்கின்றன.

இவற்றை நாம் அடக்கத்தான் வேண்டும். நாம் விரும்பும் எண்ணம் மட்டுமே மேலெழும்ப முயலுகின்றன. அவை மனத்தை ஒருமுகப்படுத்த முடியாமல் தடுக்கும் சம்ஸ்காரங்களின் பல்வேறு வலிமைகளாகும். இப்போழுது கூறிய சமாதியைப் பயிற்சி செய்தால் அது பழைய சம்ஸ்காரங்களை அமுக்கிவிடும்.[3]

''நாம் நல்ல, தீய எண்ணங்களின் உரிமையாளர்களாக இருக்கிறோம். நல்ல எண்ணங்களின் கருவிகளாக செயல்பட்டால் தூய்மை பெறுவோம்''[4] என்று எண்ணம் தூய்மை பெற வழிகாட்டுகிறார் விவேகானந்தர்.

எண்ணத்தை தூய்மை செய்ய வேதாத்திரியார் விளக்கமாக பாடத்திட்டமாகவே மானுடத்திற்கு வழங்கியுள்ளார்.

''எண்ணம் வேறு, நீ வேறு அல்ல, சிந்தித்துப் பார், அது காலம், இடம், பருமன், இயக்கம் என்ற நான்கு வித தன்மைகளோடு இயங்கிக் கொண்டும், அவற்றைக் கடந்து மௌன நிலையடைந்தும் மாறி மாறி நிற்கும் மாயாஜாலப் பொருள், உள் எண்ணத்தின் நிலையை அறிந்து கொண்டால் நீ உன்னை அறிந்து கொண்டாய் என்பது தான் பொருள்.

அது வரையில் சந்தர்ப்பங் கிடைக்கும் போதெல்லாம் எண்ணத்தைப் பற்றி ஆராய்ந்து கொண்டே இரு. எண்ணத்தை நிறுத்த முயலாதே, அது அதிகமாக அலையும், அதை அறிய முயன்றால் அப்போது தான் அது தானே சிறுகச் சிறுக அமைதி பெறும்.

எண்ண இயக்கம் தான் வாழ்வு. அது உடலில் இரத்த ஓட்டம் இருக்கும் மட்டும், நித்திரை காலம் தவிர மீதி நேரத்தில் இயங்கிக் கொண்டே தான் இருக்கும். எண்ணத்தைப் பண்படுத்தவும்

பயன்படுத்தவும் வழிகாண வேண்டும், பழக வேண்டும். அந்தப் பெரு நிதியை அழிக்க வேண்டுமென்று நீ வீணான முயற்சி கொள்ளாதே! அது தான் மரணம் என்ற இடத்தில் தானாகவே நின்று விடப் போகின்றதே! எண்ணம் நின்றுவிட்டால் நீ என்பது தனித்து ஏது?

பல வருடங்களில் எண்ணிறந்தோர்களால் செய்து முடிக்கக் கூடிய காரியங்களை நீ ஒரு நிமிஷத்தில் எண்ணத்தால் திட்டமிடலாம். இத்தகைய சக்தியுடைய நீ எப்போதுமே எதிர்காலத்தைப் பற்றி திட்டமிட்டுக் கொண்டிருக்காதே.

இதனால் அவ்வப்போது செய்ய வேண்டிய கடமைகளை மறந்து விடுவாய். செயலோடு சிந்தனையை இணைத்து நிற்பதே மிகவும் உயர்வாகும். அது நழுவாமல் இருப்பதற்கு விழிப்போடு பல நாட்கள் பழக வேண்டும்.

உனது உடல் இன்பங்களையும், குடும்பத்தையும் மட்டும் ஞாபகத்தில் கொண்டு செயலாற்றினால், உனக்கு வாழ்வில் சலிப்பும், துன்பங்களும் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும்.

இயற்கை அமைப்பை, நிகழ்ச்சிகளை, எண்ணத்தின் ஆற்றலை, சமுதாயத்தை, உலகத்தை, ஆகாயத்தில் மிதந்து உலவிக் கொண்டிருக்கும் பலகோடி அண்டங்களை அடிக்கடி ஞாபகப்படுத்திக்கொள்.

இவைகளோடு உனது அறிவை, இன்ப துன்ப அனுபோகங்களை அடிக்கடி ஒப்பிட்டுப் பார். இதனால் உடலுக்கும் அறிவுக்கும் ஒருங்கே அமைதி தரும் இடையறாத இன்ப ஊற்று பெருக ஆரம்பித்துவிடும்.

***எண்ணமே ஒரு நாடக மன்றம் போல்***
***எண்ணமே அதில் எண்ணற்ற நடிகர்கள்***
***எண்ணமே அதைப் பார்ப்போர், ரசிப்போராம்***
***எண்ணமே அதன் நிர்வாகி, உடையவன்.***[5]

எண்ணம் நற்பயனாக மாற என்ன செய்ய வேண்டும்? வழிகாட்டுகிறார் வேதாத்திரியார்.

***எண்ணத்தை எண்ணத்தால் எண்ணி எண்ணி***
***எண்ணத்தின் இருப்பிடமும் இயல்பும் கண்டு***
***எண்ணத்தை எண்ணத்தில் நிலைக்கச் செய்தால்***

**எண்ணமே பழக்கத்தால் தெளிந்து போகும்;**
**எண்ணமது எழும்போதே இது ஏன் என்று**
**எண்ணத்தால் ஆராய்ந்தால், சுலப மாக**
**எண்ணத்தின் காரணமும் விளைவும் காணும்**
**எழும்எண்ணம் யாவும் நற்பயனாய் மாறும்.**[6]

எண்ணத்தை ஆராய்ந்து அதனை சீரமைக்கும் வழிமுறை களையும் வகுத்துத் தந்துள்ளார் - தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி.

''எண்ணத்தின் அளவையொட்டியே மனதின் தரமும், உயர்வும் அமைகின்றன. மனதின் அளவில்தான் மனிதனின் தரமும், உயர்வும் உருவாகின்றன. எனவே எண்ணத்தைப் பண்படுத்த வேண்டும்.

எண்ணத்திற்கு உயர்வூட்ட வேண்டும். எப்படி? எண்ணத்தைக் கொண்டுதான் எண்ணத்தைப் பண்படுத்த வேண்டும். எண்ணத்தின் தன்மையைப் பயன்படுத்தித்தான் எண்ணத்திற்கு உயர்வூட்ட முடியும். எண்ணத்தை ஆராய வேண்டுமென்றால் எண்ணத்தால் தான் ஆராய வேண்டும்.

எண்ணத்திற்குக் காவலாகவும் எண்ணத்தையே தான் வைக்கவேண்டும். எண்ணத்திற்கு நீதிபதியாகக்கூட எண்ணத்தையே தான் நியமித்ததாக வேண்டும்.

எண்ணம் தன்னையே கண்காணித்துக் கொண்டு தன்னையே நெறிப்படுத்திக் கொண்டு, தன்னையே திருத்திக்கொண்டு இருக்க வேண்டும்.

'உலக சமுதாய சேவா சங்கத்தில்' 1) அகத்தவம் (Meditation), 2) தற்சோதனை (Introspection), 3) எண்ணம், சொல் ,செயல்களின் சீரமைப்பு (Sublimation), 4) அறிவின் முழுமைப் பேறு (Perfection) என்ற 'மனவளக்கலை'யின் நான்கு அங்கங்களுக்கும்.

மனமே விளைநிலம். மனம் தன் திறமையையும் வல்லமையையும் பெருக்கிக் கொள்ளும் பயிற்சிதான் தவம். (Meditation).

மனம் தன்னை தூய்மை செய்து கொள்ள எடுக்கும் முயற்சி தான் தற்சோதனை (Introspection).

தூய்மையில் மேலும் மேலும் அடையும் முன்னேற்றந்தான் 'குணநலப்பேறு'....

தூய்மையில் பூரணத்தைக் காணும் இடந்தான் 'முழுமைப் பேறு'...

'குண்டலினியோகம்'' மன வலிமையைக் கூட்டி, மனதை சீர்திருத்திக்கொள்ள பேருதவியாக இருக்கும்.



**கலிபோர்னியாவில் சுவாமி விவேகானந்தர்**

---

1. விவேகானந்தரின் அறிவுரைகள்-பக்2 - ஸ்ரீராமகிருஷ்ணமடம் சென்னை.
2. சுவாமி விவேகானந்தரின் பொன்மொழிகள்-இண்டர்நெட்.
3. விவேகானந்தரின் ஞானதீபம்-பாகம் 3- பக் 153-154-ஸ்ரீராமகிருஷ்ணமடம் சென்னை.
4. விவேகானந்தரின் அறிவுரைகள்-பக்.13 - ஸ்ரீராமகிருஷ்ணமடம் சென்னை.
5. ஞானக்களஞ்சியம் பாடல் எண்.1224-பக்.417-வேதாத்திரி மகரிசி-வேதாத்திரி பதிப்பகம்-ஈரோடு.
6. ஞானக்களஞ்சியம் பாடல் எண்.1234-பக்.420-வேதாத்திரி மகரிசி-வேதாத்திரி பதிப்பகம்-ஈரோடு.



# 15

# சீர்திருத்தவாதிகளின் சமுதாய சிந்தனைகள்

மக்களின் தேவையை அவர்தம் செயல்பாடுகளை, பழக்க வழக்கங்களை ஆராய்கின்ற ஆய்வே, சமூகவியல் ஆய்வாகும்.

மக்களின் தொகுதி சமுதாயம் எனப்படும். மனிதனின் கூட்டு வாழ்க்கையாகும். விலங்கியல்புள்ள மனிதன் தனித்து வாழும் ஆற்றல் அற்றவன்.

இந்நிலையில் தன் உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றை பெறுவதற்காகவும் மற்றும் உடல், உயிர், உடமைகளை பாதுகாக்கும் பொருட்டும் மனிதன் கூட்டமாக வாழத் தொடங்கினான்.

இவ்வாறு தோன்றி மக்களின் வாழ்க்கை எனப்படும். இத்தகைய சமுதாய வளர்ச்சிப் போக்கில் மற்றும் அமைப்பில் பொருளாதாரம் அல்லது உற்பத்தி அடிப்படையாகவும் மதம், மொழி, குடும்பம், அரசியல் ஆகியவை மேல்நிலைக் கட்டுமானங்களாகவும் அமைந்துள்ளன.

இவ்வடிப்படைச் சமுதாயச் சிந்தனையை ஒட்டியே விவேகானந்தர் மற்றும் வேதாத்திரியார் சமுதாயச் சிந்தனைகளும் சமுதாய நோக்கும் அமைந்துள்ளன.

மக்களின் வாழ்வியல் முறை அறியாமை நிறைந்ததாக விளங்குகின்றது. எனவே அதனைச் சீர்திருத்தும் பொறுப்போடு இம்மகான்களின் சிந்தனை கருத்துகள் விளங்குகின்றன.

## சாதி சமய சிந்தனைகள்

''இந்தியாவில் இரண்டு பெரும் தீமைகள் இருக்கின்றன. ஒன்று, பெண்களைக் காலின்கீழ் மிதித்து நசுக்குதல் இன்னொரு தீமை, சாதிக்கட்டுப்பாடுகள் மூலம் ஏழைகளைக் கசக்கிப் பிழிதல், இவையே இந்தியாவில் உள்ள இரண்டு தீமைகள்''[1]

''கடினமாக உழைத்தும் கீழே தள்ளி மிதிக்கப்படுகிற கோடிக்கணக்கான ஏழை மக்களுடைய இதய இரத்தத்தைக் கொண்டு கல்வி கற்பிக்கப்பட்டும், சுகபோகத்தில் வளர்க்கப்பட்டும் வந்துள்ள ஒருவன், அந்த ஏழை மக்களுடைய நலத்தைப் பற்றிச் சிந்திக்க செய்யாமல் இருப்பானேயானால் அவனை நான் துரோகி என்றுதான் சொல்வேன்.''[2]

சாதிப் பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதற்கான உரிய வழியை விவேகானந்தர் சொல்லும்போது'' சாதிப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு உரிய வழி, மேலே உள்ளவர்களைக் கீழே இழுப்பது என்பதல்ல. கீழே உள்ளவர்களை மேல் நிலைக்கு உயர்த்துவதுதான் சாதிப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு உரிய வழியாகும்''[3] என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இதைப் புரிந்து கொள்ளாமல் இன்றைய தினம் மேலே உள்ளவர்களைக் கீழே இழுப்பதற்கான வன்முறைப் பேயாட்டங்கள் நாட்டிலே நடைபெறுவதைக் காண்கிறோம்.

இந்த வன்முறையைக் கைவிட்டு தங்களுடைய வலிமை முழுவதையும் பயன்படுத்தி கீழே கிடப்பவனைக் கை தூக்கிவிட, அந்தக் கையிலே முழு பலத்தையும் பெற்று யார் உழைக்கிறானோ அவன்தான் உண்மையிலேயே ஏற்ற தாழ்வை அகற்ற, சாதியை ஒழிக்க முன் வந்தவன் என்று விவேகானந்தருடைய அந்தத் தத்துவத்தின் படி நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**''கருவான நாதவிந்தில் ஜாதியேது?**
**கற்பனையால் நாம் மிரண்டு பேசுகின்றோம்**
**வருநாளில் கல்வியொடு பொருளாதாரம்**
**வளர்ச்சிபெற்றால் ஜாதியெல்லாம் ஒழிந்திடாதோ?**[4]

என்று ஜாதியே ஒழிய வேண்டும் என்றும் சாதி வேற்றுமைக்கு இக்காலம் பொருந்தாது என்றும் வேதாத்திரி மகரிசி தெளிவு படுத்துகிறார்.

## பெண் முன்னேற்ற சிந்தனைகள்

''பெண்களுக்கு உரிய சரியான மதிப்பை அளிப்பதன் மூலம் எல்லா நாடுகளும் சிறப்பு எய்தியிருக்கின்றன. எந்த நாடு பெண்களுக்கு மரியாதை கொடுக்கவில்லையோ, அந்த நாடும் சமுதாயமும் எப்போதும் உயர்வடைந்ததில்லை இனிமேலும் எதிர்காலத்தில் அவை உயர்வு அடையப் போவதில்லை. பெண்களைப் பொறுத்த வரையில் மிகவும் முக்கியமான பிரச்னைகள் பல உண்டு என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் ''கல்வி'' எனும் மந்திரத்தினால் தீர்த்து வைக்க முடியும். முடியாத பிரச்னை அவற்றில் எதுவுமே இல்லை.''[5]

பெண்மையின் மேன்மையை உணராமல் இருத்தல் பெரிய தவறாகும் என்கிறார் வேதாத்திரியார்.

ஆண் இன்றி பெண்ணின் தோற்றம் கிடையாது. பெண் இன்றி ஆணும் தோன்ற முடியாது. இதை ஒருவர் சரியாகப் புரிந்து கொண்டால். இருபாலர்களையுமே சமமாக கருதத் தோன்றும்.

***''பெண் வயிற்றில் உருவாகிப்***
***பெண் பாலுண்டே வளர்ந்தாய்***
***பெண்ணின் துணையால் வாழ்கின்றாய்***
***பெண்ணின்பெருமை உணர்''***[6]

என்ற வேதாத்திரியாரின் பாடல் பெண்ணின் பெருமையை வலியுறுத்துகின்றது.

இறைவனால் கொடுக்கப்பட்ட இனப்பெருக்கம் செய்யும் பேறு பெண்ணினத்திற்கு மட்டுமே உரியதாகும்.

''தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை'' என இறைவனுக்கு இணையாகப் போற்றப்படுகின்றாள் பெண்.

அன்பு, பிறர்க்கு உதவி செய்தல், பிறர் செய்கின்ற தவறை மன்னிக்கும் மனப்பாங்கு இவை யாவும் ஆண்களைவிடப் பெண்களிடமே அதிகமாகக் காணக்கிடக்கின்றன.[7]

***''எல்லையற்ற இறைவன் திரு உள்ளமென்ன***
***எவ்வுயிரும் தோன்றுதற்கு ஏற்றதொரு திருவழியாய்***
***வல்லமையாய்ப் பெண்ணினத்தை வடிவமைத்தான் அற்புதமே***
***வாழுகின்ற மக்களில் இவ்வளம் அறிந்தோர் எத்தனை பேர்''***[8]

பெண்களின் உயர்வே நாட்டின் உயர்வு. பெண்களின் உயர்வே மானுடத்தின் உயர்வு என்று இரண்டு மகான்களுமே வலியுறுத்தி உள்ளனர்.

## கல்விச் சிந்தனைகள்

பாமரர்களாகிய பொது மக்களை வாழ்க்கைப் போராட்டத்திற்குத் தகுதி பெற்றவர்களாக இருக்க உதவி செய்யா கல்வியை உறுதியான நல்ல ஒழுக்கத்தையும், பிறருக்கு உதவச் செய்யும் ஊக்கத்தையும், சிங்கம் போன்ற மன உறுதியையும் வெளிப்படுத்தப் பயன்படாத கல்வியை... கல்வி என்று சொல்லுவது பொருந்துமா?[9] என்ற கேள்வியும் விவேகானந்தர் எழுப்பிய கேள்விதான்.

அந்தக் கேள்விக்கு விடை மட்டுமல்ல, அதற்குரிய முறை களையும் சமுதாயத்திற்கு வழங்கியவர் வேதாத்திரி மகரிசி.

**''எக்கல்வியால் வாழ்வை**
**இனிதாக்கி உளத்தி லெழும்**
**அக்கேள்விகட் கெல்லாம்**
**அறிவு விடை கண்டிடுமோ**
**இக்கல்விதான் இயற்கை**
**இயல் பறியும் தத்துவமாம்**
**சிக்கல்கள் வாழ்வி லெழா**
**சிந்தனையும் சிறப்படையும்.''** [10]

என்று சிறந்த கல்வி எப்படி இருந்தால் சிறப்பாக இருக்கும் என்பதை காட்டுகிறார் வேதாத்திரி மகரிசி.

தத்துவஞானி வேதாத்திரி மகரிசி என்ற ஒரு தெய்வீகப் புருஷரின் உதாரண வாழ்க்கையுடன் கூடிய வழிகாட்டுதலோடு அமைந்ததுதான் உலக சமுதாய சேவா சங்கம்.

இச்சங்கத்தின் மூலம் உலகம் முழுவதும் பரவிவரும் வாழ்க்கை கல்விதான் மனவளக்கலை.

இக்கலை உடல்நலம், மனவளம், நட்புநலம். கருமையத் தூய்மை, பிரம்மஞானம் என்ற ஐந்து படிநிலைகளாக அமைந்த மானுடத்தை தற்போது வழிநடத்திச் செல்கின்றன.[11]

சுவாமி விவேகானந்தருக்குப் பிறகு சமூக முன்னேற்றம் குறித்த கருத்தை எல்லா நிலைகளிலும் மிகுந்த வலிமையோடு முன்வைத்துள்ள ஒரு துறவி வேதாத்திரி மகரிசியாகவே இருக்க முடியும்.

விவேகானந்தர் ஒரு சுவாமியல்ல..வேதாத்திரி மகரிசி ஒரு மகரிசியல்ல. மாறாக இவர்கள் ஒரு சமூகப் புரட்சியாளர்கள் என்பதே உண்மையாக இருக்க முடியும்.

இவர்களது எண்ண அலைகள் தனி மனிதனிலிருந்து சமூகத்தை நோக்கி, குறிப்பாக சாதி, மதம், மொழி, பால் எனப் பிரிந்து கிடக்கும் கிளைச் சமூகங்களிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டு. உலக-சமூக நலன் குறித்து தங்கள் கருத்தை முன் வைக்கின்றார்கள்.

இது இவர்களது விசாலமான மனதைப் புலப்படுத்துகின்றது. தனிமனிதன் - சமூகம் குறித்த ஆழ்ந்த, விசாலமான, புதுமையான, உண்மையாகவே தேவையான கருத்துகள் இவர்களது படைப்புகள் முழுமையும் தேங்கிக் கிடக்கின்றன.

---

1. ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்-பிப்ரவரி 2000-பக் 15 -ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை.
2. மேலது பக்.15
3. மேலது பக். 17
4. ஞானக்களஞ்சியம்-பாடல் 588 - பக்.202 வேதாத்திரி மகரிசி-வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.
5. ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் - பிப். 2000 - பக் 17 - ஸ்ரீ ராமகிருஷ்ணா மடம், சென்னை.
6. ஞானக்களஞ்சியம்-பாடல் 498 - பக்.172- வேதாத்திரி மகரிசி-வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.
7. வேதாத்திரியத்தில் சமூகவியல் இறையியல் சிந்தனைகள்-பக்.54- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
8. ஞானமும் வாழ்வும்-பாடல் 319 - பக்174. வேதாத்திரி மகரிசி-வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.
9. ஸ்ரீராம கிருஷ்ண விஜயம்-பிப்ரவரி 2000-பக் 15 ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை.
10. ஞானக்களஞ்சியம்-பாடல் 370 - பக்.129 வேதாத்திரி மகரிசி-வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.
11. வேதாத்திரியச் சிந்தனைகள்.-பாகம் 1 - பக். 270 - தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.



# 16

# வென்றிடுவாய் புலன் ஐந்தையும்

மனிதன் பழக்கத்திற்கும் விளக்கத்திற்கும் இடையே தவித்துக் கொண்டிருக்கிறான். விளக்கம் கிடைத்த பின்னும் பழக்கத்தை விடமுடியவில்லை.

மெய்யுணர்வு பெற்ற போதும் ஐயுணர்வைக் கட்டுப்படுத்த முடியவில்லை. புலனின்பம் மெய்யின்பத்தை அடைய தடுக்கிறது.

''ஆன்மீக வாழ்வில் பேரின்பம் கிடைக்காமல் போனால் அதற்காகப் புலனின்ப வாழ்வில் திருப்தி கொள்ளக்கூடாது. இது அமுதம் கிடைக்காவிட்டால் சாக்கடைநீரை நாடிச் செல்வதற்கு சமம்.[1]'' என்று விவேகானந்தர் சாட்டையடி தருகிறார்.

''உயிரினம் தாழ்ந்ததாக இருப்பதற்கு ஏற்ப புலன் இன்பத்தை நாடும் நாட்டமும் அவற்றில் மிகுந்து காணப்படும். மக்களில் ஒரு சிலர் தாம் நாய் ஓநாய் ஆகியவை உணவைத் தின்னும்போதும் காட்டும் அதே அளவு ஆர்வத்தோடு உணவைச் சாப்பிட முடியும். ஆனால் நாயும் ஓநாயும் அனுபவிக்கும் இன்பமெல்லாம் புலன்களுக் குள்ளேயே அடங்கி விடுகின்றன.''[2] என்றும் புலன் இன்பத்தின் கேடுகளை அழகான உதாரணம் மூலம் நமக்கு எச்சரிக்கை செய்கிறார்.

''புலன் கவர்ச்சியில் சிக்கி நிற்கும்போது விளைவறியாமல் எண்ணுதலும் பேசுதலும் செயல்புரிதலும் இயல்பு''[3] என்கிறார் வேதாத்திரி மகரிசி.

புலன் இன்பத்தை எப்படி அனுபவிக்க வேண்டும்?

''மெய்-வாய்-கண்-மூக்கு-செவி என்ற ஐம்பொறிகளும் அனுபவிக்கக்கூடிய இன்பத்திற்கு அளவுமுறை வெண்டும். எந்தப் பொறியை அதிகமாகப் பயன்படுத்தி இன்பத்தை அனுபவிக்கிறோமா அதன் விளைவாக அந்தப் பொறி பழுதடைந்து அதன் மூலமாகவே நாம் துன்பத்தை அனுபவிக்க நேரிடும். ஆகவே புலனின்பத்தை விளைவறிந்து அளவோடும்-முறையோடும் அனுபவிக்க வேண்டும்''[4] என்கிறார்.

**''நின்றிடு அகண்டாகாரம் நிலையினில்**
**வென்றிடுவாய் புலன் ஐந்தையும் வெற்றியே''**

சரி. புலனடக்கத்தை எப்படி பழக வேண்டும்?

''முதன் முதலாகச் சித்திரம் எழுதப் பழகுபவனுக்கு எண்ணத்தில் உள்ளபடி உருவம் அமைவதில்லை. பழகப் பழக எந்தவிதமாக எண்ணுகிறானோ - அவ்விதமே அவன் எழுதும் உருவமும் அமைந்து விடுகிறது.

இது போன்ற ஆராய்ச்சி முடிவுகளில் அறிவின் விழிப்புடன் செயலாற்ற வேண்டுமென முயற்சிப்பவர்களுக்கு ஐம்புலன்களும் உடனே கட்டுப்பட்டுவிடா.

பழகப்பழக- எதை எண்ணுகிறார்களோ அவ்விதத்திலேயே செயலாற்றும் திறமையும்-வல்லமையும் ஏற்பட்டுவிடும்.

ஆகவே பொறுமையோடு திடமனத்துடன் நீடித்துப் பழகி இலட்சிய எல்லையை அடைய வேண்டும்.[5]

புலனடக்கம்-பிரமச்சரியம் - ஞானம் மூன்றையும் போட்டு குழப்பிக் கொள்ளாதீர்கள். அருட்தந்தையின் அருமையான விளக்கம் நம்மை சிந்திக்க வைக்கிறது.

''எப்போதும் ஆண்பெண் உடலிணைப்பே இல்லாமல் வாழ்வது பிரம்மச்சரியம் என்று தவறாகக் கருதப்படுகிறது. இந்த வைராக்கியம் கொண்டவர்கள் மிகவும் உயர்வடைய முடியும் என்ற நம்பிக்கையும் பலரிடம் இருக்கிறது. இவ்வாறு நீங்கள் கருத வேண்டாம் என்று உங்களுக்கு எடுத்துச் சொல்லுகிறேன். உலகில் உருவாகி வாழ்ந்தவர்கள், வாழ்பவர்கள் அனைவரும் இந்த விரதம் கெட்டபோது தான் உற்பத்தியானார்கள் என்பதை ஞாபகப்படுத்துகிறேன்.

உலக உத்தமர்கள், ஞானிகள், தீர்க்க தரிசிகள், அனைவரும் பிரம்மச்சரியம் கெட்டுவிட்டதில் தான் தோன்றினார்கள்; ஆண் பெண் நட்புடன், ஒழுக்கத்துடன், வாழ்ந்தார்கள், வாழ்ந்து வருகின்றார்கள் என்று உதாரணம் காட்டுகிறேன்.

வயது வரும் வரையில் கட்டுப்பாடாக இருந்து, பின்னர் ஒழுக்கத்துடன் திருமணம் கொண்டு, அளவு முறையுடன் உடல் கலப்புக் கொண்டு வாழ்வதையே நல்ல கொள்கையாகக் கொள்ள வேண்டும் என்று எடுத்துக் காட்டுகிறேன்.''[6] என்கிறார் தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி.

---

1. விவேகானந்தரின் அறிவுரைகள்-பக்.113-ஸ்ரீராமகிருஷ்ண மடம்-சென்னை
2. மேலது பக் 113
3. வேதாத்திரி மகரிசி பொன்மொழிகள் 5000 பாகம் 2-பக்.113 பானுகுமார்-விஜயா பதிப்பகம்-கோயம்புத்தூர்.
4. அறிவுத்திருக்கோயில்-சாத்தூர் திறப்பு விழாச் சிறப்பு மலர்-பக்.74
5. வேதாத்திரி மகரிசி பொன்மொழிகள் 5000 பாகம் 2-பக்.112-பானுகுமார்-விஜயா பதிப்பகம்-கோயம்புத்தூர்.
6. மேலது



# 17

# அமெரிக்க மண்ணில் ஆன்மீகத்தை விதைத்தவர்கள்

*“எந்தக் கருத்தையும் செயல்படுத்த உலகிலேயே மிகச்சிறந்த இடம் அமெரிக்காதான். எனவே விரைவில் அமெரிக்காவில் இருந்து புறப்படும் எண்ணம் எனக்கு இல்லை. நான் ஏன் புறப்பட வேண்டும்? உணவும் பானமும் எனக்கு இங்குத் தாரளமாகக் கிடைக்கின்றன. ஒவ்வொருவரும் மிகவும் அன்பாக உள்ளனர். ஏதோ சில நல்ல வார்த்தைகளைச் சொல்வதற்காக அவர்கள் எனக்கு இவ்வளவும் செய்கிறார்கள். இவ்வளவு பெருந்தன்மை வாய்ந்த நாட்டினரை விட்ட நம் நாட்டிற்கு நான் ஏன் வர வேண்டும்?''*

**- சுவாமி விவேகானந்தர்**

*விவேகானந்தர் இரண்டு முறையும் வேதாத்திரி மகரிசி 18 முறையும் அமெரிக்காவில் ஆன்மீகத்தை விதைத்தார்கள்.*

***‘‘உலகப் பேருண்டையிலே கடலோ ஒன்று***
***ஓங்கி வளர்ந்தாங் காங்கே உயர்ந்து நிற்கும்***
***நிலப்பரப்புத் துண்டங்கள் பல அவற்றில்***
***நீளம் அகலம் மிகுந்த ஓர் நந்நாடு***
***பலப்பலவாம் இயற்கை வளம் கொழிக்கும்நாடு***
***பாருலகில் வாழும் பலநாட்டு மக்கள்***
***கலப்புடைய பண்பாட விஞ்ஞானத்தில்***
***கலங்கரையாய் விளங்கும் அமெரிக்க வாழ்க’’[2]***

இந்து மதத்துக்கும் பாரத தேசத்துக்கும் உலக அரங்கில் மிகப்பெரிய அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்தவர்களில் விவேகானந்தர் குறிப்பிடத்தக்கவர்.

மெய்ஞ்ஞானத்துடன் விஞ்ஞானத்தையும் இணைத்து ஆன்மீகக் கல்வியை உலகெங்கும் கொண்டு சென்றவர் வேதாத்திரி மகரிசி.

மேற்கத்திய கலாச்சாரத்திற்கும் நமது கலாச்சாரத்திற்கும் ஒத்ததாக மனவளக்கலையை உலக அரங்கில் மிகப்பெரிய அங்கீகாரத்தைப பெற்றுத் தந்தவர் வேதாத்திரி மகரிசி.

ஐக்கிய நாடுகள் சபையில் உலக அமைதி பற்றிய சரியான திட்டத்தை வைத்து சொற்பொழிவாற்றியவர்களில் வேதாத்திரி மகரிசி குறிப்பிடத்தக்கவர்.

## உலகிற்கு வழிகாட்டும் உத்தமர்கள்

மூன்றே வார்த்தைகளில் ஒரு நாட்டையும் மக்களையும் கவர்ந்து வெற்றிக்கொடி நாட்ட முடியுமா? அதுவும் அறிவில் சிறந்தவர்களும் பல மதத் தலைவர்களும் நிறைந்த சபையில், தனியொருவனாக நின்று அனைவரது உள்ளங்களையும் கொள்ளை யிட முடியுமா?

இதை நடத்திக் காட்டியவர் சுவாமி விவேகானந்தர். இன்றைக்கு 120 ஆண்டுகளுக்கு முன், அமெரிக்காவின் சிகாகோ நகரில், 1893, செப்டம்பர் 11 ஆம் தேதி நடைபெற்ற உலக சர்வ சமயப் பேரவையில் பாரதத்திலிருந்து இந்து சமயப் பிரதிநிதியாகப் பங்கேற்றவர் விவேகானந்தர்.

அந்த மாநாட்டின் நோக்கங்களை வரையறுத்தவராக அவர் மாறியது ஓர் உலக அதிசயம்.

அப்படி என்ன அவர் புதிய விஷயங்களைச் சொல்லிவிட்டார்? உலகைப் பீடித்திருக்கும் பிரிவினைவாதமும், அளவுக்கு மீறிய மதப்பற்றும், மதவெறியும் உலகை ரத்தக்களரியாக்குகின்றன என்ற அவரது கருத்தில் புதுமை ஏதும் இல்லை.

இதை பல நூற்றாண்டுகளுக்கு முன்னமே, சிலுவைப் போர்களின் போதே உலகம் உணர்ந்துவிட்டது. எனில், விவேகானந்தரை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டியது எது?

இங்கு தான் பாரதத்தின் ஆன்ம வலிமை வெளிப்படுகிறது. விவேகானந்தர் உண்மையில் இந்து சமயப் பிரதிநிதியாக மட்டும்

உலக சர்வ சமயப் பேரவையில் பங்கேற்கவில்லை. அவர் அங்கு ஆறு நாட்களில் நிகழ்த்திய உரைகளை வாசிக்கும் எவரும் அவரது தேசபக்தியால் புளகாங்கிதம் அடைவர்.

உலகில் மதவெறியால் பாதிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் புகலிடம் அளித்த நாட்டிலிருந்து வந்தவன் என்றுதான் தன்னை முதல் நாள் பேச்சில் விவேகானந்தர் அறிமுகப்படுத்திக் கொண்டார்.

யூதர்களுக்கும் பார்ஸிகளுக்கும் அடைக்கலம் கொடுத்த நாட்டிலிருந்து வருபவன் நான் என்று அவர் நெஞ்சு நிமிர்த்திப் பேசினார். இந்த நெஞ்சுரத்துக்குத் தகுதி உடையவர்கள் வேறு எவரும் அங்கிருக்கவில்லை.

'எங்கெங்கோ தோன்றும் ஓடைகள் அனைத்தும் இறுதியில் கடலில் சங்கமிப்பதைப் போல அனைத்து மதங்களும் இறைவனிடம் சென்று சேர்கின்றன' என்ற பொருள் தரும், பாரத மக்கள் அன்றாடம் பாடும் சிவ மகிமை ஸ்தோத்திரத்தை அந்தச் சபையில் விவேகானந்தர் பாடியபோது, அடிமை தேசத்தின் ஆண்மை மிக்க ஆன்மா பேசியதை சபை உணர்ந்தது.

இதுதான் அந்த மாநாட்டில் பேசிய பிற மதத் தலைவர் களிடமிருந்து விவேகானந்தரை வேறுபடுத்திக் காட்டியது.

உலகம் முழுவதும் மதவெறி தலைவிரித்தாடுகையில் மானுடம் என்ன ஆகுமோ என்ற கவலையில் கூடிய அம்மாநாட்டிற்குத் தெளிவான வழிகாட்டுதலை, ஓர் இந்துத் துறவி என்ற முறையில் விவேகானந்தரால் கச்சிதமாகவும் உறுதியாகவும் வெளிப்படுத்த முடிந்தது.

அவரது பேச்சின் துவக்கமே அதை அடிக்கோடிட்டுக் காட்டியது. 'அமெரிக்கா வாழ் சகோதர சகோதரிகளே' என்ற மூன்றே வார்த்தைகளில், அங்கு கூடியிருந்த 7 ஆயிரம் பேருக்கும் தான் அடுத்து என்ன சொல்லப் போகிறேன் என்பதை அவர் தெளிவுபடுத்திவிட்டார்.

பரிபூரணமான இதயசுத்தியால் அமைந்த கம்பீரமான உடல் மொழியும், தியாகமும் துறவும் அமைத்துக் கொடுத்த அற்புதமான மனத்தெளிவும் அவருக்குப் பொலிவூட்டின. தனது இதய அன்பின் ஆழத்திலிருந்து அவர் கூறிய அச்சொற்கள் போலித்தனமானவை அல்ல என்பதை அந்த விநாடியே சர்வ சமயப் பேரவை உணர்ந்தது.

அதனால் தான் வேறு யாருக்கும் கிட்டாத மிக நீண்ட கரவொலியும் வரவேற்பும் அந்த இளம் துறவிக்கு அங்கு கிடைத்தன.

அடுத்தடுத்த நாட்களில் சபையில் சோர்வு ஏற்பட்ட போதெல்லாம் விவேகானந்தரைப் பேச அழைத்து, சர்வ சமயப் பேரவை நிர்வாகிகள் பெருமை பெற்றனர்.

'இந்தியாவின் இளம்புயல்' என்று அமெரிக்கப் பத்திரிகைகள் அவரை வர்ணித்தன. அதற்கடுத்த ஆண்டுகளில் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் அவர் நிகழ்த்திய தொடர் பிரசாரம், வெளிநாடுகளில் இந்தியா குறித்து உருவாகியிருந்த தவறான கருத்துகளை மாற்றி அமைத்தது.

பல நூறு ஆண்டுகளாக பல்வேறு நாடுகளால் சூறையாடப் பட்ட போதும் இந்தியா தனது ஆன்ம வலிமையை இழக்கவில்லை. படையெடுத்து வந்தவர்களையும் சுவீகரித்து, ஜீரணித்து, அவர்களையும் அவர்களது புதிய மதங்களையும் மனமார அரவணைத்ததால் தான் பாரதம் உலகிற்கே வழிகாட்டும் தகுதி பெற்றது.

இதற்கு பாரதத்தின் பன்னெடுங்காலப் பாரம்பரியமும் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பண்பாட்டு விழுமியங்களும் தான் காரணம்.

அத்தகைய, உலகையே ஒரு குடும்பமாகப் பாவிக்கும் 'வசுதைவ குடும்பகம்' என்ற உபநிடத மகாவாக்கியம் அல்லவா விவேகானந்தரை உருவாக்கியது?

அதுவல்லவா பிற்காலத்தில் மகாத்மா காந்தியையும் உலகிற்கு ஈந்தது! இதை உலகம் மறந்ததால் அல்லவா, 2001ஆம் ஆண்டில் இதே செப்டம்பர் 11ஆம் தேதி அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தகர்க்கப்பட்டு ஆயிரக் கணக்கான மக்கள் மடிந்து போயினர்!

இன்றும்கூட நாள்தோறும் உலகில் நிகழும் மதவெறி சார்ந்த நிகழ்வுகளும் அதற்கு பரிதாபமாகப் பலியாகும் மனித உயிர்களும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. இதற்கெல்லாம் தீர்வாக உலகிற்கு விவேகானந்தரின் போதனைகளை மீண்டும் முன்வைக்கும் பொறுப்பு பாரதத்திற்கே உள்ளது.[3]

உலக மதங்களின் பாராளுமன்றம் சிகாகோ நகரில் கூடிய போது அதில் சுவாமிஜியும் பங்கெடுத்துக் கொண்டார்.

அவரை ஒரு சாதாரணப் பிரதிநிதியாகத்தான் அங்கிருந்தவர்கள் முதலில் கருதினார்கள்.

அந்த மாநாட்டுக்கு வந்திருந்தவர்களில் பலரும் பேசியபிறகு அவருக்குப் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்தார்கள்.

சுவாமிஜி பேச ஆரம்பித்த உடன் கணீரென்ற அவருடைய குரலும் அழகான ஆங்கிலத்தில் இந்து மதத்தின் ஆழமான கருத்துக்களை அவர் வெளியிட்ட விதமும் அங்கிருந்தவர்களை மெய்சிலிர்க்கச் செய்தன.

சுவாமிஜியின் பேச்சுக்குப் பிறகு முன்னால் பேசிய எவருடைய பேச்சும் எடுபடவில்லை.

அன்றைக்கு கூட்டம் முடிந்தபோது மறுநாளும் சுவாமிஜி பேசுவார் என்று அறிவிக்க வேண்டிய கட்டாயம் கூட்ட நிர்வாகி களுக்கு ஏற்பட்டது.

அதைப்போலவே ஒவ்வொரு நாளும் கடைசி பேச்சாளராக இருக்கும்படி சுவாமிஜியைக் கேட்டுக் கொண்டார்கள். ஏனெனில் முன்னாலேயே அவர் பேசிவிட்டால் அவர் பேசி முடித்த உடன் மற்றவர்களின் பேச்சைக் கேட்க கூட்டம் இருக்காது என்கிற பயம் அமைப்பாளர்களுக்கு இருந்தது.

இந்திய ஆன்மீகமும் கலாச்சாரமும் உலகத்தாரால் மதிக்கப் படுவதற்குக் காரணமாக சுவாமிஜியின் சிகாகோ சொற்பொழிவுகள் அமைந்தன.



**அமெரிக்காவின் சிகாகோ நகரில், 1893, செப்டம்பர் 11 ஆம் தேதி நடைபெற்ற உலக சர்வ சமயப் பேரவையில் விவேகானந்தர் சொற்பொழிவாற்றிய கட்டிடத்தில் ஆசிரியர்**

*வேதாத்திரி மகரிசி தமது வாழ்க்கையில் அமெரிக்க பயணத்தை 1972 முதல் 1991 வரை 18 முறை சென்று வந்துள்ளார்.*[4]

*குண்டலின் யோகம்-மனவளக்கலை-காயகல்பம்-உலக அமைதி-குடும்ப அமைதி- கர்மயோகம்-சமயங்கள் ஒன்றுபட வேண்டும் ஆகியவற்றை குறிக்கோளாகக் கொண்டது இவரது பயணம்.*

*அமெரிக்காவில் தம் தத்துவத்தைப் பரப்பி ஒரு அறக்கட்டளையை ''அகில உலக வேதாத்திரி மகரிசி தத்துவ ஞானம் கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளை'' என்ற பெயரில் நிறுவினார்.*

*உலக நாடுகளிடையே போர் எழாமல் இருக்கவும்- அப்படி மீறி வந்துவிட்டாலும் முன் நின்று உலக அமைதி ஏற்படுத்தவும் உலகிற்கு ஓர் நீதி வேண்டும் என்றும் உலகுக்கே ஓர் ஆட்சி வேண்டும் என்ற கருத்தை ஐக்கிய நாட்டுச் சபையில் பதிவு செய்தார்.*

*உலக மக்கள் ஒன்றுபட வேண்டும் என்ற நோக்கத்துடன் இவருடைய பயணங்கள் அமைந்தன.*

*அமெரிக்கப் பயணத்தின் மூலம் உலக நாடுகள் போற்றும் உன்னத தவ முனிவர்களில் ஒருவராக வேதாத்திரி மகரிசி போற்றப்படுகின்றார்.*

---

1. விவேகானந்தரின் ஞானதீபம்-பாகம் 13- பக். 80-ஸ்ரீராமகிருஷ்ணமடம் சென்னை.
2. ஞானக்களஞ்சியம் பாடல் எண்.584-பக்.201-வேதாத்திரி மகரிசி- வேதாத்திரி பதிப்பகம்-ஈரோடு.
3. தினமணி நாளிதழ் நாள் 14.9.2001
4. வேதாத்திரியச் சிந்தனைகள்-பக். 67- தமிழ்ப் பல்கலைக்கழகம்-தஞ்சாவூர்.



# 18

## அற்புதங்கள் வேண்டாம்

**சு**வாமி விவேகானந்தர் பல ஆண்டுகளுக்கு முன்பு சென்னைக்கு வந்திருந்த போது ஒரு நாள் தமது தாயார் இறந்துவிட்டதாகக் கனவு கண்டார்.

அதன் உண்மையைத் தெரிந்து கொள்வதற்காக வலங்கை மானிலுள்ள கோவிந்த செட்டி என்ற குறிசொல்பவரிடம் அழைத்துச் சென்றனர்.

கனவு உண்மையல்ல என்பதை எடுத்துக் கூறி, சுவாமிஜியின் மனச்சுமையைக் குறைத்தார் கோவிந்த செட்டி.

அவர் கும்பகோண வரவேற்பின்போது கூட்டத்தில் நிற்பதைக் கண்ட சுவாமிஜி அவரை அழைத்து பிறகு தனியாக வந்து சந்திக்குமாறு கூறினார்.

கோவிந்தர் சென்ற போது சுவாமிஜி அவரிடம், ‘உங்களிடம் அற்புத சக்திகள் இருப்பது எனக்குத் தெரியும். அது உங்களுக்குப் பணத்தையும் புகழையும் அள்ளித் தந்திருப்பதும் உண்மை.

ஆனால், ஆன்மீகம் என்று எடுத்துக் கொண்டால், நீங்கள் ஓர் அடி கூட முன்னேறவில்லை. எங்கே ஆரம்பித்தீர்களோ அங்கேயே நிற்கிறீர்கள். அதுதானே உண்மை? கடவுளை நோக்கி உங்கள் மனம் சிறிதாவது சென்றுள்ளதா?’ என்று கேட்டார்.

கோவிந்த செட்டி சுவாமிஜி கூறியதன் உண்மையை ஏற்றுக் கொண்டார்.

உடனே சுவாமிஜி, 'உங்கள் மனம் கடவுளை நாடாவிட்டால் இந்தச் சக்திகளால் என்ன பயன்? இறையானந்தத்தை ஒரு முறை நீங்கள் சுவைத்துவிட்டால் அதன்பிறகு இவையெல்லாம் பயன் அற்றவை யாகிவிடும்' என்று கூறி, கோவிந்த செட்டியைக் கட்டியணைத்தார்.

ஆச்சரியம் என்னவென்றால், அன்றிலிருந்து கோவிந்தரின் அற்புத ஆற்றல்கள் அவரைவிட்டு விலகிவிட்டன. அவர் இறைவனுக்கான மன ஏக்கத்துடன் உலகைத் துறந்தவராக வாழ்ந்தார்.[1]

சித்து ஓர் மோசடிக் கலை என்று குறிப்பிடுவார் வேதாத்திரி மகரிசி...

**சித்து ஓர்கலை கற்றோரில் சிலருக்கே இன்பம்– பார்க்கும்**
**அத்தனைப் பேர்க்கும் போதை அளித்திடும் மருவதாகும்**
**பித்தர்போல் அறிவு மங்கி பெரும் இழப்படைந்தார் பல்லோர்**
**இத்தகைச் செயல் எவ்வாறு ஈசனின் அருளாம் சொல்வீர்''[2]**

சமுதாயத்திற்கு கேடு விளைவிக்கும் சித்து வேண்டாம் என்பார் வேதாத்திரி மகரிசி.

ஜால வித்தை போன்ற சித்துக்களை விளையாடும் - அவைகளைக் கற்றுக் கொள்ள விரும்பும் அன்பர்களுக்கும், இத்தகைய சித்துக்களைக் காணத் துடிக்கும் - கண்டு வியப்புற்று மதிமயங்கும் நண்பர்களுக்கும், உருக்கத்தோடு சொல்லுகிறேன்.

சமூகத்திற்கு எந்தவித நன்மையும் விளைவிக்காத நஷ்டமும், கஷ்டமுமே தரும் செயல்கள் பலவற்றை 'சித்து' எனக் கொள்ளும் மயக்கத்தை விட்டு விடுங்கள்.

நன்றாக ஆராயுங்கள்...

ஒரு துளி விந்துவைக் கருப்பையில் வாங்கிப் பத்தாவது மாதத்தில் எழில் மிகுந்த அற்புதச் சிற்பமான குழந்தையாக்கித் தரும் தாய்மார்களின் உடலில் நடைபெறும் சித்து எத்தகையது?

ஒரு நெல்லை நூறு நெற்களாக்கித் தரும் விவசாயியின் செயல் ஒரு சித்து அல்லவா?

ஒரு பொத்தானை ஒரு இடத்தில் அமுக்கினால், எவ்வளவோ இடத்தில் எண்ணிறந்த விளக்குகள் எரிகின்றனவே இது ஒரு 'பெருஞ்சித்து' அல்லவா?

இரும்பை நகரச் செய்தும், பறக்கச் செய்தும் அதன்மூலம் கோடிக்கணக்கான மக்கள் சுலபமாகப் பல மைல் தூரத்தை எளிதாகக் கடந்து பிரயாணம் செய்யும் வசதியை ஏற்படுத்தி இருக்கிறார்களே சில தொழில் அறிஞர்கள். இது எத்தகைய சித்து?

ஒரு நாளைக்கு இருபத்தையாயிரம் மைல் வேகத்தில் தன்னைத் தானே சுற்றியும் சுமார் 16 லட்சம் மைல் வேகத்தில் சூரியனைச் சுற்றியும் வரும் பூமியின் இயக்கத்தை எந்தவிதமான சித்து என மதிக்க வேண்டும். இவ்விதமாக இயற்கையிலும் செயற்கையிலும் நடைபெறும் சித்துக்களை ஊன்றி ஆராயுங்கள்.’’[3]

விவேகானந்தரும் வேதாத்திரி மகரிசியும் வேறுபட்ட தலைமுறைகளிலும் மாறுபட்ட சூழ்நிலைகளிலும் வாழ்ந்தார்கள்.

இருவருமே கொள்கையளவிலும், நடைமுறைகளிலும் சமயங்களிடையே ஒருமைப்பாட்டையும் உணர்த்தினார்கள்.

மூடநம்பிக்கைகளை களைந்து ஆன்ம நேயத் தத்துவத்தை இருவரும் வலியுறுத்தினார்கள்.

---

1. விவேகானந்தரைக் கற்போம். ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை.

2. ஞானக்களஞ்சியம் பாடல் எண்.462-பக்.160-வேதாத்திரி மகரிசி- வேதாத்திரி பதிப்பகம்-ஈரோடு.

3. வாழ்க்கை மலர்கள்-பக். 189- வேதாத்திரி மகரிசி-மனவளக்கலை மன்ற அறக்கட்டளை-சேந்தமங்கலம்.



# 19

## ஞானிகளின் பார்வையில் ஓஜஸ்

ஓஜஸ் என்றால் என்ன?

விவேகானந்தர் விடை தருகிறார்.

''காமம் என்னும் பேராற்றலை மிருகச் செயலிலிருந்து உயர்த்தி- மனித உடலின் பேராற்றலை உற்பத்தி செய்யும் நிலையமாகிய மூளைக்கு அனுப்பி அங்கே தொகுத்து வைத்தால் அது ''ஓஜஸ்'' என்னும் ஆன்மீக சக்தியாகிறது.

எல்லா நல்ல எண்ணங்களும் எல்லாப் பிரார்த்தனைகளும் அந்த மிருக சக்தியின் ஒரு பகுதியை ஓஜஸாக மாற்றி- நமக்கு ஆன்மீக சக்தியைத் தர உதவுகிறது.

இந்த ஓஜஸ்தான் உண்மை மனிதன். மனிதர்கள் மட்டுமே ஓஜஸைச் சேர்த்து வைக்க முடியும்.

காமம் என்னும் மிருக சக்தி முழுவதும் யாரிடம் ஓஜஸாக மாற்றமடைகிறதோ- அவன் தெய்வமே. அவன் பேச்சில் பேராற்றல் விளங்கும். அவனது வார்த்தைகள் உலகிற்குப் புத்துயிரூட்டும்.[1]

ஒவ்வொரு மனிதனிடமும் ஓஜஸ் குறைவாக அல்லது அதிகமாகச் சேகரித்து வைக்கப்பட்டுள்ளது. உடலில் உள்ள ஆற்றல்கள் மேன்மை பெறும்பொழுது அவை ஓஜஸ் ஆக மாறுகின்றன.

இவை வெறும் மாறுதல் மட்டுமே என்பதை மனதில் கொள்ள வேண்டும். வெளியிலே மின்சாரமாகவோ, காந்த சக்தியாகவோ செயல்படும் சக்திதான் உள் சக்தியாக மாறுகிறது.

தசைச் சக்தியாகச் செயல்படுவதுதான் ஓஜஸாக மாறுகிறது. பால் உணர்ச்சியாக வெளிப்படும் சக்தி சரிவரக் கட்டுப்படுத்தப் பட்டால் எளிதில் ஓஜஸாக மாற்ற முயற்சிக்கிறான். ஒழுக்கமுறையை ஆண்களும் பெண்களும் மட்டுமே ஓஜஸை மூளைக்கு எடுத்துச் சென்று சேமித்து வைக்க முடியும்.[2]

மனிதனிலிருந்து மனிதனை வேறுபடுத்திக் காட்டுவது ஓஜஸ். ஓஜஸ் அதிகமுள்ளவன் தலைவனாகிறான். சிறந்த வசீகர சக்தி யளிப்பது அதுவே. ஓஜஸ் உற்பத்தியாவது நாடி ஓட்டத்திலிருந்து. சிற்றின்பத்தில் தோன்றும் சக்தியில் இது எளிதில் உற்பத்தியாகிறது- என்பதே இதற்குரிய தனிச் சிறப்பு.[3]

சிற்றின்ப சக்தி சிதறிப் போகாமல் காக்கப்பட்டால் (செயல் என்பது எண்ணத்தின் தூல நிலையே) அந்தச் சக்தியிலிருந்து ஓஜஸை உற்பத்தி செய்யலாம்.

இரு பெரும் நாடிகள் மூளையில் தொடங்கி-முதுகுத் தண்டின் இருபுறமும் செல்கின்றன.

செல்லும் வழியில் தலையின் பின்னால் ''8'' என்ற எண்ணின் உருவம் போன்று ஒன்றை ஒன்று தாண்டிச் செல்கின்றன.

இவ்வாறு உடலின் இடது புறம் மூளையின் வலது புறத்தால் இயக்கப்படுகிறது. இந்த ஓட்டச் சுழலின் கீழ் முனையே காம உணர்ச்சியின் மையம் மூலதாரம்.

இடை - பிங்கலை என்னும் இருபெரும் நாடிகளில் ஏற்படும் சக்தி கீழே கொண்டுவரப்பட்டு இந்த இடத்தில் தொடர்ந்து சேமிக்கப் படுகிறது.

முதுகுத் தண்டில் உள்ள கடைசி எலும்பு- இடுப்பிலுள்ள இந்த நரம்புவலைத் தொகுதியின் மேல் இருக்கிறது. இதை முன்னோர்கள் முக்கோணம் என்று உருவகப் படுத்தினார்கள்.

இதன் அருகில் சக்தி சேமிக்கப்பட்டிருப்பதால் இதை ஒரு பாம்பாக உருவகப்படுத்தினார்கள்.

உணர்வு நிலையும் உணர்வு மறைந்த நிலையும் இவ்விரண்டு நாடிகள் மூலமே செயலாற்றுகின்றன. நாடி ஓட்டம் கீழ் நோக்கி வரும் போது மீண்டும் அது மேல் நோக்கிச் செல்வதைத் தடுத்து மூலாதாரத்தில் ஓஜஸாக மாற்றி முதுகுத் தண்டின் மேல் ஏற்றி விடுகிறது உணர்வு கடந்த நிலை.

இயற்கையாக முதுகுத் தண்டு மூடப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஓஜஸ் செல்வதற்காக அதைத் திறந்து வழியேற்படுத்த முடியும்.

முதுகுத் தண்டின் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு இந்த நாடி செல்லும்போது நீங்களும் ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்குச் செல்கிறீர்கள். இதனால் தான் மனிதன் மற்ற உயிர்களை விடச் சிறப்புப் பெற்றுள்ளான்.[4]

எல்லா நிலைகளையும் அனுபவங்களையும் மனிதனால் தான் பெற முடியும். மற்றோர் உடல் நமக்குத் தேவையில்லை. மனிதன் விரும்பினால் இந்த உடலிலேயே தனது வேலையை முடித்துக் கொண்டு தூய ஆன்மாவாக வாழலாம்.

ஓஜஸ் ஒவ்வொரு மையமாகத் தாண்டி மூளையிலுள்ள பினியல் சுரப்பியை (மூளையின் இப்பகுதி என்ன செயலைச் செய்கிறதென்பதை விஞ்ஞானம் வரையறுக்கவில்லை) அடையும் போது மனம்-உடல் என்பதை இன்றி மனிதன் எல்லாத் தளைகளிலிருந்தும் விடுபடுகிறான்.

சித்திகளால் விளையும் பேராபத்து எதுவென்றால் மனிதன் தன்னை அறியாமல் இவற்றில் விழுந்து உழல்வதே. இவற்றை நேர்வழியில் உபயோகிப்பது எப்படி என்பது அவனுக்குத் தெரியாது. தனக்கு என்ன நேர்ந்துள்ளது என்பதும் அவனுக்குத் தெரியாது.

இதற்கு வேண்டிய பயிற்சியும் அவனுக்கு இல்லை. காம மையத்திலிருந்து இந்த சக்தி உற்பத்தியாகி இருப்பதால் இந்த அற்புதச் சக்திகளை உபயோகப்படுத்தும்போது - சிற்றின்ப உணர்ச்சி கட்டுக்கடங்காமல் எழும். இந்த அற்புதச் சக்திகளை வெளிப்படுத்தாமல் இருப்பதே சிறந்த வழி.

ஏனெனில் இவை பற்றிச் சரவர அறியாதவர்களுக்கும் பயிற்சி பெறாதவர்களுக்கும் இந்த அற்புதச் சக்தி பயங்கர விபரீதங்களை விளைவிக்கிறது.

குறியீடுகளுக்கு நாம் மீண்டும் திரும்புவோம். முதுகுத் தண்டின் மேலேறிச் செல்லும் ஓஜஸ் திருகுச் சுருள் (Spiral) போன்ற பாதையில் வளைந்து வளைந்து செல்வதால் அது பாம்பு எனப்படுகிறது.

இந்தப் பாம்பு முக்கோண எலும்பின் மீது அமர்ந்திருக்கிறது. அதை எழுப்பினால் முதுகுத் தண்டில் ஏறிச் செல்கிறது. அது ஒவ்வொரு மையமாக ஏறிச் செல்லும் போது-ஒரு புது உலகமே நம் முன் தோன்றுகிறது. குண்டலினி சக்தி எழுப்பப்படுகிறது.[5]

வேதாத்திரியம்... ஓஜஸை சேமிக்கும் வழியைப் பாதுகாக்கும் வழியை பயிற்சியாக தந்துள்ளது.

உடம்பில் உள்ள உயிர் ஆற்றலின் அளவு, உடலில் உள்ள ஜீவ வித்துக் குழம்பின் தன்மையைப் பொறுத்தது, ஜீவ வித்துக் குழம்பின் தன்மையைச் சீராக்கி, உயிர் ஆற்றலைப் பெருக்க உதவுகிற பயிற்சியே காயகல்பம்.[6]

ஊரெங்கும் காயகல்பப் பயிற்சியை வேதாத்திரியாரின் மனவளக்கலை மன்றம் கொண்டு சென்றுள்ளது.

---

1. சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம். பாகம் 3 பக்.286 ராமகிருஷ்ண மடம். சென்னை.
2. சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம். பாகம் 3 பக்.61 ராமகிருஷ்ண மடம். சென்னை.
3. சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம். பாகம் 3 பக்.400 ராமகிருஷ்ண மடம். சென்னை.
4. சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம். பாகம் 3 பக்.401 ராமகிருஷ்ண மடம். சென்னை.
5. சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம். பாகம் 3 பக்.402 ராமகிருஷ்ண மடம். சென்னை.
6. காயகல்ப பதிவேடு. வேதாத்திரிப் பதிப்பகம், ஈரோடு.



# 20

## உலகம் தழுவிய மதம்

"என்றாவது உலகம் தழுவிய மதம் (universal Religion) என்ற ஒன்று உருவாக வேண்டுமானால்-அது இடத்தாலும் காலத்தாலும் எல்லைப்படுத்தப் படாததாக இருக்க வேண்டும். அந்த மதம் யாரைப் பற்றிப் பிரசாரம் செய்கிறதோ- அந்தக் கடவுளைப் போன்று அது எல்லை யற்றதாக இருக்க வேண்டும். சூரியன் தன் ஒளிக்கரணங்களை எல்லார் மீதும் சமமாக வீசுவது போன்று அது கிருஷ்ண பக்தர்கள்-கிறிஸ்து பக்தர்கள்- ஞானிகள்-பாவிகள்- எல்லோரையும் சமமாக எண்ண வேண்டும். அது பிராமண மதமாகவோ பௌத்த மதமாகவோ கிறிஸ்துவ மதமாகவோ முகமதிய மதமாகவோ இருக்காமல்- இவற்றின் ஒட்டு மொத்தமாக இருப்பதுடன்-இன்னும் வளர்ச்சி யடைய எல்லையற்ற இடம் உள்ளதாக இருக்க வேண்டும்"[1] என்பது விவேகானந்தரின் கனவாகும்.

இந்தக் கனவை நினைவாக்கியது - வேதாத்திரி மகரிசி வகுத்துள்ள உலகப் பொது அருள்நெறி சமயம்.

**"உலகில் தோன்றிய மதங்கள் அத்தனையும் என்ன சொல்கின்றன?"**

ஒன்று இறைவழிபாடு. மற்றொன்று அறநெறி. எந்த மதமானாலும் அது இந்த இரண்டையுமே வாழ்க்கை வளங்களுக்கு அடிப்படையாக உணர்த்தி இருக்கிறது. அந்த உண்மைகளைத் தன்முனைப்பால் மறந்துவிட்ட மனித இனம் அடைகின்ற வாழ்க்கைச் சிக்கல்கள்தான் இன்று நாம் காணுகின்ற துன்பங்கள் ஆகும்"[2] என்று பல மதங்களின் நிலைமைகளைச் சாடுகிறார் வேதாத்திரி மகரிசி.

தங்கள் மதமே சிறந்து விளங்கவேண்டும் மற்ற மதங்கள் அழிய வேண்டும் என்ற எண்ணம் மக்களுக்குள் பகைமையை உருவாக்கும்.

விவேகானந்தரும் மதவாதிகளை பல நேர்வுகளில் வேதாத்திரியார் போல் மிகவும் கடுமையாக சாடுகிறார்.

''ஆன்மீகம் என்பது அனுபூதி. கடவுள் ஒருவர் இருப்பதாக நாம் எல்லோரும் சொல்கிறோம். நீங்கள் அவரை நேரில் கண்டிருக்கிறீர்களா? இதுதான் கேள்வி.

'கடவுள் விண்ணில் இருக்கிறார்' என்று ஒருவன் சொல்கிறான். அவனிடம், 'நீ அவரைக் கண்டிருக்கிறாயா?'' என்று கேளுங்கள். அவன் 'கண்டிருக்கிறேன்' என்று சொன்னால் அவனைக் கேலி செய்து அவனை ஒரு பைத்தியம் என்று கூறுகிறீர்கள்.

பெரும்பாலோரை பொறுத்தவரை மதம் என்பது ஒருவகையான அறிவுக்கோட்பாடு, ஒரு கொள்கை, அவ்வளவுதான். இத்தகைய மதத்தை நான் ஒருபோதும் பிரச்சாரம் செய்ததில்லை.

அதை மதம் என்று நான் கூறவும் மாட்டேன். மதம் என்பது நமது அறிவுக்கு ஏற்ற சில விஷயங்களை ஏற்றுக்கொள்வதிலோ ஏற்காத விஷயங்களை விட்டுவிடுவதிலோ இல்லை. இத்தகைய மதத்தைப் பின்பற்றுவதைவிட நாத்திகனாக இருப்பதே நல்லது''[3] என்கிறார் விவேகானந்தர்.

எனவே ''மதம் ஒன்று போதும்''[4] என்கிறார் அருள்தந்தை வேதாத்திரி மகரிசி.

***கேள்வி: சுவாமிஜி, தாங்கள் எந்த மதத்தை சேர்ந்தவர்?***

வேதாத்திரி மகரிசியின் பதில்:

''நான் எந்த மதத்தையும் சேர்ந்தவன் அல்ல. உலகப் பொது அருள் நெறி சமயத்தைச் சேர்ந்தவன். கர்மயோக நெறியே அதன் வேதமாகும். மனிதன் உடல் நலம், மனநலம் காத்து செயல் விளைவை மதித்து எவ்வுயிர்க்கும் துன்பம் இழைக்காமல் வாழ்வதே கர்மயோக நெறியாகும். இந்து மதத்திலுள்ள நம்பிக்கை, இஸ்லாமிய மதத்தில் உள்ள தொழுகை முறை, கிறிஸ்துவ மதத்தில் உள்ள தொண்டு, புத்த மதத்தில் உள்ள ஆராய்ச்சி, ஜைன மதத்தில் உள்ள ஜீவகாருண்யம் இவை எல்லாம் எனக்குப் பிடிக்கும்.''[5]

''உலகப் பொது அருள்நெறி சமயம் என்பது கர்மயோகம்.

*கர்மயோகம் என்பது இறைநிலையும்- அதிலிருந்து எழுச்சிப் பெற்ற விண்ணின் சுழலலையும் ஒன்றிணைந்து காந்தம் என்ற பேராற்றலாகி மனிதனின் ஒவ்வொரு செயலுக்கும் தக்க விளைவை அளித்துக் கொண்டிருக்கின்றதென்ற உண்மையை உணர்ந்து அந்த அயரா விழிப்பில் வினைகளை முறைப்படுத்திக் கொண்டு வாழும் அறநெறி வாழ்க்கை.''*

*அறநெறி என்பது ஒழுக்கம்-கடமை-ஈகை.*

*ஒழுக்கம் என்பது எண்ணத்தாலே - சொல்லாலோ - செயலாலோ - தனக்கோ - பிறர்க்கோ தற்காலத்திற்கோ - பிற்காலத்திற்கோ - உடலுக்கோ - உணர்ச்சிக்கோ - அறிவிற்கோ துன்பம் விளைவிக்காது வாழும் பண்பாடு.*

*கடமை என்பது தனக்கும் குடும்பத்திற்கும் - சுற்றத்திற்கும் மற்றுமன்றி - நம்மை பாதுகாத்து நமக்கு வேண்டிய பொருள்களை உற்பத்தி செய்து உதவி வரும் சமுதாயத்திற்கும் நன்றி உணர்வுடன் தொண்டு செய்தல்.*

*ஈகை என்பது ஈதல்- இசைபட வாழ்தல். அதாவது ஒத்து உதவி பிறர் துன்பம் துடைத்தல்.*

*அறநெறி முழுமைப்பெற இறையுணர்வு வேண்டும்.*

*இறையுணர்வு என்பது எல்லா உயிர்களிடத்தும் தெய்வம் (மெய்ப்பொருள்) அறிவாக இயங்குகின்றது என்ற உண்மையை உணர்தல்.*[6]

*எம்மதமும் சம்மதம் என்ற பொதுநெறிப் பெரியார்கள் இருவரும் ஒரே திசையில் பயணித்தார்கள். சுவாமி விவேகானந்தரின் வாக்கு வேதாத்திரி மகரிசியின் வாயிலாக பலித்தது.*

---

1. தாமிரபரணி அறிவுத்திருக்கோயில் திறப்புவிழா மலர் பக்.XLI
2. மதமும் மனிதனும்-பக். 74-வேதாத்திரி மகரிசி-வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.
3. விவேகானந்தரின் பொன்மொழிகள்-இண்டர்நெட்.
4. மதமும் மனிதனும்-பக். 61 வேதாத்திரி மகரிசி-வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.
5. வேதாத்திரி மகரிசியின் சொற்பொழிவில் ஆசிரியர் நேரிடையாகக் கேட்டது.
6. அறிவுத்திருக்கோயில் -நாமக்கல் திறப்பு விழா சிறப்பு மலர் - பக். 144



# 21

## உண்மையான முயற்சி

நம்முடைய வாழ்க்கை சரித்திரத்தில் ஒவ்வொரு நாளும் ஒரு பக்கமாகும். அந்த ஒவ்வொரு பக்கத்தையும் சாதனைப் பக்கங்களாகப் பதியத்தான் நாம் எப்போதும் முயற்சி செய்து கொண்டே இருக்க வேண்டும்...

முயற்சி எப்படியிருக்க வேண்டும்? விவோகானந்தர் சொல்கிறார்...

''வெற்றி பெறுவதற்கு நிறைந்த விடா முயற்சியையும் பெரும் மன உறுதியையம் நீங்கள் கொண்டிருக்க வேண்டும்.

விடாமுயற்சி பெற்றவன் - ''சமுத்திரத்தையே குடித்துவிடுவேன்'' எனது சங்கல்பத்தால் மலைகள் நொறுங்கி விழுந்தாக வேண்டும்'' என்று சொல்கின்றான்.

அத்தகைய ஆற்றலை அத்தகைய மன உறுதியை நீ பெற்றிரு. கடுமையாக உழை. உனது குறிக்கோளை நீ அடையலாம்''[1] என்கிறார் சுவாமி விவோகனந்தர்.

மேலும் - ''எழுந்து நின்று போராடு. ஓர் அடியும் பின்வாங்கக் கூடாது.

எது வந்தாலும் போராடி முடி. தங்கள் நிலையிலிருந்து நட்சத்திரங்கள் பிறழட்டும். முழு உலகம் நமக்கு எதிராக எழுந்து எதிர்த்து நிற்கட்டும்.

மரணம் என்றால் வேறு உடை மாற்றுவன. அதனால் என்ன் போயிற்று? போராடு.

கோழையாவதனால் நீ எந்த ஒரு பயனையும் பெறமாட்டாய். ஓர் அடி நீ பின்வாங்குவதனால் எந்த ஒரு துரதிருஷ்டத்தையும் தவிர்த்துவிட முடியாது.

உலகிலுள்ள அத்தனை கடவுள்களையும் நீ கூவியழைத்துப் பார்த்தாகிவிட்டது. துன்பம் அதனால் ஓய்ந்துவிட்டதா,

நீ வெற்றி பெற்றபோது கடவுளர் உனக்கு உதவ முன்வந்தார்கள். இதனால் என்ன பயன்? போராடி முடி.

நீ எல்லையற்றவன். மரணமற்றவன். பிறப்பற்றவன். எல்லை யற்ற ஆத்மா.

ஆதலால்-நீ அடிமையாக இருப்பது உனக்குப் பொருந்தாது. எழுந்திரு! விழித்துக்கொள்! எழுந்து நின்று போராடு![2]

''தன் தகமை-திறமை-தவறு-தேவை இவற்றைச் சரியானபடி கணித்துக் கொண்டு சிந்தனையோடு திட்டமிட்டு விடாமுயற்சியோடு வினையாற்றினால் வெற்றி நிச்சயம்.

அமைதியும்- நிறைவும்-மகிழ்ச்சியும் உண்டாம்.

இக்குண்டலினி யோக முறை இந்தத் துறையில் மனிதனை உயர்த்திச் சிறப்படையச் செய்கிறது. உங்களுக்கு என்ன வேண்டும்? என்ன முயற்சி எடுத்தீர்கள்? எங்கே எவ்வாறு ஏமாற்றமடைந்தீர்கள்?

உங்களுக்குள்ளாகவே சிந்தையைத் தூண்டி ஆராயுங்கள்.

உங்கள் மனம் ஒரு பெரிய இயற்கைச் சுரங்கம். அதில் எல்லாச் செல்வங்களும் உள்ளன. முறையாக முயன்று பெற வேண்டும்- அவ்வளவே.[3] என்று முயற்சியின் அவசியத்தை பறைசாற்றுகின்றார் வேதாத்திரி மகரிசி.

இத்தகைய முயற்சி வெற்றி பெற வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும் என்றும் வேதாத்திரியார் சொல்கிறார்.

''விடா முயற்சியும் விழிப்பு நிலையும் பழக்கத்தை மாற்றி விளக்கம் பெற்று வாழும் துணிவும் பயிற்சியினாலன்றி கிட்டா.''

''விதை- நிலம்-எரு- தண்ணீர்-காவல் இவைகள் அனைத்தும் சரியாக இருந்தால் தான் விளைவு நன்றாக இருக்கும்.

அதுபோல ஓர் ஆசான் அத்வைத தத்துவம் என்ற ஒருமைத் தத்துவ விதையை உள் அளவு என்னும் நிலத்தில் ஊன்றினால் அது வளர்ச்சி பெற- நீ ஒழுக்கம் என்ற உரம் இடவேண்டும்.

அறிவை ஒன்றிப் பழகும் ஒருமைப் பழக்கமான தவமும் ஆராய்ச்சி என்ற தண்ணீரும் பாய்ச்ச வேண்டும்.

அறிவை ஒன்றச் செய்து உறுதியான அசைவு அற்ற நிலை யடைவதே ஞானத்திற்குத் தேவையாக இருக்கிறது.

ஆகையால்- அறிவு சலனப்பட்டுக் காம-குரோதம்-லோபம்-மதம்-மாச்சரியம்-எனும் ஆறு குணங்களில் எதுவாயும் மாறாது பார்த்துக் கொள்ளவும் விழிப்பு நிலையாகிய காவல் புரிய வேண்டும்.

இவைகள் எல்லாம் அமையும் வகைக்கும் அளவிற்கும் ஏற்றபடி ஞானம் என்ற விளைவும் உனக்கு உண்டாகும்.''[4]

''எது ஒன்றை அடைவதாக இருந்தாலும் உண்மையான, தீவிரமான முயற்சி இருந்தால் நீங்கள் எதையும் சாதிக்கலாம்.''

சாதாரண குடும்பத்திலிருந்து நாட்டின் தலைவர்கள், விஞ்ஞானிகள் எல்லாம் எப்படித் தோன்றினார்கள்.?

அவர்களுக்குள்ளே இருந்த சுய ஆர்வம்தானே அவர்களை மேலே கொண்டு வந்தது. சூழ்நிலைகள் அவர்களை முடக்கிப் போட்டாலும் அதையும் மீறி அவர்கள் வெளி வரவில்லையா?

உங்களுக்கும் அது சாத்தியம். நீங்கள் சரியான ஆர்வமும் ஈடுபாடும் கொண்டால் உங்களால் மாற முடியும் என்பதே சுவாமி விவேகானந்தர் உங்களுக்கு வழங்கும் தன்னம்பிக்கை செய்தி.[5]

முயற்சி! முயற்சி!! முயற்சி!!! என்ற மந்திரத்தைத் நாள்தோறும் நேரம் கிடைக்கும்போது சில நாட்களுக்குச் செபித்துக் கொண்டே முயற்சி செய்தால் வெற்றி நிச்சயம். வாழ்வில் ஒரு புதிய தெளிவான பாதை திறக்கப்படும். ஞானத்தின் வாசல் திறந்திருக்கும்.

---

1. விவேகானந்தரின் அறிவுரைகள்-பக்.5-ஸ்ரீராமகிருஷ்ண மடம்-சென்னை.
2. விவேகானந்தரின் அறிவுரைகள்-பக்.9--ஸ்ரீராமகிருஷ்ண மடம்-சென்னை.
3. வாழ்க்கை மலர்கள்-பக். 40- வேதாத்திரி மகரிசி-மனவளக்கலை மன்ற அறக்கட்டளை-சேந்தமங்கலம்.
4. மேலது
5. விவேகானந்தரைக் கற்போம்-பக்.218- ஸ்ரீராமகிருஷ்ண மடம்-சென்னை.



# 22

## ஒரு சரியான வேதாந்தி

குதிரை கோச் வண்டி ஒன்று பாரீஸ் அருகில் உள்ள ஒரு வீதியில் போய் கொண்டிருந்தது. சுவாமி விவேகானந்தர் அதில் அவரது ஐரோப்பிய சீடருடன் இருந்தார்.

அந்தச் சமயத்தில் ஒரு வீட்டுக்குள் இருந்து ஒரு சிறுவனும் சிறுமியும் வெளியே வந்தார்கள். பணக்கார வீட்டுப் பிள்ளைகள் போல் இருந்தார்கள்.

வண்டியோட்டி வண்டியை ஓர் ஓரமாக நிறுத்தினார். இறங்கிப் போய் அந்தப் பிள்ளைகளைக் கட்டிக் கொண்டார். தட்டிக் கொடுத்தார். சில வார்த்தைகள் பேசினார். மறுபடியும் வந்து வண்டியை ஓட்டிக்கொண்டு போனார்.

''யார் அந்தக் குழந்தைகள்?'' என்று கேட்டார் விவேகானந்தரின் சீடர்.

''என் பிள்ளைகள்தான்'' என்றார் வண்டியோட்டி.

''அவர்களைப் பார்த்தால் பணக்கார வீட்டுப்பிள்ளைகள் போல் தோன்றுகிறது! இவர் என்னவென்றால் கோச் ஓட்டிக் கொண்டு இருக்கிறாரே!'' என அந்தப் பெண்மணிக்கு ஒரே ஆச்சரியம். கோச் வண்டிக்காரர் திரும்பிப் பார்த்தார்.

பாரீசில் இருந்த ஒரு வங்கியின் பெயரைச் சொல்லி அந்த வங்கியைப் பற்றித் தெரியுமா? என்று கேட்டார்.

''ஓ! கேள்விப்பட்டிருக்கிறேன். அது மிகப் பெரிய பாங்க் அல்லவா! இப்போது அந்த பாங்க் திவாலாகிவிட்டது போல் தெரிகிறது!'' என்றார் சுவாமிஜியின் சீடர்.

வண்டியோட்டி அமைதியாக, ''நான்தான் அந்த வங்கிக்குச் சொந்தக்காரன்! அந்த வங்கி இப்போது கொஞ்சம் சிரம நிலையில் இருக்கிறது. பங்குகளை எல்லாம் வசூல் செய்து கடன்கள் எல்லாம் அடைக்கச் சிறிது நாள் ஆகும்.

''இந்நிலையில் நான் பிறருக்குச் சிறிதும் சுமையாக இருக்க விரும்பவில்லை. என் சொந்த ஊரில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்தேன். என்னிடம் இருந்த சொத்துக்கள் எல்லாவற்றையும் விற்று இந்த கோச் வண்டியை வாங்கி வாடகைக்கு ஓட்டிக் கொண்டிருக்கிறேன்.

''என் மனைவியும் சிறிது சம்பாதிக்கிறாள். எங்கள் இருவரின் வருமானத்தில் குழந்தைகளுக்கு ஆகும் செலவுகளைச் சரி செய்து கொண்டிருக்கிறோம். கடன்களை அடைத்தவுடன் மீண்டும் வங்கியைத் திறந்துவிடுவேன்!'' என்றார்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த சுவாமி விவேகானந்தர் மிகவும் மகிழ்ந்து இதோ இந்த மனிதர்தான் சரியான வேதாந்தி.

வேதாந்தக் கருத்தைத் தம் வாழ்வில் நடைமுறைப்படுத்தி உள்ளார்! பெரிய ஓர் அந்தஸ்திலிருந்து விழுந்தும்கூட இவர் சூழ்நிலைக்கு இரையாகி விடவில்லை! இவரிடம் என்ன ஒரு தன்னம்பிக்கை!'' என்று கூறி ஆச்சரியப்பட்டார்.[1]

பெரிய மாளிகையில் லுங்கி உற்பத்தி செய்யும் தொழில் அதிபராக இரண்டு கார்கள் என்று சகல வசதிகளுடன் இருந்தார் வேதாத்திரி மகரிசி.

எந்த ஒரு தொழிலிலும் மேடு பள்ளங்கள் இருக்கத்தான் செய்யும்?

கடன் வளர்ந்தது... காலம் முடிவெடுத்தது.

நீதிமன்றத்தில் தனக்குச் சொந்தமான கடைசிச் சொத்துக்களாகக் கையில் அணிந்திருந்த மோதிரத்தையும் கைக் கடிகாரத்தையும் கழற்றிக் கொடுத்துவிட்டார் வேதாத்திரி.

நிலைமை தலைகீழாக மாறியது. ஊருக்கெல்லாம் உதவிய கைகள் கையேந்தும் கொடுமை வந்தது. உட்கார இடமில்லை. ஒன்றுக்கு இரண்டு கார்கள். போன இடம் தெரியவில்லை. மதிநுட்பம் இருந்தும் மண்ணில் தங்க இடமில்லை.[2]

அன்று இரவு மட்டும் தெரிந்தவர்கள் வீட்டில் தங்கினார்கள்.

மறுநாள் பச்சைத் தடுக்கால்-வேயப்பட்ட ஒரு குடிசை தயாராகிறது. குடிசையில் குடிபுகுந்தார் வேதாத்திரி. கூழுக்கு என்ன செய்வது?

அன்னை லோகாம்பாளுக்குத் தெரிந்த புட்டுத் தொழிலை செய்யத் தொடங்கினார்.

''நாள்தோறும் நாங்கள் காலை 3.30. மணிக்குப் படுக்கை விட்டு மூன்று பேரும் எழுந்து விடுவோம். என் மனைவிகள் இருவரும் அடுப்பு வேலை பார்ப்பார்கள். நான் சிறிது நேரம் தவம் ஆற்றி விட்டு அவர்களுக்கு உதவி செய்ய வருவேன்.


அவ்வப்போது வேக்காடு பார்த்து நேரத்தோடு அவிப்பானை விட்டுப் பிட்டை எடுத்துவிட வேண்டியது தான் அதில் மிகக் கடினமான வேலை.

அதனைப் பெரியவள் லோகாம்பாள் செய்வாள். இளையவள் குழாய்களில் பிட்டு மாவு நிரப்பிக் கொடுத்துக் கொண்டே இருப்பாள். நான் வெந்த பிட்டுகளைக் குழாயிலிருந்து ஒரு ரூல் தடியினால் தள்ளி வெளியே எடுத்து அடுக்குவேன்.

ஒரு நிமிடத்திற்கு இரண்டு பிட்டு வீதம் இறங்கி விடும். காலை மணி 5.30க்கெல்லாம் பிட்டுகள் தயாராகி விடும். 6 மணிக்கெல்லாம் முழுவதும் விற்றுவிடும்.''[3]

மாளிகையில் இருந்தவர் குடிசைக்கு வந்தாலும் தொழில் செய்து வாழ்க்கை நடத்தினார் வேதாத்திரி மகரிசி.

சுவாமி விவேகானந்தர் பார்வையில் வேதாத்திரியும் ஒரு சரியான வேதாந்தியே.




**அமெரிக்காவின் சிகாகோ நகரில், நடைபெற்ற உலக சர்வ சமயப் பேரவையில் விவேகானந்தர் சொற்பொழிவாற்றிய இடத்தில் பேத்தி ஆகான்ஸாவுடன் ஆசிரியர்.**

---

1. விவேகானந்தரைக் கற்போம்-பக்-71 -ஸ்ரீராமகிருஷ்ண மடம் சென்னை.
2. இந்த நூற்றாண்டு தந்த மகான்-பக். 67-வேதாத்திரி பதிப்பகம்.ஈரோடு.
3. எனது வாழ்க்கை விளக்கம்-பக்.81 வேதாத்திரி மகரிசி, வேதாத்திரி பதிப்பகம். ஈரோடு.



# 23

# முழு ஆளுமையை வளர்த்துக் கொள்வது எப்படி?

வளர்ச்சி அடையப் போராடுவதே வாழ்க்கை ஆகும். மண்ணைத் துளைத்துக் கொண்டு வெளி வந்த பிறகே சிறிய விதை செடியாகிறது.

உண்மையான வளர்ச்சி என்பது முறையான பயிற்சியாலும்- கட்டுப்பாட்டாலும் வருகிறது. இதுவே ஒரு மனிதனின் ஆளுமையை (Personality) முழுமை பெறச் செய்கிறது.

மனித வரலாற்றில் முத்திரை பதித்த பல சிறந்த மனிதர்கள் தோன்றியிருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் இறந்த பிறகு அவர்களது புகழ் நிலைக்கவில்லை.

ஆளுமையானது ஒரு மனிதனின் சாதனையால் மட்டுமல்ல ஒழுக்கத்தால் சிறப்படைகிறது. அத்தகைய நற்குணப் பண்புடை யவர்களை இச்சமுதாயம் எளிதில் மறப்பதில்லை.

## ஆளுமையின் வளர்ச்சி?

இளைஞர்கள் - தங்களுடைய ஆளுமை வளர்ச்சியில் பெரும் ஈடுபாடு கொண்டிருக்கிறார்கள். மாற்றங்கள் எல்லாம் உடனே நிகழ வேண்டும் என்று அவசரப்படுகிறார்கள். ஆளுமை என்பது புறத் தோற்றத்தை மட்டும் சார்ந்ததல்ல.

ஆளுமை வளர்ச்சி- 1. உடல், 2. மனம், 3. அறிவு, 4. ஆன்மா என்று நான்கு பரிமாணங்களாக உள்ளன. இந்த நான்கின் ஒட்டு மொத்த சீரான வளர்ச்சியே முழுமையான ஆளுமை வளர்ச்சி எனப்படும்.

## 1. உடல் வளர்ச்சி

மனித உடல் கடவுள் தந்த பரிசு. அதன் நலமே மகிழ்ச்சியையும் வாழ்வில் வெற்றியையும் தேடித் தரும். உடலும் உள்ளமும் ஒன்றை ஒன்று சார்ந்தவை. அதனால் உடல் நலக் குறைவு மன அழுத்தத்தைத் தோற்றுவிக்கிறது.

சுவாமி விவேகானந்தர் ''பலவீனமான உடல்தான் மனக்குறைகள் பலவற்றிற்கும் மூல காரணம்'' என்று கூறுகிறார்.

அவர் மேலும் வலிமையை வலியுறுத்தும்போது, ''இளைஞர்களே! பலம் பொருந்தியவர்களாக இருங்கள்....கீதை படிப்பதைவிட- கால் பந்து ஆடினால்- நீங்கள் சொர்க்கத்தின் அருகில் இருப்பீர்கள்'' என்று கூறுகிறார். வலிமையான உடலும் அமைதியான மனமும் உங்களுக்கு கீதையை நன்கு புரிந்து கொள்ள உதவும்.[1]

''நோயற்ற உடலை உடையவர்கள்தான் அமைதியாக மகிழ்ச்சியாக வாழமுடியும். அவர்களுக்கு அறிவும் திறன்பட இயங்கும்'' என்கிறார் வேதாத்திரி மகரிசி.[2]

ஒருவன் தீய பழக்கங்களைத் தவிர்த்து- தீய பழக்கங்களை உடையவர்களிடமிருந்து விலகி இருப்பதே நல்லது. முதிரா அறிவு- சீக்கிரமே தீய பழக்கங்களுக்கு அடிமையாகி விடுகிறது.

புலனடக்கத்தை மேற்கொள்ளுவதால் சேமிக்கப்படும் சக்தி ''ஓஜஸ்'' சக்தியாக மாறுகிறது. அச்சக்தியானது மூளை- நரம்பு மண்டலத்தைப் பலப்படுத்தி- ரத்த ஓட்டத்தையும் புதுப்பித்து நமக்கு உத்வேகத்தை அளிக்கிறது.

''நோய்கள் விலகவும் - நீங்கவும் மற்றும் ஆயுள் நீளவும்- உயிரானது உடலில் கலந்து போகவும் ஜீவசமாதி சித்திக்கவும் ஓஜஸ் எனும் மூச்சுப் பயிற்சி உதவுகிறது''[3] என்பார் வேதாத்திரி மகரிசி.

## 2. மனவளர்ச்சி

உடலைக் காட்டிலும் மனம் பலமிக்கது. மனமே உடலைத் தோற்றுவிக்கிறது.

எண்ணங்களின் பிறப்பிடம் மனமாகும். மனதில் உதிக்கும் தீய எண்ணங்கள் மனதின் வலிமையைச் சுரண்டுகின்றன. ஆசைகளுக்கு நம்மை அடிமையாக்குகின்றன.

சுவாமிஜி அமெரிக்காவில் ஒரு கூட்டத்தில் ''வாழ்க்கையில் ஏற்படும் எந்தவிதமான பயங்கரத்தையும் துணிவுடன் எதிர்கொண்டால் அவைகள் நம்மை விட்டு விலகிவிடும்'' என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

துணிவுடனும் தைரியத்துடனும் எவன் சவால்களைச் சந்திக்கிறானோ- அவனே வீரன்!

வலிமையும்- ஒழுக்கக் கட்டுப்பாடும் ஆர்வமும் உடைய மனமானது நமக்கு நல்ல நண்பன். வலிமையற்றுக் கட்டுப்பாடின்றி வெறுப்புற்ற மனமே நமது பகைவன்.

சுவாமி விவேகானந்தர் நமக்கு நம்பிக்கை ஊட்டும் வார்த்தைகளாக ''நாம் எதை நினைக்கிறோமோ அதுவாகவே ஆகிறோம். வலிமை உடையவனாக நினைத்தால்- வலிமை கொண்டவன் ஆகிறோம். வலிமை இல்லாதவனாக நினைத்தால்- வலிமை இல்லாதவன் ஆகிறோம்'' என்கிறார்.

''தீய எண்ணங்கள் உள்ளத்தைக் கெடுப்பது போலவே உடலையும் கெடுக்கின்றன. வேண்டியதற்கு வடிகட்டி வேண்டாததற்கு வழிகாட்டும் எண்ணமே உன் அமைதிக்கு உரம்'' என்கிறார் வேதாத்திரி மகரிசி.[4]

''மனத்தை எந்த அளவில் உயர்த்திக் கொள்கிறோமோ- தூய்மை செய்து கொள்கிறோமோ- வலுப்படுத்திக் கொள்கிறோமோ- நெறிப்படுத்திக் கொள்கிறோமோ- அந்த அளவிலேதான் மனிதனுடைய வாழ்வு- மனிதனுடைய மதிப்பு- மனிதனுடைய வெற்றி- மனிதனுடைய எல்லா வளங்களும் அமையும்''[5] என்று மனவலிமைக்கு வழி காட்டுகிறார் வேதாத்திரி மகரிசி.

### 3. அறிவு வளர்ச்சி

உடல் மற்றும் மனதைக் காட்டிலும் அறிவு மேம்பட்டது.

எல்லோரிடமும் அறிவுத் திறமை இருக்கிறது. முறையான அறிவுப் பயிற்சி இல்லாததால்- பலரது அறிவு செயலற்று இருக்கிறது.

நாம் நமது அறிவுத் திறனை முழுமையாகப் பயன்படுத்து வதில்லை. கற்பனைத் திறன்- படைப்பாற்றல்- ஆழ்ந்த சிந்தனை இவைகள் மனிதர்களிடம் இப்போது அவ்வளவாக காணப்படுவதில்லை.

''தீய மனப்பான்மை கொண்ட மனதினை- வலிமையான அறிவுத் திறத்தால் கண்டுபிடித்து மாற்ற வேண்டும். பிறகு அறநெறியைக் கடைப்பிடித்து- உண்மையான வெற்றியை அடைய வேண்டும். அதனால் வலிமையான- பாகுபடுத்திச் சீர்தூக்கும் பொறுப்பை வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது'' என்கிறார் விவேகானந்தர்.

''அறியாமை - அலட்சியம் - உணர்ச்சிவயம் மூன்று வகையிலும் அறிவு வறுமை நிலவுகிறது. எல்லையற்றதை எல்லையுடையதாகப் பார்ப்பது அறிவின் குறைபாடு''[6] என்கிறார் வேதாத்திரி மகரிசி.

''புலன் மயக்கத்திலிருந்து - புறப்பொருள் பற்றிலிருந்து விடுபட்டு ஆன்மலயம் பெற்ற அறிவிலே முழுமைப்பெற்று- அதன் மூலம் பரம்பொருளோடு இணைய வேண்டும் என்பதுதான் ஆறாவது அறிவின் பெருநோக்கம்''[7] என்று அறிவின் வளர்ச்சிக்கு வழிகாட்டுகிறார் வேதாத்திரியார்.

### 4. ஆன்ம வளர்ச்சி

நமது அழியும் உடலுக்குள் அழியாத ஒன்று உள்ளது. அது என்றும் நிலைத்திருக்கும் தூய உணர்வு - நிலையான ஆனந்தம் - அமைதி - அளப்பரிய ஆற்றல் - அறிவு இவைகளின் இருப்பிடமாகும். அது பிறப்பு - இறப்பு-மூப்பு இவற்றைக் கடந்தது.

ஸ்ரீ கிருஷ்ணர் கீதையில் ''நுண்புலன்கள் - ஸ்தூல உடலை விட உயர்ந்தது, புலன்களை விட மனம் மேம்பட்டது, அறிவு மனதைவிட உயர்ந்தது. இந்த உடலில் உறையும் ஆன்மா அறிவை விட உயர்ந்தது''[8] என்கிறார்.

''உனக்குள் இருக்கும் ஆற்றல் புறத்தில் வெளிப்படும் வகையில் நீ வளர வேண்டும். வேறு எவரும் உனக்குக் கற்பிக்கவும் முடியாது. உன்னை ஆன்மிகவாதி ஆக்கிவிடவும் முடியாது. உன் சொந்த ஆன்மாவைத் தவிர வேறு ஆசிரியர் யாருமில்லை''[9] என்று ஆன்மாவையே ஆசிரியராக்குகிறார் விவேகானந்தர்.

''ஆன்மாவை அறிந்து கொண்டால்- அதன் உள்ளும் புறமும் இறைவனே செயல்பட்டுக் கொண்டிருக்கிறான் என்பதை உணர்ந்து கொள்ளலாம். அதற்கான பயிற்சிதான் குண்டலினி யோகம்''[10] என்று ஆன்ம வளர்ச்சிக்கு, குண்டலினியோக பயிற்சியே சிறந்தது என்கிறார் வேதாத்திரியார்.

உடல் - மனம் - அறிவு - ஆன்மா - இவைகளின் ஒட்டு மொத்தமான வளர்ச்சியே முழு ஆளுமை வளர்ச்சி ஆகும்.

மனிதர்கள் முழு ஆளுமைத்திறன் பெற்றால் சீரான சமுதாயம் அமையும்.

---

1. ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்-பிப்ரவரி 2002-பக்28 ஸ்ரீராமகிருஷ்ணமடம்- சென்னை -
2. வேதாத்திரி மகரிசியின் பொன்மொழிகள் 5000-பக்66-பானுகுமார்- விஜயா பதிப்பகம்-கோயம்புத்தூர்.
3. மேலது பக்.94.
4. மேலது பக்.87
5. மேலது பக்.138
6. மேலது பக்.24
7. மேலது பக்.28
8. பகவத்கீதை சுலோகம் 3-49.
9. விவேகானந்தரின் அறிவுரைகள் - பக். 19.- ஸ்ரீராமகிருஷ்ணமடம்- சென்னை
10. வேதாத்திரி மகரிசியின் பொன்மொழிகள் 5000-பக்77-பானுகுமார்- விஜயா பதிப்பகம்-கோயம்புத்தூர்.



# 24

# தடைகளைத் தாண்டிய தத்துவஞானிகள்

அமெரிக்க மண்ணில் பல நகரங்களிலும் விவேகானந்தர் சத்திய முழக்கம் செய்தவண்ணம் இருந்தார்.

அவர் எந்த மதத்தையும் இழிவு செய்யவில்லை. இருப்பினும் சில மதவெறியர்கள் சுவாமிஜியை பலவாறு தூற்றவும் செய்தார்கள்.

டெட்ராய்ட் நகரத்தில் சுவாமிஜி தங்கியிருந்த சமயம். அங்கு நடைபெற்ற ஒரு மத பிரசார இயக்கக்கூட்டத்தில் சுவாமிஜிக்கு எதிராக ஒரு சிலர் பேசினார்கள்.

விவேகானந்தர் அவர்கள் அனைவரும் அடங்கி ஒடுங்குவது போல சிம்மம் எனக் கர்ஜித்து வாதங்களை முன் வைத்தார். எவரும் எதிர்த்துப் பேச இயலவில்லை.

டெட்ராய்ட் நகரமெங்கும் சுவாமிஜியின் புகழ் பரவியது. அதைக்கண்டு சிலர் நெஞ்சில் வஞ்சம் கொண்டனர். இருப்பினும் சுவாமிஜியைப் பாராட்டுவது போல நடித்தார்கள்.

தமது அன்பைக் காட்டுவதற்கான அவர்கள் ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்தார்கள். சுவாமிஜியே அதற்கு முக்கிய விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார்.

எல்லோரும் அமர்ந்து கொண்டனர். உணவு வகைகள் பரிமாறப் பட்டன. சுவாமிஜி காப்பிக் கோப்பையைக் கையில் எடுத்தார். அதைப் பருக முயன்றபோது அவர் கண் முன்னே குருதேவர் ராமகிருஷ்ணர் தோன்றினார்.

''குழந்தாய்- அதைப் பருக வேண்டாம். அது விஷம் கலந்த பானம்'' என்று எச்சரித்தது அவரது பரிவுக்குரல்.

சுவாமிஜி காப்பிக் கோப்பையைக் கீழே வைத்தார். தம் முன்னால் நடித்தவர்களிடம் அவரும் நாடகமாடிவிட்டு எழுந்து சென்றார்.

குருதேவரின் அருள் சுவாமிஜியைக் காப்பாற்றியது.[1]

வேதாத்திரி மகரிசியின் புகழ் வேகமாகப் பரவிக் கொண்டிருந்தது. யோகத்தில் உண்மைநிலையை மக்களுக்கு சொல்லி வந்த வேதாத்திரியை போலி வேடதாரிகளுக்களுக்குப் பிடிக்கவில்லை. சாக்ரட்டீசை கொன்ற சமுதாயம் தானே?

பல ஆண்டுகளுக்கு முன்பு வேதாத்திரியார் யோகத்தில் ஈடுபட்டிருந்த காலத்தில் ஒரு மந்திரவாதி ஏவல் செய்கிறான்.

ஒரு நாள் இரவு பனிரெண்டு மணி. மந்திரவாதி ஒரு பாவையைச் செய்து வைத்துள்ளான். அதை எந்திரமாக பாவித்து மந்திரத்தைச் சொல்லிக் கொண்டே ஒவ்வொரு பகுதியாக ஊசியால் அப்பாவையைக் குத்த முற்படுகிறான்.

அவ்வாறு செய்யும் பொழுது அந்த மந்திரத்தின் தன்மையால் அது யாருக்கு அனுப்பப்படுகிறதோ அவர்களின் உடல் உறுப்புகள் பாதிக்கும்.

வான் காந்தக் களத்தை உணரும் நுண்ணிய ஆற்றல் பெற்ற மகரிசி அவர்கள், மாந்திரிகன் ஊசியை எடுத்து ''வேதாத்திரி'' என்று பாவையில் குத்தவும், உடனே திடுக்கிட்டு எழுகிறார்கள்.

தவத்தில் அமரும்பொழுது அந்நிகழ்ச்சியை அகக்காட்சியாக காண்கிறார்கள். உடனே தன் எண்ண ஆற்றலால் அதைத் தடுத்து நிறுத்துகிறார்கள். அதைச் செய்தவன் மனம் நிலை பிறழ்ந்து சிதைவடைகிறது.

சிறிது நேர தியானத்திற்குப் பிறகு மகரிசி, அச்சரங்களைக் கோர்த்து ஒரு கவியாக்குகிறார்கள். அவன் செயலை அழியச் செய்யும் மந்திரக்கவி மலர்கிறது.

**''ஓரெழுத்தால் உயிரொலியாம் ஓங்கார நிலையறிந்து**
**நேரழுத்தி நிலைநிற்கும் என்னை அன்பன்**
**மாற்றெழுத்தால் முள்ளெடுத்து பாவை பதித்து**
**பேரெழுத்துரைத்து பயன் என் கொல்.''**

இதை அழுத்தமாக உச்சரிக்க அவன் ஆற்றல் இழக்கிறான்.[2]

சுவாமி விவேகானந்தர் காசியில் ஒரு மந்திரவாதியின் ஏவலால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்.

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் கூட இவ்வாறு பாதிக்கப் பட்டதாக அன்னை சாரதா தேவி கூறுகிறார்கள்.

ஆதிசங்கரரும், அருணகிரிநாதரும், ஏன் வள்ளலாரும் கூட தடைகளை தாண்டித்தான் வந்தார்கள்.

ஞானிகளும் இதுபோன்ற பல தடைகளைத் தாண்டித்தான் மானுடத்திற்கு தொண்டு செய்துள்ளார்கள்.




**சிகாகோ சாலை**

1. சுவாமி விவேகானந்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்- பக்.105கங்கா ராமமூர்த்தி- கங்கை புத்தகநிலையம்-சென்னை.

2 வேதாத்திரி மகரிசியின் அமுத மொழிகள்-பக்.103 அன்புநெறி வெளியீடு-திண்டுக்கல்.



# 25

# வாழ்க்கை நெறிகளை வகுத்துக் கொடுத்த வள்ளல்கள்

**சு**வாமி விவேகானந்தரையும் வேதாத்திரியையும் நம் இளம் சமுதாயம் பின்பற்றுமானால் நம் சமுதாயத்தின் வளர்ச்சியையும் வாழ்வையும் தடுத்து நிறுத்த எந்த சக்தியாலும் முடியாது.

சுவாமி விவேகானந்தரும் வேதாத்திரி மகரிசியும் காட்டும் வாழ்வியல் நெறிகளில் அறநெறி, அன்புநெறி, ஒழுக்க நெறி, கல்வி நெறி, தொண்டு நெறி, மதவெறி கடந்த பொதுமை நெறி, குற்றமில்லா வாழ்வுநெறி, கருத்தியல்நெறி என்று பலவித நெறிகள் காணப்படுகின்றன.

**வாழ்க்கை**

வாழ்க்கை என்பது ''வாழ்வு'' என்பதன் அடிப்படையில் தோன்றிய சொல்லாகும்.

தமிழ் அகராதிகள் வாழ்வு என்பதற்கு ''வாழ்க்கை'', ''நல் வாழ்க்கை'', ''உயர்ந்த பதவி'' என்று பொருள் கூறுகின்றன.

''வாழ்க்கை'' என்ற சொல் தொல்காப்பியம் முதல் பல இலக்கியங்களில் பேசப்படுகின்றது.

''நல்வாழ்க்கை'', ''மனையுறை வாழ்க்கை'', ''பேரெழில் வாழ்க்கை'', ''வினை வாழ்க்கை'' என்று இலக்கியங்களில் வாழ்க்கை எனும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

## நெறி

*நெறி என்பது வழி அல்லது உணரும் உண்மைகள் என்று நமது இலக்கியங்கள் கூறுகின்றன.*

*தமிழ் இலக்கியங்களில் நெறி என்ற சொல் ''தெல்நெறி'', ''நூலர்நெறி'', ''அறநெறி'', ''ஓங்கிய நெறி'', ''மாநெறி'', ''புநெறி'' எனப் பலவகைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது..*[1]

## அன்புநெறி

*உயிர் அனைத்திற்கும் அடிப்படையாக அமைவது அன்பு. ''அன்பின் வழியது உயிர்நிலை'' என்கிறார் வள்ளுவர். ''அன்பே சிவம்'' என்கிறார் திருமூலர்..*

*''கர்மங்களைப் பார்க்கிலும், யோகத்தைப் பார்க்கிலும், அறிவைப் பார்க்கிலும் அன்பு பெரியது. அன்பு ஒருபோதும் நிந்திப்பதில்லை''*[2]

*''அன்புடையவனே வாழ்பவன். சுயநலமுடையவன் செத்துக் கொண்டிருக்கிறான்.'' என்கிறார் விவேகானந்தர்.*

*''அனைத்துயிரும் ஒன்றென்று அறிந்த அடிப்படையில்*
*ஆற்றும் கடமையே அன்பின் செயலாகும்''*[3] *என்பது வேதாத்திரியம்.*

## அறநெறி

*அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை என்றும், அன்பும் அறனும் இல்வாழ்க்கையின் பண்பும் பயனும் என்கிறார் வள்ளுவர்.*

*விவேகானந்தர்.*

***''பல்லுயிரும் இன்புற பரந்த நினைவில் வாழும்***
***நல்ல வாழ்வில்லறமாகும்''***

*ஒருவன் அறத்தின் வழியிலே பொருளை ஈட்டி அதனை பசியால் வாடும் மக்களுக்குக் கொடுத்து மகிழ்தலே உண்மையான நல்லறமாகும் என்பார் வேதாத்திரியார்.*[4]

## ஒழுக்கநெறி

*சமுதாயத்தில் ஒவ்வொரு மனிதனும் கடைப்பிடிக்க வேண்டிய நெறி ஒழுக்க நெறியே ஆகும.*

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும் என்று வள்ளுவர் கூறுகின்றார்.

''சுயநலமாக இருப்பது ஒழுங்கீனம். சுயநலமற்று இருப்பது ஒழுக்கம்'' என்று ஒழுக்கத்திற்கும் ஒழுங்கீனத்திற்கும் அழகாக விளக்கம் கொடுத்தார் விவேகானந்தர்.[5]

***''உயிர் அறிவில் தெளிவுபெற்று முழுமைஎய்த***
***ஒழுக்கமே பெருந்துணையாம்''***[6]

என்று உயிர்களிடத்து ஒழுக்கம் காட்டி நடக்க வேண்டும். ஒழுக்கம் அறத்தின் முதல் உறுப்பு என்று கூறுகிறார் வேதாத்திரி மகரிசி.

## தொண்டு நெறி

ஒன்றை எதிர்பார்த்து செய்வது உதவி. எதிர்பார்க்காமல் செய்வதே தொண்டு நெறி. தொண்டு என்பது தன்னலமற்ற சேவை. தொண்டு செய்யும் திறத்தாலே மனிதன் பேரின்பம் அடைகிறான்.

''நமது நாட்டின் தீரங்களில் முக்கியமானது தொண்டு. உன்னைப் பற்றி மட்டும் சிந்திக்காதே உன்னைச் சுற்றியுள்ள உலகைப் பற்றிச் சிந்தி. சக மனிதர்களைச் சிந்தி. சக மனிதர்களின் துயரங்களைத் துடைப்பதற்கு நீ புறப்படு''[7] என்கிறார் விவகானந்தர்.

***''மறைபொருளை எளிதாகப் பிர்க்குணர்த்தும் தொண்டிடல்***
***மண்ணுலகோர் விண்ணுலகை உணருகின்றார்.''***[8]

என்று தொண்டின் பயனை விவரிக்கிறார் வேதாத்திரியார்.

## கல்விநெறி

மனித வாழ்விற்கு இன்றியமையாதது கல்வி. தான் கற்ற கல்வி ஒருவருக்கு எளிமையும் ஏமாப்புடைத்து என்கிறார் வள்ளுவர்.

''நாம் அமைக்கும் கல்வி, நாடு முழுவதற்கும் பொதுவாக விளங்கும் கல்வியா, ஆன்மீகத்தைக் கொண்டதாகவும் உலக நடை முறைக்கு ஏற்றதாகவும் இருக்க வேண்டும். மேலும் பண்பாட்டிற்கு ஏற்றதாகவும், வாழ்க்கையில் கடைப்பிடிக்கக்கூடிய பண்பாட்டுக் கல்வியாகவும் இருப்பது அவசியம்''[9] என்பது விவேகானந்தரின் வாக்கு.

***''தனிமனிதன் கற்றுணர்ந்து வாழ்வில் வளம் காணத்***
***தக்க ஒரு சாதனமே கல்விஎனும் பேறு''***[10]

வளமான வாழ்வுக்கு அடிப்படையே கல்வி என்கிறார் வேதாத்திரியார்.

## மதவெறி கடந்த பொதுமை நெறி

அன்பைத்தான் போதிக்கின்றன அனைத்து மதங்களும். அப்புறம் எதற்கு மதவெறி?

''பாமரனை பண்புள்ளவனாகவும், பண்புள்ளவனைத் தெய்வமாகவும் உயர்த்தும் கருத்தே மதம்''[11] எனப்படும் என்று மதத்தின் பொருளை அன்றே உணர்த்தியவர் விவேகானந்தர். இன்றைய மத வெறியர்களுக்கு விவேகானந்தர் அறிவுரை ஒருநாள் புரியும்.

''மதம் அல்லது சமயம் மனிதனுக்கான வாழ்க்கைச் சிக்கல்களைத் தீர்த்து வைப்பதாக அமைய வேண்டும். மாறாக மதமே மனிதனுக்கு ஒரு பிரச்சினையாக ஆகிவிடக் கூடாது''[12] என்று விளக்குகிறார் வேதாத்திரியார்.

## இறைநெறி

உள்ளதை உணர்ந்தால்தான் நல்லது கெட்டது தெரியும். அப்போதுதான் நல்லதைச் செய்யலாம். அல்லாததை விட்டு விடலாம். அந்த உள்ளதை உணரும் உணர்வுதான் இறையுணர்வு என்பதாகும்.

''கடவுள் ஒவ்வொரு ஜீவனிலும் குடிகொண்டிருக்கிறார். இதைத் தவிர தனியாக வேறு ஒரு கடவுள் இல்லை-இந்த உண்மையை எவ்வளவோ தவங்களுக்குப் பிறகு நான் புரிந்து கொண்டிருக்கிறேன். மக்களுக்குச் சேவை செய்பவன் உண்மையில் கடவுளுகுச் சேவை செய்பவனாகிறான்.[13] என்கிறார் விவேகானந்தர்.

''எல்லாம் எல்லையற்ற இறைவனே என்பதுதான் இதுவரையிலும் கிடைத்த முடிபு. இதுதான் உண்மைத தனித்துவம்.''[14] என்றும் விவேகானந்தர் கூறுகிறார்.

''இறையுணர்வு என்பது அறிவின் முழுமைப் பேறாகும். இத்தகைய அறிவில் தான் மனத்தூய்மையும், வினைத்தூய்மையும் ஒன்றிணைந்து அறநெறி இயல்பாக மலரும்'' என்கிறார் வேதாத்திரியார்.[15]

தனி மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய நெறிகளையம் முறைகளையும் விவேகானந்தரும் வேதாத்திரி மகரிசியும் எளிமையாக எடுத்துக் கூறுகிறார்கள்.

அன்பின் சிறப்பு, அறத்தின் மேன்மை, முழுநிலைக்கல்வி, சிறந்த ஒழுக்கம், தொண்டுநெறி போன்ற அனைத்து வாழ்வியல் கூறுகளையும் பாமரரும் அறியும் வண்ணம் இவர்கள் சொல்லி யிருப்பது சிறந்த ஒன்றாகும்.

---

1. வேதாத்திரியச் சிந்தனைகள்-பாகம். 2 -பக்.401, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
2. விவேகானந்தரின் பொன்மொழிகள்-பக்.19-நாதன், அருண்நிலையம், சென்னை.
3. வேதாத்திரியச் சிந்தனைகள்-பாகம் 1 -பக்.478, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
4. வேதாத்திரியச் சிந்தனைகள்-பாகம் 1 -பக்.478, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
5. விவேகானந்தரைக் கற்போம்.பக்.207-ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை.
6. வேதாத்திரியச் சிந்தனைகள்-பாகம் 1 -பக்.479, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
7. விவேகானந்தரைக் கற்போம்.பக்.199-ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை.
8. வேதாத்திரியச் சிந்தனைகள்-பாகம் 1 -பக்.479, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
9. சுவாமி விவேகானந்தரின் வரலாறும் அறிவுரைகளும்-பக்.115-ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை.
10. வேதாத்திரியச் சிந்தனைகள்-பாகம் 1 -பக்.477, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
11. விவேகானந்தரின் அறிவுரைகள்-பக். 64-ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை.
12. வேதாத்திரியத்தில் சமூகவியல் இறையியல் சிந்தனைகள்-பக்.89- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
13. விவேகானந்தரின் அறிவுரைகள்-பக்.54-ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை.
14. ஞாதீ 6-163.
15. வேதாத்திரியத்தில் சமூகவியல் இறையியல் சிந்தனைகள்-பக்.276- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.



# 26

# நடமாடும் மனித தெய்வங்களை கண்ட நாயகர்கள்

**சு**வாமி விவேகானந்தர் அப்போது நீரிழிவு நோய் காரணமாக மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார். நோய்க்குச் சிகிச்சைப் பெறவும் இரண்டு மாதம் அப்போது காசியில் தங்கியிருந்தார்.

சேவாஸ்ரமத்தின் உறுப்பினர்கள் இரவும் பகலும் மழையிலும் வெயிலிலும் பசியிலும் களைப்பிலும் அயராமல் மக்களுக்குத் தொண்டு செய்து வந்தார்கள்.

நாள் முழுதும் மக்கள் தொண்டிலே அவர்கள் ஈடுபட்டிருந்தார்கள். எனவே தங்களின் உடல் நலனுக்குத் தேவையான ஓய்வு, உணவு, உறக்கம் ஆகியவற்றை அவர்களால் போதிய கவனம் செலுத்த முடியவில்லை என்பதை சுவாமிஜி கவனித்தார்.

சேவாஸ்ரமத்தின் கடமையான பணிகள் இளைஞர்களின் உடல் ஆரோக்கியத்தைப் பாதிப்பதையும் சுவாமிஜி புரிந்து கொண்டார்.

அந்த இளைஞர்களில் ஒல்லியாகவும் நோஞ்சானாகவும் இளைஞன் ஒருவன் இருந்தான்.

உடல் பலவீனம் கொண்ட அந்த இளைஞனிடம் சுவாமிஜி காட்டிய அன்பு மகத்தானது.

இளைஞனைப் பற்றிய முழுவிபரம் தெரிந்து கொண்டார்.

சேவாஸ்ரமத்தின் பணிகள் முடிந்து இரவு நீண்ட நேரம் கழித்து இளைஞன் இருப்பிடம் திரும்புவதை கவனித்தார்.

ஒரு நாள் அவர் அவனை அழைத்துக் கனிவுடன் கூறினார்.

''தம்பி நீ மிகவும் பலவீனமாக இருக்கிறாய். அதைத் தவிர நீ நிறைய வேலைகளும் செய்ய வேண்டியிருக்கிறது. எனவே நீ நன்றாகச் சாப்பிட வேண்டும். இனிமேல் நாள்தோறும் என்னுடன் வந்து சாப்பிடு. குறைந்தது பகலுணவு மட்டுமாவது நீ என்னுடன் சேர்ந்து சாப்பிட வேண்டும்''

இளைஞனும் தலையசைத்தான். ஆனால் சேவாஸ்ரமத்தின் கடுமையான பணிகள் பல சமயங்களில் இளைஞனைப் பகலுணவிற்குச் செல்லவிடவில்லை.

அது போன்ற நேரங்களில் சுவாமிஜி ஒரு தாய் தன் குழந்தைக்காக ஏங்குவது போல் அந்த இளைஞனுக்காக ஏங்கினார்.

இளைஞன் வரும் வரையில் சுவாமிஜி சாப்பிட மாட்டார். அவனது வருகைக்காக வழிமேல் விழி வைத்து நிமிடத்திற்கு நிமிடம் வாசலையே பார்த்துக் கொண்டிருப்பார்.

இளைஞன் களைத்துத் தாமதமாக வந்தவுடனே அவனை சுவாமிஜி தம்முடன் அழைத்துச் சென்று உணவருந்துவார்.

அன்றைய தினமும் இளைஞன் வழக்கம் போல் சரியான நேரத்திற்கு வரவில்லை. சுவாமிஜி அவனுக்காக ஏக்கத்துடன் காத்திருந்தார்.

அடிக்கடி வாசல் பக்கம் பார்த்தார். சில சமயம் வாசல் வரையில் சென்று பார்த்தார். இளைஞன் வந்தபாடில்லை.

மற்ற சகோதரச் சீடர்களும் டாக்டர்களும் நேரம் கடத்தாமல் சுவாமிஜியைச் சாப்பிடும்படி கூறினார்கள். காலதாமதமாகச் சாப்பிடுவது அவரது உடல் நலனுக்கு உகந்ததல்ல என்று பலமுறை கூறினார்கள்.

ஆனால், சுவாமிஜி ஆர்வத்தோடு இளைஞனை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதை யார்தான் தடுக்க முடியும்?

இளைஞனை அவர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் இந்த சமயத்தில், அந்த இளைஞன்தான் அவருக்குக் கடவுள்-லட்சியம்-வாழ்க்கை எல்லாமே!

சுவாமிஜி மட்டுமல்ல அங்கிருந்த மற்றவர்களும் அன்றைய தினம் சாப்பிடவில்லை.

திடீரென்று சுவாமிஜியின் முகம் பளிச்சிட்டது. ஆம் இளைஞன் சுவாமியை நோக்கி ஓடிவந்தான்.

''வா தம்பி முதலில் கையைக் கழுவிக் கொள். நீ நேரத்திற்கு வராவிட்டால் நானும் சாப்பிட மாட்டேன். நான் சரியான நேரத்திற்குச் சாப்பிடாவிட்டல் என் நோய் என்னை மிகவும் துன்புறுத்தும் என்று உனக்கே தெரியும். ஆகவே தயவு செய்து சரியான நேரத்திற்கு வந்துவிடு''

சுவாமிஜி இளைஞனை உணவகத்திற்கு அழைத்துச் சென்றார். அவரும் அவனருகில் அமர்ந்து கொண்டார். மற்றவர்களும் அமர்ந்து உணவருந்தினார்கள்.

சுவாமிஜி ஏதோ சிறிது அளவு சாப்பிட்டார். அவர் சாப்பிட்டது நன்றாக இருந்தது. ஆகவே அவர் தமது தட்டிலிருந்ததை அப்படியே எடுத்து இளைஞனுக்கு ஊட்டினார்.[1]

வேதாத்திரி மகரிசி ஒருநாள் அலுவலகம் செல்ல பேருந்துக்காக காத்திருந்தார். அந்த இடத்தில் செருப்பு தைக்கும் ஒரு ஏழைத் தொழிலாளி இருந்தான்.

அறுந்து போன தனது செருப்பை தைக்க அவனிடம் கொடுத்தார். அறுந்த செருப்பை அவன் தைத்துக் கொண்டிருந்தான்.

ஏழைத் தொழிலாளியின் வயிறு ஒட்டியிருந்தது. ''ஏனப்பா காலையில் நீ ஒன்றும் சாப்பிடவில்லையா?'' என வினவினார்.

''இல்லை'' என்று பதிலளித்தான். மேலும் ''நேற்றிரவுகூட சாப்பாடு கிடையாது சாமி'' என்றான். இந்தச் சொல் வேதாத்திரியைக் கிறுகிறுக்க வைத்துவிட்டது.

''ஏன் சாப்பிடவில்லை?'' எனக் கேட்டார்.

''நேற்று வருமானம் இல்லை சாமி'' என்றான்.

இந்த பரிதாப நிலை அவரது உள்ளத்தை உலுக்கியது. அவனுக்குக் கொடுக்க வேண்டியது அரையணா. ஆனால் வேதாத்திரியோ ஒரு அணா கொடுத்துவிட்டு அலுவலகம் சென்றார்.

''நேற்று இரவுகூட சாப்பாடு கிடையாது சாமி'' என்ற வார்த்தைகள் அவர் காதில் ஒலித்துக் கொண்டே இருந்தது.

பட்டினியின் கொடுமையைப் பார்க்க அவரது மனது பொறுக்க வில்லை. வாடிய உயிரைக் கண்டு தானும் வாடினார்.

வேதாத்திரியின் உயர்ந்த உள்ளம் சிந்தனையில் ஆழ்ந்தது. இதுபோல எத்தனை ஏழைகள் உணவு இன்றி பட்டினி கிடப்பார்களோ? இந்த நிலை எப்போது மாறும்?

இதே நினைவுடன் மாலை வீட்டிற்கு வந்தார். பட்டினியின் பரிதவிப்பே அவரை வாட்டியது. ஒரு முடிவும் எடுத்தார். இரவு உணவை அன்றிலிருந்து கைவிட்டார்.

இருபத்து மூன்று வயதில் இரவு உணவை விட்டவர் கடைசி வரை இதைக் கடைப்பிடித்தார்.[2]

நடமாடும் தெய்வங்களை தரிசித்தவர்கள் நமது மகான்கள். அந்த தெய்வத்தின் பசியைத் தம் பசியாக உணர்ந்தவர்கள்.

இவ்வுலகில் பல்வேறு சிக்கல்களுக்கும் முரண்பாடுகளுக்கும் அடிப்படை காரணம் மனிதநேயமின்மையே.

சாதி வேறுபாடுகள்- பொருளாதார ஏற்ற தாழ்வுகள் முதலிய சகல மனித நேயமும் இன்றியமையாததாக வேண்டப்படுகிறது.

விவேகானந்தர் - வேதாத்திரி இருவர்களது இதயமும் கடலின் ஆழத்தைப் போன்றது. துடிப்புகளையும்- உணர்ச்சிகளையும் கொண்டது.

அஞ்ஞானத்தால் விஞ்ஞானத்தை வென்ற மரணமிலாப் பெருவாழ்வில் இன்றும் நிலைத்து மக்கள் மனத்தில் வேரூன்றி நிற்கிறார்கள்.

பூதஉடம்புகள் போயினும் புகழுடம்புடன் நிற்பதால் மரணமிலா வாழ்வு எய்திய மகான்கள்.

---

1. ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்-பிப்ரவரி 1994-பக். 7- ஸ்ரீராமகிருஷ்ணமடம் சென்னை.

2. வேதாத்திரி மகரிசியின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்-பக்.76 - பானுகுமார்- விஜயா பதிப்பகம்- கோயம்புத்தூர்.



# 27

# ஆசான்களிடம் மகான்களிடம் காணும் ஆன்மீக மரபுகளின் சுவடுகள்

ஆன்மீக நெறிகளை பவனிக்கு அளித்த அருளாளர் பல அவதரித்த புண்ணிய பூமி என்ற பெருமை பாரதநாட்டுக்கு உண்டு.

இமயம் முதல் குமரி வரை பரந்துவிரிந்து கிடக்கின்ற இந்த பூமியில் இன்று மனித குலம் மனித நேயத்தோடு நகர்ந்து கொண்டிருக்கிறது என்றால் அது மனித குலத்தின் மகத்தான சக்தியாகும்.

இந்த வகையில் வங்காளத்தில் தோன்றிய ஞானதீபம் சுவாமி விவேகானந்தரும் தமிழகத்தில் தோன்றிய ஞானஒளி வேதாத்திரி மகரிசியும் அறநெறியை வளர்த்துக் கொண்டிருப்பவர்கள் என்றால் அது மிகையாகாது.

## ஆன்மீகம்

ஆன்மீகம் என்பது ஆத்மாவைப் பற்றிய சிந்தனை. ஆத்மம் என்பதே கடவுள்.

நமக்குள் இருக்கும் ஆத்மசக்தியே கடவுள். அந்த சக்தியை நேரில் நாம் தரிசிக்கலாம்.

இவ்வுலகில் நாம் பிறப்பெடுத்தது- உடல் வளர்த்தது எல்லாம் ஆத்ம தரிசனத்துக்காகத்தான்.

ஆன்மீகம்தான் மனிதனின் மிக உயர்ந்த இலட்சியம். மிக உயர்ந்த பெருமை என்கிறார் சுவாமி விவேகானந்தர்.[1]

மேலும் ''என் பணித்திட்டம்என்ன? முதலில் ஏடுகளிலும், மடங்களிலும் சிலருடைய கைவசம் முடங்கி மறைந்திருக்கின்ற புத்தகங்களில் மறைந்திருக்கிற ஆன்மீக ரத்தினங்களை வெளிக் கொண்டு வரவேண்டும் அவற்றிலிருந்து ஞானத்தை வெளிக்கொண்டு வந்து மக்களிடையே பிரச்சாரம் செய்ய வேண்டும்?'' என்று ஆணித்தரமாக சூளுரைத்தவர் விவேகானந்தர்.

இதனை நடைமுறைப்படுத்தியவர் பாமரமக்களின் ஆன்மீக வள்ளல் வேதாத்திரி மகரிசி.

## ஆன்மீகவாதி–நாத்திகவாதி

இந்த உலகில் வாழும் மனிதர்களை இரண்டு பிரிவினராகப் பிரிக்கலாம்.

1. ஆன்மீகவாதி
2. நாத்திகவாதி

இந்த உலகை இறைவன் படைத்தான். நாம் செய்கிற அத்தனை செயல்களுக்கும் பலன் உண்டு என்கிற அச்சம் கொண்டு வாழ்பவர்கள் ஆன்மீகவாதிகள்.

எதையும் நம்மால் செய்ய முடியும். இந்த உலகம் இயற்கையில் தாமே தோன்றியது என்கிற சிந்தனை உடையவர்கள் நாத்திகவாதிகள்.

ஒரு மனிதன் இந்த இரண்டில் ஒன்றைக் கடைப்பிடிக்க வேண்டும்.

இரண்டுமே இல்லாமல் ஏதோ சில சூழல்களில் இறைவனை வழிபடுவதும் தான் தோன்றித்தனமான அக்கிரமங்களைச் செய்வதும் மீண்டும் கடவுளைத் தேடுவதும் பிறகு இறைவனை மறந்து போவதுமான இரண்டுங்கெட்டான் மனநிலையில் வாழ்கிற மக்களின் நிலை மிகவும் கவலைக்குரியதாக மாறிவிடும் நிலை உருவாகும்.

நமது முதுகெழும்பு ஆன்மீகமே. இதை நாம் மறக்கக் கூடாது.[2] என்று விவேகானந்தர் கூறுகிறார்.

ஆன்மீக உணர்வை இயல்பாக சொந்த முயற்சியாலும் சாதனையாலும் பெற வேண்டும். இதைத்தான் விவேகானந்தரும் வலியுறுத்துகிறார்.

எனது அறிவுரைகளால் மட்டும் நீங்கள் ஆன்மீக உண்மைகளை அறிந்து கொண்டுவிட முடியாது. அப்படி நீங்கள் ஏதாவது அறிந்து கொண்டிருந்தால்- நான் அதை வெளிப்படுத்த உதவிய ஒரு சிறு

கருவி- அவ்வளவே. மகான்களும் ஆசாரியர்களும் இதைத்தான் செய்ய முடியும். ஆன்மீக உதவிக்காகப் பிறரைத் தேடி ஓடுவது முட்டாள்தனம்.[3] என்றும் விளக்குகிறார்.

தான் ஆன்மீக ஞானம் பெற்றதை தெளிவாக வேதாத்திரி விளக்குகின்றார்.

**''உன்னிலே நானடங்க என்னுளேநீ விளங்க**
**உனது அருள் ஒளிர எனதுள்ளம் தூய்மை பெற்றேன்**
**இன்னும் வேறென்ன வேண்டும் இப்பேறு பெற்ற பின்னர்**
**எடுத்த மந்தப் பிறப்பெய்தியதே முழுமை''**

நான் யார்? என்ற கேள்வியை எழுப்பி, தன்னை அறியும் முயற்சி தான் மனிதனை மகிழ்வாக வாழச் செய்ய இன்றியமையாததாகும். இதுவே 'தன்னை அறிதல்', 'தன்னுணர் நிலை', 'நான் யார்' என்பது.

நான் என்பது ரூபமா? அரூபமா? பொருளா? சக்தியா? உடலா? மனமா? அறிவா? நான் எங்கே இருந்தேன்? எப்படி இருந்தேன்? ஏன் வந்தேன்? எங்கே வந்தேன்? ஏன் இருக்கிறேன்? எங்குச் செல்வேன்? எப்படி முடிவேன்? என்று மூலமும், முடிவும் எதுவென அறிய ஆறாவது அறிவின் பண்பட்ட நிலையே தன்னுணர் நிலை.

இதனை உணர்ந்து கொள்ளும் போது இறைநிலையே நானாக என்னுளே அறிவாக விளங்குவது தெளிவாகும். மனஅலைகளின் சுழல் விரைவு குறைய குறைய மனத்தின் நிலைபொருளான அறிவாகி மனமே தரத்தில் உயருகிறது. பிறகு மனம் அசைவற்று அறிவே அகக்காட்சியாகும்.

இங்குதான் ''அவனே நான், நானே அவன்'' என்ற அறிவின் முழுமைப்பேறு கிட்டுகிறது, என்று ஆன்மீக உணர்வு பெறும் வழியைக் காட்டினார் அருள் தந்தை.

ஆன்மீகத்திற்கு அஸ்திவாரமாக அமைந்திருப்பதை விவேகானந்தர் சுட்டிக்காட்டுகிறார்.

1. மனக்கட்டுப்பாடு.
2. உலகில் வெற்று வாழ்வு வாழும் ஆசையையும் அதைத் தூண்டுவதையும் விலக்குவது.
3. புனித வாழ்க்கை நடத்துவர்களுடன் சேர்ந்து வாழ்வது.
4. அனைவரிடமும் அன்புடன் நடந்து கொள்வது.

மேற்படி நான்கு விஷயங்களை நீக்கிவிட்டு அவற்றுக்கு மாறாக எதையும் ஏற்க முடியாது என்றும் அடித்துக் கூறுகிறார்.[4]

விவேகானந்தரது இந்த நான்கையும் அமைத்து வடிவமைக்கப் பட்டதுதான் வேதாத்திரியின் மனவளக்கலை.

விவேகானந்தர் யோகாசனங்கள் கூறும் வழிமுறைகளைப் பற்றிப் பிறர் அளித்ததைக் காட்டிலும் ஈடு இணையற்ற ஒரு விளக்கம் அளித்துள்ளார் எனலாம்.

சுவாமிஜிக்கு முன்பு தோன்றிய ஆச்சாரியர்கள் யோகப் பயிற்சி சிறந்தது என்றனர். ஸ்ரீசங்கர பகவத்பாதர்கூட'' ''கர்மயோகத்தின் மூலம் மனத்தூய்மையையும் பக்தியோகத்தின் மூலம் தனது இஷ்ட தெய்வத்திடம் அன்பையும், ஞானயோகத்தின் மூலம் ஆன்மாவை உணரவும் முடியும்'' என்றார்.

சுவாமிஜியே அனைத்து யோகப் பாதைகளும் சமமான அளவில் தனித்து நிற்கும் வல்லமை பெற்றவைதான் என உபதேசித்தார்.

அதோடு எந்த ஒரு பாதையைத் தேர்ந்தெடுத்தாலும் ஆன்மீகத்தைப் பயில்பவர்கள் மேலான இலக்கை அடைய அது உதவும் என்பதையும் சுவாமிஜி கூறியுள்ளார்கள்.

விவேகானந்தர் மேலும் கூறுவார்.

மனிதர்கள் அனைவரின் மனதிலும் தத்துவ சாஸ்திரம், கடவுளுடன் தொடர்பு கொள்ளும் விருப்பம், உணர்ச்சி மற்றும் வேலைத் திறன் ஆகியவை நான்கும் சம அளவில்தான் உள்ளனவா? என்பதை பொறுத்தவரை இந்தத் தகுதிகள் அனைத்தும் சம அளவில் உள்ளவனே முழுமையான மனிதன். இந்த நான்கில் ஏதேனும் இரண்டு மட்டும் கலந்த குணநலன்களை உடையவர்கள்கூட ஒரு தலைப்பட்சமானவர்களே.[5]

இந்த நான்கையும் இணைத்து பாடத்திட்டமாக மனவளக்கலையை அறிமுகப்படுத்தியது வேதாத்திரியம்.

விவேகானந்தர் இந்திய ஆன்மீக ஞானத்தை மேலை நாடுகளுக்கு அளிக்க இருமுறை பயணம் செய்தார். முதலில் 1893 இறுதி முதல் 1896 டிசம்பர் வரை மூன்றரை வருடங்கள். அடுத்து 1899 ஜூன் முதல் 1900 நவம்பர் வரை சுமார் ஒன்றரை வருடங்கள். ஆக ஐந்து வருடங்கள் மேலை நாடுகளில் கழித்தார்.

*இந்த கால கட்டங்களில் அவர் பயணம் செய்த மொத்த தூரம் சுமார் 1,07,396 கி.மீ. ஆற்றிய சொற்பொழிவுகள் 317, வகுப்பு சொற்பொழிவுகள் 431, கலந்து கொண்ட கருத்தரங்கங்கள் 26. (இந்தியாவில் அவர் ஆற்றிய சொற்பொழிவுகள் 30-க்கு மேல்).*

*விவேகானந்தர் சொற்பொழிவுகளின் போது சாஸ்திரங்களில் உள்ளதை ஒப்பிக்காமல், தாம் ஆன்மீக அனுபூதியால் உணர்ந்ததையே எளிதில் புரிந்து கொள்ளுமாறு போதித்தார். கேட்பவர்களுக்குத் தன் ஆன்மீக ஆற்றலை வள்ளல் போல் வாரி வழங்கினார்.*

*இந்த ஆன்மீக ஆற்றலைப் பற்றி சுவாமி கூறுகிறார். ''சிகாகோவில் எனது முதல் சொற்பொழிவில் நான் ''அமெரிக்கச் சகோதரிகளே, சகோதரர்களே?'' என்று அழைத்ததும் எல்லோரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்ததும் உங்களுக்குத் தெரியும்.*

*''ஆனால் அவ்வாறு அவர்கள் பரவசப்பட்டதற்கு காரணம் தெரியுமா?*

*''ஏதோ அதிசய ஆற்றல் என்னிடம் இருப்பதாக நீங்கள் நினைக்கலாம். உண்மைதான். என்னிடம் அத்தயை ஆற்றல் உள்ளது. அது இதுதான். நான் என் வாழ்வில் ஒரு முறைகூட காம எண்ணம் என்னுள் புக அனுமதித்ததில்லை. என் மனம், என் சிந்தனை பொதுவாக மனிதன் அந்த வழியில் செலவழிக்கிற என் ஆற்றல்கள் யாவும் ஓர் உயர்ந்த நிலைக்குப் போகுமாறு பயிற்சி அளித்தேன். அது யாராலும் தடுக்க முடியாத ஒரு மாபெரும் ஆற்றலாக உருவெடுத்தது.''[6]*

*''சுவாமிஜி முதலில் பார்வையாளர்களின் உணர்வு நிலையைத் தமது ஆன்மீக ஆற்றலால் உயர்த்தி விடுவார். அதன் பிறகே பேச ஆரம்பிப்பார். இதனால் அவரது கருத்துக்கள் கேட்பவர்களுக்கு எளிதில் புரிந்தது'' என்று சுவாமியின் சீடர் கிறிஸ்டைன் கூறுகிறார்.[7]*

*சொற்பொழிவுகள் ஏராளமாகச் செய்த சுவாமிஜி அதற்கான அறிவு எங்கிருந்து பெற்றார்?*

*அதுபற்றி அவரே ஒரு முறை கூறினார்.*

*''நான் ஸ்ரீசங்கரரைத் தியானித்தால் சங்கரர் ஆகிறேன். புத்தரைத் தியானித்தால் புத்தர் ஆகிறேன். குறிப்பிட்ட ஒரு விஷயத்தைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்து, மனதை ஒரு முகப்படுத்தும்போது அந்த விஷயம் பற்றிய அனைத்துக் கருத்துகளும் என் மனதிற்கு வந்து*

சேர்கின்றன. இதுவரை எனக்குத் தோன்றிராத கருத்துக்களும் சிந்தனைகளும் எழும். நான் அவற்றைக் கண்கூடாகக் காண்பேன். எனக்கு இப்படி வருவனவற்றை என்னை மறந்து பேசிக் கொண்டே போவேன்.[8]

சொற்பொழிவுகளின் போது இப்படிப் பரிமளித்த சுவாமிஜி, தனிநபர்களை ஆன்மீகப் பாதையில் வழிநடத்தும்போது எப்படி விளங்கினார்?

''தனிநபர்களை வழிநடத்தும்போது அந்த நபர் ஆன்மீக வாழ்க்கையைப் பிற்பற்றத் தயாராக இருக்கிறாரா என்பதை உணரும் வரை சுவாமிஜி அவருடைய வாழ்க்கையிலும் புகுவதில்லை.''[9]

''பக்குவப்பட்டவர்களது வாழ்க்கை செம்மையாவதற்கு என்னென்ன தேவையே அவற்றைத் தயக்கமின்றிச் செய்தார். சிலருக்கு மந்திர தீட்சையும் சிலருக்கு வேறு தீட்சைகளையும் அளித்தார். சிலரிடம் தமது பார்வையினாலேயே ஆன்மீக ஆற்றலை எழுப்பினார்'' என்கிறார் சகோதரி கிறிஸ்டைன்.[10]

சுவாமிஜியின் இந்த ஆற்றலைப் பற்றி ஒரு முறை ஒரு பெண்மணி சுவாமிஜியிடம், ''சுவாமிஜி, உங்கள் சொற்பொழிவுகளின் போது எங்களையெல்லாம் (கேட்பவர்களை) கிப்னாடைஸ் செய்கிறீர்களா?'' எனக் கேட்டார்.

உடனே சுவாமிஜி, ''இல்லை மேடம், நான் உங்களையெல்லாம் 'டிகிப்னாடைஸ்' செய்கிறேன்''- அதாவது நீங்கள் ஏற்கனவே ஆழ்ந்துள்ள மனமயக்கத்திலிருந்து உங்களை விடுவிக்கிறேன்'' என்றார்.

அப்படி என்ன மனமயக்கத்தை அவர்களிடமிருந்து சுவாமிஜி நீக்கினார்? சுவாமிஜி இதைப்பற்றி மற்றோரிடத்தில் குறிப்பிடுகிறார்.

''நான் ஜான், நான் மேரி என்றெல்லாம் சொல்லாதே, இந்த உறவுகள் யாவும் மனமயக்கமே. இவைகள் நம்மைப் பந்தத்தில் ஆழ்த்துகின்றன. நான் இன்னார் என்று நினைத்தவுடனேயே எனக்கென்று தனியாகச் சில விஷயங்கள் தேவைப்படுகின்றன. உடனே ''நான்'', ''எனது'' என்று கூற ஆரம்பிக்கிறோம். இவ்வாறு புதிய புதிய வேறுபாடுகள் உருவாகும்போது மைய ஒருமையிலிருந்து, பகுபடாத பரம்பொருளிலிருந்து மேன் மேலும் விலகுகிறோம்.''[11]

வேதாத்திரி மகரிசியும் ஞானத்துடன் கூடிய ஆன்மீகத்தை மக்களிடம் கொண்டு செல்ல நடந்தார்... சைக்கிளில் சென்றார்.... பேருந்தில் பயணித்தார்....ஏன்? விமானத்திலும் பறந்தார்.

25 ஆண்டுகளில் 20 லட்சம் பேருக்குமேல் மனவளக்கலை பயிற்சி அளித்து...தனக்குப் பிறகும் இப்பணி தொடர வழிவகுத்துச் சென்றார்கள்.

பகைமை உணர்வுகளும் போட்டியும் பொறாமையும் நெஞ்சில் வளர்ந்து வஞ்சம் கொண்டு மனிதர்கள் சக மனிதர்களையே அழிக்கிற நிகழ்வுகள் அதிகமாகிப் போன இந்த காலகட்டத்தில், ஆன்மீக வழிகள் மட்டுமே மக்களைத் திருந்தச் செய்ய இயலும்.

செய்யும் தவறுகளுக்குச் சட்டங்கள் தண்டனை வழங்கினாலும் மனிதர்கள் திருந்துவது அரிதாகி உள்ளது.

காரணம் எப்படியாவது தப்பித்துக் கொள்ள வேண்டும். என்கிற மனநிலையில் வாழ்பவர்கள் ஏராளம்.

ஆனால் இறை அச்சம் கொள்பவர்கள் மனசாட்சிக்கு அஞ்சுவதும், தான் செய்யும் தவறுகளுக்குத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று நினைப்பதும் எந்தச் சூழ்நிலையிலும் கொடூரமான செயல்களைச் செய்ய அஞ்சுவார்கள்.

அப்படிப்பட்ட அழகிய நெஞ்சம் மனிதர்களிடம் உருவாக வேண்டுமானால் அதற்கு அடிப்படை நல்நெஞ்சமே. அப்படிப் பட்ட நெஞ்சமே நல்நெஞ்சம் எனப்படும்.

அந்த நெஞ்சின் செயல்பாடுகள் எப்படியிருக்க வேண்டும் என்பதை விவேகானந்தரும் வேதாத்திரியும் குறிப்பிட்டுள்ளார்கள்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக மனித உருக் கொண்டு தெய்வீக உள்ளம் கொண்டு வாழ்ந்தவர் இயேசு. ஆன்மீகப் புரட்சி செய்தவர் என்று கூறும் அளவிற்கு இந்த உலக மக்கள் எப்படி வாழவேண்டும் என்று வாழ்ந்து காட்டியவர்.

பழிக்குப்பழி என்பதை ஒழித்து தீமை செய்தவர்களையும் மன்னித்து வாழும் அன்பு வாழ்விற்கு வழி வகுத்தவர்.

''உங்கள் பகைவரிடமும் அன்பு கூறுங்கள். உங்களை வெறுப்போருக்கு நன்மை செய்யுங்கள். உங்களை சபிப்போருக்கும் ஆசி கூறுங்கள். உங்களை இகழ்ந்து பேசுவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள் என்று போதனை செய்தார்.

பகைவரையும் வாழ்த்த சொன்னவர்கள் தான் விவேகானந்தரும் வேதாத்திரியும். அருளற வழியும் பகைவரையும் நேசிக்கும் பண்புமே வாழ்வின் வளமைக்கும் நிம்மதியான ஒற்றுமைக்கும் வழிவகுக்கும் என்பதை இருவரும் எடுத்துரைக்கிறார்கள்.

ஒவ்வொரு மனிதனுக்கும் இறைபக்தி என்பது மிகவும் அவசியம் என்பதையும் - அவரவர் உணர்ந்த உயர்வின்படி தெய்வத்தை வெவ்வேறு பெயரிட்டு வணங்கினாலும் இந்த உலகைப் படைத்தவர் ஓர் இறைவனே என்பதை மக்கள் உணர்ந்தால் ஒற்றுமையும் சமாதானமும் நிலவும் என்று வலியுறுத்துகிறார்கள்.

அந்த நிலை ஏற்பட, நம் பகைவர்களிடமும் இரக்கம் காட்டும் நல்ல உள்ளம் கொண்டு செயல்பட்டால், மக்கள் மக்களாக வாழ முடியும் என்கிற ஆன்மீக அறத்தை வலியுறுத்துகிறார்கள் வேதாத்திரியும் விவேகானந்தரும்.

---

1. பாரதியின் பாடல்களில் ஆன்மீகம் பக்.976 - முனைவர் க. மங்கையர்க்கரசி.
2. விவேகானந்தரின ஞானதீபம் - பாகம் 6 - பக். 34 ஸ்ரீராமகிருஷ்ணமடம் - சென்னை.
3. விவேகானந்தரின ஞானதீபம் - பாகம் 5 - பக்.226 ஸ்ரீராமகிருஷ்ணமடம் - சென்னை.
4. விவேகானந்தரைக் கற்போம் - பக்.117- ஸ்ரீராமகிருஷ்ணமடம் - சென்னை.
5. மேலது பக்.118
6. சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம் - பாகம்10 - பக்.75- ஸ்ரீராமகிருஷ்ணமடம் - சென்னை.
7. ராமகிருஷ்ண விஜயம்-ஏப்ரல் 2007-பக்.16.
8. மேலது பக்.17
9. மேலது பக்.17
10. மேலது பக்.17
11. சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம் - பாகம்- 3 -பக்.441- ஸ்ரீராமகிருஷ்ணமடம்-சென்னை



# 28

# தீர்க்கதரிசிகளின் தொலைதூர உணர்வுகள்

*1898 ஆம் ஆண்டு சுவாமி விவேகானந்தர் டார்ஜிலிங் சென்றிருந்தார். அங்கு ஒரு நாள் அவர் தமது சீடர்களுடன் மலைப்பகுதியில் உலாவிக் கொண்டிருந்தார்.*

*அந்நாட்களில் சுவாமிஜியின் மனம் மிகவும் உயர்ந்த ஆன்மீக அனுபவங்களில் சஞ்ஜரித்துக் கொண்டிருந்தது.*

*''என் இதயம் பரந்து விரிந்து கொண்டே போகிறது. அந்தத் தாக்கத்தை என் உடல் தாங்காது என்று நினைக்கிறேன்'' என்று சுவாமிஜியே கூறிய காலம் அது.*

*நடந்து கொண்டிருந்த சுவாமிஜி, தொலைதூரத்தில் கண் காணாத இடத்தில் அப்போது நிகழ்ந்த ஒரு காட்சியைத் தமது மனக்கண்ணில் கண்டார்.*

*எங்கோ ஏதோ ஓர் இடத்தில், ஒரு பெண் தனது முதுகில் பெரிய பாரத்தை சுமந்து சென்று கொண்டிருந்தாள். அப்போது அவள் கால் இடறிக் கீழே விழுந்தாள். அதனால் அவளுக்குக் காயம் ஏற்பட்டது.*

*இந்தக் காட்சி சுவாமிஜியின் மனக்கண்ணுக்கு மட்டும் புலனாயிற்று. அவரோடு வந்து கொண்டிருந்த மற்றவர்களுக்கு இதைப் பற்றி ஒன்றும் தெரியாது.*

அதுவரையில் நன்றாக நடந்துவந்த சுவாமிஜி, சட்டென்று தூரத்தில் எதையோ பார்த்தபடி நின்றார். மேற்கொண்டு அவரால் நடக்க முடியவில்லை.

திடீரென்று சுவாமிஜியின் முகம் வெளிறியது. வலியால் அவர், ''ஐயோ, என்னால் நடக்க முடியவில்லையே! மிகவும் வலிக்கிறதே!''என்று அலறினார்.

உடன் வந்தவர்களில் ஒருவர், ''சுவாமிஜி! எங்கே வலிக்கிறது''? என்று பரபரப்போடு கேட்டார்.

சுவாமிஜி வலித்த இடத்தைச் சுட்டிக் காட்டி, ''இதோ இங்கேதான். மூட்டை சுமந்து வந்த அந்தப் பெண் சறுக்கி விழுந்ததை நீ பார்க்கவில்லையா?'' என்று வினவினார்.

அவர் கூறியதை அவரோடு இருந்தவர்களால் அப்போது புரிந்து கொள்ள முடியவில்லை.

காலம் அவர்களுக்குப் பிற்காலத்தில் கூறும் உண்மை இதுதான்....

கண்ணால் காணும் அவலங்களுக்காக மட்டுமல்லாமல், எங்கோ தூரத்தில் யாரோபடும் துன்பத்தையும் உணரும் வகையில் சுவாமிஜியின் ஆன்மா விரிந்திருந்தது.

அவரது மனம் மகமதி என்று சொல்வப்படும் பிரபஞ்ச மனதோடு இணைந்திருந்தது.[1]

இதே நிலைமையை வேதாத்திரி மகரிசி வாழ்விலும் நாம் காணலாம்.

வேதாத்திரி மகரிசி மௌன நோன்பு ஆற்றிக் கொண்டிருந்த காலம். அன்பர் ஒருவர் அருள்தந்தை அவர்களைச் சந்திக்க வருகிறார்.

தான் திருப்பதி சென்று வருவதாகக் கூறுகிறார். மகரிசி அவர்களும் அவருக்கு விடை கொடுத்து அனுப்புகிறார்கள்.

அந்நிகழ்ச்சிக்குப் பின் இரண்டு நாட்கள் கழித்து அருள்தந்தை அவர்கள் மௌனத்தில் இருக்கும் போது ஒரு அகக்காட்சி தோன்றுகிறது. அதில் அந்த அன்பருடைய கார் விபத்துக்குள்ளானதைக் காண்கிறார்.

அந்நிகழ்ச்சியை அகக்காட்சியாகக் கண்டவுடன் அந்த அன்பருக்கு தவநிலையிலேயே அருட்காப்பு இடுகிறார்.

அத்துடன் அந்த நிகழ்ச்சி தோன்றிய நேரத்தையும், நாளையும் குறித்துக் கொள்கிறார்.

சில நாட்கள் கழித்து அந்த அன்பர் திரும்பி வருகிறார்.

அவரிடம் அருள்தந்தை அவர்கள் தான் எழுதி வைத்திருந்த குறிப்பைக்காட்டி தன் அகக்காட்சியைக் கூறி அவருக்கு எதுவும் விபத்து நடந்ததா என்று வினவுகிறார்.

அதற்கு அந்த அன்பர், திருப்பதி மலையில் கார் சென்று கொண்டிருந்தபொழுது ஒரு திருப்பத்தில் எதிரே வந்து கொண்டிருந்த காரைத் தவிர்க்கும் முயற்சியில் கார் பயங்கரமாக மலையில் மோதிவிட்டது.

காருக்கு மிகப் பெரிய சேதம் ஏற்பட்டும் அதிர்ஷ்டவசமாக எங்களுக்கு எந்த துன்பமும் ஏற்படவில்லை.

தாங்கள் குறித்து வைத்திருந்த அதே காலத்தில் விபத்து நடந்துள்ளது.

தங்கள் ஆசியால் காப்பாற்றப்பட்டோம் என்கிறார்.

மகரிசி எப்படி அறிந்து கொண்டார்கள் என்பதை எண்ணி அளவு கடந்த ஆச்சரியம் அடைகிறார்.[2]

இது தொலை தூர உணர்தல் என்பதாகும். எங்கோ நடக்கின்ற ஒரு நிகழ்ச்சியை தூரத்தில் இருக்கின்ற ஒருவரின் மனம் அகக்காட்சியாக உணர்ந்து கொள்வது.

அது போன்ற நிகழ்ச்சிகளை பல மகான்கள் தாங்கள் இருக்கினற இடத்தில் இருந்து கொண்டே உலகில் நடப்பவற்றை அறிந்திருக்கிறார்கள்.

அது மட்டுமல்லாது அவர்களுடைய துன்பங்களைப் போக்கவும் செய்திருக்கிறார்கள்.

---

1. ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்-மார்ச் 1995 பக்.20ஸ்ரீராமகிருஷ்ணமடம் சென்னை.
2. ஸ்ரீவேதாத்திரி மகரிசியின் அமுத மொழிகள்.பக்148-அன்புநெறி வெளியீடு-திண்டுக்கல்.



# 29

## மன ஒருமைப்பாடு

**நி**னைத்த இலட்சியத்தை அடைய என்ன வேண்டும் ..?

சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் ஓர் ஊரில் தங்கி யிருந்தார். அங்கு ஒரு நீரோடையும் பாலமும் இருந்தன.

ஒரு நாள் சுவாமி விவேகானந்தர், நீரோடைக் கரையில் நடந்து சென்றுகொண்டிருந்தார். அங்கு இளைஞர்கள் சிலர், முட்டையோடுகளைத் துப்பாக்கியால் குறிவைத்து சுடுவதற்குப் பயிற்சி செய்துகொண்டிருந்தார்கள்.

அவர்கள், முட்டையோடுகளை ஒரு நூலில் கட்டி, நீரோடையில் மிதக்க விட்டிருந்தார்கள். அந்த நூல், நீரோடைக் கரையிலிருந்த சிறிய ஒரு கல்லில் கட்டப்பட்டிருந்தது.

நீரோடை நீரின் அசைவுக்கு ஏற்ப, நூலில் கட்டப்பட்டிருந்த முட்டையோடுகள் இலேசாக அசைந்துகொண்டிருந்தன.

இளைஞர்கள் பாலத்தில் நின்று, ஓடை நீரில் அசைந்து கொண்டிருக்கும் முட்டையோடுகளைச் சுடுவதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் துப்பாக்கியால் முட்டையோடுகளைச் சுட்டார்கள்.

ஆனால் அவர்கள் வைத்த குறி தவறித்தவறிப் போயிற்று. ஒரு முட்டையோட்டைக்கூட அவர்களால் சுட முடியவில்லை.

இளைஞர்களின் இந்தச் செயலை விவேகானந்தர் பார்த்தார். இவர்களால் இந்த முட்டையோடுகளைச் சுடமுடியவில்லையே! என்று நினைத்தார்.

அதனால் அவர் முகத்தில் புன்னகை தவழ்ந்தது. இதை அங்கிருந்த இளைஞர்களில் ஒருவன் கவனித்தான்.

அவன் விவேகானந்தரிடம், ''பார்ப்பதற்கு இந்த முட்டை யோடுகளைச் சுடுவது சுலபமான செயல் போன்று தெரியும். ஆனால் நீங்கள் நினைப்பதுபோல், இந்த முட்டையோடுகளைச் சுடுவது அவ்வளவு சுலபமான செயல் அல்ல. நீங்களே முயற்சி செய்து பாருங்கள்! அப்போது உங்களுக்கே தெரியும்!'' என்று கூறினான்.

சுவாமி விவேகானந்தர் துப்பாக்கியைக் கையில் எடுத்தார். அங்கிருந்த முட்டையோடுகளைக் குறி வைத்து சுட ஆரம்பித்தார்.

அப்போது அங்கு சுமார் பன்னிரண்டு முட்டையோடுகள் நீரோடையில் மிதந்துகொண்டிருந்தன. விவேகானந்தர் வைத்த குறி ஒன்றுகூட தவறவில்லை. வரிசையாக அவர் ஒவ்வொரு முட்டை யோடாகச் சுட்டார். அங்கிருந்த அத்தனை முட்டையோடுகளும் வெடித்துச் சிதறின!

இதைப் பார்த்து அங்கிருந்த இளைஞர்கள் பெரிதும் வியப்படைந்தார்கள். அவர்கள் விவேகானந்தரிடம், ''நீங்கள் துப்பாக்கிச் சுடுவதில் ஏற்கெனவே நல்ல பயிற்சி பெற்றவராக இருக்க வேண்டும். அதனால்தான் நீங்கள் அத்தனை முட்டை யோடுகளையும் ஒரு குறிகூடத் தவறாமல் சுட்டீர்கள், இல்லையா?'' என்று வினவினார்கள்.

அதற்கு விவேகானந்தர், ''என் வாழ்நாளில் இன்றுதான் நான் முதன் முறையாகத் துப்பாக்கியைத் தொடுகிறேன்'' என்றார். அவர் கூறியதை இளைஞர்களால் நம்ப முடியவில்லை.

அவர்கள், அப்படியானால் ஒரு குறி கூடத் தவறாமல் உங்களால் எப்படி முட்டையோடுகளைச் சுட முடிந்தது? என்று கேட்டார்கள்.

அதற்கு விவேகானந்தர், எல்லாம் மனதை ஒருமுகப் படுத்துவதில் தான் இருக்கிறது. மனதை ஒருமுகப்படுத்திச் செய்யும் எந்தச் செயலும் வெற்றியைத் தரும் என்று பதிலளித்தார்.[1]

மனஒருமைப்பாடு இருந்தால் ஒருவன் எண்ணிய இலட்சியத்தை அடைய முடியும். இதற்குரிய பயிற்சி முறைகளை பாட்டாகவும் பாடமாகும் வேதாத்திரி மகரிசி மனவளக்கலையில் தந்துள்ளார்கள்.

## ஓர்மை நிலைப்பயிற்சி

**நினைப்பும் மறப்பும் அற்று இருக்க நீ பழக்கிகொள்.**
**புலன்கள் அனைத்தும் அடிமையாம்;**
**அமைதி கிட்டிடும் அங்கே.ஒன்றையும் நினையாது,**
**உன்னையும் மறவாது, நின்ற நிலையே அது;**
**நீயறி; நினைவை நிறுத்தி**

தியானம் பழகுவதற்கு ஓர்மை நிலைப்பயிற்சி அவசியமாகும். மனவளக்கலை பாடத்திட்டத்தில் அகத்தாய்வு சாதனை விளக்க முறைகள் கற்பிக்கப்படுகின்றன.

தீபப் பயிற்சி-(மனவளக்கலை ஆசிரியர் மூலமே பயில வேண்டும்).

- ✯ உயரம் குறைவான விளக்கு (அகல் விளக்கு). பயிற்சியாளரின் கண்களிலிருந்து 45 டிகிரி கோணத்தில் கீழ் நோக்கிப் பார்க்கும் படியாக அமைத்து, விளக்கெண்ணெய் அல்லது சுத்தமான பசுநெய்விட்டு ஒரு சன்னமான திரியில் போட்டு மல்லிகை மொக்குபோல சுடர் எரியும்படி அமைக்க.
- ✯ விளக்கிலிருந்து குறைந்தது 3 அடி அதிகபட்சம் 5 அடி தொலைவில் அமர்க.
- ✯ அருட்காப்பு, இடத்தூய்மை, அன்னை, தந்தை, குருவணக்கம் (ஆசான் முலமே பயிலுக)
- ✯ விளக்குச் சுடர் பார்த்தல், நீடித்த, நிலைத்த ஒரே பார்வையாக - 1 நிமிடம்.
- ✯ கண்களை மூடி, இருகைகளால் பொத்தி, மனதை உடலில் செலுத்தி உச்சி முதல் பாதம்வரை ஜீவகாந்த ஆற்றலை உணர்தல் - 2 நிமிடம். (இது போல் 3 முறை செய்தால் போதும்)
- ✯ காலை 3 மணி முதல் 9 மணி வரை செய்ய வேண்டும். சூரிய உதயத்துக்கு முன்மிகச் சிறப்பு.

☆ ஒரு வாரம் தொடர்ந்து தினசரிசெய்த பின் வாரம் ஒருநாள், மாதம் ஒருமுறை செய்தால் கூடப் போதுமானது.[2]

இப்பயிற்சிகளில் மனதும் ஒருமுகப்படும், ஜீவகாந்தமும் பெருக்கப்படும்.

அகத்தாய்வு பயிற்சிகளில் முதலில் தீப பயிற்சியும், பின்னர் கண்ணாடி பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

போதனையும் சாதனையும் கலந்ததுதான் வேதாத்திரியம். அதனால்தான் உலகெங்கும் வேதாத்திரியம் வெற்றி நடை போட்டுக் கொண்டிருக்கிறது.

1. வீரமும் விவேகமும் நிறைந்த விவேகானந்தரின் வாழ்க்கை வரலாறு. பக்.76-பாலாஜி நோட்புக்ஸ்- சிவகாசி.

2. வேதாத்திரி மகரிசியிடம் ஆசிரியர் நேரிடையாகப் பெற்ற பயிற்சி.



# 30

# வேதநாயகர்களின் பார்வையில் வேதாந்தம்

**ப**ண்டைய நாளில் மனிதர்கள் தங்கள் வாழ்வில் பசி தீர்க்கும் உணவை ''இறை'' என மதித்துக் கொண்டனர். பின் ஆராய்ந்து ஆதாரத்தைக் கொடுக்கின்ற பூமியையே இறைவன் என்று கண்டார்கள்.

பழங்காலத்தில் வேதாந்தம், படித்தவர் மட்டுமே படிக்கக் கூடிய நிலையில் இருந்தது. மேலும் பொருள் புரியாவண்ணம்- மிகவும் கடினமான முறையில் இருந்தது.

சுவாமி விவேகானந்தரும் வேதாத்திரி மகரிசியும் நம், ஆன்மீகத்துக்குப் புதிய பொருள் தந்த மேதைகள். கடவுளை அறிதல், மோட்சம் தேடுதல் ஆகியவை எல்லாம் பெரிய ஞானிகளுக்கு மட்டுமே உரியவை என்பதை மாற்றி சாதாரண மனிதர்களும் ஆன்மிக தரிசனம் பெற முடியும் என்பதை உரத்துச் சொன்னவர்கள்.

வேதாந்தம் என்பதை வெறும் மாயாவாதமாகவே பலரும் புரிந்து கொண்டிருந்த காலகட்டங்களில் வேதாந்தத்துக்குப் புதிய விளக்கம் அளித்தவர்கள். அது எப்படி அன்றாட வாழ்வுடன் தொடர்பு கொண்டது என்பதை விளக்கியவர்கள்.

செயலின் மூலமாக எப்படி ஒருவர் கடவுளை அடைய முடியும் என்பதை உணர்த்தியவர்கள்.

இதனை பாமரமக்களின் தத்துவஞானி வேதாத்திரி எளிய முறையில் பாமரரும் புரிந்து கொள்ளும் வண்ணம் கூறியுள்ளார்.

மேலும் அனைவருக்கும் சென்றடையும் வகையில் பல எளிய பயிற்சிகளையும் இலவசமாகவும் - நுண்ணிய முறையில் கற்றுக் கொள்வதற்கும் எளிய முறையில் இறைநிலை- மனம் பற்றிய கருத்தை வழங்கியுள்ளார்.

மனம் என்பது அசைவே. உடலில் ஓடும் காந்த அலையே. மனிதனின் மூலம் இறைநிலை. நீயும் அவனும் ஒன்றே. என்ற பல விளக்கங்களை மிக மிக எளிமையாகக் கூறியுள்ளார்.

இன்றைய வேதாந்தக் கருத்துக்களை சாதி- மத மொழி இன பாகுபாடின்றி எளிய முறையில் அனைவரும் கற்றுப் பயன்பெறும் வகையில் வேதாத்திரி மகரிசி வழங்கியுள்ளார்கள்.

வேதாந்தம் என்பது விண்ணைப் பற்றியும் அணுவைப் பற்றியும் அறியும் ஓர் ஆய்வு முறை ஆகும். இவ்வுலகம் இருப்பு நிலையில் சிவமாகவும்- இயக்க நிலையில் சக்தியாகவும் கூறுவது வேதாந்திகளின் கருத்து ஆகும்.

மேலும் - இவ்வுலகம் முழுவதையும் பிரபஞ்சம் என்றும்- பேரியக்க மண்டலம் என்றும் கூறுவர். இந்த பேரியக்க மண்டலம் முழுமையும் நிலம் - நீர் - காற்று - ஆகாயம் - நெருப்பு என்று பிரித்து அதற்கு ஐம்பூதங்கள் என்று பெயரிட்டனர். இந்த ஐம்பூதங்கள் விண் துகள்களின் நெருக்கத்திற்கு தகுந்தவாறு ஐம்பூதங்களாயிற்று.

இந்தப் பேரியக்க மண்டலத்தில் உள்ள ஒவ்வொரு பூத பிரிவிலிருந்தும் ஒவ்வொரு விளைவு வருகிறது.

அந்த விளைவுகளை ஆராய்ந்து அவற்றிற்கு ''தன்மாத்திரைகள்'' என்று பெயரிட்டனர். அவை அழுத்தம்-ஒளி- ஒலி-அலை-மனம் என்பதை ஐந்து தன்மாத்திரைகள் என்று கூறுகின்றனர்.

இறைநிலைமை தவிர வேறொன்றும் இல்லை என்பதே வேதாந்திகளின் சாரம். மேலும் - உடலுக்குத்தான் அழிவு. ஆன்மாவிற்கு அல்ல. அது நிரந்தரம் என்பதும் வேதாந்திகளின் கருத்து ஆகும்.

## வேதாந்தத்தின் பொருள்

வேதம் - அந்தம் - வேதத்தின் இறுதி, முடிவு ஆகும். வேதத்திற் கெல்லாம் மூலப்பொருள், முடிவான பொருள் இறைநிலையாக இருப்பதால் ''வேதத்தின் முடிவு'' என்ற வார்த்தையை வைத்து வேதாந்தம் என்ற சொல் உருவாயிற்று.

## இறைநிலை பற்றிய கருத்து

ஐம்பூதங்களின் மையத்தில் இருந்து கொண்டு அழுத்தமாக- ஒளியாக- ஒலியாக- சுவையாக- மணமாக மாறிக் கொண்டிருக்கிறது என்று விளக்குவது வேதம். இவ்வேதக் கருத்துகளை இறைவனே பேசுவதாகக் கூறுகிறார் ஒரு அறிஞர்.

**''என்னை எல்லா இடத்திலும் அறிந்து**
**கொள்ளக் கூடி யவன்**
**எவனோ அவன் என்னை விட்டு நீங்குவதில்லை**
**அவனை விட்டு நான் நீங்குவதில்லை''**

என்கிறார். ஆனால்- இருந்தவை தெரியாததினால் ஒன்றுதான் இருந்தது இந்த ஒன்றிலிருந்துதான் ஐம்புதங்களாகப் பிரிந்தன என்கிறார்.[1]

**''பரமாய சக்தியுள் பஞ்சமாபூதம்**
**தரம் மாறித் தோன்றும் பிறப்பு''**[2]

ஔவையார் கவியாக விளக்கியுள்ளார்.

பரமாய சக்தியாக உள்ள இறைநிலையில் இருந்து ஐம்பூதங்கள் தோன்றின. அவற்றில் விண் முதலும்- காற்று இரண்டாவதாகவும்- கனல் மூன்றாவதாகவும் - நீர் நான்காவதாகவும்- நிலம் கடைசியாக வந்தன என்று இறைநிலைகளின் வழியே ஐம்பூதங்கள் செயல் படுவதாகக் கூற்று.

## விவேகானந்தரின் பார்வையில் வேதாந்தம்

''தாந்தம் என்ற சொல் இந்து மத நெறிகள் அனைத்தையும் குறிக்கும். வேதாந்தம் வேதத்தில் ஒரு பகுதி'' என்று கூறுகிறார்.

மேலும் ''ஒரே தெய்வம் பற்றிய கருத்து ஆரம்பிக்கும் இடத்தில்தான் வேதாந்தமும் ஆரம்பிக்கிறது''[3] என்கிறார்.

ஒரே ஒரு வார்த்தையில் வேதாந்தத்தின் இலட்சியத்தைக் கூறுகிறார்.

''மனிதனின் உண்மையான இயல்பை அறிந்து கொள்வது'' என்பதுதான்.

மேலும் ''கண்ணுக்குப் புலப்படும் கடவுளாக விளங்கும் உன் சகோதரனையே நீ வழிபட முடியாவிட்டால் கண்ணுக்குப் புலப்படாமல்

மறைந்திருக்கும் கடவுளை எப்படி நீ வழிபட முடியும்?'' இதுவே வேதாந்தம் அறிவுரையாக வழங்கும் செய்தியாகும்.[4]

நீர்- அனல்- காற்று- அணு இவற்றை மேலும் மேலும் ஆராய்ந்து கடைசியில் வெட்டவெளியில் தான் முடிவு என்று கூறுவது வேதாந்தம் என்று வேதாத்திரி கூறுகிறார்.[5]

**''வேதத்தை யான்படித்த தில்லை ஆனால்**
**வேதத்தின் உட்பொருளாய் என்னைக் கண்டேன்**
**வாதத்தில் யான் கலந்து கொண்டதில்லை**
**வாதிப்போர் அனைவருக்கும் பொருளாய் உள்ளேன்**
**பேதித்த உண்டங்கள் உயிருகட்கெல்லாம்**
**பிறப்பிடமாய்க் கருப்பொருளாய் என்னைக் கண்டேன்**
**சோதிப்போர் புலனறிவால் என்னைக் காணார்**
**சுயநிலையை அகத்துணர அவர் நான் ஒன்றே**[6]

வேதத்தின் சாரத்தை இவ்வளவு எளிமையாகவும் பாமரனும் புரிந்து கொள்ளும் வகையில் தந்திருப்பது மகான்களின் கருணையே ஆகும்.

---

1. வேதாந்திரிய சிந்தனைகள்-பக். 93-94-தமிழ்ப் பல்கலைக்கழகம்-தஞ்சாவூர்.
2. மனவளக்கலை பாகம்-1. பக். வேதாத்திரி மகரிசி-வேதாத்திரி பதிப்பகம்-ஈரோடு
3. சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம்-பாகம்5-பக்.106 - ஸ்ரீராமகிருஷ்ணமடம் - சென்னை.
4. சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம்-பாகம் 4 பக்.133 - ஸ்ரீராமகிருஷ்ணமடம் - சென்னை.
5. வேதாத்திரி மகரிசி பயிற்சிகளில் ஆசிரியர் நேரிடையாகக் கேட்டது
6. ஞானக்களஞ்சியம்-பாடல் 1119 -பக்.385- வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.



# 31

## மனிதனும் தெய்வமாகலாம்

மனிதர்கள் இயல்பில் தெய்வீகமானவர்கள் என்பதையும், இந்த தெய்வீகத்தை வெளிப்படுத்துவதே மனித வாழ்வின் சாரம் என்பதையும் விவேகானந்தரும் வேதாத்திரியும் தங்களது அனைத்து சொற்பொழிவுகளிலும், எழுத்துகளிலும் வலியுறுத்தி உள்ளனர்.

விவேகானந்தர் - வேதாத்திரி படைப்புகளில் விண்ணையும் மண்ணையும் அளக்கும் போக்கினைப் பல சந்தர்ப்பங்களில் காணக்கூடியதாக உள்ளது.

தெய்வீகத்தை மானுடமாகவும், மானுடத்தைத் தெய்வீகமாகவும் காண்பதை அவர்களது படைப்புகள், சொற்பொழிவுகள் உறுதி செய்கின்றன.

*‘‘எனது லட்சியத்தை ஒரு சிலவார்த்தைகளில் கூறிவிடலாம். அது இதுதான். மனித இனத்திற்கு அவர்களின் தெய்வீகத் தன்மையைப் போதிப்பதும், வாழ்க்கையின் ஒவ்வொர் அசைவிலும் அந்தத் தன்மை வெளிப்படுமாறு செய்வது எப்படி என்பதைச் சொல்வதும் தான்’’*[1] என்று விவேகானந்தர் தனது இலட்சியத்தை கூறுகிறார்.

*‘‘எல்லா ஆற்றலும் உன்னுள்ளே உள்ளன. உன்னால் எதையும், எல்லாவற்றையும் செய்ய முடியும் என்பதில் நம்பிக்கை வை. தற்காலத்தில் நம்மில் பலர் தாங்கள் வெறும் மூடர்கள் என எண்ணுவது போல உன்னை நீ எண்ணாதே, எழுந்து நில், உனது தெய்வீகத்தை வெளிப்படுத்து’’*[2] என்று விவேகானந்தர் நம்மில் இருக்கும் தெய்வீகத்தை வெளிப்படுத்தச் சொல்கிறார்.

''ஒவ்வோர் ஆன்மாவும் உள்ளடங்கிய தெய்வீகம் நிறைந்தது. புற மற்றும் அக இயற்கையை அடக்குவதன்மூலம் இந்த அக தெய்வீகத்தை வெளிப்படுத்துவதே நோக்கம். செயல் அல்லது வழிபாடு அல்லது பிராணனைக் கட்டுப்படுத்தல் அல்லது தத்துவ ஆராய்ச்சி-இவற்றில் ஒன்றாலோ பலவற்றாலோ எல்லாவற்றாலுமோ இதனைச் செய்து சுதந்திரனாக இரு! இதுவே மதத்தின் முழு உண்மை. கொள்கைகளும் கோட்பாடுகளும், சடங்குகளும் சாஸ்திரங்களும், கோயில்களும் உருவங்களும் இரண்டாம் நிலையிலுள்ள விளக்கங்களே''[3] என்றும் நமது தெய்வீகத்தை வெளிப்படுத்துவதே நோக்கமாக இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகிறார்.

வேதாத்திரி மகரிசியோ ''ஆன்மப் பேரொளியை மறைத்திருக்கும் தன்முனைப்புத் திரை நீக்கபட்டுவிட்டால் மனிதனே தெய்வம்.''[4] என்று விளக்குகிறார்.

God+Impurity = Man. Man&Impurity = God. கடவுள் என்ற நிலையோடு ஆணவம், கன்மம், மாயை இவைகளைக் கழித்து விட்டால் தெய்வம்தான். அதைப் பெரியவர்கள்...

> ***''ஐயப்படாது அகத்தது உணர்வானைத்***
> ***தெய்வத்தோ டொப்பக் கொளல்''***

என்ற போது அந்த நிலையில் வினைப்பயனை எல்லாம் தாண்டி நிற்கக் கூடிய ஒரு நிலையில் இருப்பார்கள் அல்லவா? அந்த நிலையில் தெய்வமாகவே காட்சியளிக்கிறார்கள் என்பது வள்ளுவர் வாக்கு''[5] என்றும் வேதாத்திரியார் கூறுகிறார்.

மேலும் அருள்தந்தை வேதாத்திரியிடம் ஒரு கேள்வி.

**கேள்வி** -இறைவெளியிலே நாம் இருக்கிறோமா? நமக்குளே இறைநிலை இருக்கிறதா?

**பதில்** ''தெய்வமே நமக்குள்ளாக அடங்கி இருக்கிறது. நாம் தெய்வத்துக்குள்ளும் அடங்கி இருக்கிறோம்'' இது கற்பனை இல்லை. உண்மை.

உண்மையான தெய்வநிலை நமக்குள்ளாக எப்படி இருக்கிறது? உண்மையில் தெய்வம் நமக்குள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

ஒரு விளக்கம் சொல்கிறேன். ஒரு திருடனைப் பார்த்து, ''நீ திருடினாயா?'' என்று கேட்டறியும்போது, தான் திருடவில்லை என்று சொல்லுகிறான். ஆனாலும் உள்ளத்தில் ''நான் திருடினேன், நான் செய்தேன்'' என்று வரும்.

அப்படி எல்லாச் செயலிலும் உணர்த்தி பதிவு செய்து கொண்டு, மனிதனுக்குள்ளே எப்பொழுதும் அவனை மாற்றிக் கொண்டே இருப்பது எது?

இறைநிலைதான். அவனாக வேண்டி, இடம் பார்த்து, பள்ளம் பார்த்துப் போட்டு வைக்கவில்லை.

இறையாற்றல் நமக்குள்ளாக அறிவுக்குள்ளே அறிவாக, மனத்திற்குள் அறிவாக இருந்து கொண்டு பரம்பொருளாக இருந்து கொண்டு எல்லாக் காரியங்களையும் செய்து கொண்டிருக்கிறது.[6]

மனிதனை தெய்வமாக்க வேதாத்திரியார் தந்ததே மனவளக்கலை.

பிரபஞ்சம் முழுவதும் இறைநிலை அன்றி வேறில்லை எனும் அத்வைத சித்தாந்தம் புதிதல்ல என்றாலும், வேதகாலம் தொட்டு வருவதுதான் என்றாலும், மனிதனைத் தெய்மாக்க எளிய வழிமுறை களையும், யுக்திகளையும், நம்பத்தகுந்தக்கூடிய வகையில் எளிய தெளிந்த கருத்துகளையே மனவளக்கலை பாடத் திட்டத்தில் வேதாத்திரியம் தந்துள்ளது.

**''எப்பொருளை எச்செயலை எக்குணத்தை**
**எவ்வுயிரை ஒருவர் அடிக்கடி நினைந்தால்**
**அப்பொருளின் தன்மையாய் நினைப்போர் ஆற்றல்**
**அறிவினிலும் உடலினிலும் மாற்றங்காணும்**
**இப்பெருமை இயல்பூக்கு நியதியாகும்**
**எவரொருவர் குருவை மதித்து ஒழுகினாலும்**
**தப்பாது குருவுயர்வு மதிப்போர் தம்மைத்**
**தரத்தில் உயர்த்தி பிறவிப்பயனை நல்கும்''**[7]

தூய நினைவு மாறாத பயிற்சி கொண்டு, மன அமைதி பெற்று துரித நிலையில் இறைநிலைக்குச் சமனாக தன்மாற்றம் அடையும் வழியைக் கூறியவர் நமது வேதாத்திரியே!.

***''அவனின் இயக்கம் அணுவாற்றல்***
***அணுவின் கூட்டு பக்குவம் நீ***
***அவனில் தான் நீ உன்னில் அவன்***
***அவன் யார் நீ யார் பிரிவேது?***
***அவனை மறந்தால் நீ சிறியோன்***
***அவனை அறிந்தால் நீ பெரியோன்***
***அவன் நீ ஒன்றாய் அறிந்த இடம்***
***அறிவு முழுமை அது முக்தி!''*** [8]

என்ற பாடலின் மூலம் தத்துவஞானி வேதாத்திரி மகரிசி அவர்கள் ''வாழும் காலத்திலேயே தெய்வமாகலாம்'' என்பதைத் தெளிவு படுத்துகிறார்.

---

1. சுவாமி விவேகானந்தரின் வரலாறும் அறிவுரைகளும்-பக்.77 ஸ்ரீராமகிருஷ்ண மிசன்-பேலூர்
2. விவேகானந்தரைக் கற்போம்-பக். 74- ஸ்ரீராமகிருஷ்ணமடம்-சென்னை.
3. சுவாமி விவேகாந்தரின் வரலாறும் அறிவுரைகளும்-பக்.77 ஸ்ரீராமகிருஷ்ண மிசன்-பேலூர்
4. வாழ்க்கை மலர்கள்-பக்190-வேதாத்திரி மகரிசி-மனவளக்கலை மன்ற அறக்கட்டளை-சேந்தமங்கலம்.
5. அறிவுத்திருக்கோயில்- விழா மலர்-பக்117-சாத்தூர் மனவளக்கலை மன்றம்.
6. திறப்புவிழா மலர்-பக்102-திருச்சி பெல் அறிவுத்திருக்கோயில்-திருச்சி
7. ஞானக்களஞ்சியம்-பாடல் 10 பக். 6, வேதாத்திரி மகரிசி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு
8. மேலது பாடல் 2 - பக். 5.



# 32

# இருள்போக்கும் விவேகானந்தர் – வேதாத்திரி சிந்தனைகள்

உலகில் தோன்றிய நாள் முதல் மனிதன் பல்வேறு இச்சைகளுக்குட்பட்டு அவற்றில் இன்பம் காண வேண்டும் என்ற வேட்கையில் பல்வேறு முயற்சிகளை மேற்கொள்கிறான்.

அவற்றில் பெரும்பாலானோரின் முயற்சி சிற்றின்ப நாட்டத்திற்குரியதாகவே உள்ளது.

இகலோக வாழ்க்கைக்கு எவை எவை இன்பமோ அவற்றில் மாத்திரமே தனிக்கவனம் செலுத்துகின்றனர்.

ஒரு குறிப்பிட்ட சராசரி வயதைக் கடந்த பிறகே இறை யின்பத்தை நாடுகிறார்கள்.

கண்கெட்ட பிறகு சூரியநமஸ்காரம் என்று சொல்வதைபோல இளமையாக இருக்கும் போது இறையை நாடாமல் உடல் தளர்வுற்ற காலத்தில் இறைவனை நினைப்பது என்பது இன்றைய உலகத்தின் வாடிக்கையாய் மாறிவிட்டது.

இதுபோன்ற சூழலில் சிக்கிக் கொள்ளாமல் மனம் உண்மைத் தெய்வத்தை உணர வேண்டும். சமுதாயம் நன்னிலை அடைய வேண்டும்.

அடிக்கடி நாம் கேட்கும் ஒரு கேள்வி இது. ''இந்த உலக பந்தபாசங்களிலிருந்து நான் தப்பிக்க வழியே இல்லையா?''

நம் மனதில் இயல்பாகவே இப்படி ஒரு சந்தேகம் எழுகிறது. நான் ஒரேயடியாக நிரந்தரமாக அழிந்து போக வேண்டியதுதானா? முழுமையாக அழிந்து போகாமல் நான் தப்பிக்க வழியே இல்லையா?''

ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், வேதாத்திரி மகரிசி மற்றும் உயர்ந்த அருளாளர்கள் பலரும் தங்களின் வாழ்க்கை மூலம் இத்தகைய பந்தபாசங்களிலிருந்து எப்படி விடுதலை பெறுவது என்பதை மக்களுக்கு எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

இது போன்ற அருளாளர்களாகிய ஒளிவீச்சு அவ்வப்போது தோன்றாவிட்டால், உலகம் அறியாமையாகிய இருளில் மூழ்கியே போயிருக்கும். என்றாலும் இத்தகைய ஒளிவீச்சுகள் மிக அபூர்வமாகவே தோன்றுகின்றன.

ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், வேதாத்திரி மகரிசி போன்ற மகான்கள் தோன்றி தூங்கும் ஆன்மாக்களைத் தட்டி எழுப்பி ஞானவொளி வழங்கினார்கள்.

மக்களிடம்அவர்கள்தங்களின்வாழ்க்கையின்அரிய சந்தர்ப்பத்தை வீணாக்கிக் கொண்டிருப்பதை எடுத்துச் சொல்லி அறிவூட்டுவதைத் தமது வாழ்க்கையின் இலட்சியமாக அவர்கள் கொண்டிருந்தார்கள்.

கடவுளைப் பற்றியும், ஆன்மீக விஷயங்கள் குறித்தும் பெரிதும் ஆர்வம் கொண்டிருந்த இந்த மகான்கள், பந்தபாசங்களிலிருந்து விடுதலை பெறுவதற்கு வழி இருக்கிறது என்று வலியுறுத்திக் கூறியுள்ளார்கள்.

அருளாளர்களின் மூலம் கடவுள் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறார். ஏன்? மக்கள் தன்னை சுயமாக அணுக வேண்டும் என்பதற்காகவே அவர்கள் அவ்விதம்செய்கிறார்கள்.

இப்படிப்பட்ட பெரியோர்களின் முன்னுதாரணமான வாழ்க்கையின் மூலம் மக்கள் சிறிது ஆன்மீக விழ்பபுபெறக்கூடும். அதிலும் சிலர் தங்களது வாழ்க்கையையே மாற்றி அமைத்துக் கொள்ளக் கூடும்.

இயேசுகிறிஸ்து, ''நானே வழி'' என்று கூறியுள்ளார். இதன் பொருள், ''அவரைப் பின்பற்றினால் கடவுளை அடையலாம்'' என்பதுதான்.

''தெய்வீகபுருஷர்கள் சொல்வதும் செய்வதும் பிறர் நன்மைக்காகவே'' என்று ஸ்ரீராமகிருஷ்ணர் சொல்வது வழக்கம்.[1]

பொறி புலன்கள் மயக்கங்களில் ஆட்பட்டு வீணே கழியும் மானுடத்திற்கு- இருள் போக்கும் அற்புத மனிதர்களாய் தோன்றியவர்கள் சுவாமி விவேகானந்தரும் வேதாத்திரி மகரிசியும் ஆவார்கள்.

உலக மக்களுடைய மனத்தின் இருளைப் போக்கக் கூடிய அரிய சிந்தனைக் கருவுலங்களாகத் திகழ்கிறார்கள் ஞானத்துறவி விவேகானந்தரும் தத்துவஞானியுமான வேதாத்திரி மகரிசியும்.

## இன்ப துன்பத்திற்குக் காரணம்

''துன்பம் என்பது அறியாமை காரணமாகத்தான் ஏற்படுகிறது. வேறு எதனாலும் அல்ல என்பதை பட்டப்பகல் வெளிச்சம் போல் நான் தெளிவாகப் பார்க்கிறேன்''[2] என்றும் ''மனிதன் இயற்கையை எதிர்த்துப் போராட ஆரம்பிக்கிறான். அதில் அவன் பல தவறுகளைச் செய்கிறான். அதனால் துன்பப்படுகிறான்''[3] என்றும் சொல்கிறார் விவேகானந்தர்.

''மனிதன் தன் மனத்தின் செயல்பாடுகளை அறியாமல்-மதிக்காமல் இருப்பதுதான் அவன் இன்ப துன்பங்களுக்குக் காரணம்''[4] என்கிறார் வேதாத்திரி.

மனதை அறிந்து கொண்டால் மனதின் செயல்பாடுகளை கட்டுப்படுத்தலாம் என்கிறார்.

''தத்துவம் சார்ந்த மதநூல்களைப் படிப்பதாலும் படித்த கருத்துகளைப் பிறருடன் வாதிட்டு மேலும் பல கருத்துக்களை ஐயமில்லாமல் அறிவதன் மூலமும்- ஆராய்ச்சியாளர்களின் சொந்த வாழ்க்கை அனுபவங்களை ஏற்பதன் மூலமும் மனத்தைப் பற்றி அறிந்து கொள்ள இயலும்'' என்று வழி காட்டுகிறார் வேதாத்திரி மகரிசி.

''துன்பமற்ற இன்பமும் தீமையற்ற நன்மையும் அடைவது முடியாது காரியம்''[5] என்று கூறும் விவேகானந்தர்,

''நாம் மட்டும் உறுதியாகவும் தூய்மையாகவும் கடவுளிடம் அளவு கடந்த நம்பிக்கை உடையவராகவும் இருக்க வேண்டும். அப்படி இருந்தால் இந்த துன்பங்கள் எல்லாம் மறைந்து போய்விடும்''[6] என்கிறார்.

காத்திருக்கும் பெருமை மிகுந்த ஆன்மீக வாழ்க்கையை, ஆத்மாவின் நிலையை மெய்ப்பொருளை அனுபூதியில் உணர்ந்து கொள்வதற்கு நாம் (அஞ்ஞானத்திலிருந்து) விழித்தெழுந்தாக வேண்டும். இதுதான் நமக்குத் தேவைப்படுகிறது.

இதனால்தான் கடவுளின் தூதுவர்களாகிய மகான்கள் நம்மிடையே வந்து பிறந்து - நமது கனவுகளிலிருந்து நமக்கு விடுதலை கிடைக்கச் செய்யும் பொருட்டு-நம்மை வேகமாக உலுக்கி எழுப்பி உண்மையை உணர வைக்கிறார்கள்.

அவர்கள் ஞானத்தீயை அணையாமல் எரியும்படிச் செய்து, நாம் செல்ல வேண்டிய இடத்தையும் பாதையையும் நமக்குக் காட்டுகிறார்கள். அவர்கள் காட்டும் பாதையே இருள்போக்கும் ஆன்மீக வாழ்க்கையாகும்.

1. ஸ்ரீராமகிருஷ்ணவிஜயம்-பிப்ரவரி 1996-பக்.36-ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை.
2. சுவாமி விவேகானந்தரின் பொன்மொழிகள்-பக்13-அருண்நிலையம், சென்னை.
3. மேலது பக்.21
4. வேதாத்திரியத்தில் சமூகவியல் இறையியல் சிந்தனைகள்-பக்.97- உலக தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
5. சுவாமி விவேகானந்தரின் பொன்மொழிகள்-பக்15அருண்நிலையம், சென்னை.
6. மேலது பக்.24



# 33

# அகங்காரம் ஆன்மீகத்திற்குத் தடை

உயிர்கள் அனைத்திலும் மேன்மையானவன் மனிதன். மனிதனின் உடற்கருவிகளின் சிறப்பு வியத்தகு முறையில் அமைந்துள்ளன.

ஐம்புலன்களால் உணர முடியாத இயற்கை ரகசியங்களை எல்லாம் உணரத்தக்க பேராற்றல் ஆறாவது அறிவாக மனிதனிடம் மிளிர்கின்றது.

ஆறாவது அறிவு முழுமை பெற்ற தன்னையறியும் வரையில் புலன் கவர்ச்சி மயக்கத்தில் தன்னை மறந்து நிற்கிறான்.

அறிவின் மயக்க நிலையில் தனக்கு மூலமும் முடிவுமான ஒரு பேரியக்க நிலையையும் அதன் ஆற்றலையும் மறந்திருப்பதால் அவன் அடைந்துள்ள எந்த உணர்வும் அவனுக்கு ஒரு செருக்கான மனநிலையில் அமைகின்றது.

இந்த அறிவின் மயக்கச் செருக்குத்தான் அகங்காரம் ஆகும். இது ஒரு திரை போன்று அறிவின் ஒளியை மறைத்து நிற்கின்றது.[1]

அகங்காரத்தை அண்டவிடக்கூடாது என்று கறாராக சொல்கிறார் விவேகானந்தர்.

''நம்மை அடைத்து வைத்திருக்கும் கடினச்சுவர் அகங்காரமே. எதைப் பற்றியும் குறிப்பிட நேரும்போது-''நான் இதைச் செய்தேன். அதைச் செய்தேன். ஏனையவற்றைச் செய்தேன்'' என்று ''நான்'' என்பதை முன் நிறுத்தி நாம் குறிப்பிடுகிறோம்.

''நான்'' என்னும் அற்ப எண்ணத்தை விட்டு விடுங்கள். நம்மிடமுள்ள் இந்த மிருகத்தனத்தைக கொன்று விடுங்கள்.

''நான் அல்ல-நீயே'' என்று செல்லுங்கள்-அதை உணருங்கள்-அதன்படி வாழுங்கள்.

அகங்காரத்தால் உற்பத்தி செய்து கொண்ட உலகை விடாதவரை-நாம் விண்ணுலகை அடைவதும் இல்லை. அடையப் போவதும் இல்லை. உலகை துறப்பது என்பது- அகங்காரத்தை மறப்பது- உலக நினைப்பு இல்லாது இருப்பது- உடலில் வாழ்ந்து கொண்டே உடல் நினைவு இல்லாமல் வாழ்வது ஆகும்.

அகங்காரம் என்னும் போக்கிரியை இல்லாது ஒழித்துவிட வேண்டும்.''[2] மேலும்-

''ஆன்மீகத்தில் நான் உயர்ந்தவன்'' என்ற அகங்காரம் மட்டும் உங்கள் உள்ளதில் புகுந்துவிட்டால்-பிறகு உங்களுக்கு நேர்வது பெரும் கேடுதான். இந்த எண்ணம் மிகக் கடுமையான விலங்காக முடியும்... பணமோ- வேறு வகைப் பற்றோ இவ்வளவு தூரம் ஆன்மாவைப் பந்தப்படுத்த முடியாது''[3] என்று கூறுகிறார்.

நம்மை நாமே பெரிதாக எண்ணிக் கொண்டு அகந்தை கொள்வது கூடாது. சாதாரணமானவர்களாக நம்மை கருதும் போது தான், நம்மிடம் கருணையும், பணிவும், நல்ல சிந்தனையும் வெளிப்படத் தொடங்கும்.[4] என்று வழியும் காட்டுகிறார் விவேகானந்தர்.

அகந்தைக்கு என்ன காரணம்? வேதாத்திரி பதிலளிக்கிறார்.

''பேரியக்க மண்டல மலர்ச்சிகட்கு ஆதியானதே தெய்வம். அதன் மலர்ச்சி நிலைகளில் சிறந்த கட்டம் தான் மனிதன்.

அவன் தெரிந்தோ-தெரியாமலோ- அவனுள் அடங்கியுள்ள் முழுமைப் பொருளானது தான் உயர்ந்தவன் என்று ஒலிக்கிறது.

இதனால் எந்தத் தவறும் இல்லை. ஆயினும் ''எல்லா உயிர்களும் என் போன்று பிறப்பிலும்- அதற்குரிய செயல்களிலும் சிறப்புப் பெற்று தானே விளங்குகின்றன. என்ற உண்மையை மறந்து ''தான் மாத்திரம் உயர்ந்தவன்'' என்று எண்ணும் மயக்கம்தான் அவன் அறிவின் சிறுமையை விளக்குகின்றது.

பிறப்பிற்கும்- இறப்பிற்கும் இடையே கால எல்லையைக் கொண்டு இயங்கும் உடலைப் பற்றியும்-அதனோடு இயங்கும்

உயிரைப் பற்றியும் அதன் படர்க்கை நிலையாகிய அறிவைப் பற்றியும் அறியும் வரை இந்த மயக்கம் ஒவ்வொருவருக்கும் இயல்புதான்.[5]

ஆணவத்தை அறுக்க வழிகாட்டுகிறார் வேதாத்திரி

**இறை நிலையோ டெண்ணத்தைக் கலக்கவிட்டு**
**ஏற்படும் ஓர் அமைதியிலே விழிப்பாய் நிற்க**
**நிறை நிலையே தானாக உணர்வதாகும்.**
**நித்த நித்தம் உயிர் உடலில் இயங்கு மட்டும்**
**உறைந்து உறைந்திந் நிலையில் பழகிக்கொள்ள**
**உலக இன்பங்களிலே அளவு கிட்டும்**
**கரை நீங்கி அறிவு மெய்ப்பொருளாய் நிற்கும்**
**கரைந்துபோம் தன் முனைப்பு காணும் தெய்வம்.**[6]

விவேகானந்தர் ஒரு சமயம் பைபிள் படித்துக் கொண்டிருந்தார். அவர் அந்தக் காலத்தில் மிகவும் கண்டிப்புடன் சைவ உணவுப் பழக்கம் கொண்டிருந்தார்.

இயேசுகிறிஸ்து மாமிசம் உட்கொண்டார் என்பதைப் படித்த போது அதை விவேகானந்தரால் சிறிதும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

ஆதலால் இயேசுகிறிஸ்துவின் மீது அவர் கொண்டிருந்த பக்தியும் சற்று குறைந்தது.

உடனே திடீரென்று அவரது உள்ளத்தில் வேறு ஒரு எண்ணம் தோன்றியது.

''ஹ! நான் சைவ உணவு உண்பவன் என்பதால் எனக்கு எவ்வளவு அகங்காரம்!! அந்த அகங்காரத்தினால் அல்லவா இயேசுகிறிஸ்து விடமே குறை கண்டேன்!''

இவ்வாறு விவேகானந்தர் தன்னிடம் தோன்றிய அகங்காரத் முளையிலேயே கிள்ளி எறிந்தார்.[7]

## ஸ்ரீராமகிருஷ்ணர் பார்வையில் அகங்காரம்

எல்லோருடைய தற்பெருமையும் காலக்கிரமத்தில் அழிந்து போகும், ஆனால், தான் ஒரு ஞானி என்று தற்பெருமை கொள்ளும் ஞானியின் ஆணவம் சுலபத்தில் அழிவதில்லை.

வெள்ளைப் பூண்டின் சாறு வைக்கப்பட்டிருந்த பாத்திரம் எத்தனை தரம் கழுவித் துடைக்கப்பட்ட போதிலும் நாற்றத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கும்.

அகங்காரமானது பிடிவாதமுள்ள அஞ்ஞானம். எவ்வளவு தான் சிரமப்பட்ட போதிலும் அதை முற்றிலும் விடுவது முடியாத காரியம்.

அஜீரணக்காரனுக்கு புளிப்பான பண்டங்கள் ஒத்துக் கொள்ளாது என்பது தெரியும். என்றாலும் அவைகளைக் கண்டதும் அவனுடைய நாக்கில் நீர் சுரக்கும். அதுபோல, ‘‘நான்’’ ‘‘எனது’’ என்ற மனோ பாவங்களை ஒருவன் அடக்கியாள முயன்றாலும் செய்கையில் அவனுடைய முதிராத அகங்காரம் தலையெடுக்கின்றது.

சமாதியை அடைந்து அகங்காரத்தை ஒழித்து விடக்கூடியவர்கள் மிகச் சிலரே. பொதுவாக அது அழிவதில்லை. விவேகத்தோடு இடை விடாது விசாரணை செய். அப்போதும் இந்த அகங்காரம் உன்னிடம் வரும். அரசமரத்தை இன்றைக்கு நீ வெட்டு. அது நாளைக்கு துளிர் விட்டிருப்பதைக் காண்பாய்.

கீர்த்தியை தேடுபவர்கள் மாயைக்குட்பட்டவர்களே. ஒவ்வொரு காரியமும் இறைவனால் ஆகின்றது என்பதையும், சகல கீர்த்திக்கும் அவனைத் தவிர வேறொன்றும் இல்லை என்பதையும் அவர்கள் மறந்து போகின்றனர்.

அகங்காரம் முற்றியதும் முற்றாததும் என இருவகைப்படும். என்னுடையது ஒன்றுமே இல்லை என் கண்ணால் காண்பதும், காதால் கேட்பதும், சரீரத்தால் ஸ்பரிசிப்பதும், இந்தச் சரீரமும் என்னைச் சேர்ந்தவையல்ல என்ற மனோபாவத்தைக் கொண்ட அகங்காரம் முற்றியது. அதாவது கனிந்தது.

இது என் வீடு, இது என் சரீரம், இது என் குழந்தை என்று நினைக்கும் அகங்காரம் முற்றாதது. அதாவது கனியாதது ஆகும்.[8]

---

1. வாழ்க்கை மலர்கள் பக்.358- வேதாத்திரி மகரிசி - வேதாத்திரி பதிப்பகம்- ஈரோடு.
2. விவேகானந்தர் பொன்மொழிகள்-இண்டர்நெட்
3. விவேகானந்தர் பொன்மொழிகள்-இண்டர்நெட்
4. Swami Vivekananda & My Master (1901)
5. நெல்லை அறிவுத்திருக்கோயில் திறப்பு விழா மலர் பக்.185
6. ஞானக்களஞ்சியம்-பாடல் 1143 - பக். 392 - வேதாத்திரி மகரிசி - வேதாத்திரிப் பதிப்பகம், ஈரோடு.
7. ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்-பிப்ரவரி 1994-பக்.24-ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை.
8. ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



# 34

## கனவில் வந்த புத்தரும் போகரும்

சிறு வயதிலேயே விவேகானந்தர் (நரேந்திரர்) தியானப் பயிற்சி செய்வார். மனதை ஒருநிலைப்படுத்தும் பக்குவம் கைவரப்பெற்றிருந்தார்.

தியானம் நிறைவுற்ற பின்பு மனத்தில் பேரானந்த ஊற்று பெருகி நெடுநேரம் நிலைத்திருப்பதையும் அவர் அனுபவித்திருக்கிறார்.

அந்நிலையிலேயே எழுந்திருக்கவே தோன்றாதவராக நெடுநேரம் அமர்ந்திருப்பார்.

அவ்வாறு ஒருநாள் நரேந்திரர் அமர்ந்து கொண்டிருந்த வேளை அவர் முன்பு ஒரு துறவி திடீரென்று தோன்றினார்.

ஒளிமயமாக இருந்த அந்தத் துறவியின் வரவால் நரேந்திரர் இருந்த அறையே ஒளி பெற்றது போலாயிற்று.

காவி நிறத்தில் உடையணிந்து கையில் கமண்டலம் தாங்கி நின்றார். அவரது முக மண்டலத்தில் அமைதி குடிகொண்டிருந்தது. எதிலும் பற்றற்ற தன்மை உடையவராக அவர் நின்றிருந்த கோலம் நரேந்திரரை அவர் பக்கம் கவர்ந்தது.

அந்த ஒளிமயமான சன்னியாசி நரேந்திரரிடம் ஏதோ கூற விழைபவர் போல அவரை நோக்கி அடியெடுத்து வைத்தார்.

அக்கணம் வரை அந்த சன்னியாசியையே பார்த்தவாறுஇருந்த நரேந்திரரின் உள்ளத்தில் அவர் தம்மருகே வருவதைக் கண்டதும் அச்சம் ஏற்பட்டது.

நரேந்திரர் அறையைவிட்டு வெளியே ஓடினார்.

வெளியில் வந்த பிறகுஅவரது இயல்பான துணிவு அவரை எதற்காக பயப்படவேண்டும் என்று கேள்வியை எழுப்பிற்று.

துணிவோடு தம்முடைய அறைக்குள் வந்தார். சுற்றுமுற்றும் பார்த்தார். அறையையே ஒளிமயமாகச் செய்த அந்தத் துறவியைக் காணவில்லை.

அடடா, அவர் கூற வந்ததைக் கேட்காமல் போனோமே என்று வருந்தினார். அந்த ஒளிமுகம் அவருடைய நெஞ்சைவிட்டு அகலாமல் இருந்தது.

அந்த துறவி, புத்தர் என்று பின்பு நரேந்திரர் அறிந்து கொண்டார்.[1]

வேதாத்திரி சிறுவயதில் இருந்தே ஞானத் தேடலில் இருந்து வந்தார். எந்தச் செயலைச் செய்த போதும் அவர் மனம் மட்டும் தேடலிலேயே இலயித்து விட்டது.

வேதாத்திரிக்கும் கனவில் ஒரு சித்தர் வந்தார். போகர் என்ற சித்தர் கனவில் வந்து நான்கு வரங்களையும் வழங்கிச் சென்றார்.

> **''தூக்கமில்லை, விழிப்பில்லை, துரியதவம் ஆழ்ந்திருந்தேன்.**
> **தோன்றினார் ஒருசித்தர், 'தெரியுமா! நான்யார்?' என்றார்.**
> **நாக்கு எழவில்லை, 'இவர் போகர்?' என நினைத்தேன்.**
> **நறுக்கென்று பேசினார். உன் நான்கு பணிக்குதவுவேன்**
> **''ஆக்க வாழ்க்கை நெறியில் கர்மயோகம் பரவவிடல்,**
> **அறிவுத் திருக்கோயில் முடித்து, உன்வயிற்றுப்புண் ஆறவிடல்,**
> **ஊக்கமுடன் தொண்டாற்றும் உனக்குலகப் பரிசுவர**
> **உதவிடுவேன்''**

எனச் சொல்லி ஒரு நொடியில் மறைந்துவிட்டார்.

போகர் பதினெண் சித்தர்களுள் ஒருவர் ஆவார். இவர் பிறப்பால் தமிழ்நாட்டில் பிறந்து பின்னர் சீனா சென்றவர் என்று சிலரும் கூறுகின்றனர். இவர் நவசித்தர்களுள் ஒருவரான **காளங்கி நாதரின்** சீடர் ஆவார்.

**பழநி** முருகனின் மூலத்திருவுருவச் சிலை போகரால் செய்யப் பட்டது என்று நம்பப்படுகிறது. இச் சிலை நவபாசாணங்களைக் கொண்டு செய்யப்பட்ட நவபாசாணச் சிலை என்று கருதப்படுகிறது.

விவேகானந்தருக்கு புத்தர் கனவில் வந்தார். புத்தர் கூறவந்ததைக் கேட்காமல் விட்டுவிட்டார் விவேகானந்தர். ஆனால் தமது கனவில் வந்த போகர்கொடுத்த நான்கு வரங்களையும் பதிவு செய்துள்ளார் வேதாத்திரி மகரிசி.

---

1. சுவாமி விவேகானந்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்-பக்.25-கங்கா ராமமூர்த்தி-கங்கை புத்தக நிலையம், சென்னை.

2. ஞானக்களஞ்சியம்-பாகம் 2 - பாடல் 1570- வேதாத்திரி மகரிசி - வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.



# 35

## மக்கள் சேவையே மகேசன் சேவை

**தொ**ண்டு என்பது மற்றவர்கள் துன்பம் அல்லது உதவி தேவைப்படும்போது அத்துன்பத்தினைப் போக்க இயன்ற உதவி களைத் தருவது.

அந்தப் பண்பே சேவை என்பதாகும். மறுபயன் கருதாது பிறர்க்கு உதவி செய்யும் பண்பு நல்ல சமுதாயத்தை உருவாக்கும்.

''தன்னலமற்ற சமூக சேவையே உயர்ந்த தெய்வீகப் பணியாகும். நாம் ஒவ்வொருவரும் நம்மை சுற்றியுள்ள சமூகத்தில் துன்பப்படும் உயிர்களுக்கு நம்மால் இயன்ற அளவு சிறிது நேரத்தையும், சக்தியையும், பொருளுதவியையும் அளிக்க வேண்டும். 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்கிற உயரிய விழிப்புணர்வு இந்த தேசத்திற்கு ஏற்பட வேண்டும்.''[1] என்று சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்.

''மக்கள் சேவையே மகேசன் சேவை'' என்பது விவேகானந்தரின் தாரக மந்திரங்களில் ஒன்று. இதனை விளக்க சாஸ்ரங்களிலிருந்து ஒரு கதையை தனது சொற்பொழிவுகளில் அடிக்கடி சொல்வதுண்டு.

ஒரு பணக்காரனுக்குத் தோட்டமொன்று இருந்தது. அதில் இரண்டு தோட்டக்காரர்கள் இருந்தார்கள்.

ஒருவன் சோம்பேறி, வேலையே செய்ய மாட்டான். ஆனால் எஜமான் தோட்டத்திற்கு வந்தால் போதும், உடனே எழுந்து போய் கூப்பிய கைகளுடன் அவரிடம், ''என் எஜமானின் முகம் எவ்வளவு அழகாக இருக்கிறது'' என்று புகழ்பாடி அவர் முன்னால் பல்லை இளித்துக் கொண்டு நிற்பான்.

மற்றவன் அதிகம் பேசுவதே இல்லை. ஆனால் கடினமாக உழைப்பான். பலவகையான பழங்களையும் காய்கறிகளையும் சாகுபடி செய்து, நெடுந்தொலைவில் வசிக்கின்ற அந்த எஜமானின் வீட்டிற்கு சுமந்து கொண்டு செல்வான்.

இந்த இரண்டு தோட்டக்காரர்களுள் யாரை எஜமான் அதிகம் விரும்புவார்?

சிவபெருமான்தான் அந்த எஜமான். இந்த உலகம் அவரது தோட்டம். இங்கே இரண்டு வகையான தோட்டக்காரர்கள் இருக்கிறார்கள்.

ஒரு வகையினர் சோம்பேறிகள். ஏமாற்றுக்காரர்கள். அவர்கள் எதுவும் செய்வதில்லை. சிவபெருமானின் அழகான கண்களையும் மூக்கையும் மற்ற குணநலன்களையும் பற்றிப் பேசிக் கொண்டிருப்பார்கள்.

ஏழைகளான, பலவீனர்களான எல்லா மனிதர்கள், விலங்குகள் மற்றும் அவருடைய படைப்பு அனைத்தையும் மிகுந்த கவனத்தோடு பராமரிப்பவர்கள் மற்றொரு வகையினர்.

இவர்களுள் யார் சிவபெருமானின் அன்பிற்கு உரியவர்கள்?

நிச்சயமாக அவரது பிள்ளைகளுக்குச் சேவை செய்பவர்களே.

- தந்தைக்குச் சேவை செய்ய விரும்புபவர்கள். முதலில் பிள்ளைகளுக்குச் சேவை செய்ய வேண்டும். சிவபெருமானுக்குச் சேவை செய்ய விரும்புபவர்கள், அவரது பிள்ளைகளாகிய இந்த உலக உயிர்கள் அனைத்திற்கும் முதலில் சேவை செய்ய வேண்டும்.
- கடவுளின் தொண்டர்களுக்குச் சேவை செய்பவர்களே அவரது மிகச் சிறந்த தொண்டர்கள்.[2]
- கடவுளுக்குக் தொண்டு செய்வதற்குச் சிறந்த ஒரு வழி இருக்கிறது. ''ஏழைகள், ஒதுக்கப்பட்டவர்கள், நோயாளிகள், பசித்தவர்கள், அநாதைகள் போன்றவர்களுக்குத் தொண்டு செய்வதுதான் அந்தச் சிறந்த வழி''[3]

**''வாழ்வதனை முற்றுணர்ந்து அதை அமைதி வெற்றி**
**வழிகண்டு வாழவைக்கும் பேரறமே தொண்டு''** என்பார் வேதாத்திரி மகரிசி.

தொண்டுக்குத் தியாகமே உரைக்கல்'' என்கிறார் வேதாத்திரி. தொண்டினைச் செய்வதற்குப் பாராட்டையோ பணத்தினையோ எதிர்ப்பார்ப்பது சேவைக்கு இழுக்கானது என்பது வேதாத்திரியின் கருத்தாகும்.

இதனை தனது அனுபவத்தால் உரைக்கிறார் சுவாமி விவேகானந்தர்.

''உலகமாகிய இந்த நரகத்தில் ஒரே ஒரு நாளாவது, ஒரே ஒருவனின் இதயத்திற்காவது சிறிதளவு இன்பமும், மகிழ்ச்சியும் அளிக்க முடியுமானால் அது மட்டுமே நிஜமான சேவையாகும். இந்த உண்மையை வாழ்நாளெல்லாம் பட்ட கஷ்டங்களுக்குப் பிறகு நான் உணர்ந்து கொண்டேன். மற்றவையெல்லாம் பொருளற்ற வெறும் பகல் கனவுகள் என்றுதான் சொல்ல வேண்டும்'' என்பார் சுவாமி விவேகானந்தர்.

இறைநிலை உணர்ந்த ஞான ஆசிரியர்கள்- பயிற்சியாளர்கள் தொண்டு என்ற அருட்பணிக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டு சாதனையாக்க முற்படுதல் உலகில் அமைதி நேர்மையினை நிலை பெறச் செய்யும் என்கிறார் வேதாத்திரி.

**''நீதிநெறி உணர்மாந்தராகி வாழும்**
**நிலையுணர்ந்து தொண்டாற்றி இன்பம்காண்போம்''**[4]

வேதாத்திரியார் கூறுவதற்கு மேலே சென்ற விவேகானந்தர் நம்மை தூய்மைப்படுத்திக் கொள்ளவும் சேவை முக்கியம் என்கிறார்.

பிறருக்காகச் செய்கின்ற சேவையால், நம்மைத் தூய்மைப் படுத்திக் கொள்ள முடியும்.[5]

தொண்டே களங்கங்கள் மறைய ஏற்ற வழியாகுகும் என்பதனை வேதாத்திரி தமது கவிதையில்

**''அகநோக்குப் பயிற்சியால் ஆராய்ந்தும் பரம்பொருளே**
**அறிவாயும் உளதென்று அறிந்திடலாம் எனினும் நாம்**
**இகவாழ்வில் பழக்கத்தால் ஏற்றுள்ள களங்கங்கள்**
**இனிதாய் மாறத் தொண்டே ஏற்ற வழி அதைச் செய்வோம்''**[6]

உரிமை, கடமை, ஒழுக்கம் என்ற மூன்று வகையையும் அறிந்து, தன்னை உருவாக்கி, வாழவைத்து வரும் சமுதாயத்திற்கு எண்ணம், சொல், செயல் இவைகளைக் காலம், இடம், சந்தர்ப்பம் இவை களுக்கேற்றபடி பயன்படுத்தும் செயல்முறை தொண்டு என்று சிறப்பாக பேசப்படுகிறது.[7]

தொண்டே தொழுகையாக வாழ்ந்த மகான்கள் பலரும் தொண்டின் பெருமையை விளக்கமாக மானுடத்திற்குத் தெரிவித்துள்ளார்கள்.

**‘‘அன்பர் பணி செயஎன்னை ஆளாக்கி விட்டு விட்டால்**
**இன்ப நிலை தானே வந்தெய்தும் பராபரமே’’**[8]

என்று தாயுமானவரும்,

‘‘தனி உடைமை கொடுமைகள் தீரத் தொண்டு செய்யடா நீ தொண்டு செய்யடா’’[9]

என்று பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரமும் கூறுகிறபடி தொண்டின் மூலமாகத் தான் சமுதாயப் புரட்சியினை ஏற்படுத்த முடியும்.

எல்லா வளமும் ஓங்கிய உலகுக்கு உள்ள ஒரு குறைபாடு ஆன்மீக விளக்கம் இன்மை.

இதனை முழுமை செய்து மனித குலத்துக்குத் தொண்டாற்ற நீங்கள் ஒவ்வொருவரும் முனைந்து நில்லுங்கள்.

---

1. சுவாமி விவேகானந்தரின் பொன்மொழிகள்-பக்.19-அருண்நிலையம், சென்னை.
2. சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம்-சுடர் 11-பக.63-ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை.
3. ஸ்ரீராமகிருஷ்ணவிஜயம்-ஜூலை 1997-பக்.9 ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை.
4. ஞானக்களஞ்சியம்-பாடல் 3 - பக்.3- வேதாத்திரி மகரிசி - வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.
5. சுவாமி விவேகானந்தரின் பொன்மொழிகள்-பக்.7-அருண்நிலையம், சென்னை
6. ஞானக்களஞ்சியம்-பாடல் 652 - பக்.3-வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.
7. அறிவுத்திருக்கோயில்-நாமக்கல் திறப்புவிழா மலர் பக. 96
8. தாயுமானவரும் வேதாத்திரி மகரிசியும்-பக்.114 - பானுகுமார்-விஜயா பதிப்பகம்-கோயம்புத்தூர்.
9. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்கள்.



# 36

## பொறாமைப் பிடித்த மனிதர்கள்

**பே**ரும் புகழும் பெற்ற மனிதன் ஒருவன் உன்னத நிலையை அடையும்போது வளர்ச்சியைப் பாதிக்கும் வகையில்- அதாவது அவருக்கு கலக்கம் ஏற்படும் வகையில்- அவதூறுகள் பரப்பி விடுவது அந்த காலத்திலிருந்தே இருந்துள்ளது.

இராமாயண காலத்தில் அயோத்தியின் சக்ரவர்த்தி திருமகனாகிய ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியின் மனைவியாகிய அன்னை சீதாதேவியை அயோத்தியில் வாழ்ந்த ஒருவனால் பழி சுமத்தப்பட்டார்.

அமெரிக்காவில் சுவாமிஜி நடத்திக் கொண்டிருக்கும் ஆன்மீக சொற்பொழிவும் வேதாந்த கருத்தையும் கேட்ட அமெரிக்க அறிஞர் பெருமக்கள் கொண்டிருந்த பல தவறான எண்ணங்களை மாற்றி அமைத்தது.

மேலும் அமெரிக்காவில் தலைசிறந்து விளங்கிய ஹார்வர்டு பல்கலைக்கழகம் இவருக்கு கீழை நாட்டு தத்துவ பேராசிரியராக வழங்க முன்வந்தது.

சமஸ்கிருத மொழியில் உள்ள உயர்ந்த வேதாந்தத்தையும் நடைமுறை விஞ்ஞானத்தையும் எடுத்துக் கூறியதை கேட்ட கொலம்பியா பல்கலைக்கழக அறிஞர்கள் பல்கலைக்கழகங்கள் சார்பாக சமஸ்கிருத பேராசிரியர் பதவியை வழங்க முன்வந்தது.

கற்ற வேதாந்தத்தையும் பணத்திற்காகவும் பதவிக்காகவும் விற்பனை செய்துவரும் இந்தக் காலத்திலும் கூட அந்தக் காலத்தில் இரு பதவிகளையும் ஏற்க மறுத்தார்.

அது மட்டுமல்ல, சுவாமி விவேகானந்தரைப் பற்றி அமெரிக்கப் பத்திரிகைகளும், ஐரோப்பிய பத்திரிகைகளும் பலவாறு புகழ்ந்து தள்ளின.

''தெய்வத்தால் உரிமை அளிக்கப்பட்ட பேச்சாளர்'' ''எல்லையற்ற விஷயங்களைக் கூறும் தீர்க்கதரிசி'', ''புயல் வேக இந்துத் துறவி'', ''கீழை நாட்டின் புது விடிவெள்ளி'', ''இந்தியாவின் அவதாரம்'', ''கடவுளால் அனுப்பப்பட்ட புனிதத் தூதர்'', என்றெல்லாம் வர்ணிக்கப்பட்டார்.[1]

இவ்வாறு உருப்பெற்று வரும் வேளையில் விவேகானந்தரின் உரையைக் கேட்ட அமெரிக்க மக்கள் சுவாமிஜியை போன்ற ஒருவரை உருவாக்கக்கூடிய நாட்டிற்கு கிறிஸ்துவ பாதிரியார்களை அனுப்புவது அவசியம் தானா? தகுதியானதா? என்று சந்தேகப்பட்டனர்.

இப்படியே சுவாமிஜியின் சொற்பொழிவு நடந்து கொண்டிருந்தால் தங்களுடைய செல்வாக்கும்-செல்வமும் குறைந்துவிடும் என்ற எண்ணமுடைய பாதிரீயார்கள்- நம் கையை கொண்டு நம் கண்ணைக் குத்துவது போன்று சுவாமிஜிக்கு எதிராக செயலாற்றுவதற்கு தியாக பீஸ் சங்கத்தை சேர்ந்தவர்களும் (விசுவநாதர் போன்றவர்களும்) பிரம்ம சமாஜ தலைவர் பிரதாப் சந்திர மசூர்ந்தாரும் அவர்களுக்கு உதவினர்.

சுவாமிஜியின் புகழைக் கண்டு மசூம்தார் மிகவும் பொறாமை கொண்டார். அதனால் அவரை மட்டம் தட்ட வேண்டும் என்று ஆவல் மிகக் கொண்டார்.

எனவே கிறிஸ்துவர்களுடன் சோந்து சுவாமிஜியைப் பற்றி அவதூறு பேசினார்.

சுவாமிஜி சர்வ மத சபைக்கு எந்த நற்சான்றிதழும் பெற்று வராததைக் காட்டி அவர் எந்த பிரிவினரின் பிரதிநிதியும் இல்லை என்றும் சுவாமிஜி உண்மையான சந்நியாசி இல்லை என்றும் அமெரிக்காவுக்கு வந்த பின்னே சந்நியாசியானவர் என்றும் கபட வேடதாரி என்றும் அவதூறு பேசினார்கள்.

இதற்கும் மேலாக அவருடைய தூய்மையான பிரம்மச்சரியத்தை தாக்கி பேசினார்கள். அமெரிக்க இல்லத்தார்கள் சுவாமிஜியை உபசரிப்பது நல்லதல்ல என்று எச்சரிக்கை விடுத்தனர்.

ஆனால் அமெரிக்க நண்பர்கள் சுவாமிஜியின் தூய்மையை அறிந்திருந்தார்கள். இவருடைய பொய் பிரச்சாரங்கள் எடுபடாமல் போயிற்று. சுவாமிஜியும் இந்த பிரச்சாரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை.[2]

சூரியனை கைகள் கொண்டு மறைக்க முடியுமா? சுவாமிஜியின் புகழ் இந்தியாவிலும் மேலை நாடுகளிலும் நாளேடுகள் மூலமாக வேகமாக பரவியது. கிறிஸ்துவர்களின் தவறான பிரச்சாரமும் பொறாமையும் பொசுங்கி போய்விட்டது.

இந்தப் பொறாமை வேதாத்திரியையும் விட்டு வைக்கவில்லை. கூடுவாஞ்சேரியில்வேலியம்மன் கோவிலில் பண்டிகை நாட்களில் ஆடுகளைப் பலியிடுவது உண்டு. ஊரே திரண்டுவரும் வேளைகளிலும் இவர் அங்குச் செல்லுவதில்லை.

அப்படிச் செல்லாததால் பொறாமைப்பிடித்த ஊர்க்காரர்கள் இவரை ஒரு பகையாளியாகவே கருதினார்கள். ஊர் மக்களிடையே நடந்த ஒரு உரையாடல்...

''ஏண்டா. கோயிலுக்கு அந்த வேதாத்திரி வரல''

''அவருக்கு இந்த ஆடு-கோழி வெட்டுறதெல்லாம் பிடிக்காதாம்''

''அப்போ அவரைக் கூட்டியாந்து வெட்ட வேண்டியதுதானே?''

இப்படிப்பட்ட பொறாமையும் பொச்சரிப்பு உள்ள ஒரு சமுதாயத்திலிருந்துதான் ஒரு மகான் உருவாகியிருக்கிறார்.[3]

பொறாமை என்பது...''அடிமைகளின் குணமாகிய பொறாமை தான் நமது நாட்டின் அழிவுக்கே காரணமாக அமைந்திருக்கிறது. ஆண்டவனே தன் முழு வலிமையைச் செலுத்தியும் இந்தக் காரணத்தால் நமக்கு உதவி ஒன்றுமே செய்ய முடியாமற் போயிற்று...''[4] என்பார் விவேகானந்தர்.

காளானைப் பார்த்தவுடன் கறிவேப்பிலைக்குப் பொறாமை. நேற்று பெய்த மழையில் இன்றைக்கு முளைத்த காளானுக்கு வந்த திமிரைப் பார்!

மூன்று நாளில் பயிரான காளானுக்கு எவ்வளவு விலை கொடுத்து மனிதர்கள் வாங்குகிறார்கள். சமைத்து உண்ணுகிறார்கள்.

ஆனால் மூன்று வருடம் ஒரு முறையாக வளர்ந்த என்னை வெளியில் தூக்கி எறிவதே மனிதர்களுக்கு வேலையாகப் போய் விட்டது என்று கறிவேப்பிலை புலம்பித் தீர்த்தது.

கறிவேப்பிலையின் புலம்பலை முழுவதுமாகக் கேட்ட பிறகு காளான் அமைதியாகப் பேச ஆரம்பித்தது. மழை விழுந்து அன்றைக்கே நான் முளைத்தவன் என்பது முட்டாள்களின் கருத்து.

பூமிக்கடியில் ஆறு மாதங்கள் வளர்ந்து மழை விழுகின்ற போது நான் வெளியில் எட்டிப் பார்க்கிறேன் என்பது தான் உண்மை. ஆறுமாதங்கள் மண்ணுக்குள் நான் பட்டபாடு உனக்குத் தெரியுமா என்ன? என்று சொன்னது.

கறிவேப்பிலை மரத்தின் நிலையில் தான் நம்மில் பலரும் இருக்கிறோம்.

**“வாளெனப் பாய்வது- வஞ்சந்தீர்த்திட**
**நீளெரி புகுந்தென நெஞ்சில் வேவுது**
**கோளினால் உயிர்ப்பது- கொடுமை பலசெய்து பின்**
**ஆளினை உண்பது பொறாமை ஆகுமே”**[5]

மற்றவர்களின் உயர்வைக் கண்டு பொறுக்க முடியாத குணம் தான் பொறாமை என்பார் வேதாத்திரி. இதனை அகற்ற என்ன செய்ய வேண்டும்?

***வினா:*** சுவாமிஜி, என்னைச் சூழ்ந்துள்ளவர்களுடைய பொறாமையை வென்று அவர்கள் தரும் தொல்லைகளை எதிர்த்து வாழ்வில் வெற்றியும் மேன்மையும் அடைய உரிய வழியினை அருள் கூர்ந்து சொல்லித் தரும்படி வேண்டுகிறேன்.

***வேதாத்திரி மகரிஷியின் விடை:*** நீங்கள் முதலில் பிறரிடமிருந்து எதையும் எதிர்பார்க்கக் கூடாது. இயற்கையிலேயே உங்களிடம் அபரிமிதமான ஆற்றல்களும் திறமைகளும் அமைந்திருக்கின்றன. இதை உணருங்கள். அவற்றைப் பெருக்கி நீங்களும் பயன் பெற்று, பிறருக்கும் தாராளமாக உதவமுடியும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

அமைதியாக உட்கார்ந்து நீங்கள் ‘எங்கு, எவ்வாறு, என்னவாக இருக்கிறீர்கள்?’ என்று கணித்துக் கொள்ளுங்கள். அதாவது - வயதில், உடல் வலுவில், உடல் நலத்தில், கல்வியில், தொழில் திறனில், அறிவு வளர்ச்சியில், அதிகாரத்தில், செல்வ நிலையில் சூழ்நிலையமைப்பில் - நீங்கள் எவ்வாறு இருக்கின்றீர்கள் என்று கூர்ந்து அறிவோடு கணித்துக் கொள்ளுங்கள்.

இவ்வளவு இருப்பையும் வைத்துக் கொண்டு நீங்கள் ஏன் பிறரிடமிருந்து எதையோ எதிர்பார்க்க வேண்டும்?

தான், குடும்பம், சுற்றம், ஊர், உலகம் என்ற அளவில் ஒவ்வொருவருக்கும் ஐவகைக் கடமைகள் உள்ளன. உங்களிடமுள்ள இருப்பை வைத்துக் கொண்டு, எந்த அளவில் எவ்வாறு இக்

கடமைகளைச் செய்து, பிறர்க்கு எப்பொழுதும் உதவி செய்து கொண்டே இருக்க முடியும் என்னும் பெருந்தன்மையை மனதில் ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

கடமைகளைச் சிறப்பாகச் செய்வதற்காக எந்தத் திறமை அல்லது இருப்பை வளர்த்துக் கொள்ள முடியுமோ அந்த அளவு அதற்காகவும், ஆற்றலைச் செலவிட வேண்டும். இந்த மாதிரியான உயர்ந்த மனநிலையை வளர்த்துக் கொள்ள ஒரு மாத காலம் இன்று முதல் பழகிக் கொள்ள வேண்டும்.[6]

---

1. விவேகானந்தரைக் கற்போம்-பக்.142-ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை.
2. வீரமும் விவேகமும் நிறைந்த விவேகானந்தர் வாழ்க்கை வரலாறு-பக்.72-பாலாஜி நோட் புக்ஸ்- சிவகாசி.
3. இந்த நூற்றாண்டு தந்த மகான்-பக்75 வேதாத்திரி பதிப்பகம். ஈரோடு..
4. விவேகானந்தரின் அறிவுரைகள்-பக்.89-ஸ்ரீராமகிருஷ்ண மடம்-சென்னை.
5. ஞானக்களஞ்சியம் பாடல் எண்.781-பக்.266-வேதாத்திரி மகரிசி- வேதாத்திரி பதிப்பகம்-ஈரோடு.
6. ஆசிரியர் வேதாத்திரி மகரிசி உபதேசங்களில் நேரிடையாகக் கேட்டவை.



# 37

# ஞானசூரியன்களின் முற்போக்குச் சிந்தனைகள்

பத்தொன்பதாவது மற்றும் இருபதாம் நூற்றாண்டுகளில் மக்களின் மனங்களைக் கவர்ந்த மகான்களுள் சுவாமி விவேகானந்தரும் வேதாத்திரி மகரிசியும் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவ்விருவரும் இருவேறு கோணங்களில் தங்களது கருத்துக்களை வெளிப்படுத்தித் தமக்கென்று இயக்கத்தினை உருவாக்கியுள்ளனர்.

தன்னலங் கருதாது பொது நல உணர்வுடன் மனித இனம் மேம்படுவதற்குரிய விழிப்புணர்வுக் கருத்துக்களைக் கூறியுள்ளனர்.

மனிதர்களிடையே நிலவி வரும் அறியாமை இருளை அகற்றிப் பகுத்தறிவு என்னும் ஒளியினைப் பாய்ச்சியுள்ளார்கள்.

இவர்கள் நீண்ட காலம் பயனளிக்கக் கூடிய புரட்சிகரத் திட்டங்களைத் தீர்க்க தரிசன உணர்வுடன் சொல்லி உள்ளனர்.

## விவேகானந்தரின் முற்போக்கு சிந்தனைகள்

மதம் மற்றும் ஆன்மீகம் பற்றிய உலகளாவிய தமது கருத்துகளைக் கொள்கை அளவில் மட்டும் இருக்கும்படி சுவாமி விவேகானந்தர் விட்டுவிடவில்லை.

அவர் அவற்றைச் சமுதாயத்தின் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்த விரும்பினார்.

இறந்த பின் சொர்க்கத்தில் இடையறாத இன்பத்தைத் துய்க்கலாம் என்று பாமரனுக்குப் போதித்துவிட்டு அவனது அன்றாட அடிப்படைப் பிரச்சனைகளைக் கவனிக்காத மதத்தை அவர் நம்பவில்லை.[1]

விதவைகளின் கண்ணீரைத் துடைக்காத, ஏழையின் பசிக்குச் சோறிடாத மதத்தை அவர் ஏற்கவில்லை.

மனித இனப் பிரச்சனைகளை இவ்வுலகிலும் மறுவுலகிலும் தீர்க்கக்கூடிய மதத்தைப் போதித்தார்.

தொண்டு செய்வதே ஆன்மீக ஒழுக்கத்திற்கு ஆதாரமாக இருக்கும் என்பதன் மூலம் அவர்தம் கொள்கையைச் சாதிக்க முடிந்தது.

பொதுவாக, தர்மத்திற்காகச் செய்யும் செயல்களை அவர் சேவை என ஏற்கவில்லை. இத்தகைய தருமசீலரின் சேவைகள் மக்களுக்குத் தற்காலிகமான நன்மையை மட்டுமே தரும்.

அதே சமயம் அது தொண்டு செய்பவரது கர்வத்தை வளர்க்கலாம். புகழுக்கு ஆசைப்பட்டு, சேவை செய்யப் போய் அவரது ஆன்மீக முன்னேற்றம் தடைபடும்.

சுவாமி விவேகானந்தர் கூறும் தொண்டு உலகம் முழுமைக்கும் ஏற்புடையது. அது எந்த ஒரு குறிப்பிட்ட இனம், நாடு, மதம் ஆகியவற்றிற்கு மட்டுமே உரியதல்ல.

ஒருவரது தொண்டை ஏற்கும் நிலையில் உள்ளவர்களைத் தெய்வ வடிவங்களாக எண்ணிச் செய்யப்படும் சேவையையே அவர் நம்பினார்.

சுவாமிஜியைப் பொறுத்தவரை தொண்டு செய்வோர் தான் சலுகைக்குரியவர். ஏனெனில் அவருக்குச் சேவை செய்யும் வாய்ப்பு கிடைத்தது அல்லவா?

தொண்டு புரிபவர்கள் உலகப்பற்றினை விட்டவர்களாகவோ அல்லது சுயநலத்தை ஒழித்தவர்களாகவோதான் இருக்க முடியும்.

உலகைத் துறத்தல் என்பதைச் சந்நியாசியாவது என்ற பொருளில் சுவாமிஜி கூறவில்லை. ஒருவரது தான் எனும் அகம்பாவம் ஒழிய வேண்டும், சொந்த விருப்பு வெறுப்புகள் கூடாது. குடும்பஸ்தர் களானாலும் துறவிகளானாலும் இத்தகைய பரந்த நோக்கோடு கூடிய தொண்டையும் துறவையும் கடைப்பிடிக்க வேண்டும் என்றார்.

வேதாந்தம் படித்தவர்களுக்கு மட்டுமே உரியது... உயர் வர்க்கத்தினருக்கு மட்டுமே உரியது என்றிருந்த கால கட்டங்களில்...

☆ ''வேதாந்தத்தின் இந்தக் கருத்துக்கள் வெளிவந்தாக வேண்டும். காட்டில் மட்டும் இருந்தால் போதாது. குகைகளில் மடங்களிலும் மட்டும் இருந்தால் போதாது. அவை வெளிவந்து வழக்கறிஞர் சபைகளிலும் வழிபாட்டு மேடைகளிலும் ஏழையின் குடிசையிலும் மீன் பிடிக்கும் மீனவரிடமும் படிக்கின்ற மாணவரிடமும் செயல்பட்டாக வேண்டும்....

☆ மீனவன் தன்னை ஆன்மாவென நினைத்தால் சிறந்த மீனவன் ஆவான். மாணவன் தன்னை ஆன்மாவென நினைத்தால் சிறந்த மாணவன் ஆவான். வக்கீல் தன்னை ஆன்மாவென நினைத்தால் சிறந்த வக்கீலாவான்.''[2]

## வேதாத்திரி மகரிசியின் முற்போக்குச் சிந்தனைகள்

பெண்ணுக்கு கல்வி, பொருளாதார உரிமை வேண்டும் எனப் பெண்ணியக் கோட்பாடுகள் வற்புறுத்துகின்றன.

திருமண வாழ்க்கையின் இன்பத்தைத் தவிர்த்துப் பெண்கள் துன்பப்படுவது உணவு, உடை, என்னும் அடிப்படைத் தேவைக்காக அடிமை வாழ்க்கை வாழ்வதை வேதாத்திரி மகரிசி விரும்பவில்லை.

**''ஒரு பெண் தன் உடலினையே அர்ப்பணித்து**
**உணவு உடை வாடகைபோல் பெற்றுலாவும்**
**ஒரு இழிந்த அடிமை நிலை பெண்ணினத்திற்கு**
**உலகினிலே இனி வேண்டாம், ஒவ்வோர் பெண்ணும்**
**ஒரு தொழிலைச் செய்து பொருள் ஈட்டிக் காத்து**
**உண்டுடுத்துக் கடமை செய்யும் உரிமைவேண்டும்.''[3]**

என்பது மகளிருக்கு அவர் வேண்டும் பொருளாதாரச் சுதந்திரமாகும்.

மண், பெண், பொன் ஆகிய மூவாசைகளைப் பற்றியும் அவற்றைத் துறப்பது பற்றியும் மகரிசிக்கு மாற்றுக் கருத்து உண்டு.

பொன்னாசை பல சிக்கலுக்கு மூலம் என்பதால் அதைத் தவிர்த்துவிட்டு, மண், பெண் இரண்டையும் முறையாகப் பயன்படுத்த வற்புறுத்துகிறார்.

''பெண் இல்லை எனில் பேசும் நீயே ஏது?'' என்ற வினாவை அவர் முன்வைத்து ஒரு சடப்பொருள் போன்று பெண்ணைக் கன்னிகாதானமாகக் கொடுப்பது கொடுமை[4] என்று கூறுவார்.

கற்புநெறியை ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒருங்கே வலியுறுத்துகிறார்.

மறுமணம் செய்து கொள்வதில் ஆண்-பெண் சமத்துவம் தேவை என்கிறார்.

**''ஆண்களோ பெண்டிழந்தால் அவர் மறுமணம் செய்து கொள்வார்**
**வீண்பழி சொல்வார் இந்த விதமதைப் பெண்கள் செய்தால்''**

என்று பெண்களுக்காக வாதம் செய்கிறார்.[5]

''பெற்றோரை, பிறந்த அகத்தை, பிறந்த ஊரை விட்டுப் பிரிந்து வந்து பெருநோக்கில் கடமை, அறம், ஆற்றுகின்ற பெண் பற்றற்ற துறவி போன்றுதான் செயல்படுகிறாள் என்பது வேதாத்திரியின் வாதம்.[6]

வாழத்தெரியாதோர் பெரும்பாலும் வாழ்நாட்டில் ஆளத் தெரியாதோர் ஆட்சியே நடைபெறும்''[7] என்று ஆட்சி மாற வேண்டும் என்கிறார்.

பிறக்கின்ற குழந்தைகளைப் பொதுச் சொத்தாக்கி பொது வளர்ப்பு முறை வேண்டும் என்கிறார்.[8]

ஐந்து வயதிலிருந்து பத்து வயதிற்குள் குழந்தைகளின் எழுத்துக் கல்வி முற்றுப் பெற வேண்டும். அதன் பிறகு இருபது வயது வரைக்கும் தொழில் கல்விதனைக் கற்றுத்தர வேண்டும்.

தொழிற்கல்வி கற்கும் காலங்களில் உலக நாடுகள் பலவற்றிற்கும் சுற்றுப்பயணம் மேற்கொள்ளச் செய்து ஆங்காங்குள்ள தொழிலையும் கற்றுத் தேறுவதற்கு உரிய வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்று உரைக்கின்றார் வேதாத்திரி மகரிசி.[9]

ஒவ்வொருவரும் தனித்தனியாகச் சமைப்பதினால் எரிபொருள், உழைப்பு, பொருளாதாரம் போன்றவை வீண் விரயம் ஆகின்றது. எனவே கூட்டுறவு சமையல் எனும் நவீன முறையை அறிமுகப் படுத்துகின்றார் வேதாத்திரி.[9]

மனிதர்கள் நன்மையைப் பாதுகாத்துச் சீர்திருத்தி நல்வாழ்வு அளிக்க வல்ல அறநெறி சான்ற ஒரே ஒரு ஆட்சிமுறை போதும் என்றும் வலியுறுத்துகிறார்.[10]

பொதுவுடைமை, ஒருலக ஆட்சி, ஒரே சமையல், கல்வி, பெண்ணீயம் என்ற பொதுநலம் கருதிய சிந்தனைகளைத் தம்தம் பார்வைகளில் தங்களது பேச்சாலும் எழுத்தாலும் உலகோர்க்கு உணர்த்தியுள்ள விவேகானந்தரும், வேதாத்திரி மகரிசியும் மேலும் பல்வேறு சீர்திருத்த முன்னேற்ற உணர்வுகளையும் உலக நலம் கருதிச் சிந்தித்து உள்ளனர்.

1. விவேகானந்தரைக் கற்போம்-பக்.135-ஸ்ரீராமகிருஷ்ண மடம். சென்னை.
2. சுவாமி விவேகானந்தரின் வரலாறும் அறிவுரைகளும்-பக.83-.கிருஷ்ண மிஷன்-பேலூர்.
3. வேதாத்திரியத்தில் சமூகவியல் இறையியல் சிந்தனைகள்-பக்.113-உலகதமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
4. மேலது பக்.113
5. மேலது பக்.113
6. மேலது பக். 114
7. மேலது பக். 115
8. மேலது பக். 115
9. வேதாத்திரிய இலக்கிய ஆய்வுக்கோவை-பக். 17 - வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.
10. வேதாத்திரிய சிந்தனைகள்-பாகம் 2-பக்.426- தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.



# 38

# பால்வேற்றுமையை வேரறுக்க முடியுமா?

மூன்று ஆசைகளில் பெண்ணாசை! அன்று முதல் இன்று வரை ஆன்மீக உலகம் பேசும் வார்த்தை.

சடாமுடி திரித்த சந்நியாசிகளும் சறுக்கி விழுந்த இடம். விஸ்வாமித்திரர் வீழ்ச்சி பெற்ற இடம்! போலிச் சாமியார்கள் போர்வைக்குள் ஒளிந்திருந்த இடம்!

ஆனால் ''உறவிலே கண்ட உண்மை நிலைத் தெளிவே துறவு'' என்று வாழ்ந்த வள்ளல்கள் வரலாறும் உண்டு.

ஸ்ரீராமகிருஷ்ணர் இளமையில் முரட்டுத்தன பக்தி கொண்டு இருந்தார். அதைத் தாங்கிக் கொள்ள முடியாத கோயில் நிர்வாகிகள் அவருக்கு புலன் இன்பத்தை ஊட்டினால் மாற்றம் பெறுவான் என்று கருதினார்கள்.

திருமணம் செய்து வைத்தால் பைத்தியம் தெளியும் என்று சில பெற்றோர்கள் நினைப்பதைப் போல் - அவர் தனித்து இருக்கும் வேளையில் சில விலைமாதர்களை அனுப்பி வைத்தார்கள்.

அவரோ காளியின் காட்சி வேண்டும் என்று பலவாறாக கதறிக் கொண்டிருக்கிறார்.

இந்த மாதர்களைப் பார்த்தவுடன் அளவற்ற ஆனந்தம் கொண்டு ''தாயே உன் காட்சியை காண வேண்டும் என்று தவித்துக்

கொண்டு இருந்தேன். நீ இத்தனை வடிவங்களில் காட்சி கொடுத்து விட்டாயே- காளி'' என்று பலவாறாக பரவசப்பட்டு அவர்கள் பாதங்களை வணங்கி- அதீத நிலையில் சமாதி அடைந்து மயங்கி விழுந்தார்.

உயர்ந்த நிலையில் தன் மனைவியையும் காளி மாதாவாகப் பாவித்து பெண்ணிச்சையில் வெற்றி கண்டு உலகுக்குக் காட்டிய மகான் ஸ்ரீராமகிருஷ்ண பரமகம்சர்.

அமெரிக்காவில் சுவாமி விவேகானந்தர் பணமின்றி வாழ்ந்து கொண்டிருந்தார்.

அச்சூழ்நிலையில் பணக்கார விதவை விவேகானந்தரை நோக்கி''உன் வறுமையை அகற்றுகிறேன்- நீ என்னை ஏற்றுக் கொள்'' என்று படையெடுத்தாள்.

ஆனால் ஞானத்துறவி அதனை புறந்தள்ளி புலனடக்கம் காத்தார்.

சுவாமி விவேகானந்தர் சிகாகோவில் உரையாற்றினார். 17 நாட்கள் நடந்த சர்வ சமய மகாநாட்டில் அவர் பலமுறை பேசினார்.

கேட்ட அத்தனைப் பேரும் அவரிடம் நெஞ்சம் பறிகொடுத்தனர். அதில் ஒரு பணக்காரப் பேரழகி அவரைச் சந்தித்து'' நான் உங்களைக் கணவனாக அடைய விரும்புகிறேன்'' என்றாள்.

''அம்மா! துறவியான நான் எப்படி உனக்குக் கணவனாக இருக்க முடியும்? எத்தனையோ பேரை விட்டுவிட்டு என்னை நீ ஏன் கணவனாக அடைய ஆசைப்படுகிறாய்?'' என்றார் விவேகானந்தர்.

''உங்களைப் போல் அறிவில் சிறந்த மகனைப் பெற வேண்டும்'' என்றாள் அவள்.

''என்னைக் கணவனாகப் பெற்றுப் பிள்ளையைப் பெற நீங்கள் காத்திருக்க வேண்டும். ஆனால் நீங்கள் நினைத்தால் இப்போதே என்னைப் போன்ற மகனையல்ல என்னையே நீங்கள் மகனாக ஏற்றுக் கொள்ள முடியும்-தாயே'' என்றார் விவேகானந்தர்.

பெண்களைத் தாயாகப் பார்க்க வேண்டும் என்று தர்மம் கற்றுத் தந்தவர் ஸ்ரீராமகிருஷ்ண பரமகம்சர். அதை வலியுறுத்தியவர் விவேகானந்தர். ஒவ்வொரு இளைஞனும் இதை மனதில் கொள்ள வேண்டும்.[1]

*சரி.... இந்த பால் வேற்றுமை உணர்ச்சியை எப்படி கட்டுப் படுத்துவது?*

*விடையாக வருகிறார் வேதாத்திரி மகரிசி.*

*1956 ஆண்டு சென்னையில் ஓர் அன்பர். அவர் ஆங்கில மருத்துவர். வேதாத்திரி மகரிசியை நன்கு அறிந்தவர்.*

*பெண்பால் எண்ணத்தால் துன்புறுகிறார். தன் மனைவியை மட்டும் அல்ல. எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் அவர் மனதில் கட்டுப்படுத்த முடியாத இச்சை.*

*ஆனாலும் அவரது உள்ளம் இதிலிருந்து விடுபட வேண்டும் என இடைவிடாது முயற்சி செய்கிறது.*

*மூளை செல்களை ஒரு இச்சையில் பழக்கி மேலும் மேலும் அதில் மேற்பதிவு கொடுத்துக் கொண்டே வந்தால் மனிதனுக்கு அந்த இச்சை கட்டுப்படுத்த முடியாததாகிவிடும். உடற்செல்களை செயலாக்கத்தில் ஈடுபடுத்திவிடும்.*

*அவ்வாறே பழகிக் கொண்டிருந்த அந்த அன்பரும் மகரிசியிடம் ஆலோசனை கேட்கிறார்.*

*''அய்யா இந்த சிக்கலில் இருந்து விடுபட தாங்கள் தான் உதவி புரிய வேண்டும். நானும் பலவாறாக முயன்று பார்த்து தோல்வி அடைந்து விட்டேன். வழி கூறுங்கள்'' என்கிறார்.*

*அறிவுவழியே சென்று பழகியவர்களுக்கு பாவனை வராது. பெண்ணைத் தாயாக பாவி என்று சொன்னால் காரண அறிவு அது என் தாய் அல்ல என்று சொல்லும்.*

*அதனால் அதில் தோற்று விடுவார்கள். அவர் ஒரு மருத்துவர் என்பதால் அறிவுக்கு ஏற்றவாறு ஒரு வைத்தியம் செய்கிறார் மகரிசி.*

*''நான் சொல்வதை நீங்கள் உள்ளார்த்தமாக செய்ய வேண்டும். ஒரு அழகான பெண்ணை மனதில் நினைத்துக் கொள்ளுங்கள்'' என்கிறார்.*

*இது என்னடா சங்கடம். அவருக்குத்தான் ஏற்கனவே மனதில் நிறையப்பேர் இருக்கிறார்களே? ஒரு கணமும் அகல மாட்டேன் என்று சொல்லி!*

*''நினைத்துக் கொண்டேன் சாமி'' என்கிறார். அந்தப் பெண்ணிற்கு இப்பொழுது உயிர் இல்லை. தற்பொழுது அந்தப் பெண் எப்படி இருக்கிறாள?''*

''பிணமாக'' கூறும்போதே அவர் ஈர்ப்பு குறைகிறது.

இப்பொழுது உடலில் இருக்கின்ற தோல், சதை- இரத்தம் எல்லாம் நீக்கி விட்டுப் பாருங்கள். என்ன தெரிகிறது. வெறும் எலும்புக்கூடு தான் இருக்கிறது!.

இந்த எலும்புக் கூட்டின் மீது உங்களுக்கு இச்சை இருக்கிறதா அல்லது இந்த தசைகள், இரத்தத்தின் மீது உங்களுக்கு இச்சை இருக்கிறா?

''எந்த இச்சையும் இல்லை. ஒவ்வாமையே தோன்றுகிறது'' என்கிறார்.

உருவத் தோற்றத்தை எடுத்து பழகிய உங்கள் மனத்தில் தான் இச்சை இருக்கிறது. அந்தப் பதிவை நீங்கள் ஆழமாக்கிக் கொண்டுள்ளீர்கள். இனிமேல் நீங்கள் எந்தப் பெண்ணை பார்த்தாலும் தீய எண்ணம் வரும் பொழுது உங்களுடைய அகக் கண்களால் அவர்களுடைய எலும்புக் கூட்டை மட்டும் கவனித்துப் பார்த்து பழகி வாருங்கள்.

அதையே ஆழ்மனதில் பதிவு செய்யுங்கள். பெண்களிடம் நெருங்கிப் பழகுவதையும் தேவையற்று பேசுவதையும் தவிர்த்து விடுங்கள்.

கருமையத்தில் வந்து மேலும் பழக்கமாக்கி கொண்டதை விடாது பயிற்சியாலும் முயற்சியாலும் தான் போக்க முடியும்.

பெண்பால் ஏற்படும் காம இச்சை நாளடைவில் மாறிவிடும் என்கிறார்.

இந்தப் பயிற்சியை மேற்கொண்ட அவர் அந்த எண்ணத்தில் இருந்து சிறிது சிறிதாக விடுவித்து பிறகு வெற்றி கொண்டதாகத் தெரிவித்தார்.

மனித மனம் பேரறிவின் பின்னமாக இருக்கிறது. அது தன்னையோ முழுமையையோ உணராத போது பலவாறான முகங்களைப் பார்த்து ரசித்து தன்னில் பதிய வைத்துக் கொள்கிறது. தன்னுடைய சொத்தாக்கிவித்தாக்கி வருங்கால சந்ததியினருக்கு வாரி வழங்குகிறது.[2]

**''வினைப்பதிவாம் சுமையை விடுத்துத் தூய்மை பெறவே**
**நினைவாய் உடலெடுத்தேன் நிலம் மீது விழுந்த பின்னே**
**எனை மறந்தேன் எந்தன் வினை மறந்தேன் இறைவா**
**உனை மறந்தேன் ஆனால் நீ உள்ளுணர் எனை மீட்டு''[3]**

முயற்சியும் பயிற்சியும் செய்து பால் வேற்றுமையை மனதில் இருந்து வேரறுப்போம்.

வாருங்கள் மனவளக்கலை மன்றத்திற்கு. காயகல்பம் பயில்வோம். பால் உறவில் அளவுமுறை பயில்வோம். வாழ்வில் வளமும் அமைதியும் பேரின்பமும் அடைவோம்.

1. ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்-ஏப்ரல் 2006-பக்15-ஸ்ரீராமகிருஷ்ணமடம்-சென்னை
2. வேதாத்திரி மகரிசியின் அமுதமொழிகள் பக்.242-அன்புநெறி வெளியீடு-திண்டுக்கல்.



# 39

# கர்மயோகிகள் பார்வையில் கர்மயோகம்

ஆன்மா தூய்மை பெற கர்மயோக நெறிகளை வழுவாது பின்பற்றுதல் அவசியம் என ஞானிகள் பலரும் அறிவுறுத்தி உள்ளனர்.

சுவாமி விவேகானந்தர் தனது சொற்பொழிவுகள் அனைத்திலும் கர்மயோகத்தை வலியுறுத்தி பேசுவார்கள்.

விவேகானந்தர் சொல்கிறார்.......

''கர்மயோகம் என்பது எந்தக் கர்மத்தையும் செய்யாது சும்மா இருப்பதன்று.

பற்று இன்றியும் பலனை எதிர்பாராமலும் செய்கின்ற கர்மம் கர்மயோகத்தின் பாற்படும்.

மாறாக பலன் ஒன்றை எதிர்பார்த்தும், நான் செய்கிறேன் என்ற எண்ணத்துடனும் செய்யப்படும் காரியம் பந்தத்தை உருவாக்கித் துன்பத்தில் ஆழ்த்திவிடும்''.

''நிகழ்கின்ற செயல்கள் அனைத்துக்கும் கர்த்தா இறைவனே. அவனே என்னைக் கருவியாய் கொண்டு காரியங்களைச் செய்து முடிக்கிறான்'' என்று எண்ணுபவனைக் கர்மத்தினால் விளையும் பாப புண்ணியங்கள் பற்றி வருத்தமாட்டா. கர்மயோகி என்பவன் அவனே.

கர்மத்தைப் பயில விழைகின்றவன் கடமை என்பது எது என்று தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

கர்மத்தை முறையாகச் செய்துவருவதால் அறிவு தெளிவடைகிறது. தெளிவடைந்த அறிவு ஆத்ம சொரூபத்தை விளங்கச் செய்ததான

கர்மத்தைச் செய்வதற்கு முன் கடமை எது என்று தெரிந்து கொள்ளாமல் ஏனோ தானோ என்று செய்வது பயனற்றதாகி விடும்.

ஏனென்றால், ஒரு செயல் நல்லதா கெட்டதா என்று தீர்மானிப்பதற்கான அளவுகோல்களில் கடமை என்பதும் ஒன்று.

அதனால், ஒருவன் ஒரு செயலைச் செய்வதற்குமுன் அது தன்னுடைய கடமைதானா என்பதை ஆய்ந்து அறிந்து கொள்ள வேண்டும். பிறகு அச்செயலை அவன் சுலபமாகச் செய்து முடிக்கலாம்.

கடமை என்றால் என்ன என்பதைப் பற்றிய கருத்தானது வெவ்வேறு சமுதாயங்களில் வெவ்வேறு வடிவத்தைப் பெற்றுள்ளது.

முஸ்லீம் ஒருவன் தனது மதத்தின் வேத நூலாகிய குர்-ஆனில் விதித்து வைக்கப்பட்டிருப்பவைகள் எவையோ, அவற்றை அனுஷ்டிப்பது தன்னுடைய கடமை என்று கூறுகிறான்.

இந்து ஒருவன் தன் வேதங்களிலும் உபநிடதங்களிலும் உபதேசிக்கப்பட்டிருப்பவைகளைப் பின்பற்றி வாழ்வதே தன்னுடைய கடமை என்று சொல்கிறான்.

கிறிஸ்தவன் ஒருவன் தன் வேதாகம நூலாகிய பைபிளில் போதிக்கப்பட்டுள்ள சமய நடைமுறைகளைப் பின்பற்றி வாழ்வது தான் தன் கடமை என்று இயம்புகின்றான்.

இவ்வாறு ஒவ்வொரு மதத்தைச் சேர்ந்தவனும் கடமையைப் பற்றிய தன் கருத்தினை வெவ்வேறு வகையில் மாறுபட்டுப் பேசுவதை நாம் காண்கிறோம்.

இதிலிருந்து நமக்கு ஓர் உண்மை தெரியவருகிறது.

அதாவது, சமுதாயத்தில் மனிதர்களின் வாழ்க்கைத் தரும் எப்படி அமைந்துள்ளதோ, அவர்கள் எத்தகைய நிலைகளில் வைக்கப் பட்டிருக்கின்றார்களோ, அத்தகைய நிலைகளுக்கு ஏற்பக் கடமைகளும் வெவ்வேறானவைகளாக மாறி அமைகின்றன என்பதுதான் அந்த உண்மை.

ஒரு காலத்தில் கடமையாக அமைந்திருப்பது மற்றொரு காலத்தில் கடமையல்லாததாகப் போய்விடுகிறது.

ஓர் இனத்தவருக்கு அல்லது ஒரு மதத்தவருக்குக் கடமையாக அமைந்திருப்பது மற்றோர் இனத்தவருக்கு, மதத்தவருக்குக் கடமை இல்லை என்றாகிவிடுகிறது.

ஒரு சமுதாயத்துக்குக் கடமையாயிருப்பது மற்றொரு சமுதாயத்துக்குக் கடமையற்றதாய் விடுகிறது.

வாழ்க்கைத் தத்துவங்களை விளக்குவதற்கான சொற்களில் சிலவற்றை எவ்வாறு விளங்கும்படி சொல்வது சாத்தியமில்லையோ, அவ்வாறு கடமை என்ற சொல்லையும் தெளிவுற விளக்குவது சாத்தியமில்லாத காரியம். என்றாலும், நாம் செய்யும் செயல்களில் பயன்களை ஆராய்ந்து பார்ப்பதன் மூலம் எது கடமை என்பதையும் எது கடமை இல்லை என்பதையும் ஓரளவு அறிந்து கொள்ள முடியும்''.[1] என்பார் விவேகானந்தர்.

வேதாத்திரி மகரிசியோ மானுடம் முழுவதற்கும் சாதிமத இன வேறுபாடின்றி கர்மயோகம் பற்றி தெளிவான சிந்தனையை நம் முன் வைக்கிறார்.[2]

* உடலுக்கும் போருளுக்கும் தொடர்புணர்ந்து உழைத்துண்டு உதவுதலே கர்மயோகம்.
* செய் தொழில்களில் இறைநீதி உணர்ந்து பிணக்கின்றி அதன் வழியே செயல்படுதல்தான் கர்மயோகம்.
* தனக்கு எல்லா வசதிகளையும் அளித்து காத்து வருகின்ற சமுதாயத்திற்கு தனது கடமையாற்ற அறிவாலே உடலாலே உழைப்பதுதான் கர்மயோகம்.

மேலும் கர்மயோக வாழ்க்கை நெறிகள் பத்தையும் பாடமாக்கி பல்கலைக் கழகம் வரை கொண்டு சென்றுள்ளார் வேதாத்திரி மகரிசி.[3]

1. தாய், தந்தை, குரு, அரசு, தெய்வம் ஐங்குறவர் வழிபாடு.
2. இறைநிலை எங்கும் நிறைந்தது என உணர்தல்.
3. எண்ணம், சொல், செயலால் துன்பம் விளைவிக்காமை.
4. உணவு, உழைப்பு, ஓய்வு, உடலுறவு, எண்ண அளவுமுறை பேணல்.
5. ஒழுக்கம், கடமை, ஈகை அறநெறி வாழ்க்கை வாழ்தல்.
6. தான், குடும்பம், சுற்றம், ஊர், உலகு, ஐவகை கடமை ஒன்றினால் ஒன்று கெடாமல் செய்தல்.
7. எல்லாக் குற்றங்களுக்கும் தனி மனிதன் மட்டும் காரணமில்லை. கருத்தொடரால் விரிந்த சமுதாயமும் பல குற்றங்களுக்குக் காரணம்.

*8. பெண் பெருமை பேணல்.*

*9. வருமானத்தில் 100 க்கு 1 சதவீதம் ஈகையாக்கல்.*

*10. ஆன்மா தூய்மை பெற, மேன்மை பெற, அகத்தவமாற்றுதல்.*

*கர்மயோகிகள் வகுத்துக் கொடுத்த கர்மயோக நெறிகளைப் பின்பற்றி நாமும் வாழ்ந்து பிறரையும் வாழ வைப்போம்.*

---

1. தர்மச் சக்கரம், பிப்ரவரி 2007-பக்.37, ஸ்ரீராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை.

2. வேதாத்திரி மகரிசியின் பொன்மொழிகள் 5000- பாகம் 1பக்101-பானுகுமார்-விஜயா பதிப்பகம்-கோயம்புத்தூர்.

3. உலகப்பொது அருள்நெறி சமயம் அறிவுத் திருக்கோயில் திறப்புவிழா, சிறப்பு மலர் பக்.39, கும்பகோணம்.



# 40

# யாரிடமும் எதிர்பார்க்காதே

**யா**ரிடமும் எதையும் எதிர்பார்க்காமல் வாழ்வதுதான் வெற்றிக்கான பண்பாகும். இதனை விவேகானந்தர் மிகவும் தெளிவாகவும் விளக்கமாகவும் தெரிவிக்கிறார்.

‘‘சுதந்திரமானவனாக இரு. எவரிடமிருந்தும் எதையும் எதிர்பார்க்காதே. நான் உறுதியாகச் சொல்வேன். உனது கடந்த கால வாழ்க்கையை நீ பின்னோக்கித் திரும்பிப் பார்ப்பாயானால், நீ வீணாக எப்போதும் மற்றவர்களிடமிருந்து உதவியைப்பெற முயற்சி செய்ததையும் அப்படி எதுவும் வராமற் போனதையும்தான் காண்பாய். வந்த உதவிகள் எல்லாம் உனக்குள்ளிருந்தவையாகத் தான் இருக்கும்.

செய்த செயலின் பலனையே நீ பெறுகிறாய் ஆனாலும் வினோதமாக மற்றவர்களிடமிருந்து உதவியை எதிர்பார்க்கிறாய்!

பணக்காரனின் வீட்டு முற்றத்தில் எப்போதும் பலர் கூடி இருப்பார்கள். ஆனால் நீங்கள் சற்று உற்று நோக்கினால் அவர்கள் ஒரே மனிதர்கள் இல்லை என்பது தெரியும்.

அந்தப் பணக்காரனிடமிருந்து ஏதாவது கிடைக்கும் என்று அவர்கள் நம்பியிருக்கிறார்கள். ஆனால் ஒரு நாள் கூட ஒன்றும் பெற்றதில்லை.[1]

‘‘இப்படியே நமது வாழ்நாளெல்லாம் எதிர்பார்த்து- எதிர்பார்த்து முடிவில்லாமல் எதிர்பார்த்தலிலேயே கழிந்து விடுகிறது.

எதிர்பார்ப்பதை விட்டுவிடு என்கிறது வேதாந்தம். நீ ஏன் எதிர்பார்க்கிறாய்? உனக்கு எல்லாம் இருக்கிறது- இல்லை இல்லை- நீயே எல்லாமாக இருக்கிறாய். பின் ஏன் நீ எதிர்பார்க்கிறாய்?''[2]

தத்துவஞானி வேதாத்திரி மகரிஷியும் எதிர்பார்த்தல் பற்றி தெளிவாக விளக்குகிறார்.

**''எதிர்பார்த்தல் ஏமாற்றம்:**
**எதிர்பார்த்தல் எப்போதும் எவரிடமும்**
**ஏமாற்றமே விளைக்கும் ஏதுமனதில் அமைதி**
**எதிர்பார்த்தல் எனும்நோயை மாற்றி மனநலம்காண**
**எதுஉளதோ அதைஏற்று உதவிசெய்தே வாழ்ந்திடுவோம்''**[3]

''நீங்கள் முதலில் பிறரிடமிருந்து எதையும் எதிர்பார்க்கக் கூடாது. இயற்கையிலேயே உங்களிடம் அபரிமிதமான ஆற்றல்களும் திறமைகளும் அமைந்திருக்கின்றன. இதை உணருங்கள்.

அவற்றைப் பெருக்கி நீங்களும் பயன் பெற்று, பிறருக்கும் தாராளமாக உதவமுடியும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

அமைதியாக உட்கார்ந்து நீங்கள் 'எங்கு, எவ்வாறு, என்னவாக இருக்கிறீர்கள்?' என்று கணித்துக் கொள்ளுங்கள். அதாவது - வயதில், உடல் வலுவில், உடல் நலத்தில், கல்வியில், தொழில் திறனில், அறிவு வளர்ச்சியில், அதிகாரத்தில், செல்வ நிலையில் சூழ்நிலையமைப்பில் - நீங்கள் எவ்வாறு இருக்கின்றீர்கள் என்று கூர்ந்த அறிவோடு கணித்துக் கொள்ளுங்கள்.

இவ்வளவு இருப்பையும் வைத்துக் கொண்டு நீங்கள் ஏன் பிறரிடமிருந்து எதையோ எதிர்பார்க்க வேண்டும்?

தான், குடும்பம், சுற்றம், ஊர், உலகம் என்ற அளவில் ஒவ்வொருவருக்கும் ஐவகைக் கடமைகள் உள்ளன. உங்களிடமுள்ள இருப்பை வைத்துக் கொண்டு, எந்த அளவில் எவ்வாறு இக்கடமை களைச் செய்து, பிறர்க்கு எப்பொழுதும் உதவி செய்து கொண்டே இருக்க முடியும் என்னும் பெருந்தன்மையை மனதில் ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

கடமைகளைச் சிறப்பாகச் செய்வதற்காக எந்தத் திறமை அல்லது இருப்பை வளர்த்துக் கொள்ள முடியுமோ அந்த அளவு அதற்காகவும் ஆற்றலைச் செலவிட வேண்டும்.

இந்த மாதிரியான உயர்ந்த மனநிலையை வளர்த்துக் கொள்ள ஒரு மாத காலம் இன்று முதல் பழகிக் கொள்ளுங்கள். இந்த தன்னிறைவுத் திட்டத்தைத்தான் நமது மன்றத்தைச் சேர்ந்த அன்பர்களுக்கு வலியுறுத்தி வருகிறேன்.

இந்தத் திட்டத்தில் மனச்சோர்வுக்கோ, சினத்திற்கோ, கவலைக்கோ இடமில்லை. தன் முயற்சியில், செயலில் விளைவைக் காணும் 'கர்ம யோகம்' இதில் அடங்கியிருக்கிறது.

நீ எதிர்பார்த்தது, எதிபார்த்தபடி பிறர் மூலமாகக் கிடைக்காது. ஒவ்வொரு மாற்றத்திலும் பிணக்குற்று, பிணக்குற்று ஏமாற்றத்திற்கு ஆட்பட்டு அதனாலே துன்பமானது பெருகி கொண்டே போகிறது.

இந்த அடிப்படை தெரிந்து கொண்ட பின்னர் 'எதிர்பார்த்தல்' என்பதை விட்டுவிடுவது நல்லது எனத் தெரிகிறதல்லவா? தொடக்கத்தில் ஒருவார காலம் யாரிடமிருந்தும் எதையும் எதிர்பார்ப்பதில்லை என்ற முடிவினை எடுத்துக் கொள்ளுங்கள். பின்னர் அதை ஒரு மாத காலத்திற்கு நீட்டித்துக் கொள்ளுங்கள். (Do not expect anything from anyone for one week to start with and then extend the period to one month).

அதற்குரிய விளைவு நிச்சயமாக உண்டு

மேலும் விரிவாகச் சொல்கிறார்.

- **எதிர்பார்த்தல் ஏமாற்றம் தவிர்த்து விட்டபோது**
**இயற்கையிலே நமக்கமைந்த ஆற்றல் ஆக்கவழியில்**
**எதிர்ப்பின்றித் தடையின்றி எழுச்சிபெற்று ஓங்கும்**
**எச்செயலும் மனவலிவு நுட்பத்தோடு ஆகும்**
**எதிர்காலம் வாழ்க்கைத் துறை அனைத்திலும் புத்துணர்வும்**
**இன்முகமும் தொண்டாற்ற பலர் நட்பும்கூடும்**
**எதிர்பார்த்து அறிவடைந்த ஏழ்மை நிலைதாண்டி**[3]

நீ எதிர்பார்த்தாலும் எதிர்பார்க்காவிட்டாலும் நீ என்ன செயல் செய்கிறாயோ அந்தச் செயலுக்குத் தக்க விளைவு வந்துதான் ஆக வேண்டும்.

நல்லதை எண்ணி, நல்லதை விளங்கிக் கொண்டு, பயனை உணர்ந்து கொண்டு இப்பொழுது செய்கிறேன்; வருவதை ஏற்றுக் கொள்ளச் சித்தமாயிருக்கிறேன் - இந்த அளவு வரும் எனக்கூட எதிர் பாராது நல்லதைச் செய்யும் போது நிச்சயமாக நன்மை பிறக்கும் என்று செய்.

அவ்வாறு செய்வதற்கு முன்னதாக இன்னொரு ஆராய்ச்சியும் தேவை. அதாவது உன்னைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும்.

**‘‘எதிர்பார்த்தல் எப்போதும் எவரிடமும்**
**ஏமாற்றமே விறைக்கும் ஏதுமனதில் அடைதே**
**எதிர்பார்த்தல் எனும் நோயை மாற்றி மனநலம் காண**
**எதுஉளதோ அதை ஏற்று உதவிசெய்வதே வாழ்ந்திடுவோம்’’[4]**

நீ எங்கே இருக்கிறாய், என்னவாய் இருக்கிறாய்? (What you are, where you are and how you are?) உடல் நலத்திலே, வலுவிலே, வயதிலே, அறிவாற்றலிலே அல்லது விஞ்ஞான வளர்ச்சியிலே, பொருள் உற்பத்தி செய்யும் திறமையிலே, அதிகாரத்திலே, சூழ்நிலையிலே உள்ள ஒரு வாய்ப்பிலே நீ எங்கே இருக்கிறாய், எப்படி இருக்கிறாய்?

இந்த நிலையில் இருந்து கொண்டு உனக்கு, குடும்பத்திற்கு, சுற்றத்தாருக்கு, ஊருக்கு, உலகுக்கு எந்த அளவிலே நான் நன்மை செய்ய வல்லவன். செய்ய முடியும் என்று கணித்துக் கொள். அதைச் செய்ய எப்பொழுதும் தயாராக இரு; செய்துகொண்டே இரு.

வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் அளவு மீறிப் போகாமல் இந்த வழியிலே ஒரே ஒரு வாரம் பயிற்சி செய். இன்னும் சரியாக ஊறி வரவில்லை என்றால் இன்னும் ஒரு மாதமாக வைத்து அந்தப் பயிற்சியையே நீடித்து வா அப்போது பார்க்கலாம் - உனக்கு என்ன வேண்டுமோ அவ்வளவும் கிடைக்கும், அதற்கு மேலேயும் கிடைக்கும்.’’ என்று வழிகாட்டுகிறார் தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி.

---

1. சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம்-பாகம் 6 -பக்.50 ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை.
2. சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம்-பாகம் 6 -பக்.51 ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை.
3. ஞானக்களஞ்சியம்.-பாடல்1216-பக்.415-வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.
4. ஞானக்களஞ்சியம்.-பாடல்724-பக்.250-வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.



# 41

# பாவிகளுக்கும் அருளிய பண்பாளர்கள்

எகிப்து தலைநகரான கெய்ரோவில் சுவாமி விவேகானந்தர் தமது சீடர்களுடன் பேசியபடியே நடந்து சென்று கொண்டிருந்தார்.

பேசிக்கொண்டே சென்றவர்கள்- சரியான வழியில் போகிறோமா என்பதைக் கூடக் கவனிக்காமல் ஒரு சந்தில் நுழைந்து விட்டனர்.

அந்தச் சந்தில் குப்பைகள் ஆங்காங்கே குவிந்து கிடந்தன. சாக்கடை நீரும் சகதியுமாகச் சந்து முழுவதும் துர்நாற்றம் வீசியது.

சந்தின் துவக்கத்தில் ஒரு பாழடைந்த வீடு காணப்பட்டது.

மாடியிலுள்ள ஜன்னல் மேடைகளிலும் படிகளிலும் நெறி தவறிய இளம் பெண்கள் அரைகுறை ஆடையுடன் அமர்ந்திருந்தார்கள்.

வீட்டோரமாக இருந்த ஒரு பெஞ்சின் மீது அமர்ந்து சில பெண்கள் உரக்கப் பேசிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் வருகிறவர் களையும் போகிறவர்களையும் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் இளமையும் அழகும் தெய்வப் பொலிவும் கொண்ட சுவாமிஜியைப் பார்த்ததும் வியப்பால் கண்களை விரித்துப் பார்த்து- ''வா- வா!'' என்று கைநீட்டி அழைக்க ஆரம்பித்தார்கள்.

அந்தப் பெண்களின் செயலைக் கண்டு சுவாமிஜியின் மேலை நாட்டு சீடர்கள் திடுக்கிட்டனர்.

அவர்கள் உடனே சுவாமிஜியை சூழ்ந்து கொண்டு வாருங்கள்! நாம் இங்கிருந்து விரைவாகச் சென்று விடுவோம் என்று அவசரப் படுத்தினார்கள்.

சுவாமிஜி நெறி தவறிய இளம் பெண்களைப் பார்த்துவிட்டார்.

அவர் சீடர்களை விலக்கி தம்மை விடுவித்துக் கொண்டு பாழடைந்த வீட்டை நோக்கி விரைந்தார்.

சீடர்கள் செய்வதறியாமல் திகைத்து நின்றனர்.

சுவாமிஜி அந்தப் பெண்களைப் பார்த்தபடியே சிறிது நேரம் அங்கேயே நின்றார். அதனால் கூச்சலும் குழப்பமுமாக இருந்த அந்த இடத்தில் திடீரென்று அமைதி நிலவியது.

சுவாமிஜி பெஞ்சின் மீது உட்கார்ந்து கொண்டிருந்த பெண்கள் பக்கம் சென்று நின்றார்.

அவரது உள்ளம் அந்தப் பாவப்பட்ட பெண்களுக்காக உருகியது. அவர் கண்கள் கலங்கின.

''ஏழைக் குழந்தைகள்! பாவம் இவர்கள் அழியாத ஆத்ம வஸ்து தாங்கள் என்பதை மறந்து - உடலையே ஆத்மா என்று நினைத்து விட்டார்களே! பாவம்! அதனால்தான் இன்று இந்த இழிந்த நிலை இவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது''

அதற்கு மேல் சுவாமிஜியால் பேச முடியவில்லை. அவர் பெரிதாக அழ ஆரம்பித்தார்.

சுவாமிஜியின் கண்களிலிருந்து அருவி போல் வழிந்து கொண்டிருந்த கண்ணீரைப் பார்த்த அந்தப் பெண்கள் திகைத்தார்கள். இதுவரையில் சிரித்துப் பேசிய பெண்கள்- பேச இயலாமல் வாயடைத்து நின்றனர்.

சிறிது நேரம் சென்றது. சுவாமிஜி பேசிய ஒரு சில வார்த்தைகளே அந்தப் பெண்களைச் செயலிழக்கச் செய்தன.

சுவாமிஜி அணிந்திருந்த நீண்ட அங்கியின் முனையைப் பக்தியுடன் அங்கிருந்த பெண்கள் தொட்டு முத்தமிட்டார்கள். அவர்களுடைய உதடுகள் ''இறைமகன் இறைமகன்'' என்று மெல்ல முணுமுணுத்தன.

தங்கள் செய்து வந்த பாவத் தொழிலுக்காக அச்சமும் நாணமும் கொண்டு தங்களது முகத்தை இரண்டு கைகளாலும் மூடி மறைத்துக் கொண்டனர். கண்ணீர் சிந்தினர்.

பாவிகள் தாங்கள் செய்த பாவங்களுக்குத் திருந்தி சிந்தும் கண்ணீர் பாவத்தைக் கரைத்துவிடும் ஆற்றல் கொண்டதல்லவா? நோயாளிகளுக்குத் தானே மருத்துவம் செய்கிறோம்?

சுவாமிஜியின் கருணைப் பார்வை திருவருள் நோக்கு அந்தப் பெண்கள் மீது விழுந்தது.

பிறகு அவர் திரும்பி விரைவாகச் சீடர்களை நோக்கி வந்தார்.

''வாருங்கள். போகலாம்'' என்று சொல்லிக் கொண்டே சுவாமிஜி வேகமாக நடக்க ஆரம்பித்தார்.

அந்தப் பெண்கள் நீண்ட நேரம் சுவாமிஜி செல்வதைப் பார்த்தபடியே நின்றிருந்தார்கள்.[1]

வேதாத்திரி மகரிசியும் புலவர் தியாகராஜனும் சென்னை தியாகராயநகரில் பக்கத்துப் பக்கத்து அறைகளில் தங்கியிருந்தனர்.

ஒருநாள் நடு இரவுநேரம் ஒரு திருடன் அவர்கள் இருக்கும் மாடி அறைக்குள் ஏறுகிறான். மகரிசியின் அறையில் நுழைகிறான்.

திருடனைப் புலவர் பார்த்துவிட்டார். அரண்டு புரண்டு வந்த வழியே ஓடுகிறான். சுவர் இடிபடும் சத்தம் கேட்டு மகரிசி எழுந்து புலவரிடம் வருகிறார்கள்.

''என்ன சத்தம்?'' என்று சுவாமிஜி வினவுகிறார்கள். ''சுவாமி- திருடன் கடிகாரத்தை எடுத்துக் கொண்டு ஓடுகிறான்.'' என்றார் புலவர்.

திருடன் சென்ற பால்கனிக்கு வருகிறார்கள் மகரிசி. அவன் முகம் தெரியவில்லை. திருடனோ இருட்டில் இருந்த மகரிசியை முழுவதுமாகப் பார்க்கிறான்.

திருடனை நோக்கி ''வாழ்க வளமுடன்- வாழ்க வளமுடன்'' என்று மகரிசி வாழ்த்துகிறார்கள்.

சிறிது நேரம் கழித்து மீண்டும் சன்னல் பக்கம் வருகிறான். எடுத்துச் சென்ற கடிகாரத்தை கொடுக்கிறான். பத்து ரூபாய் கொடுங்கள் என்று வற்புறுத்துகிறான். அல்லது ஐந்து ரூபாயாவது கொடுங்கள் என்கிறான்.

உரையாடல் கேட்டு மகரிசி வருகிறார். அறிவுரைகூறி ஒரு ரூபாய் கொடுக்குமாறு புலவரிடம் கூறுகிறார்கள். காசைப் பெற்றுக் கொண்ட திருடன் ஓடிவிடுகிறான்.

பல நாட்கள் கழித்து திருடன் சுவாமிஜியைப் பார்க்க வந்தான். அடியற்ற மரம் போல் விழுந்து ''சாமி! நானும் என்னைப்போல் பலரும் திருடித்தான் வாழ்கிறோம். எங்களுக்கு திருட்டு நல்ல கிடைக்கணும்ணு வாழத்துங்கள்'' என வேண்டுகிறான். மகான் சிரிக்கிறார்.

திருடக்கூடாது உழைத்துத்தான் வாழணும் என்று அறிவுரை கூறி தன ஆகர்ஷண சங்கற்பம் செய்து இரண்டு ரூபாயை அவனிடம் கொடுக்கிறார்கள்.

''ஒரு ரூபாயைச் செலவு செய்து கொள். ஒரு ரூபாயை கொண்டு தொழில் தொடங்கு வெற்றி கிடைக்கும்'' என்று வாழ்த்துகிறார்கள்.

விவேகானந்தர் சந்தித்தப் பெண்கள் குற்றம் புரிவதற்கும் வேதாத்திரியிடம் திருட வந்த திருடன் குற்றம் செய்வதற்கும் யார் காரணம்?

சமூகக் கேடுகளுக்குச் சமுதாயம் தான் காரணம் என்றுணர்ந்த மகான்களின் செயல்கள் மறக்க முடியாத சம்பவமாகின.

இறைவன் கருணையை நம்மை போன்ற சாதாரண மக்கள் புரிந்து கொள்ள முடியமா?

தவறு செய்தவனுக்குத் தண்டனை - இது உலக நீதி.

மகா பாவிக்கும் மன்னிப்பு - அது தெய்வ நீதி.

உலக நன்மையைக் கோரும்பொழுது நல்லவன்-தீயவன்-குற்றமுடையவன் குற்றமில்லாதவன் என்ற வேறுபாடுகள் இல்லை. மனித நிலையில்தான் இந்த வேறுபாடுகள்.

பேரருளாளரான சுவாமி விவேகானந்தர் - வேதாத்திரி மகரிசி ஆகியோரின் சன்னதி- அவர்களது திருவருட்பார்வை பாவிகளைப் புனிதமாக மாற்றும் திறன் கொண்டது.

அதன் பிறகு பாவிகளுக்குக் குற்றம் புரியும் எண்ணமே தோன்றாது. அவர்கள் தெய்வ நிலைக்கு உயர்த்தப்படுகின்றார்கள். அதுவரையில் செய்த பாவத்தின் கறைகூட அவர்களிடம் இருப்பதில்லை.

---

1. ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்-ஏப்ரல்- 1999-பக்.6- ஸ்ரீராமகிருஷ்ணமடம் சென்னை.

2. வேதாத்திரி மகரிசியின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்- பக்.140- பானுகுமார்-விஜயா பதிப்பகம்-கோயம்புத்தூர்.



# 42

# மகிழ்வுடன் வாழ மகான்கள் கூறும் வழிகள்

சமுதாயத்தில் முழுமையும் மகிழ்ச்சியும் அமைதியும் இன்பமும் பொங்கித் ததும்ப வேண்டுமெனில், ஒவ்வொரு தனிமனிதனும் தனக்கென்று சில கடமைகளையும் கட்டுப்பாடுகளையும் விதித்துக் கொள்ள வேண்டும்.

இந்தக் கடமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் தொகுப்புகளை நாம் மதிப்புகள் அல்லது விழுமியங்கள் என்றும், நெறிகள் என்றும் கூறுகிறோம்.[1]

தனி மனித மேம்பாட்டிற்கும் சமூக உறவிற்கும் விவேகானந்தரும் வேதாத்திரியும் சில எளிய கருத்துகளை அவர்களது கோணங்களில் சுவைபட இனிமையாகக் கூறியுள்ளார்கள்

ஒவ்வொரு மனிதனும் அவர்கள் கூறிய கருத்துகளை நெறிப் படுத்துவார்களேயானால் தனி மனிதன் மகிழ்வுடன் வாழ்வதுடன் தனிமனித மேம்பாடும் சமூக உறவும் மேம்படும் என்பது திண்ணம்.

### விவேகானந்தர் கூறும் வழிகள்

* உன்னால் எதையும் சாதிக்க முடியும்.
* தீமையை எதிர்த்து நில் அஞ்சாமல் எதிர்த்து நில்.
* உயிரே போனாலும் தைரியத்தைக் கைவிடாதே.
* பலவீனத்திற்குப் பரிகாரம் ஓயாது பலவீனத்தை நினைப்பதல்ல; மாறாக பலத்தை நினைப்பதுதான்.

* இரும்புத் தசையும் எஃகு நரம்புகளும், வஜ்ராயுதம் போன்ற மனவலிமையும் உள்ளவர்களே நமக்குத் தேவை.

* இரக்கமுள்ள இதயம், சிந்திக்கும் மூளை, வேலை செய்யும் கைகள் இவையே நமக்குத் தேவை.

* உன்னை நம்பு. எல்லா ஆற்றலும் உன்னிடமே உள்ளது.

* உறுதியான நம்பிக்கைகளே உன்னத செயல்களுக்கு வழிவகுக்கும்.

* சிறந்த குணத்தை உருவாக்கும், மனவலிமையை வளர்க்கும், அறிவை விரியச் செய்யும். ஒருவனைச் சொந்தக் காலில் நிற்கச் செய்யும் கல்வியே நமக்குத் தேவை.

* அச்சமில்லை, அச்சமில்லை என முழங்கு. அச்சமே சாவு. அதுவே பாவம். அதுவே நரகம்.

* இளைஞர்களே, நாம் வேண்டுவதெல்லாம் உற்சாகம், உற்சாகமே.

* எல்லையற்ற சக்தியும், எல்லையற்ற ஊக்கமும், எல்லையற்ற தைரியமும், எல்லையற்ற பொறுமையும் நமக்கு வேண்டும். அப்போதுதான் மகத்தான விஷயங்களைச் சாதிக்க முடியும்.

* கோடானுகோடி மக்கள் பசியிலும் அறியாமையிலும் மூழ்கி யுள்ளனர். அவர்களது செலவில் கல்வி பெற்றுக் கொண்டு அவர்களுக்காக ஒரு சிறிதும் கவலைப்படாமல் இருக்கும் ஒவ்வொருவனும் துரோகியே.

* உன் நிலை எப்படிப்பட்டதாக இருந்தாலும், அதைக் குறித்து நீ கவலைப்பட வேண்டாம். லட்சியத்தைப் பற்றிக் கொண்டு முன்னேறியபடியே இரு!

* நம் சமுதாயமான தேசியக் கப்பலில், ஓட்டைகள் இருந்தாலும் நாம் அதன் பிள்ளைகள் அல்லவா? அந்த ஓட்டைகளை நாம் அடைப்போம், வாருங்கள்.

* துறவும் தொண்டுமே இந்தியாவின் லட்சியங்கள்.

* வேறெந்த நாட்டினரைவிடவும் முற்போக்குடன் இருப்போம். அதே வேளையில் நமது பரம்பரைப் பண்பில் நம்பிக்கை யுடனும் பற்றுடனும் மாறாமல் நிலைத்திருப்போம்.

* வீரர்களே! கட்டுண்டவர்களின் தளைகளை வெட்டி எறியவும், எளியவர்களின் துயரச் சுமையைக் குறைக்கவும் பாமரர்களின் இருண்ட உள்ளங்களை ஒளி பெறச் செய்யவும் முன்னேறுங்கள்.

* நம்புங்கள் உறுதியாக நம்புங்கள். இந்தியர்கள் விழித்தெழ வேண்டும் என்ற கடவுளின் கட்டளை பிறந்துவிட்டது.[2]

* புனிதமும் தூய்மையும் உடையவர்களாக இருங்கள். அன்புக்காகவே அன்பு செலுத்துங்கள்.

* ஏழைகள், துன்புறுபவர்கள், பிற்பட்டவர்கள் ஆகியோர்களை நாம் நேசிப்போமானால் கடவுள் நம்மை ஆசீர்வதிப்பார்.

* உங்களுடைய சிறுமையை நினைக்காதீர்கள். நீங்கள் ஏழைகள் என்ற எண்ணம் உங்களுக்கு வேண்டாம். பணத்துக்கு ஆதிக்கம் இருக்கக் கூடாது. புனிதமும் தூய்மையும்தான் ஆதிக்கம் செலுத்த வேண்டும். புனிதமும் தூய்மையும் எந்த நாட்டில் எப்படி இருக்கிறது என்பதை நாம் காணவேண்டும்.

* அமெரிக்காவைப் போல சுறுசுறுப்பே வடிவெடுத்திருங்கள். அவர்களைப் போல உழைக்கக் கற்றுக் கொள்ளுங்கள். அவர்களைப் போல சுதந்திரம்உடையவர்களாக இருங்கள். அவர்களைப் போன்று தன்னம்பிக்கை உடையவர்களாக இருங்கள். அமெரிக்கர்களிட மிருந்து நாம் இவற்றையெல்லாம் கற்றுக்கொண்டு நம் ஆசாரத்தைப் பின்பற்றி நாம் வளர்ந்து வருவோமானால் நம் நிலை விரைவில் உயர்ந்துவிடும்.[3]

## வேதாத்திரி மகரிசி கூறும் வழிகள்

❖ உடலுக்கும் உயிருக்கும் ஒத்த உறவு, இனிமையான உறவு இருக்கும் வரையில்தான் உடல்நலம், மனநலம் பாதுகாக்கப்பெறும்.

❖ மனத்தை எந்த அளவில் உயர்த்திக் கொள்கிறோமோ, தூய்மை செய்து கொள்கிறோமோ, வலுப்படுத்திக் கொள்கிறோமோ, நெறிப்படுத்திக் கொள்கிறோமோ, அந்த அளவிலே தான் மனிதனுடைய வாழ்வு, மனிதனுடைய மதிப்பு, மனிதனுடைய வெற்றி, மனிதனுடைய எல்லா வளங்களும் அமையும்.

❖ தானே தனது செயல்களைச் சோதனை செய்து விளைவைக் கணித்து திருத்தம் பெறும் வெற்றியே அகத்தாய்வு.

❖ எண்ணம் ஆராய்தல், ஆசை சீரமைத்தல், சினம் தவிர்த்தல், கவலை ஒழித்தல், நான் யார்? - என்ற பயிற்சிகள் மூலம் அகத்தை ஆய்வு செய்து கொள்ள முடியும்.

❖ ஆசை சீரமைத்தல், அகத்தாய்வு பயிற்சி செய்யுங்கள். உடல்நலம். மனவளம், பொருள்வளம், நற்புகழ், நிறைவு இவை பெருகும். அமைதியுண்டாகும்.

- ❖ சினம் தவிர்த்தல் பழகுங்கள். குடும்பம், நண்பர்கள், தொழில் செய்யுமிடத்திலுள்ளோர், உற்றார், உறவினர், இவர்களிடமிருந்து உங்களுக்கு அன்பு, நட்பு இவை கிடைக்கும். இனிமையும் மகிழ்ச்சியும் உண்டாகும்.
- ❖ கவலை ஒழித்தல் பழகுங்கள். அச்சமின்மை - மெய்யுணர்வு உடல்நலம் - மனநிறைவு இவையுண்டாகும்.
- ❖ நான் யார் என்ற ஆராய்ச்சியில் தெளிவு பெறுங்கள். பேரியக்க மண்டலத் தோற்றம். இயக்கம், விளைவு மற்றும் மறைபொருட் களான மனம், உயிர், தெய்வம் இவை பற்றிய உணர்வு உண்டாகும்.
- ❖ அகத்தாய்வு பயிற்சி ஆறு தீயகுணங்களைப் போக்க உதவுகிறது. பேராசை, சினம், கடும் பற்று, உயர்வு தாழ்வு மனப்பான்மை, முறையற்ற பால் கவர்ச்சி, வஞ்சம் என்ற தீயகுணங்களை, முறையே நிறைமனம், பொறுமை, ஈகை, நேர்நிறை உயர்வு, கற்பு, மன்னிப்பு என்ற நற்குணங்களாக மாற்றுகின்றது.
- ❖ நாள்தோறும் செய்தவற்றின் பயனை நீங்கள் நல்லுறக்கம் கொள்வதற்கு முன் கவனித்துக் கொள்வீர்.[4]

இதுபோன்ற வாழ்க்கைக்கு உகந்த உன்னதமான கருத்துக்களை விவேகானந்தரும் வேதாத்திரியும் குறிப்பிடுகின்றார்கள்.

இங்கு உரைத்தவை குறைவே எனினும், அவர்கள் வாழ்வியல் சிந்தனைகள் பல உண்டு. அவர்கள் வாழ்வியல் களஞ்சியமாகத் திகழ்கின்றார்கள்.

"Arise, awake and stop not till the goal reached - எழுந்து கொள்ளுங்கள், விழித்துக் கொள்ளுங்கள், இலட்சியத்தை அடையும் வரையில் நில்லாமல் செல்லுங்கள்'' ''வாழ்க வையகம் வாழ்க வளமுடன்'' என்ற அவர்களது மந்திரச்சொற்கள் அவர்களது வேத வாக்காக இருப்பதால், இச்சொற்களே பல்வேறு வாழ்வியல் சிந்தனைகளைத் தோற்றுவிக்கிறது என்பது உண்மை.

---

1. வேதாத்திரியத்தில் சமூகவியல் இறையியல் சிந்தனைகள்-பக். 30-உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
2. ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்-செப்டம்பர் 2013-பக்.49
3. தர்மச்சக்கரம் - சக்கரம் 39 - ஆரம்11 - பக்.360 -ஸ்ரீராமகிருஷ்ண தபோவனம். திருப்பாராய்த்துறை.
4. வேதாத்திரி மகரிசியின் பொன்மொழிகள்-பாகம் 1 - பக். 13 -பானுகுமார் - விஜயா பதிப்பகம், கோயம்புத்தூர்.



# 43

# நீயே அது

**ந**மக்கு மிகச் சமீப காலத்தில் தோன்றிய மாபெரும் இறை யுணர்வாளர்களுள் இருவர் சுவாமி விவேகானந்தரும் வேதாத்திரி மகரிசியும் ஆவார்கள்.

சுவாமி விவேகானந்தர் தமக்கே உரிய பாணியில் விவேக கதை களையும் உபநிடதக் கதைகளையும், இதிகாசக் கதைகளையும், புராணக் கதைகளையும் தமது சொற்பொழிவுகளில் குறிப்பிடுவது வழக்கம்.

ஒரு தேவனும் ஓர் அசுரனும் ஆன்மாவைப் பற்றி அறிவதற்காக முனிவர் ஒருவரிடம் சென்றனர். பல வருடங்கள் கல்வி கற்றனர்.

இறுதியில் ஒருநாள் அந்த முனிவர் அவர்களிடம், ''நீங்கள் தேடும் பொருள் நீங்களே'' என்று கூறினார்.

தங்கள் உடலே ஆன்மா என்று இருவரும் நினைத்துக் கொண்டனர். மிகுந்த திருப்தியுடன் திரும்பிச் சென்று தங்கள் சுற்றத்தாரிடம், ''கற்க வேண்டிய அனைத்தையும் நாங்கள் கற்றுவிட்டோம். இனி உண்போம், குடித்துக் களிப்போம், நாம்தான் ஆன்மா. நமக்குமேல் எதுவும் கிடையாது'' என்றனர்.

அசுரனின் இயல்பே அறிவீனமும் மூடத்தனமும் தானே. அவன் மேற்கொண்டு சிந்திக்கவில்லை. தானே கடவுள், ஆன்மா என்பது உடலே என்ற கருத்தில் பூரண திருப்பதி அடைந்துவிட்டான்.

தேவன் சற்று தூய இயல்பு படைத்தவனாக இருந்தான். அவனும் முதலில், ''நானே, அதாவது இந்த உடலே பிரம்மம். அதனை வலிமையுடனும் ஆரோக்கியமாகவும் வைத்துக் கொள்ள

வேண்டும். நன்கு அலங்கரித்துக் கொள்ள வேண்டும். எல்லாவித இன்பங்களையும் அதற்கு அளிக்க வேண்டும்'' என்று தவறாக நினைத்தான்.

ஆனால் முனிவர் கூறியதன் பொருள் அதுவாக இருக்காது. அதற்குமேல் ஏதோ இருக்கிறது என்பதைச் சில நாட்களிலேயே புரிந்து கொண்டான்.

எனவே அவன் முனிவரிடம் மீண்டும் சென்று ''சுவாமி, இந்த உடலைத்தான் ஆன்மா என்று கூறினீர்களா? ஆனால் எல்லா உடல்களும் அழிந்து போவதை நான் காண்கிறேனே! ஆன்மா மரணமற்றது அல்லவா?'' என்று கேட்டான்.

அதற்கு அந்த முனிவர் ''கண்டுபிடி. நீயே அது'' என்று கூறினார்.

அந்தத் தேவனும் உடலை இயக்குகின்ற பிராண சக்திகளே ஆன்மா என்பதுதான் முனிவர் கூறிய பொருளாக இருக்கும் என்று எண்ணினான்.

ஆனால் சாப்பிட்டால் பிராண சக்திகள் வலிமையுடன் இருப்பதையும், சாப்பிடாவிட்டால் அவை பலவீனம் அடைவதையும் சில நாட்களுள் அறிந்து கொண்டான்.

எனவே முனிவரிடம் சென்று, ''சுவாமி, பிராண சக்திகளையா ஆன்மாவென்று கூறினீர்கள்?'' என்று கேட்டான்.

அவர் மறுபடியும், ''நீயே கண்டுபிடி, நீயே அது'' என்றார்.

வீடு திரும்பிய தேவன் யோசிக்கலானான். ''ஆன்மா என்பது ஒருவேளை மனமாக இருக்கலாம்'' என்று நினைத்தான்.

ஆனால் எண்ணங்கள் இப்போது நல்லதாக, மறுகணமே கெட்டதாக எத்தனையோ விதமாக இருப்பதை வெகுவிரைவில் அறிந்து கொண்டான்.

மாறுகின்ற மனம் ஆன்மாவாக முடியாது என்று கருதிய அவன் முனிவரிடம் சென்று, ''சுவாமி. மனம் ஆன்மாவாக இருக்க முடியாது என்று நினைக்கிறேன். நீங்கள் அதையா சொன்னீர்கள்?'' என்று கேட்டான்.

அவரோ மறுபடியும், ''நீயே கண்டுபிடி'' என்று கூறிவிட்டார்.

தேவன் வீடு சென்றான். இறுதியில் தானே ஆன்மா என்று தெரிந்து கொண்டான்.

***‘‘ஆன்மா எண்ணங்கள் அனைத்திற்கும்***
***அப்பால் உள்ளது, ஒன்றேயானது,***
***பிறப்பு இறப்பு இல்லாதது,***
***அதனை ஆயுதங்கள் வெட்ட முடியாது,***
***தீ எரிக்க முடியாது, நீர் கரைக்க முடியாது,***
***காற்று உலர்த்த முடியாது. அது ஆதி அந்தம்***
***இல்லாதது, அசைக்க முடியாதது,***
***தொடுதற்கரியது, எல்லாம் அறிந்தது,***
***எல்லாம் வல்லது. அது உடலும் அல்ல,***
***மனமும் அல்ல, அவை அனைத்திற்கும்***
***அப்பால் உள்ளது.***

இவ்வாறு அறிந்த தேவன் திருப்தி அடைந்தான் உடலை நேசித்ததால், பாவம், அந்த அசுரன் உண்மையை அறியவில்லை.[1]

ஆதியாகிய பிரம்மத்தின் எழுச்சியே ஒவ்வொரு ஜீவனும், பிரம்மம் ஒவ்வொரு ஜீவராசியிலும் இருக்கிறது என்று சொல்வதை விட, பிரம்மமே அந்த ஜீவராசியாக தன்மாற்றம் அடைந்திருக்கிறது என்பதுவே உண்மை என்கிறார் வேதாத்திரியார்.

***‘‘ஆதியென்ற பிரம்மமது கடல்போல் ஒன்று***
***அதிலெழுந்த ஜீவனெல்லாம் அலைபோல் ஆகும்***
***பேதமுடன் அலைகள் அவை விரிந்த போதும்***
***பிரியாது கடலை விட்டு கடல் ஒன்றேனும்***
***வாதமிடும் பலகோடி அலைகளும்***
***வழுவாது நிறைந்து நின்று, முடிவில் தன்னுள்***
***நீதமுடன் ஐக்கியங்கொள் தன்மை போல***
***நிலையற்ற சீவாத்மா பரமலாய் ஒன்றும்’’***[2]

தயிரில் பால் இருக்கிறது என்று சொல்வதைவிட, பாலே தயிராகியிருக்கிறது என்பதுதானே உண்மை.[3]

தயிரின் ஒவ்வொரு துளியிலும் பாலின் அம்சம் இருப்பதைப் போல ஜீவனின் ஒவ்வொரு செல்லிலும் பிரம்மத்தின் அம்சம் உண்டு.

---

1. பத்தாம் ஆண்டு நிறுவ விழா மலர்-திருவொற்றியூர்.

2. ஞானக் களஞ்சியம் பாடல் எண்.1084. வேதாத்திரி மகரிசி.

3. வேதாத்திரியத்தில் கேன உபநிடதம்.



# 44

# சான்றோர்கள் வாழ்வில் சகிப்புத்தன்மை

விவேகானந்தர் தமிழகத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த போது ஒருநாள் புகைவண்டியில் பிரயாணம் செய்தார்.

அந்தச் சமயத்தில் சுவாமிகளின் புகழ் வெகுவாகப் பரவி யிருக்கவில்லை. ஒரு சிலருக்கே அவரை அடையாளம் தெரியும்.

விவேகானந்தர் பயணம் செய்த அதே பெட்டியில் சில ஆங்கிலேய படை வீரர்களும் பயணம் செய்தனர்.

காவியுடையில் மிகவும் எளிமையான தோற்றத்தில் அமர்ந்திருந்த சுவாமிகளைப் பற்றி மிகவும் ஏளனமாகக் கருதிய அவர்கள் வாய்க்கு வந்தபடியெல்லாம் ஆங்கிலத்தில் இழிவாகப் பேசிக் கொண்டே வந்தனர்.

அவர்கள் பேசுவது எதுவுமே புரியாதது போல- சுவாமிகள் அப்பாவியாக அமர்ந்திருந்தார்.

சேலம் சந்திப்பில் புகைவண்டி நின்றது. வண்டியில் சுவாமி விவேகானந்தர் இருப்பதைப் பார்த்துவிட்ட அந்தப் புகைவண்டி நிலைய அதிகாரி ஓடோடி வந்து வணங்கி மரியாதை செய்தார்.

பிளாட்பாரத்தில் இறங்கிய சுவாமிகள் நிலைய அதிகாரியுடன் சரளமாக ஆங்கிலத்தில் உரையாடினார். அதனைக் கவனித்த ஆங்கிலேயப் படைவீரர்கள் திடுக்கிட்டு கலக்கமடைந்தனர்.

தாங்கள் அந்த மகானைப் பற்றித் தெரியாமல் கண்டபடி பேசிவிட்டதை எண்ணி வெட்கித் தலை குனிந்தனர்.

மீண்டும் புகை வண்டி கிளம்பியது. படை வீரர்களில் ஒருவன் ''சுவாமி-தாங்கள் தான் ஆங்கிலத்தில் சரளமாக உரையாடுகிறீர்களே! நாங்கள் தவறாகப் பேசும்போது தடுத்துக் கூறியிருக்கலாமே?'' என்று கேட்டான்.

புன்னகை புரிந்த சுவாமிகள், அமைதியாக- ''நான் முட்டாள்களைச் சந்திப்பது இது முதன்முறையல்ல'' என்று ஆங்கிலத்தில் கூறிவிட்டு மௌனமானார்.[1]

ஒரு சமயம் பேருந்து நிலையத்தில் வேதாத்திரி மகரிசி நின்று கொண்டிருந்தார். ஒரு பேருந்தின் அருகில் அதைக் கடந்து கொண்டிருந்த போது- அவர்மீது திடீர் என ''சிவப்பு மழை'' பொழிந்தது. மகரிசி அணிந்திருந்த மேலங்கி முழுவதும் திட்டுத் திட்டாக சிவப்பு நிறமானது.

அருகில் இருந்த பேருந்தில் மழை பொழிந்த மேகத்தைப் பார்க்கிறார். ஒரு வயதான அம்மையார் வாய் நிறைய வெற்றிலை மென்று கொண்டிருந்தார்.

வாயில் கொள்ளாததால் பாரத்தை இறக்கியதைப் பார்த்து விடுகிறார். அதே நேரத்தில் மகரிசியின் ஆடையையும் பார்த்து விடுகிறார்.

உடனே இறங்கி ஓடி வருகிறார். தான் செய்த தவறால் கலங்கிய அவருடைய உள்ளம் மகரிசியின் தோற்றத்தைப் பார்த்தது மேலும் அதிர்ச்சியடைகிறது. தன் தவறுக்கு வருந்திய தாய் பணிவுடன் மகரிசியை நோக்கினார்.

''அய்யா- தங்களைப் பார்த்தால் ஒரு மகானைப் போல் தோன்றுகிறீர்கள். உங்களுக்கு நான் அபச்சாரம் செய்து விட்டேன். என் எச்சிலை உங்கள் மீது உமிழ்ந்து விட்டேன். அறியாமல் செய்த பிழையை மன்னித்தருளவேண்டும்'' என்று உள்ளம் பதற வேண்டுகிறார்.

அதற்கு மகரிசி அவர்கள் ''அதற்கென்ன அம்மா துடைத்து விட்டால் போகிறது. அதற்காக நீங்கள் வருந்த வேண்டாம்'' என்று ஆறுதல் அளிக்கிறார்கள்.

''இல்லை அய்யா! என் மனம் ஆறுதல் அடையவில்லை. தயவு செய்து உங்கள் மேலாடையை கழட்டிக் கொடுங்கள். அதை ஒரு நிமிடத்தில் தூய்மை செய்து கொடுத்துவிடுகிறேன்'' என்று வேண்டுகிறார்.

*மகரிசியின் ஆறுதலில் அம்மையார் ஆறுதல் அடைய வில்லை. தான் செய்த தவறால் வேதனைப் படுகிறார். வருத்தப் படுகிறார். உடனே மகரிசி அவர்கள் அந்த அம்மையாரிடம் கூறுகிறார்.*

*''சட்டையில் எச்சில் பட்டதற்காக ஏனம்மா வருந்துகிறாய்! இந்த உடலே ஒரு பெண்ணின் எச்சத்தில் வளர்ந்து வந்ததுதானே- அதை எதில் கழுவமுடியும்?'' என்கிறார்.*

*அதில் உள்ள உண்மையை உணர்ந்துகொண்ட அம்மையார் ஆறுதல்பெற்று மகரிசியை வணங்கி விடைபெறுகிறார்.*

*மகான்களின் உள்ளம் மன்னிக்கத் தெரிந்த உள்ளம் அல்லவா?*

---

1. சான்றோர் வாழ்வில் சிரிப்புச் சம்பவங்கள்-பக்.50- சுரா புக்ஸ் லிமிடெட். சென்னை.

2. வேதாத்திரி மகரிசி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்-பக். 198 - பானுகுமார் - விஜயா பதிப்பகம்-கோயம்புத்தூர்.



# 45

# மனிதநேயம் போற்றும் மகான்கள்

மனித நேயம் (Humanism) என்பது பரந்துபட்ட பொருட் செறிவு மிக்கஓர் உன்னதக் கோட்பாடு.

மனித நேயத்தை மனிதம், மனிதத்துவம், மானுடம், மானுட நேயம் எனப் பல பெயர்களால் குறிப்பிடுவதுண்டு.

இன்று நாம் மனிதாபிமானம் என்ற சொல்லை மனிதம் மானிடம் மனிதவியல் என்ற சொல்லால் பொருள் கொள்கிறோம்.

தொன்மைக் காலம் தொட்டு இக்காலம் வரை மனிதநேயம் என்ற சொல் அறம், இரக்கம், ஈவு, கருணை, பிற உயிர்கட்குத் தீங்கு செய்யாமை, சகிப்புத்தன்மை என்னும் பொருள் கொண்டு மதிக்கப் பட்டு வருகிறது.[1]

அறம், பொருள், சமதர்மம், சர்வசமயம், சமரசம் என்ற சொல்லால் மனிதநேயம் அழைக்கப்படுகிறது.

மனிதநேயம் என்பது தன்னுரிமை கொண்ட மனித பண்புகளை மையமாகக் கொண்ட ஒரு ''மெய்யியலர்''. தனி மனிதனை மேம்படச் செய்வது.[2]

### மனிதம் காக்க மனிதரே வருவார்கள்

மனித நேயத்தை உலகுக்கு கற்றுக் கொடுத்தவர் அயோத்தி மன்னன் இராமன் ஆவார். அந்த வகையில் தான் சுவாமி விவேகானந்தரும் வேதாத்திரி மகரிசியும் மனித நேயப் பண்புகளை மானுடத்தில் விதைத்துள்ளனர்.

''வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்'' என்று உலக உயிர்களிடத்தில் அன்பு கருணை போன்ற உயிர் நேயத்தை உலகுக்கே கற்றுக் கொடுத்தவர் வள்ளலார்.

அதற்கும் முன்பே படர இடமின்றித் தவித்த முல்லைக் கொடிக்குத் தேர் கொடுத்தான் பாரி வள்ளல்.

கடவுளின் தூதன் நானே மீட்பன் அகிம்சையும் சத்தியமும் தழைக்க வேண்டும் என்று சொன்ன நபிகள் இயேசு காந்தி இவர்கள் வரிசையில் விவேகானந்தரும் வேதாத்திரியும் மனித நேயத்தை பரப்ப வந்தனர்.

இவர்களது உன்னதமான எண்ணங்கள்தான் இம்மண்ணில் மனிதநேயத்தைப் போதித்து வருகின்றன.

## மனிதநேயமும் விவேகானந்தரும்

மனிதநேயம் வளர்வதற்கு முதலாவதாக கல்வி தேவையாக உள்ளது. அதாவது, முழுமையான கல்வி என்பது நுண்ணறிவுப் பயிற்சியோடு மனத்தூய்மையும் ஆன்மீக நெறிகளையும் கற்பிப்பதாக இருக்க வேண்டும்'' என்றார் டாக்டர் இராதாகிருஷ்ணன்.

கல்வி என்ற பெயரில் மூளையில் செய்திகளைத் திணிப்பது விவேகானந்தரைப் பொறுத்தளவில் கல்வியே அல்ல.

எது மனிதனை விடுவித்து நிலையான சிறந்த பணியைச் செய்ய அறிவையும் திறமையையும் அளிக்குமோ அதுவே உண்மையான கல்வி என்கிறார்.

எனவேதான் சுவாமிஜி ''மனிதனை உருவாக்கும் கல்வியே தேவை'' என்று உறுதியாக இருந்தார். அவரைப் பொறுத்தவரை கல்வியே மனிதனை உருவாக்குகினறது.

''மனிதர்கள், மனிதர்கள் மனிதர்களே இன்று முக்கியம். மற்றவையெல்லாம் தன்னாலே நடக்கும்'' என்றார் அவர். மேலும்...

''கல்வி என்றால் என்ன? அது புத்தகங்களைப் படிப்பதா? இல்லை. அல்லது அது பலவிதமானவற்றைக் குறித்த அறிவா? அதுவும் இல்லை. எத்தகைய பயிற்சியின் மூலம் மனவுறுதியின் வேகமும் அதன் வெளிப்படும் தன்மையும் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு பயன்தரும் வகையில் அமைகிறதோ அந்தப் பயிற்சிதான் கல்வியாகும்''[3] என்கிறார். மேலும்...

''தாழ்ந்த நிலையிலுள்ள நம்முடைய மக்களுக்குக் கல்வியைத் தந்து- இழந்துவிட்ட தங்களின் உயர்ந்த நிலையை அவர்கள் வளர்த்துக் கொள்ளும்படி செய்ய வேண்டும். இதுதான் நாம் இப்போது செய்ய வேண்டிய ஒரே சேவையாகும்''[4] என்று மனிதநேயத்தை பறைசாற்றுகிறார்.

## மனிதநேயமும் வேதாத்திரியும்

வள்ளலார் எப்படி அனைத்து உயிர்களிடத்தும் கருணை காட்ட வேண்டும் எனும் உயிர் இரக்க மனித நேயத்தைப் போதித்தாரோ அதைப்போல் வேதாத்திரியும் அனைத்து உயிர்களிடமும் மனித நேயம் வளர அரும்பாடுபட்டவர்.

வேதாத்திரிக்கு இளம் வயதிலேயே மனித நேயச் சிந்தனைகள் தோன்றின. சுமார் 12 வயதிருக்கும்போது தான் படித்த ''புலால் உணவின் கேடுகள்'' என்ற நூலில் கூறியுள்ள கருத்துக்கள் எப்படி தன்னைப் பாதித்தது என்பதை ''எனது வாழ்க்கை விளக்கம்'' என்ற நூலில் விவரிக்கிறார்.

***''அம்மா வெனவலற ஆருயிரைக் கொன்றருந்தி***
***இம்மானிடரெல்லாம் இன்புற்றிருக்கின்றனர்***
***அம்மாவெனும்ஓசை கேட்டகன்ற மாதவர்க்கம்***
***பொய்ம்மா நரகமெனில் புசித்தவர்ககெ சொல்லுதே.***[5]

எனும் பாடலைப் படித்த மகரிசி இவ்வாறு சிந்திக்கிறார்.

***''உலகம் முழுவதிலும் உணவிற்கு ஊன்வேண்டி***
***உயிர்க் கொலைகளை மனிதர் ஓயாமல் புரிகின்றார்.***
***பலவகையாம் கொலை முறையில்***
***பார்வைக்கே சகிக்காத***
***பாபமுறைத் தூண்டில் கொண்டு***
***பதைபதைக்க மீன் பிடித்தல்''*** என்றும்
***''பல்லாயிரும் புழுக்கள்***
***பதைபதைக்க வதைத்தெடுக்க***
***பட்டு என்னும் கொடிய***
***பாவக் குறிப்பை உடுத்தி***
***சொல்லாயிரம் கோத்துத்***
***துதிபாடி தெய்வத்தை***
***சொர்க்கலோகம் வேண்ட-***
***சொல்லெங்கே? செயலெங்கே?''***[6]

என்று உயிர் இரக்கத்தை காட்டுகிறார்.

வேதாத்திரி மகரிசியின் மனித நேயச் சிந்தனைகளில் குறிப்பிட்டுக் கூறவேண்டிய ஒரு கருத்து தூக்குத்தண்டனை பற்றிய கருத்தாகும்.

***''கொலை செய்தான் ஒரு மூர்க்கன் அறிவிழந்து***
***கொலையுண்டான் நீதிபதி அளித்த தீர்ப்பால்***
***கொலைக்குக் கொலை நீதியென்றும் குற்றம்செய்த***
***கொடுமைக்கே தண்டனைகள் என்று சொன்னால்***
***கொலையுண்டோர் மனைவி மக்கள் பெற்றோர் செய்த***
***குற்றமென்ன? குடும்பத்தின் தலைவன் ஆங்கே***
***கொலையுண்ட நிகழ்ச்சி அன்னார் வாழ்வில் என்றும்***
***கொடுந்துன்பம் தரவில்லையா? நீதி எங்கே?''***[7]

தண்டனை என்பது தவறு செய்தவருக்கு மட்டும் இருக்க வேண்டும். ஆனால் கொலைத் தண்டனை வழங்கப்பெற்ற குற்றவாளியின் மனைவி மக்கள் மற்றும் பெற்றேரையும் அது பாதிக்கிறது.

அவர்களுடைய எதிர்காலம் கேள்விக் குறியாகிவிடுகிறது. தண்டனை என்பது தவறு செய்தவன் தன் தவற்றை உணர்ந்து திருந்துவதற்குரிய சந்தர்ப்பத்தை அளிப்பதாக இருக்க வேண்டும் என்ற வேதாத்திரியின் கருத்து மனித நேயத்தின் பாற்பட்டதே.

ஞானதீபமும்- வேதாத்திரியமும் என்பது வாழ்க்கையை ''தேவனாகும்'' முயற்சி - அதுவே ''வானகம் இங்கு தென்பட வேண்டும்'' என்று சொன்ன பாரதியாரின் வாக்கின் பொருள்.

''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற மந்திரமும் ''எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதும்''- கொல்லாவிரதம் ''குவலயம் எல்லாம் ஓங்கவும்''- முன்னைப் பழமைக்கும்- பின்னைப் புதுமைக்கும் வழி காட்டும் விவேகானந்தர் மற்றும் வேதாத்திரி ஆகியோரின் கருத்தியல்- மனிதநேயக் கருத்தியலாக எக்காலத்திற்கும் ஏற்றதாக நின்று நிலவும்.

---

1. வேதாத்திரியச் சிந்தனைகள் பக். 406- தமிழ்ப் பல்கலைக்கழகம்- தஞ்சாவூர்.
2. அருட்தந்தை வேதாத்திரி மகரிசி பன்முக ஆய்வு -பக்.11- வேதாத்திரி பதிப்பகம். ஈரோடு.
3. விவேகானந்தரின் அறிவுரைகள்-பக்.33 ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை.
4. மேலது பக். 37.
5. வேதாத்திரியச்சிந்தனைகள்-பாகம் 4- பக்.293 - தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
6. வேதாத்திரியச்சிந்தனைகள்-பாகம் 4- பக்.294 - தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
7. ஞானக்களஞ்சியம்.-பாடல் 268-பக்.95-வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.



# 46

# பிரார்த்தனை எப்படி இருக்க வேண்டும்?

**பி**ரார்த்தனை அல்லது வேண்டுதல் என்பது இறைவனுடன் நாம் தொடர்பு கொள்வதற்கான மகத்தான சாதனம்.

பிரார்த்தனையால் நுண்ணிய ஆற்றல்கள் எளிதாக விழிப்படை கின்றன. பக்தியுணர்வுடன் பிரார்த்தனை செய்தால் அனைத்து விருப்பங்களும் நிறைவேறும்.

பிரார்த்தனை மூலம் இறைவுனுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ள முடியும் என்பது சுவாமி விவேகானந்தரின் ஆழமான கருத்து.

பசியால் அழும் குழந்தை தாயிடம் பால் கேட்கும். ஆனால் ஞானப்பசி வராத நாம் யாரிடம் பிரார்த்தனை செய்வது? விவேகானந்தர் கூறுகிறார்.

''கடவுளிடமும், அவரது தூதர்களிடமும், உலகைக் காக்க வந்த மகான்களிடமும், ஆன்மாவிடமும் உதவி கோரிப் பிராத்தனை செய்யுங்கள்''.

இறைவனிடம் சுவாமிஜி, ''ஓ. கௌரிமணாளா. ஓ உலக நாயகியே, எனக்கு ஆண்மையைக் கொடு அம்மா, எனது பலவீனத்தைப் போக்கு, என் கோழைத்தனத்தைப் போக்கு! என்னை மனிதனாக்கு'' என்று வேண்டுகிறார்.[1]

இறைவனிடம் என்ன வேண்டிப் பிரார்த்திக்கலாம்? வேதம் ஒரு பொதுப் பிரார்த்தனையை வடிவமைத்துக் கொடுத்துள்ளது.

''எல்லோரும் ஆனந்தமாக இருக்கட்டும். அனைவரும் நோயிலிருந்து விடுபடட்டும். மங்களம் உண்டாகட்டும். எவருக்கும் எந்தவிதத் துக்கமோ, கஷ்டமோ உண்டாகாமல் இருக்கட்டும்''.

''இறைவா என்னை உண்மை அல்லாதவற்றிலிருந்து உண்மைக்கும், இருளிலிருந்து ஒளிக்கும், மரணத்திலிருந்து மரணமிலாப் பெருவாழ்வுக்கும் இட்டுச் சொல்லுங்கள்!'' என்று பிருகதாரண்ய உபநிடதமும்[2] கூறுகிறது.

''இறைவனிடம் உயர்ந்த பொருளையே கேட்டுப் பெறவேண்டும். புலன்களைக் கவரும் அற்பப் பொருளையா கேட்பது? அற்பமான பலவித ஆசைகளைப் பூர்த்தி செய்வதற்காக, கீழ்நிலைக்கு இறங்கி முட்டாள்தனமாகப் பிரார்த்தனை செய்யக் கூடாது''[3] என்கிறார் சுவாமிஜி.

இவ்வாறு கூறும் சுவாமிஜி, ஒருவர் கடவுளிடம் ''எனக்கு இதைத்தா, அதைத் தா என்று கேட்பது எப்படி உண்மையான அன்பாகும்'' என வினவுகிறார்.

''நான் உன்னிடம் வேண்டுகிறேன். அதற்குப் பதிலாக இவற்றைத் தா என்று கேட்பது கடைக்காரனிடம் வியாபாரம் செய்வதேயன்றி வேறென்ன?'' என்றும் சாடுகிறார்.

உண்மையான பக்தர்களின் வேண்டுதல் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு சுவாமிஜி, ''ஓ இறைவா! என்னிடம் எதுவு மில்லை. எனவே எனது இந்த உடலையும் மனதையும் உன் காலடியில் சமர்ப்பிக்கிறேன். என்னைக் கைவிட்டு விடாது, பிரபோ என்று பக்தன் தன் இதய ஆழத்திலிருந்து பிரார்த்தனை செய்ய வேண்டும்'' என்கிறார்.

அதே சமயம், ''ஒன்றை மனதில் கொள்ள வேண்டும் எனக்கு உடல் நலத்தைத் தா, பொருள் வளத்தைத் தா என்று பிரார்த்திருப்பது பக்தியல்ல. அது வெறும் கருமம் அல்லது உயரிய சடங்கு'' என்றும் கண்டிக்கிறார்.

சுவாமிஜி கூறுகிறார்...

- ✪ இறைவனைப் போற்றுவதும், பிரார்த்திப்பதும் நமது வளர்ச்சிக்கு வழிகள். பிரார்த்திப்பதற்கு வார்த்தைகள் தேவையில்லை. மௌன நலம்.
- ✪ வடிவமைக்கப்பட்ட சொற்களால் பிரார்த்தனை செய்வதென்பது செயற்கையாக அமையும்.
- ✪ தியானமும் ஒருவகைப் பிரார்த்தனை தான். பிரார்த்திப்பதும் தியானத்திற்கு சமம் தான்.

- ✪ பிரார்த்தனைகளும், வழிபாடுகளும் தியானத்தின் ஆரம்ப நிலைகள்.
- ✪ பிரார்த்தனைகளும் தலயாத்திரைகளும் நமது உள்ளத்தைச் சுத்திகரிக்கும் சாதனங்கள்.
- ✪ நீங்கள் உயரிய நிலையை அடையும் போது உங்களது மூச்சுக்கூடப் பிரார்த்தனையே.
- ✪ நமது எல்லா நல்ல எண்ணங்களும், பிரார்த்தனைகளும் நமது மிருக சக்தியின் ஒரு பகுதியை ஓஜஸ் சக்தியாக மாற்றி, நமக்கு ஆன்மீக சக்தியை அளித்து உதவுகின்றன.

ஸ்ரீராமகிருஷ்ணரின் அறிவுரையின்படி, சுவாமிஜி தன் குடும்பத்து வறுமையை விலக்கும்படி காளி தேவியிடம் கேட்க வேண்டும் என எண்ணிக் கொண்டு மூன்று முறை போன போதும் முடிவில் என்ன கேட்டார் தெரியுமா?

''அம்மா! எனக்கு வேறெதுவும் வேண்டாம். ஞானத்தையும் பக்தியையும் மட்டும் தந்தருள்''[4]

சுவாமிஜி நமக்காகப் பிரார்த்திக்கிறார்...

துறவின் உயர்நிலையில் திளைத்த சுவாமிஜியின் பிரார்த்தனை என்னவாக இருந்திருக்கும்? அவரே சொல்கிறார்.

''உலக நன்மைக்காக போராடிக் கொண்டிருக்கும்போதே ஒரு வீரனைப் போல் நான் உயிர் விட வேண்டும்.

''எப்போதும், எவ்விடத்தும் உங்களை இறைவன் ஆசிர்வதிக்கட்டும். இதுவே இந்த விவேகானந்தனின் தொடர் பிரார்த்தனை.

''அறியாமையில் மூழ்கி, துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் லட்சக்கணக்கான இந்திய மக்களுக்காக உங்கள் இதயங்கள் இரங்கித் துடிக்குமாறு இறைவன் அருள வேண்டும்'' என்பதே இந்த விவேகானந்தனின் பிரார்த்தனை.

**''வேண்டத்தக்கது அறிவோய் நீ**
**வேண்டற்பொழுது தருவோய் நீ''**

என்று பல மகான்கள் பிரார்த்தனையில் என்ன கேட்பது என்று சொல்லி இருக்கிறார்கள்.

ஆனால் வேதாத்திரி மகரிசியோ பிரார்த்தனையில் என்ன கேட்க வேண்டும் என்பதை ஐந்து வார்த்தைகளில், மானுடத்திற்குத் தந்துள்ளார்கள்.

''அருட்பேராற்றல் கருணையினால் உடல்நலம், நீளாயுள், நிறைசெல்வம், உயர்புகழ், மெய்ஞ்ஞானம் ஓங்கி வாழ்வேன்.''[5]

**மாணவர்கள் எப்படி பிரார்த்திப்பது?**

- அருட்பேராற்றல், கருணையினால் உடல்நலம், நீளாயுள், நிறைசெல்வம், உயர்புகழ். மெய்ஞ்ஞானம், உயர்கல்வி, உயர்ஒழுக்கம் ஓங்கி வாழ்வேன்.

(மனவளக்கலை பயிற்சிகளில் இந்த சங்கற்பமும் அத்துடன் நம்மைக் காத்துக்கொள்ள அருட்காப்பும் கற்றுத்தரப்படுகிறது.)

''நமது ஐவகைக் கடமைகளில் கடைசியில் வரும் உலகக் கடமையினை ஆற்றுவதில் முடிந்தவரையில் மிகுதியான அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

பொருளிலோ, செல்வாக்கிலோ, உடற்கட்டிலே போதிய வலிவு இல்லாத நாம் எப்படி உலக நலக் கடமையினை ஏற்று ஆற்றமுடியும் என்று யாரும் மலைக்க வேண்டாம்.

உங்களிடம் தவத்தால் உறுதி பெற்ற மனோ வலிவு இருக்கிறது. உலக நலத்திற்காக உங்கள் விருப்பத்தைச் சங்கற்பமாக்கிப் பல தடவை உள்ளுக்குள் ஒலித்துக் கொள்ளுங்கள்.

சிதாகாசமாக இயங்கும் உங்கள் உயிராற்றலிலிருந்து கிளம்பும் அந்த உயர்ந்த நினைவு அலை மகாகாசம் என்ற பேரியக்கத் தொடர்கள் உயிரோடு கலந்து அந்த விருப்பம் நிறைவேற வழிவகுத்துக் கொள்ளும்.''[6]

பிரார்த்தனை எப்படி இருக்க வேண்டும் என்பதை இரண்டு மகான்களும் தத்தம் போக்கில் வழங்கியிருந்தாலும் இரண்டுமே மனிதனை நல்வழிப்படுத்தும் போதனைகளாகும்.

---

1. ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்-சனவரி 2014 - பக்.26
2. பிருகதாரண்ய உபநிடதம்.
3. ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்-சனவரி 2014 - பக்.26
4. மேலது பக். 27
5. மனவளக்கலை பயிற்சிகளில் ஆசிரியர் கற்றுக்கொண்டது.
6. பத்தாம் ஆண்டு நிறுவன விழா மலர்-திருவொற்றியூர்-பக்.40



# 47

# இறை ஞானிகளின் இறைசிந்தனைகள்

**மா**னுட வாழ்வுக்கு இறையுணர்வும் அறநெறியும் இரு கண்கள் போன்றதாகும்.

இறைநிலை என்பது பிரபஞ்சத் தோற்றத்திற்கே ஆதிநிலையாகும்.

இறையைப் பற்றிய விவேகானந்தரது மெய்ஞ்ஞானப் பார்வையும் வேதாத்திரியின் மெய்ஞ்ஞானப் பார்வையுடன் விஞ்ஞானப் பார்வையும் மானுடத்திற்கு வழிகாட்டுவதாக அமைந்துள்ளன.

## விவேகானந்தரின் இறைசிந்தனைகள்

கடவுளுக்கு பல வடிவங்கள் அமைந்திருக்கின்றன. அவ்வடிவங்களுள் மானுட வடிவமே சிறந்த வடிவமாகும்.

கோயில் கட்டி அதில் நீ கடவுளைப் பிரதிஷ்டை செய்து அவரை வழிபடலாம். அதுவும் வழிபாடு.

''மானுட சரீரத்தில் வீற்றிருக்கும் தெய்வத்தை வழிபடுவது ஆலயத்தில் செய்யும் வழிபாட்டைவிடச் சிறந்ததாகும்'' என்று விவேகானந்தர் குறிப்பிடுகிறார்.[1] எல்லா உயிர்களிடம் ஈசனைக் காண வேண்டும். இவ்வுலகக் காட்சி மறையும் பொழுது தெய்வகாட்சி தான் நிலைத்திருக்கும்.

மனைவி என்ற பாவனை போய்விட்டால் மனைவியைத் தெய்வமாகக் காண்பாய்.

உன் குழந்தைகளைக் கடவுளாகக் காணும் பொழுது குழந்தைகள் என்னும் காட்சி மறைந்துவிடும்.

வாழ்விலும் மரணத்திலும், இன்பத்திலும் துன்பத்திலும் இறைவன் சமமாக இருக்கின்றார்.

உலகத்தில் இறைவன் தான் நிறைந்திருக்கிறார். உன்னுடைய ஞானக் கண் திறக்கும் பொழுது அவரை நீ காண்பாய் என்று வேதாந்தம் உபதேசிக்கிறது.

கடவுள்தான் அனைத்துமாக இருக்கிறார் என்று அறிந்து நீ செயல் புரிந்து வாழ். இதுதான் நீ செய்ய வேண்டியது. இவ்வாறு செய்வதைத் தவிர அவரைக் காண்பதற்கு நாம் எங்கே செல்லுவது? நம் எண்ணத்திலும் செயலிலும் உணர்விலும் அவரே இருக்கிறார்.

ஜீவன்களுக்குச் செய்யும் சேவை சிவனுக்குச் செய்யும் சேவை யாகிறது. ஒவ்வொரு ஜீவனிடத்திலும் குடிகொண்டிருக்கும் சிவனுக்கு செய்யும் சேவை சிறந்த தவம் ஆகின்றது.

ஏழைகளிடத்தும் எளியோர்களிடத்தும் துயருறுவோரிடத்தும் இறைவனைக் காண்பவன் உண்மையில் இறைவனை வழிபடுகின்றான்.

ஆலயத்தில் இருக்கும் விக்ரகத்தைத் தெய்வமாகப் பாவித்துச் செய்கின்ற வழிபாடு ஆரம்ப வழிபாடாகும்.

உயிர்களைத் தெய்வமாகப் பாவித்து வழிபாடு செய்வதைத் தான் நான் விரும்புகின்றேன்.

நம்மிடத்து இறை உணர்வைத் தோற்றுவிக்காது இறைவனை நாம் எங்கே காண முடியும்?

கடவுள் தாம் அனைத்துமாக இருக்கிறார். கடவுளைத் தவிர வேறொன்றும் இல்லை என்று வேதாந்தம் கூறுகிறது.

இக்கோட்பாடு பலருக்கு அச்சத்தை ஊட்டலாம். ஆனால் இவ்வுண்மையைச் சிறிது சிறிதாக நீங்களே அறிந்து கொள்ளலாம்.

உங்களிடத்திலேயே தெய்வத்தை வைத்துக் கொண்டு இறைவனுக்கு கோயில்களையும் சர்ச்சுகளையும் கட்டுகிறீர்கள்.

உங்களிடத்தில் உள்ள கடவுளை நீங்கள் வழிபடக் கற்றுக் கொள்ளாவிடில் கோயில்களைக் கட்டுவதால் யாது பயன்?

மனிதனிடத்துத் தெய்வம் இருப்பதைக் கண்டு அவன்முன் வீழ்ந்து வணங்குகின்ற அக்கணமே நீங்கள் எல்லாப் பந்தங் களிலிருந்தும் விடுபடுகிறீர்கள்.

உங்களை எதுவும் இவ்வுலகத்தில் அப்பொழுது கட்டுப்படுத்துவதில்லை. உங்களிடத்தில் இருக்கின்ற தெய்வம் எல்லாரிடத்திலும் இருக்கிறார். இவ்வுண்மையை நீஙகள் அறிந்து கொள்ளாவிடில் நீங்கள் எதையும் அறிந்தவர்கள் அல்லர்.[2]

இறை இன்பம்தான் பூரண இன்பம். அது மாறாத இன்பம். இவ்வுலக இன்பத்தோடு அதை ஒப்பிட முடியாது.

அப்பேரின்பத்தின் சிறு பகுதியைத்தான் உயிர்கள் உலக வாழ்வைப் பெற்று மகிழ்ந்திருக்கின்றன.

இவ்வுலக இன்பத்தை எல்லாம் ஒதுக்கித் தள்ளுகின்ற பொழுது அவ்வின்பத்தை நாம் பெற முடியும்.

நம்மிடத்திலுள்ள அறியாமையை அகற்றும்பொழுது உண்மை உள்ளபடி விளங்குகிறது.

இவ்வுலகம் அப்பொழுது ஒளி பொருந்தியதாகத் தென்படுகிறது. உண்மையைப் பற்றிய ஒளியை நாம் பெறுதல் வேண்டும். உலகத்தின் பால் நாம் இப்பொழுது கொண்டுள்ள மனப்பான்மையை விடடொழிக்க வேண்டும்.

உலகம் தெய்வமாகத் தென்படுகிற பொழுது துன்பங்களும் துயரங்களும் புலன் இன்பங்களும் நம்மை விட்டு மறைகின்றன.[3]

### வேதாத்திரியின் இறைசிந்தனைகள்

வேதாத்திரியைப் பொறுத்த வரையில் கடவுள் என்பது ஒன்றே! ''ஒரே பொருள் எல்லாமாக இருக்கிறது'' என்ற அத்வைத தத்துவத்தை முன் வைக்கிறார்.[4]

''வெட்டவெளியே மெய்ப்பொருள். அதன் இயக்க நிலையே பரமாணுவெனும்ஆகாசம், தெய்வம் எனப்படுவது சிவம் எனப்படுவதும் சுத்தவெளியே. அதன் நுண்ணிய ஆற்றலே ஆகாசம்'' எனக் குறிப்பிடுகின்றார்.[5]

சுத்தவெளியின் தன்மை நான்கு என்பார்.

''வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம் எனும் வளம் நான்கும் ஒன்றிணைந்த பெருவெளியே தெய்வம்'' என்பார்.[6]

இறைநிலையும் பிரபஞ்சப் பரிணாமத்தில் அது அமைந்து உள்ள அனைத்து தத்துவங்களும் மறைபொருளாகும்.[7]

1. இறைநிலை

2. இறைத் தத்துவங்கள்

3. விண்துகள்

4. காந்தத் துகள்

5. மனம்

இறைநிலையின் பரிணாம சரித்திரத்தில் அகிலம் என்ற அழகிய வளங்கள் பல நிறைந்த பூந்தோப்பில் கடைசியாகத் தோன்றியதே மனிதகுலம் ஆகும்.

இதில் சீவ மனம் மேன்மையானது ஆறாவது அறிவின் சிறப்பைக் கொண்டு மனத்தூய்மையும் வினைத்தூய்மையும் பெற்று இறையுணர்வு அடைதல் வேண்டும் என்கிறார் வேதாத்திரி மகரிசி.[8]

''மனிதனுக்குள் இறை'' எனவே மனிதனே இறை என்னும் தத்துவத்தை சித்தர்கள் உரைப்பர்.

''என்னிலே இருந்த உன்னை உணர்ந்து கொண்டேனே'' என்று சிவவாக்கியரும், தேகத்ததுக்குள்ளே தெய்வத்தைக் காணலாம் என்றும், நடமாடும் கோயில் என்றும், ஞானியர் கூறுவதைப் போலவே வேதாத்திரியும்,

**''மரத்தினிலே விழையும் அந்த வித்துவினில் மரம் போல்**
**மனிதனுக்குள் தெய்வம் அந்த தெய்வத்திற்குள் மனிதன்''**[9]

என்றும் ''அவனில்தான் நீ உன்னில் தான் அவன்'' என்றும் பாடுவார்.

நமது செயலுக்கும், கடவுளுக்கும் ஒரு உறவு இருக்கிறது. நமது ஒவ்வொரு செயலுக்கும் ஒரு விளைவு உண்டல்லவா? அந்த விளைவு தான் தெய்வநீதி.

**''கல்லார் கற்றார் செயல் விளைவாய்க்**
**காணும் இன்ப துன்பமவன்''** என்கிறது வேதாத்திரியம்.[10]

ஒன்றே பலவானது என்று வேதகாலத்திலிருந்து சொல்லப்பட்டு வந்தாலும், அந்த ஒன்று சுத்தவெளியே என்று தொட்டுக் காட்டியவர் வேதாத்திரி மகரிசியே.

தொட்டுக் காட்டியதோடு அந்த ஒன்று எப்படிப் பலவானது என்பதை விளக்கியதும் அவரே.

இறைநிலை என்பது விஞ்ஞானிகளும் மெய்ஞ்ஞானிகளும் அறிய முடியாத, கருத்து கூறமுடியாத, வரையறை சொல்ல முடியாத இறைத் துகள்களுக்கு மூலமான இறைநிலை ஆகும்.

இறைநிலையை எல்லோராலும் அறியமுடியாது. மனிதனின் ஆறறிவான பகுத்தறிவினைப் பகுத்தாய்ந்து ஆழமான சிந்தனை ஆற்றல் உள்ளவர்கள் மட்டுமே இறைநிலை அடைய முடியும்.

உலகின் தலைசிறந்தவர்களாக விளங்கிய புத்தர், மகாவீரர், வள்ளுவர், வள்ளலார். ஸ்ரீராமகிருஷ்ணர் போன்றோர் இன்றும் மக்களிடையே வாழ்ந்து வருவதற்கு அவர்களின் சீரிய கருத்துக்களும் சிந்தனைகளும் காரணமாகும்.

மனித குலம் முன்னேற்றத்திற்காகப் பல கருத்துக்களை வெளிப்படுத்தி, சமூகம் ஒழுங்குபட அமைதியும் சமாதானமும் பெற்று வாழ்வில் வளமுடன வாழ விவேகானந்தரும் வேதாத்திரியும் வழி வகுக்கின்றார்கள்.

எனவே விவேகானந்தரும் வேதாத்திரியும் புத்தர், வள்ளுவர், போல மனிதகுலம் இருக்கும் வரையில் மக்கள் மனதில் நிலை பெறுவார்கள் என்பது தெளிவு.

---

1. தர்மச்சக்கரம்-சக்கரம் 42-ஆரம்-4-பக். 101
2. மேலது பக். 102
3. மேலது பக் 102
4. வேதாத்திரியச் சிந்தனைகள்-பாகம் 4- பக்.56-தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
5. மேலது பக்.56
6. வேதாத்திரியச் சிந்தனைகள்-பாகம் 2 பக்.18-தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
7. மேலது பக். 19
8. மேலது பக். 21
9. வேதாத்திரிய இலக்கியம் ஆய்வுக் கோவை-பக்46-வேதாத்திரி பதிப்பகம் ஈரோடு.
10. அருள்தந்தை வேதாத்திரி மகரிசி பன்முக ஆய்வு-பக்.209-வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.



# 48

## தவப்புதல்வர்களும் தமிழகமும்

உலகம் உய்ய அவ்வப்போது சான்றோர்களைப் பிரசவித்துக் கொடுத்த பெருமை தமிழகத்திற்கு உண்டு.

திருவள்ளுவர் - ஔவையார் - கணியன்பூங்குன்றனார் - திருமூலர் - மாணிக்கவாசகர் - நாயன்மார்கள் - ஆழ்வார்கள் - வள்ளலார் - தாயுமானவர் - சித்தர்கள் - இரமணர் - ஜே. கிருஷ்ணமூர்த்தி போன்ற எத்தனையோ சான்றோர்களை தமிழ் உலகம் கண்டுள்ளது.

அவ்வரிசையில் வந்த சான்றோர்களுள் ஒருவர் அருள்தந்தை தத்துவஞானி வேதாத்திரி மகரிசி அவர்கள்.

உலக உயர்வுக்கு வழிகாட்ட வந்தோரில் அறவியல் கற்ற விஞ்ஞானிகள் உளர். மெய்யியல் கற்ற மெய்ஞ்ஞானிகள் உளர், சமயச் சான்றோர் உளர், அரசியல் அறிஞர் உளர், இலக்கியச் செல்வர் உளர்.

அவரவரும் அவரவர் வழியில் கருத்து செல்வங்களை வழங்கி விட்டுச் சென்றுள்ளனர். இவ்வரிசையில் வேதாத்திரி மகரிசி மாறுபட்டுத் திகழ்கிறார்கள்.

வேதாத்திரி மகரிசி அறிவியல் கற்ற விஞ்ஞானியாகவும் அறவியல் சமய ஆன்மிகவியல் கற்ற மெய்ஞ்ஞானியாகவும் அரசியல் பேரறிவும் இலக்கியப் புலமையும் படைப்பாற்றல் திறனும் ஒருங்கே கூடியவராகவும் விளங்குகிறார்.

உலக சமுதாயத்திற்கு ஒரு மாபெரும் தத்துவஞானியை தந்து தமிழகம் பெருமை சேர்த்துக் கொண்டது.

அதே போல் சுவாமி விவேகானந்தர் வங்காளத்தில் பிறந்திருந்தாலும்- அவரது பெருமைகளை உலகறியச் செய்தது தமிழகம் என்றால் அது மிகையாகாது.

அப்படி விவேகானந்தருக்கு என்னதான் செய்தது தமிழகம்?

- ❋ சுவாமி விவேகானந்தருக்கு முதன் முதலில் ஒரு சீடர் குழு சென்னையில்தான் உருவாயிற்று.
- ❋ சுவாமி விவேகானந்தரின் சிகாகோ பயணத்திற்காகப் பணம் திரட்டிய முதல் முயற்சி சென்னையில்தான் அரும்பியது.
- ❋ விவேகானந்தரின் இந்துமதம் பற்றிய விளக்கவுரைகளும்- ஸ்ரீராமகிருஷ்ணரின் போதனைகளும் வங்கத்துக்கு அடுத்தபடியாக சென்னையில்தான் முதல் முதலில் வரவேற்று போற்றப் பெற்றன.
- ❋ ஸ்ரீராமகிருஷ்ண-விவேகானந்த இயக்கத்திற்கான பத்திரிகை முயற்சிகள், பிரம்மவாதின், பிரபுத்தபாரதா, பாலபாரதா சென்னையில்தான் முதன் முதலில் தோன்றின.
- ❋ ''நித்தம் தவம் செய்யும் குமரிமுனை''யின் பாறையில் விவேகானந்தர் செய்த தவத்தினால்தான் சிகாகோ பயணம் பற்றிய முடிவு எடுக்கப் பெற்றது.
- ❋ சிகாகோசர்வ மத சபையிலும், மேலை நாடுகளிலும் விவேகானந்தர் மேற்கொண்ட திக்விஜயச் செய்திகளையும் பரவலாகப் பரப்பியவர்களில் முதன்மையானவர்கள், சென்னை சீடர் குழுவினரே.
- ❋ சிகாகோ வீரராக பாரதம் திரும்பிய விவேகானந்தரின் திருவடிகள் முதன் முதலில் தமிழகத்தின் பாம்பன் என்ற சிற்றூரில்தான் வரலாற்றுச் சுவடுகளைப் பதித்தன.
- ❋ சுவாமிஜியின் மாபெரும் மேலை நாட்டு வெற்றிப் பயணத்தின் நினைவுச் சின்னமாக ''சத்தியமேவ ஜயதே'' என்னும் புனிதக் கோஷத்துடன் ஒரு தூண் முதன் முதலில் ராமநாதபுரம் ராஜா பாஸ்கரசேதுபதியால் தான் 1897 இல் பாம்பனில் எழுப்பப் பெற்றது.
- ❋ இந்திய மொழிகளில் முதன் முதலில் தமிழ் மொழியில்தான் சுவாமி வாழ்ந்த காலத்திலேயே 1899ல் அரகபாடி சின்னையா முதலியார் என்னும் வேதாந்தி எழுதிய ''ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் தோத்திர மாலை'' என்னும் நூல் வெளி வந்தது.

❋ விவேகானந்தரின் அருளுரைகள் முதன் முதலில் தமிழ் மொழியில்தான் மொழிபெயர்ப்பு செய்யப் பெற்று ''ஞானத்திரட்டு'' என்னும் பெயரில் ''லோகோபகாரி'' வி.நடராஜ ஐயர் அவர்களால் 1898 ல் வெளியிடப் பெற்றது. இந்த நூல் விவேகானந்தரின் பாராட்டுக் கடிதம் பெற்ற சிறப்புடையது.

❋ விவேகானந்தரின ''சந்நியாசி கீதம்'' இந்திய மொழிகளில் தமிழ் மொழியில்தான் முதன் முதலில் 1904ல் மதுரை விவேகானந்தர் சபையின் பிரதம காரியதரிசியும் புகழ்பூத்த தமிழறிஞருமான ம. கோபாலகிருஷ்ணய்யர் அவர்களால் மொழி பெயர்க்கப்பெற்ற தனி வெளியீடாக வந்தது.

❋ விவேகானந்தரின் பெயரால் ''விவேகானந்தம்'' என்னும் மாதமிருமுறை பத்திரிக்கை இந்திய மொழிகளிலேயே முதன் முதலாக தமிழ் மொழியில்தான் வாணியம்பாடி க. வேங்கடாசலம் நாயுடு அவர்களை ஆசிரியராகக் கொண்டு 1908 முதல் வெளிவந்தது.

❋ வங்கத்தற்கு வெளியே இந்தியாவில் முதன் முதலில் ஸ்ரீராம கிருஷ்ண மடத்தைத் தொடங்கிய சுவாமி விவேகானந்தர் சென்னையைத்தான் தேர்ந்தெடுத்தார்.

❋ விவேகானந்தரின் வேதாந்தப் பிரசாரத்தை ''தேச பக்தியின் தாய் முயற்சி'' எனத் தமிழகத்தில்தான் முதன் முதலில் திட்டவட்டமாக மகாகவி பாரதியாரால் 1909 ல் எடுத்துரைக்கப் பெற்றது.[1]

இவற்றையெல்லாம் விஞ்சும் வண்ணம், சுவாமி விவேகானந்தர் விரும்பிய குருத்தெலும்புள்ள மனிதராக தமிழக தவமுனிவர் வேதாத்திரி வந்தார்.

விவேகானந்தர் கனவு கண்ட மனவளக்கலை பயிற்சி அறிவுத்திருக்கோயில், மதசார்பற்ற ஒரு பொது சங்கம் . ஆன்மீகக் கல்வி பாடத்திட்டம். கல்வியைக் கொண்டு செல்ல பேராசிரியர்கள், உலக பொதுநெறி சமயம் போன்ற திட்டங்களை செயல்படுத்தியவர் தமிழகம் தந்த வேதாத்திரி மகரிசியே என்பதில் நம் அனைவருக்கும் பெருமையே.

1. ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்-சனவரி-1987-பக்.. 30



# 49

# விவேகானந்தரின் எண்ணமே அறிவுத் திருக்கோயில்கள்

ஒரு குறிப்பிட்ட அலை வரிசை உடைய- ஒரு குறிப்பிட்ட எண்ணமானது அதே ஒத்த அலை வரிசை உடைய பல்வேறு மனிதர்களை இயக்கும்.

அப்படி இயக்கும் போது அந்த எண்ணமானது அந்த மனிதர் களைத் தூண்டிவிடும்.

அதனால் தான் - வாழ்ந்து கொண்டிருக்கிற மனிதனின் இறந்தவரின் குணம்-எண்ணம் அல்லது திறமைகள் வெளிப்படும்.

''வான் காந்தத்தில் பதித்த எண்ணமும் செயலும் தேவையாக, பழக்கமாக, சூழ்நிலைக் கவர்ச்சியாக மாறி, அடிக்கடி மனிதனைச் செயல்படுத்துகின்றன.

இந்த விளக்கத்தைக் கொண்டு ஒரு எண்ணம் எவ்வாறு பதிவு, பிரதிபலிப்பு, செயலாற்றல், இன்ப துன்ப விளைவுகள் என்ற நான்காக மாற்றம் பெறுகிறது என்பதை நன்குணரலாம்.'' என்று எண்ணத்தின் வலிமையை வேதாத்திரியார் குறிப்பிடுவார் .

இந்த இலக்கணத்தின்படி எதிர்காலத்தில் ஆன்மீகம் எவ்வாறு பரவ வேண்டும் என்று உதாரணம் காட்டும் போது. ''ஓம்'' வடிவக் கோயிலைக் குறிப்பிடுகின்றார் விவேகானந்தர்.

''இங்கு எல்லாப் பிரிவினருக்கும் பொதுவாக உள்ள கருத்துக்களே கற்பிக்கப்பட வேண்டும். இரண்டாவதாக இக்கோயிலுடன்

தொடர்புடைய ஒரு ஸ்தாபனம் இருக்க வேண்டும். ஆங்காங்கே சென்று நம் மக்களுக்கு சமயப்பிரச்சாரம் புரிவதுடன் லௌகீகக் கல்வியையும் அளிக்கக் கூடிய ஆசிரியர்களை அங்கே பயிற்றுவிக்க வேண்டும்''

''படிப்படியாக மற்ற இடங்களிலும் அதே போன்ற கோயில்களை நிர்மானித்து பாரதம் முழுவதையும் அரவணைக்கும் வரை விஸ்தரிப்போம். இதுவே என் திட்டம்''[1] என்கிறார்.

விவேகானந்தர் உறங்கிவிட்டார். அவர் விதைத்த விதை உறங்கவில்லை. இன்று முளைக்கிறது..

அன்று எண்ணிய விவேகானந்தர் எண்ணம் இன்று முளைத்து வீறு கொண்டு எழுகிறது.

வேதாத்திரி மகரிசி 1958 ல் துவக்கிய உலக சமுதாய சேவா சங்கத்தின் விதையை வான்காந்தத்தில் விதைத்து சென்றவர் சுவாமி விவேகானந்தர்.

அவர் ஒரு சங்கத்தை எவ்வாறு தோற்றுவித்து நடத்த வேண்டும் என்று ''எழுமின் விழுமின்'' என்ற புத்தகத்தில் விவரித்துள்ளார்.

இந்த வேத நாயகனின் எண்ணத்திற்கு உருகொடுக்கும் வகையிலே வேதாத்திரி அவர்கள் அமைத்தது அறிவுத் திருக்கோயிலாகும்.

எங்கும் நிறைந்த இறைவன் அறிவாக அன்பாக எல்லாமாக மலர்ச்சி பெற்றிருக்கின்றான். அந்த அத்வைத தத்துவத்தை உணர்ந்து கொள்ளும் வகையிலே அறிவுத்திருக்கோயில் அமைய வேண்டும் என்று வேதாத்திரி எண்ணினார்கள்.

ஒவ்வொரு மனிதனும் ஒரு நடமாடும் அறிவுத் திருக் கோயிலாகும், மனித குலம் உடல் நலத்திலும்- மனவளத்திலும் மேம்பட்டு அறிவில் உயர்ந்து வாழ வேண்டும்.

இதற்கு என்ன தேவை என்று பார்த்து அதை பயிற்றுவிக்கும் நிலையங்கள் தான் அறிவுத் திருக்கோயில்கள்.[2]

அறிவுத்திருக்கோயில் அருட்தந்தையால் நிர்மானிக்கப்பட்டு ஆழியாறில் 08-02-2004-ல் தொடங்கப்பட்டது. 120 ஆண்டுகளுக்குப் பின் ஒரு வீரத்துறவியின் கனவு இன்று ஞானத்துறவியால் நினைவாகியது.

ஆதி நிலையில் இருந்து இப்பிரபஞ்சம் ஓங்காரமாக எழுச்சி பெற்றது. அதுதான் ''ம்'' என்ற மௌனமொழியாகும்.

*அதை விவிலியமும் ''ஆதியிலே ஒரு வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனோடு இருந்தது. அந்த வார்த்தை தேவனாய் இருந்தது''* (There was a word. The word was wityh God. The word was God.) *என்கிற அந்த அத்வைத ஞானத்தை விளக்குகின்ற வகையில் ''ஓம்'' என்ற வடிவில் அமைந்தது அறிவுத்திருக்கோயில்.*

*இங்கு மனித வாழ்விற்கு உயர்வை அளிக்கும் ஆன்மீகம் மற்றும் பண்பாட்டுக் கல்வியை அளித்து வருகிறார்கள்.*

*இவ்வறிவுத் திருக்கோயில்களின் தோற்றம் மனித வள மேம்பாட்டு சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.*

*சீவகாந்த கருமையம் மனித இனவாழ்க்கையின் கருவூலம். செயலுக்குத் தக்க விளைவைத் தரும் தெய்வீக நீதி மன்றம், பிறப்பிற்கும் இறப்பிற்கும், தொடர் பிறப்புகள் பலவற்றுக்கு மிடையே வினைப்பதிவுப் பெட்டகமாகத் தொடர்ந்து வரும் மாயத்துணைவனவன்.*

*தெய்வத்தையும் மனிதனையும் இணைத்துக் காட்டும் அறிவின் பேரின்பக்களம்.*

*இதன் பெருமையை, மதிப்பை, அதனைப் போற்றிக்காக்கும் முறையை மக்கள் அனைவருக்கும் உணர்த்தி மனிதகுலம் உய்ய ஒரு ஒளி விளக்காக அமைந்திருப்பதே அறிவுத்திருக்கோயில்.*[3]

*மனிதன் வாழ்வில் தானே தனக்கு ஏற்படுத்திக் கொள்கின்ற தடை- (உடல்-நோய்-மனப்பிரச்சினைகள்)- பிற உயிர்களால் வரும் தடை- இயற்கை சக்திகளால் வரும் தடை இவற்றை போக்குவதற்கு உடற் பயிற்சி-தியானப்பயிற்சி - அகத்தாய்வு பயிற்சிகளை முறையாக அளித்து மனம் அமைதியாக வாழ வழி செய்கிறது அறிவுத்திருக்கோயில்.*

*இறைவனை வணங்குமிடம் அறிவுத் திருக்கோயில். அறிவை அறிவால் அறிவதே அறிவுத் திருக் கோயிலின் வழிபாடு. இங்கு ஒலிக்கும் நாதம்.*

***''இறைவனைக் கண்டு கொண்டேன்-அறிவாய்***
***இறைவனைக் காணுகிறேன்.''***

*அறிவுக்கு கோயில் அமைத்த முதல் ஆன்மீகவாதி வேதாத்திரி மகரிசியே.*[4]

அன்று இவர் உலகை நோக்கி எட்டுத்திக்கும் 22 முறைச் சென்றார். இன்று எட்டுத்திக்கிலிருந்தும் உலகமே இவரது அறிவுத் திருக்கோயிலை நோக்கி வருகிறது.

இயற்கையின் பரிணாமச் சிறப்பையும்- சுவாமி விவேகானந்தரின் எண்ணத்தையும்-வேதத்தின் சாரத்தையும் இணைத்து அறிவுத் திருக்கோயிலை உருவாக்கிய அருட்தந்தை வேதாத்திரி மகரிசியை வாழ்த்தி மகிழ்வோம்.

---

1. எழுமின் விழுமின்'' பக்116 விவேகானந்தா கேந்திரம். கன்னியாகுமரி.
2. அறிவுத்திருக்கோவில் மேட்டூர் அணை திறப்பு விழா சிறப்பு மலர்-பக்12.
3. ஆன்மீக அறிவு மேம்பாட்டு அறக்கட்டளை-பத்தாம் ஆண்டு நிறைவு விழா மலர்-பக்.130-திருவொற்றியூர்.
4. இந்த நூற்றாண்டு தந்த மகான்-பக் 85-வேதாத்திரி பதிப்பகம்-ஈரோடு.



# 50

## மக்கள் மனதில் வாழும் மகான்கள்

மகான்கள் காலத்தின் கட்டாயங்கள். மகான்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக அத்திபூத்தாற்போல் வந்தாலும் அந்தச் சிலரின் எண்ணங்கள் தாம் உலக மக்கள் அனைவரையும் அரவணைத்துச் செல்கின்றன.

சுவாமி விவேகானந்தர் மகான்களைப் பற்றி...

- They are brave, bold, they will think beyond their present time deciaring the noblest truths to the Mankind without fear and compromise.[1] என்கிறார்.

இயற்கை பேராற்றல் காலங்களின் நகர்தலில் ஒவ்வொரு நொடியும் லட்சலட்சம் அற்புதங்களை வியப்புகளை, விடுவித்துக் கொண்டு இயங்கிக் கொண்டிருக்கிறது, பல கோடி ஆண்டுகளாக!

ஒவ்வொர் குழந்தையின் அழுகையும் சிரிப்பும் சிணுங்கலும் அசைவும் கூட எத்தனை எத்தனை உள் அதிசயங்களின் குறியீடுகள்!

ஒரு சிறு விதைக்குள் பெரிய பெரிய விருட்சங்கள் ஒளிந்து உறைந்து கொண்டிருப்பதுபோல, ஒவ்வொரு நொடியும் ஆயிரம் ஆயிரம் இரகசிங்களைப் புதைத்துக் கொண்டபடி நகர்ந்து கொண்டிருக்கிறது.

இந்த இரகசியங்களை இயற்கை, தன்னுடைய தகவமைப்புச் சீர்பாட்டிற்காக அவ்வப்போது திறந்து பயன்படுத்திக் கொள்கிறது.

ஒவ்வொரு நொடியும் இயற்கை தன்னைச் செழுமைப்படுத்திக் கொள்கிறது. என்றாலும் எப்போதாவது தன்னையே வியப்புறுத்திக் கொள்வதற்காக பெரும் மகான்களைப் பிறப்பித்துக் கொள்கிறது.

அத்தகைய மகான்கள் இந்த உலகை வழி நடத்துகிறார்கள். புதைந்து கிடக்கும் இயற்கைப் பேராற்றலின் இரகசியங்களை வெளிப்படுத்துகிறார்கள்!

இயற்கை தகவமைப்பில் ஏற்படும் சிக்கல்களைச் சரி செய்கிறார்கள். மானுட அறிவின் வழியாக இயற்கைப் பேரறத்தை நிலை நிறுத்துகிறார்கள்.[2] அந்த வரிசையில் நமக்காக வந்தவர்கள் தான் சுவாமி விவேகானந்தரும் வேதாத்திரி மகரிசியும்.

சுவாமி விவேகானந்தரும், வேதாத்திரி மகரிசியும் உலக குருமார்களில் முக்கியமானவர்களாகக் கருதப்படுகிறார்கள். கோடானு கோடி மக்களுக்கு வழங்குவதற்குரிய செய்திகளுடன் அவதரித்தவர்கள்.

வரலாற்றில், ஒரு சில காலக்கட்டங்களில், இயற்கையின் சரித்திரச் சத்தியங்கள் ஒரு தனி மனிதரின் வாழ்க்கையோடு பின்னிப்பிணைக்கப்பட்டு விடுகின்றன.

அந்தக் காலக்கட்டத்தில்தான், இறைச்சத்தியம் அந்த மனிதரின் அனுபவமாக, மகா வாக்கியமாக, உலகிற்கு உணர்த்தப்படுகின்றது.

இந்தச் சத்தியம் தான் வள்ளுவரின் திருக்குறளாகவும், புத்தரின் தம்மபதமாகவும், ஆதிசங்கரரின் அத்வைதமாகவும், ஏசுவின் பைபிளாகவும், நபிகளின் குரானாகவும், வள்ளலாரின் அருட்பாவையாகவும், மாணிக்கவாசகரின் திருவாசகமாகவும், நாயன்மார்களின் தேவாரமாகவும், சுவாமி விவேகானந்தரின் ஞானதீபமாகவும் சென்ற நூற்றாண்டில் நம்மை வந்து அடைந்தன.

அதே இறைச் சத்தியம் இந்த நூற்றாண்டில் வேதாத்திரியின் வேதாத்திரியமாக இறைஞானமாக நம்மை அடைகின்றது.[3]

விவேகானந்தரின் ஞானதீபம் வேதாத்திரியின் ஞான ஒளியாக உலகெங்கும் வெளிச்சத்தை தந்து கொண்டிருக்கிறது.

## நூறு ஆண்டுகளுக்குப் பின்...

சுவாமி விவேகானந்தர் யார்? எங்கிருந்து வந்தார்? எப்படி வாழ்ந்தார்? கடைசியில் எங்குச் சென்றார்?

*இது போன்ற கேள்விகளை மக்கள் முன்பும் கேட்டனர்! இன்றும் கேட்கிறார்கள்... என்றும் கேட்பார்கள்!*

*இதற்கு ஸ்ரீராமகிருஷ்ணரும் கூறியுள்ளார். சுவாமி விவேகானந்தரும் கூறியுள்ளார்.*

*''மற்றொரு விவேகானந்தர் இருந்தால் - அவர்தான் இந்தக் கேள்விகளுக்கு விடையை அறிவார்.''*[4]

*சரியாக விவேகானந்தர் மறைந்ததற்குப் பிறகு ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு இன்னொரு விவேகானந்தர் பிறக்கிறார்.*

*விவேகானந்தரின் 150 ஆவது ஆண்டில் முன்னவர் விட்டுச் சென்ற பணிகளை முடித்துவிட்டு சென்றுவிட்டார்.*

*அவர்தான்... அருட்தந்தை வேதாத்திரி மகரிசி...*

*யுகநாயகர் சுவாமி விவேகானந்தர் வழிநின்று மெய்ஞ் ஞானத்துடன் விஞ்ஞானத்தையும் நிறைவாகச் சேர்த்து- இறை நிலையோடு ஒன்றித் தான் பெற்ற அதி உன்னத உண்மைகளை- இந்த உலகிற்கு எவ்வித அச்சமும் தயக்கமும் இன்றி எடுத்துக் கூறியவர் வேதாத்திரி மகரிசி.*

*மனிதர்களை உருவாக்கிய இந்த மாமனிதர்கள் காட்டும் செவ்விய நெறியில்- மனித சமுதாயம் மாண்போடு நடந்து சென்றால், மனித வாழ்க்கை இன்புறும். மனிதநேயம் தழைக்கும். மனித சமுதாயத்தின் சாதனை விண்ணைத் தொடும்.*

---

1. வேதாத்திரியத்தில் சமூகவியல் இறையியல் சிந்தனைகள்-பக்.129- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
2. வேதாத்திரிய இலக்கியம் ஆய்வுக்கோவை-பக்.1-வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.
3. வேதாத்திரியத்தில் சமூகவியல் இறையியல் சிந்தனைகள்-பக்.129- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
4. சிறுவர்களது விவேகானந்தர் - பக். 59 - ஸ்ரீராமகிருஷ்ணமடம் சென்னை.

# துணை நின்ற நூல்கள்


- ✯ சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம் 16 பாகங்கள். ஸ்ரீராமகிருஷ்ண மடம்-சென்னை.
- ✯ சிறுவர்களது விவேகானந்தர் - ஸ்ரீராமகிருஷ்ணமடம் சென்னை.
- ✯ எழுமின் விழுமின் - விவேகானந்தா கேந்திரம். கன்னியாகுமரி.
- ✯ விவேகானந்தரின் அறிவுரைகள். ஸ்ரீராமகிருஷ்ணமடம்- சென்னை.
- ✯ விவேகக்கதைகள்-சுவாமி விவேகானந்தர்- ஸ்ரீராமகிருஷ்ண மடம் சென்னை.
- ✯ சுவாமி விவேகானந்தர். ரா.கணபதி. ஸ்ரீராமகிருஷ்ண மடம் சென்னை.
- ✯ சுவாமி விவேகானந்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள் கங்கா ராமமூர்த்தி, கங்கை புத்தக நிலையம்.
- ✯ குமரி முனையில் விவேகானந்தர் - விவேகானந்த கேந்திரம் கிராம முன்னேற்றத் திட்டம், தூத்துக்குடி.
- ✯ உன் எதிர்காலம் உன் கையில் சுவாமி விவேகானந்தர் - ஸ்ரீராமகிருஷ்ண மடம் -சென்னை.
- ✯ விவேகானந்தரின் அறிவுரைகள்-பக்.17-ஸ்ரீராமகிருஷ்ண மடம்-சென்னை.
- ✯ சுவாமி விவேகானந்தரின் வரலாறும் அறிவுரைகளும்-பக்.107-ராமகிருஷ்ண மிஷன்-பேலூர்.
- ✯ ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் மாதஇதழ்கள்- ஸ்ரீராமகிருஷ்ண மடம்- சென்னை.

- ✯ வீரமும் விவேகமும் நிறைந்த விவேகானந்தர் வாழ்க்கை வரலாறு. பாலாஜி நோட் புக்ஸ்- சிவகாசி.
- ✯ விவேகானந்தரின் பொன்மொழிகள்-இண்டர்நெட்.
- ✯ வேதாத்திரி மகரிசி நூல்கள், வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.
- ✯ வேதாத்திரி மகரிசியின் பொன்மொழிகள் 5000- பானுகுமார்- விஜயா பதிப்பகம்-கோயம்புத்தூர்.
- ✯ அறிவுத்திருக்கோயில் மேட்டூர் அணை திறப்பு விழா சிறப்புமலர்.
- ✯ அன்பொளி மாத இதழ்கள், வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.
- ✯ தர்ம சக்கரம் மாத இதழ்கள், ஸ்ரீராமகிருஷ்ண தபோவனம், திருப்பாராய்த்துறை.

## தமிழ் விக்கிப்பிடியா

- ✪ பத்தாம் ஆண்டு நிறைவு விழா மலர்-திருவொற்றியூர்.
- ✪ தத்துவஞானி வேதாத்திரி மகரிசியின் கருத்துக்களில் திருக்குறளின் தாக்கம். முனைவர் கஸ்தூரி ராஜா-உலகத் தமிழாராயச்சி நிறுவனம், சென்னை.
- ✪ எனது வாழ்க்கை விளக்கம் - வேதாத்திரி மகரிசி.
- ✪ தத்துவஞானி வேதாத்திரி மகரிசி அழகர் ராமானுஜம்.

## தமிழ் வெப்துனியா

- ✻ வாழ்க்கை மலர்கள் - வேதாத்திரி மகரிசி-மனவளக்கலை மன்ற அறக்கட்டளை - சேந்தமங்கலம்.
- ✻ காயகல்ப பதிவேடு. வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.
- ✻ ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிசி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.
- ✻ வேதாத்திரியச் சிந்தனைகள் - தமிழ்ப் பல்கலைக்கழகம்- தஞ்சாவூர்.
- ✻ சான்றோர் வாழ்வில் சிரிப்புச் சம்பவங்கள் - சுரா புக்ஸ் லிமிடெட். சென்னை.

* வேதாத்திரி மகரிசியின் அமுத மொழிகள்-அன்புநெறி வெளியீடு-திண்டுக்கல்.
* வேதாத்திரியத்தில் சமூகவியல் இறையியல் சிந்தனைகள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
* வேதாத்திரிய இலக்கிய கருத்தரங்கு - வேலூர்.
* மேட்டுர் அறிவுத்திருக்கோயில்-திறப்புவிழா மலர்.
* அறிவுத்திருக்கோயில்-சாத்தூர் திறப்பு விழா சிறப்பு மலர்.
* தினமணி நாளிதழ்.
* தாமிரபரணி அறிவுத்திருக்கோயில் திறப்புவிழா மலர்.
* அறிவுத்திருக்கோயில் - நாமக்கல் திறப்பு விழா சிறப்பு மலர்.
* அறிவுத்திருக்கோயில் - விழா மலர்-சாத்தூர் மனவளக்கலை மன்றம்.
* திறப்புவிழா மலர் - திருச்சி பெல் அறிவுத்திருக்கோயில், திருச்சி.
* உலகப்பொது அருள்நெறி சமயம் அறிவுத் திருக்கோயில் திறப்புவிழா, சிறப்பு மலர், கும்பகோணம்.
* பத்தாம் ஆண்டு நிறுவன விழா மலர்-திருவொற்றியூர்.
* வேதாத்திரியத்தில் கேன உபநிடதம்.

## SWAMI VIVEKANANDA - My Master (1901)

* Vivekananda, A Biography - Swamy Nikhilananda.
* The Life of Swamy Vivekananda - His Eastern and Western disciples.
* The Life of Vivekananda and the Universal Gospel & Romain Rolland and E..F. Malcom - Smith.
* A short Life of Swami Vivekananda - Swami Tejasananda
* The Master as I Saw Him - sister Nivedita
* Comprehensive Biography of Swami Vivkananda - shailendranath Dhar.
* Vivekananda - The Man and His Messare - His Eastern and Western disciples.

- Talks with Swami Vivekananda - Sarat Chandra Chakravarty.
- Vivekananda World Teacher - Swami Adiswarananda.
- Letters of Swami Vivekananda - Swami Tapasyananda.
- My idea kof Education - Swami Vivekananda.
- Inspiring Thoughts - Swami Vivekananda.


## ARTICLES BY VIVEKANANDA


- The Ether - New York Medical Times, Feb 1895.
- Reincarnation - The Metaphysical magazine March 1895.
- Is The Soul Immortal - New York Morning Advertiser (1895).
- On Dr. Paul Deussen - Brahmavadin 1896.
- On Professor Max Muller - Brahmavadin 1896.
- The education that India needs - Bharati, 1897.
- The Problem of Modern India and Its Solution - Udbodhan Jan 14, 1899.
- The Bengali Language - Udbodhan.
- Knowledge Its Source and Acquirement - Udbodhan Feb 12, 1899.
- Modern India - Udbodhan Mar, 1899.
- Memoirs of European Travel - Udbodhan 1899.
- The Paris Congress of the History of Religions - Udbodhan 1900.
- Memoirs of European Travel - Udbodhan 1900.

# ஆசிரியர் பிற நூல்கள்

- கிழக்கும் மேற்கும்
- காலமே உன் உயிர்
- டென்சனை வெல்வது எப்படி?
- ஞாபகம் வருதே ஊர் ஞாபகம்  வருதே
- அமெரிக்க மண்ணில் ஆறு மாதங்கள்
- அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்
- தியானம் பழக 100 தியானச் சிந்தனைகள்
- நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்
- ஓய்வுக்குப்பின்னும் உற்சாக வாழ்க்கை
- தன்னம்பிக்கை மலர்கள்
- மன்னார்குடி வரலாறு
- கோள்களை வென்ற இடைக்காட்டு சித்தர்
- நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
- புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
- குருவுடன் வாழ்ந்தவர்
- தாயுமானவரும் வேதாத்திரி மகரிசியும்
- இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
- நபிகள் நாயகம் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்

- வேதாத்திரி மகரிசியின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
- வேதாத்திரி மகரிசி பற்றி 100 அறிஞர்கள்.
- வேதாத்திரி மகரிசியின் பொன்மொழிகள் 5000 (ஐந்து பாகங்கள்)
- வள்ளலாரும் வேதாத்திரி மகரிசியும்
- தவம் (சிறுகதைத் தொகுதிகள்)
- செயலே விளைவு ( சிறுகதைத்தொகுதி)
- வேத முதல்வரும் வேதாத்திரி மகரிசியும்
- மகாவீரரும் வேதாத்திரி மகரிசியும்
- ஞாலம் போற்றும் ஞானிகள்
- தினசரி தியானம்
- வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
- வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்